
# வாருங்கள் பார்க்கலாம்

கி.வா.ஜகந்நாதன்



அமுத நிலயம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வாருங்கள் பார்க்கலாம்

கி. வா. ஜகந்நாதன்

விற்பனை உரிமை
அமுத நிலையம் லிமிடெட்
1/45, இராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை - 600 014

அமுதம்—230
உரிமை பதிவு
முதற் பதிப்பு—மே, 1966
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல், 1978

விலை ரூ. 15-00

வெளியீடு :
வி. என். சாரிடீஸ், சென்னை

பரணி & பரணி அச்சகம், 3, அந்தோணி தெரு, சென்னை 14

# வாருங்கள் பார்க்கலாம்

தமிழ் நாடு கோயில்களுக்குப் பேர் போன நாடு, தெய்வ பக்தியிலும் சிறந்த நாடு. தெய்வங்களை நாயகர்களாகக் கொண்ட சொற்கோயில்களுக்கும் கற்கோயில்களுக்கும் தலைமையான இடத்தைத் தமிழ்நாட்டில் கொடுத்து வருகிறார்கள். அன்றாட வாழ்க்கையிலும், வாழ்க்கையின் முக்கியமான நிகழ்ச்சிகளிலும் தெய்வ உணர்ச்சி விரவி நிற்கிறது.

இங்கே ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து பக்தி நெறியைப் பின்னும் ஆழமாகவும் விரிவாகவும் வேரூன்றிப் படரச் செய்திருக்கிறார்கள். அவர்கள் பாடிய திருப்பாடல்கள் தலங்களுக்குப் புதிய பெருமையை உண்டாக்கியுள்ளன. பாடல் பெற்ற தலம் என்றாலே தனிச் சிறப்பு உண்டு. இந்நாட்டிலுள்ள கோயில்கள் தெய்வங்கள் உறையும் இடங்களாக மட்டும் விளங்கவில்லை. கலைகளுக்கு உறைவிடமாகவும் அவை உள்ளன. சிற்பமும், சங்கீதமும், நடனமும், உணவுக் கலையும், மலரலங்காரக் கலையும், பொற்கலைக் கலையும், இலக்கியமும் கோயில்களை மையமாக வைத்துப் படர்ந்து வந்திருக்கின்றன. நாட்டு வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குரிய கல்வெட்டுக்களையும் கோயில்களிலே தான் காணுகிறோம். நாளடைவில் கோயிற் சிற்பமும் வழிபாட்டு முறையும் வளர்ந்துகொண்டே வருகின்றன.

தமிழ்நாட்டுக்கு வரும் பிற நாட்டார் இந்த நாட்டிலுள்ள திருக்கோயில்களைக் கண்டு பிரமித்துப் போகிறார்கள். தல யாத்திரையைச் சமய வாழ்வின் பகுதியாகக் கொண்ட இந்திய மக்களோ இத்தலங்களுக்குச் சென்று தரிசிப்பதில் சலிப்பே கொள்வதில்லை.

ஊருக்கு ஊர் கோயில்கள் இருக்கின்றன. 'ஊரானோர் தேவகுலம்' என்பது பழைய உரையாசிரி

யர்கள் காட்டும் மேற்கோள் வாக்கியம். "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்" என்பது அப்பர் அருள் வாக்கு. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழங்காலமுதல் வழங்கும் மொழி. இவற்றால் ஒவ்வோர் ஊரிலும் திருக்கோயில் இருக்கவேண்டும் என்ற வரையறை தமிழர் வாழ்வில் இருந்து வருவதை உணரலாம்.

தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் அத்தனையையும் தரிசித்து, அந்த அந்தக் கோயில்களின் மாகாத்மியத்தையும், சரித்திரத்தையும், அங்குள்ள சிற்பச் சிறப்பையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஒரு மனித ஆயுள் போதாது. கோயில்களின் சிறப்பை விரிவான முறையில் எழுதப் புகுந்தால் பல கோயில்களுக்குத் தனித்தனி ஒவ்வொரு புத்தகமே எழுத வேண்டியிருக்கும். மேல்நாட்டினரைப் போன்ற கலையார்வமும் போதிய வசதிகளும் இருந்திருந்தால் இத்தனை காலத்தில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வந்திருக்கலாம். தமிழ்ப் புலவர்கள் ஒவ்வொரு தலத்திற்கும் புராணங்களும் பிரபந்தங்களும் பாடிக் குவித்திருக்கிறார்கள். அவர்களுடைய பக்தியையும் புலமையையும் விளக்கிக் கொண்டு அவை நிலவுகின்றன. திருவிளையாடற் புராணம், சீகாளத்திப் புராணம், திருக்குற்றாலத் தல புராணம் முதலிய பல புராணங்கள் சிறந்த இலக்கியங்களாக விளங்குகின்றன. அவர்களுக்கு இருந்த ஆர்வத்தில் ஒரு பகுதி நமக்கு இருந்தால், இந்தக் காலத்தில் விஞ்ஞானத்தின் உதவியால் நமக்குக் கிடைத்திருக்கும் வசதிகளை வைத்துக் கொண்டு பல படங்களுடன் புதிய முறையில் தலங்களைப் பற்றிய நூல்களை எழுதியிருக்கலாம்.

சைவ சமயாசாரியர்களின் திருப்பாடல்களைப் பெற்ற தலங்கள் பல. அவர்கள் பாடியருளிய பாடல்கள் முழுவதும்

நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த அளவில் தேவாரம் பெற்ற தலங்களாக இப்போது தெரிந்து கொண்டவை, 274. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் பாடிய தலங்கள் 44. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் மட்டும் பாடியவை 52. திருஞான சம்பந்தரும் சுந்தரரும் மட்டும் பாடியவை 13. திருநாவுக் கரசரும் சுந்தரரும் மட்டும் பாடியவை 2. இவற்றையன்றித் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மட்டும் பாடிய தேவாரங்களையுடையவை 110. திருநாவுக்கரசு சுவாமிகள் மட்டும் பாடியனவ 28. சுந்தரர் மட்டும் பாடியவை 25.

இந்த 274 தலங்களில் சோழ நாட்டில் உள்ளவை களே பெரும்பாலன. காவேரிக்கு வடக்கே 63 தலங் களும், அவ்வாற்றுக்குத் தெற்கே 127 தலங்களும் ஆக 190 தலங்கள் சோழ நாட்டில் உள்ளன. பாண்டி நாட்டில் உள்ளவை 14; நடு நாட்டுத் தலங்கள் 22; தொண்டை நாட்டுத் தலங்கள் 32; கொங்கு நாட்டுத் தலங்கள் 7; சேர நாட்டுத் தலம் 1; ஈழ நாட்டுத் தலங்கள் 2; துளுவ நாட்டுத் தலம் 1; வட நாட்டுத்தலம் 5. இவை தேவாரப் பதிகங்களைப் பெற்ற சிவத்தலங்கள்.

பதிகம் இல்லாமல் பதிகத்தின் இடையிலே சுட்டப் பெற்றுவரும் தலங்களை வைப்புத் தலங்கள் என்பர். அவை பல. திருவாசகத்தில் கூறப் பெறும் தலங்கள் பல. அவற்றில் பல இன்ன இடத்தில் இருக்கின்றன என்று தெரியவில்லை.

தலங்களுக்கு மிகச் சிறப்பைத் தந்தவை அருளாளர் கள் அருளிய திருப்பாடல்கள். அந்தத் தலங்கள் எல்லா வற்றையும் பற்றி விரிவாகப் படங்களுடன் எழுதினால் அது மிகவும் உதவியாக இருக்கும்.

ஆயினும் ஏதேனும் ஒரு வரையறையை வைத்துக் கொண்டு சில தலங்களுக்குச் சென்று அவற்றைப் பற்றிய

கட்டுரைகளை எழுதலாம் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. சைவ சமயாசாரியர்களாகிய நால்வர் திருவவதாரம் செய்த தலங்கள், அவர்கள் இறைவன் திருவருள் பெற்ற திருப்பதிகள், அவர்கள் இறைவனோடு கலந்த தலங்கள் ஆகியவற்றைப்பற்றி எழுதலாம் என்று வரையறை செய்துகொண்டேன். அந்தகைய தலங்கள் பதின்மூன்று. அவற்றிற் பலவற்றிற்கு முன்பே சென்று தரிசித்திருக்கின்றேன். ஆனால் இப்போது கட்டுரை எழுதவேண்டும் என்ற நோக்கத்தோடு மீண்டும் அந்தத் தலங்களுக் கெல்லாம் சென்றேன்; தரிசித்தேன்; அங்குள்ள அன்பர்களிடம் பல செய்திகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்; அந்தத் தல சம்பந்தமான நூல்களையும் பாடல்களையும் படித்தேன். என்னுடன் என் நண்பரும் நிழற்படக் கலைஞருமாகிய மாயூரம் திரு என். ராமகிருஷ்ணு அவர்களையும் இந்தத் தலங்களுக்கு உடன் அழைத்துச் சென்றேன். அவர் ஊக்கத்தோடு படம் எடுத்தார். பக்தியும் பண்பும் உடையவராதலின் என்னுடைய கருத்தை அறிந்து பல பல படங்களை எடுத்தார்.

கலைமகளில் இந்தத் தலங்களைப் பற்றிய கட்டுரைகளை வரிசையாக எழுதி வரலானேன். 1955-ஆண்டு ஜனவரி இதழில் தொடங்கி, 1957–ஆம் ஆண்டு பிப்ரவரி இதழில் நிறைவேற்றினேன். இருபத்து நான்கு கட்டுரைகள் வந்தன.

வெறும் தல மாகாத்மியங்களாக இல்லாமல் பயணக் கட்டுரைகளைப் போல அமைத்து என்னுடைய உணர்ச்சிகளையும் இடையிடையே புலப்படுத்தினேன். தலத்தைப் பற்றிய நூற் செய்திகளையும், கர்ண பரம்பரைச் செய்திகளையும், கல்வெட்டிற் கண்டவற்றையும் பயன்படுத்திக் கொண்டேன். தேவார திருவாசகமும் பெரிய புராணமும் இந்தத் தலத்தைப் பற்றிய தெளிவை உண்டாக்கு

வதற்குப் பெரிதும் உதவின. இடையிடையே கவிகளின் நயத்தைப் பற்றிய பேச்சும் விரவி வரும்.

இவற்றைப் படித்து இன்புற்ற பலர் பாராட்டி எழுதினார்கள். இக் கட்டுரைகளில், தலங்களில் உள்ள சில குறைபாடுகளைக் காட்டியிருந்தேன். அவற்றில் சிலவற்றை அந்தத் தலத்திலுள்ளவர்கள் பிறகு போக்கி விட்டார்கள். என் பயணத்தின் போது எடுத்த படங்களை இந்தப் புத்தகத்திற் சேர்த்திருக்கிறேன். இப்போது சில அமைப்புக்களின் தோற்றம் வேறுபட்டிருக்கலாம்.

இந்தத் தலயாத்திரையில் அங்கங்கே உள்ள கோயில் அதிகாரிகள் மிகவும் அன்புடன் எனக்கு உதவி செய்தார்கள். தருமபுர ஆதீனத்தலைவர்களும் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்களும் இந்த முயற்சிக்கு ஆசிகூறி வேண்டிய உதவிகளை வழங்கினார்கள். பல அன்பர்கள் என்னோடு வந்து வழி காட்டியும் தலங்களில் உள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்தியும் நலம் செய்தார்கள். இவர்களுக்கெல்லாம் என் மனங்கனிந்த நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடன் வந்து படங்களை எடுத்துதவிய அன்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணு, என் உடன்பிறவாத சகோதரர். அவருக்கு நன்றியுரை மட்டும் கூறினால் போதாது. அவருக்கு எல்லா நன்மைகளும் உண்டாக வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இந்தப் புத்தகம் முன்பே வெளிவந்திருக்க வேண்டும். எழுதி எட்டு ஆண்டுகளுக்குப் பிறகே வருகிறது. இப்போதேனும் வெளியாக இறைவன் திருவருள் பாலித்ததற்காக அவன் திருவடிகளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

இனி, வாருங்கள், பார்க்கலாம், நால்வரோடு நெருங்கிய தொடர்புடைய தலங்களை !

கி. வா. ஜகந்நாதன்

# உள்ளுறை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஞானக் குழந்தை பிறந்த ஊர் | ... | 1 |
| 2. | தோணிபுரம் | ... | 14 |
| 3. | சோதியும் வீதியும் | ... | 29 |
| 4. | அப்பர் உதித்த ஊர் | ... | 44 |
| 5. | திரு அதிகை | ... | 57 |
| 6. | அதிகைத் திருக்கோயில் | ... | 74 |
| 7. | புகலூர் மேவிய புண்ணியன் | ... | 84 |
| 8. | முக்காலக் கடவுள் | ... | 100 |
| 9. | சுந்தரர் தோன்றிய ஊர் | ... | 112 |
| 10. | வெண்ணெய் நல்லூர்ப் பித்தன் | ... | 126 |
| 11. | பரவையார் ஊர் | ... | 150 |
| 12. | நிறைசெல்வத் திருவாரூர் | ... | 161 |
| 13. | படகுப் பயணம் | ... | 177 |
| 14. | கொடுங்கோளூர் | ... | 190 |
| 15. | திருவஞ்சைக் களம் | ... | 199 |
| 16. | அம்மை இல்லா அப்பன் | ... | 210 |
| 17. | திருவாதவூர் | ... | 224 |
| 18. | மதுரை ஓவியங்கள் | ... | 238 |
| 19. | மண் சுமந்த மதுரை | ... | 255 |
| 20. | திருப்பெருந்துறை | ... | 272 |
| 21. | பெருந்துறைக் காட்சிகள் | ... | 287 |
| 22. | சிற்புக் கருவூலம் | ... | 298 |
| 23. | திருவாசகத்தின் பொருள் | ... | 318 |
| 24. | ஏட்டில் ஏறிய வாசகம் | ... | 335 |

# ஞானக் குழந்தை பிறந்த ஊர்

"அதோ பார் அந்தக் காட்சியை" என்று காட்டினார், விமான ஓட்டி.

நான் பார்த்தேன்; கண் குளிரப் பார்த்தேன். எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற சோலைகள்; வளப்பம் மலிந்து விளங்கின.

"என்ன அழகு! என்ன வளம்!" என்று வியப்பில் மூழ்கி நின்றேன்.

"இன்னும் சற்றுக் கூர்ந்து பார்" என்றார் விமானத் தலைவர். அதை ஓட்டுபவரும் அதற்குத் தலைவரும் அவரே.

நான் கூர்ந்து பார்த்தேன், அழகான நெல் வயல் அதன் ஓரத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதில் தன் இதழ்களை அகல விரித்துச் செந்தாமரை மலர்ந்து விளங்குகிறது. வயலின் கரையில் நன்றாக வளர்ந்து நிற்கிறது ஒரு மாமரம். மாம்பழங்கள் பழுத்துக் குலுங்குகின்றன. கனிந்த கனிகள் சுவை முதிர்ந்து வெடித்து அவற்றின் சாறு தேன்போல ஒழுகுகிறது. மாவிலையின் வழியே வழியும் அந்தத் தேன், வயல் ஓரத்தில் மலர்ந்திருக்கும் தாமரை மலரில் ஒழுகி விழுகிறது. இதைப் பார்த்தேன்.

"தேமாவின் கனி கிழிந்த மது, பங்கய மலரில் வீழ்கிறதைக் கண்டாயா?" என்றார் விமானத் தலைவர்.

"ஆ; கண்டேன்; நாவில் நீர் சுரக்கக் கண்டேன்" என்றேன்.

"இதைப் பார்த்தால் உனக்கு ஏதாவது நினைவுக்கு வருகிறதா?" என்று கேட்டார் அவர்.

"மாம்பழ ஸர்பத்து நினைவுக்கு வருகிறது" என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டார். "மாம்பழத்தைப் பறித்துப் பிழிந்து வயிற்றுக்குள் போடுவதே ஞாபகமாக இருக்கிருயே. இந்த மது மாவிலையின் நுனி வழியாகத் தாமரையில் ஒழுகுகிற இந்தக் காட்சி எதைப்போல இருக்கிறது ? யோசித்துப் பார்" என்ருர் அவர்.

"அதற்கு நான் கவி அல்லவே; நீங்களே சொல்லுங்கள். உங்களுக்குத்தான் அந்த வன்மை உண்டு" என்று பணிவாகக் கேட்டுக்கொண்டேன்.

அவர் சொல்லத் தொடங்கிஞர்:

"நாம் போகிற ஊருக்குள்ளே நிகழும் நிகழ்ச்சியை இது நினைப்பூட்டுகிறது. ஊருக்குள் தீ வளர்த்து மாவிலையால் நறு நெய்யை எடுத்து ஆகுதி செய்கிருர்கள். ஊரின் அகத்தே அவர்கள் செய்யும் செய்கையைப் புறத்தே உள்ள இந்த மரங்கள் நினைப்பூட்டுகின்றன. இந்த மரங்கள் கனி கிழிந்த மதுவாகிய நறு நெய்யை இலையின் நுனி வழியாகத் தீயைப் போலச் சிவந்திருக்கும் தாமரையில் பெய்கின்றன. அதையும் இதையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால், இந்த ஊருக்கு அகத்தழகும் புறத்தழகும் எவ்வளவு நயமாகப் பொருந்தி யிருக்கின்றன என்று தெரியவரும்".

எனக்கு உண்டான இன்பத்தை எப்படிச் சொல்வது? "கவிஞர்களுக்கே தோன்றும் பொருத்தம் இது. இதைத் தங்கள் வாக்காலே கவியுருவிலே சொல்லவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டேன்.

பெரியவர் சொல்லலானார் :

**பரந்தவிளை வயற்செய்ய**
**பங்கயமாம் பொங்குஎரியில்,**
**வரம்பில்வளர் தேமாவின்**
**கனிகிழிந்த மதுநறுநெய்**
**நிரந்தரம்நீள் இலைக்கடையால்**
**ஒழுகுவதால், நெடிதுஅவ்வூர்**
**மரங்களும்ஆ குதிவேட்கும்**
**தகையஎன மணந்துளதால்.**

[பரந்திருக்கும் விளை நிலங்களில் சிவந்த தாமரையாகிய கொழுந்து விட்டு எரியும் தீயில், வரப்பில் வளர்கின்ற இனிய மாமரத்தின் கனிகள் கிழிந்து பாயும் தேனாகிய நறு நெய் இடைவிடாமல் நீண்ட இலைகளின் நுனியின் வழி ஒழுகுவதால், பல காலமாக மரங்களும் ஆகுதி செய்து வேள்வி புரியும் தன்மையுடையவை என்று சொல்லும்படி அவ்வூர் புகழ் பெற்றுள்ளது.

வரம்பு-வரப்பு. தேமா - இனிய பழத்தையுடைய மாமரம். மது-தேன். நிரந்தரம்-இடைவிடாமல். இலைக் கடை-இலையின் நுனி. மணந்து உளது-புகழ் அடைந் திருக்கிறது.]

பெரிய புராணம் என்னும் விமானத்தில் சேக்கிழார் என்னும் பெரும் புலவர் என்னை ஏற்றிச் சென்றார். அப்போது அவர் காட்டிய காட்சியே இது. இன்னும் பல பல காட்சிகளை அவர் காட்டினார். காசு

கொடுக்காமல் செய்த பிரயாணத்தில் கண்ட காட்சிகள் அவை. திருஞான சம்பந்தராகிய ஞானக் குழந்தை திருவவதாரம் செய்த சீகாழிக்கு, சேக்கிழார் ஓட்டிய விமானத்தில் செல்லும்போது இத்தகைய இன்பம் உண்டாயிற்று.

அந்தத் தலத்துக்கு ரெயில் வண்டியில் பிரயாணம் செய்து சென்று அடைந்தேன், வண்டி நின்றது. ரெயில்வே ஸ்டேஷனில் உள்ள பலகையைப் பார்த்தேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது, அந்தத் திருத்தலத்தின் அழகான பெயரை அந்தப் பலகையில் எழுதி யிருந்தார்கள் : 'சிய்யாழி' என்று கொட்டை எழுத்தில் எழுதியிருந்த அலங்கோலம் என் கண்ணைக் குத்தியது.* அந்தத் பலகையின் தலையில் இருந்த ஹிந்திப் பெயரைத் தாரால் அழித்திருந்த புண்ணியவான்கள் இந்தப் பெயரையும் சேர்த்து அழித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என் கையில் தார் இல்லை; மனசில் தைரியமும் இல்லை. இருந்தால்—? நடக்காத காரியத்தைப்பற்றி இப்போது பேசிப் பயன் என்ன? சேக்கிழார் காட்டிய பழைய காட்சியை நினைத்து ஆறுதல் பெற்றேன்.

சீகாழிக்குப் பன்னிரண்டு திருநாமங்கள் உண்டென்று படித்திருக்கிறேன். சீர்காழி என்று சொல்வதைவிடச் சீகாழி என்று சொல்வதுதான் முறையென்றும் தெரிந்துகொண் டிருந்தேன். அந்தப் பெயரே ஆங்கிலத்தில் ஷியாலியாகவும் கொடுந் தமிழில் சிய்யாழியாகவும் மாறி நின்றதைக் கண்டு உள்ளம் வெதும்பாமல் இருக்க முடியுமா?

* இப்போது இதைச் சீர்காழி என்று மாற்றிவிட்டார்கள்.

சீகாழி—ஏன் இந்தப் பெயர் வந்தது? இந்தத் தலத்தில் பத்திரகாளி சிவபெருமானைப் பூசை பண்ணி வரம் பெற்றுளாம். அதனால் ஸ்ரீ காளிபுரம் என்ற பெயர் இதற்கு ஏற்பட்டதாம். ஸ்ரீ காளிபுரம் ஸ்ரீ காளியாகி அதில் உள்ள ஸ்ரீ என்ற எழுத்தும் ளி என்ற எழுத்தும் தமிழாக மாறிச் சீகாழியென்று ஆகி விட்டனவாம். அழகொழுகும் பழகு தமிழில் காளி காழியானது ஆச்சரியம் அன்று.

இன்று சீகாழியென்று வழங்கினாலும் இந்த ஊர் காளி பூசிப்பதற்கு முன்பும் இருந்ததுதானே? அப்போது இதற்கு என்ன பெயர் வழங்கியது என்று ஆராய்ச்சி செய்தேன். இதன் பழைய பெயர் கழுமலம் என்று தெரிந்தது. காவிரிப்பூம்பட்டினத் துக்கும் இதற்கும் இப்போது ஏறக்குறையப் பன்னிரண்டு மைல் தூரம் இருக்கும். காவிரிப்பூம் பட்டினம் சோழர்களுடைய இராசதானி நகரமாக இருந்தது. அந்தப் பட்டினத்தின் எல்லை கிட்டத் தட்டச் சீகாழி வரையில் எட்டியிருந்தது. அக்காலத் தில் இதற்குக் கழுமலம் என்றபெயர் வழங்கி வந்தது. கரிகால் வளவனைத் தன் தலையிலே வைத்துக் கருவூரிலே யிருந்து தூக்கிக் கொண்டு வந்தது, ஒரு யானை. சோழ அரசனது பட்டத்து யானை அது. அதை இந்தக் கழுமலத்தில்தான் கட்டி வைத்திருந் தார்களாம்.

இந்த ஊர் கழுமல நாடு என்ற நாட்டின் தலைநகரம். ராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமல வளநாட்டில் இது இருந்ததாகக் கல்வெட்டுச் சொல்லுகின்றது. கழுமலத்தைத் தலைநகராகக் கொண்டதனால் கழுமல வளநாடு என்ற பெயர்

வந்தது. கழுமலம் என்பதே இதற்குரிய பழைய பெயராதலால் திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில்

கழுமல முதுபதி

என்று பாடியிருக்கிறார். ஞானசம்பந்தர் வரலாற்றைச் சொல்லவந்த சேக்கிழார் முதல் முதலில் கழுமலம் என்றே இந்நகரத்தை அறிமுகப்படுத்துகிறார்.

சென்னிவளர் மதிஅணிந்த
சிலம்பணிசே வடியார்தம்
மன்னியசை வத்துறையின்
வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு
பொலிவெய்த நிலவியதால்
கன்னிமதில் மருங்குமுகில்
நெருங்குகழு மலமூதூர்.*

"கழுமல முதுபதி" என்று சம்பந்தர் கூறுவதைப் பின்பற்றிச் சேக்கிழார் இதைக் கழுமல மூதூர் என்று சொல்வது கவனிப்பதற்குரியது.

பெயர் ஆராய்ச்சி போதும். இனி ஊருக்குள்ளே போவோம். ஞானக் குழந்தை திருவவதாரம் செய்த ஊர் என்று நினைத்தாலே பக்தர்களுக்கு உள்ளம் பூரிக்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்த ஊருக்கு வரும்போது, "ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்த இந்தத் தலத்தை நான் மிதிக்க மாட்டேன்" என்று ஊரை வலம் வந்து வெளியே நின்று வணங்கினராம். வெளியிலிருந்து பார்த்தாலே கோயில் கோபுரம் உயர்ந்துதோற்றம் அளிக்கும். தமிழ்நாட்டுக் கோயில்களின் தனிச்சிறப்பே அதுதானே? சீகாழிக்கு

* வளவர்-சோழர். பொன்னி-காவிரி. கன்னி மதில்-என்றும் அழியாமல் உள்ள மதில்.

எவ்வளவோ மகிமை இருக்கிறது. இந்தத் தலத்துக் குரிய புராணம் 1550 பாடல்களால் தலச்செய்திகளை விரித்துச் சொல்கிறது. எல்லாப் பெருமைகளையும் விடத் தலைமையாக இருப்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவதாரம் செய்த சிறப்பு.

கோயிலைச் சார்ந்த அக்கிரகாரம் ஒன்றில் திருஞானசம்பந்தர் பிறந்தார். இப்போது கோயில் மதில் பெரிதாக இருக்கிறது. அந்தக் காலத்தில் இவ்வளவு பெரிய கட்டிடங்கள் இல்லை. ஞான சம்பந்தப் பிள்ளையார் உதயம் செய்த வீதிக்குள் போனேன். முன்பு அதற்கு இரட்டைத்தெரு என்று பெயர் வழங்கியதாம், இப்போது திருஞானசம்பந்தர் தெரு என்று பேர் வைத்திருக்கிறார்கள். சேக்கிழார் காட்டுகிற தெருவுக்கும் இதற்கும் எத்தனையோ வேறுபாடு. அன்று இருந்த கட்டிடங்களை இப்போது பார்க்க முடியுமா? ஓட்டு வில்லை வீடுகளும் மாடி வீடுகளும் கலந்து இப்போது காட்சி அளிக்கின்றன. வேத ஒலியும் வேள்விப் புகையும் நிரம்பிய காலம் அது. எங்கே பார்த்தாலும் வேதம் ஓதும் கிடைகள் இருந்ததாகச் சேக்கிழார் பாடுகிறார்.

"ஞானசம்பந்தர் பிறந்த வீடு எங்கே?" என்று கேட்டுக்கொண்டே போனேன். வீதியில் உள்ளவர் கள் ஒரு வீட்டைக் காட்டினார்கள். சாமானியமான ஓட்டு வில்லை வீடு அது. வாசலில் திண்ணை. அவர் பிறந்த வீடு மறைந்து அந்த இடத்தில் எத்தனையோ வீடுகள் எழுந்து மறைந்திருக்க வேண்டும். இப்போது இந்த ஓட்டு வில்லை வீடு நிற்கிறது. வீட்டுக்குள்ளே சென்று பார்த்தேன். "இந்த இடத்தில்தான் ஞான சம்பந்தர் பிறந்தார்" என்று இடைகழிக்கு அருகில்

உள்ள அறையைக் காட்டினார்கள். வருகிறவர்களுக்கு எதையாவது காட்ட வேண்டும் என்பதற்காகச்சுட்டிக்காட்டுகிறார்களேயன்றி, அவர்களுக்குத் திட்டமாக இதுதான் என்று எப்படித் தெரியும்? தமிழ் விரகராகிய ஞானசம்பந்தர் பிறந்த இடத்தில் உள்ள வீடு யாரோ குடியிருக்கும் வீடாக இருக்கிறதை எண்ணி மனம் வெதும்பியது. சீகாழித் திருக் கோயிலுக்கு உள்ள பெருமை அந்த இடத்துக்கும் உண்டு. ஆனால் சீகாழி சிய்யாழியாக மாறி நிற்பதைப் பார்த்துச் சும்மா இருக்கும் தமிழுலகந்தானே இந்த இடத்தை இப்படி வைத்திருக்கிறது? நாட்டுக்கு விடுதலை கிடைத்தும் அந்த வீட்டுக்கு விடுதலை கிடைக்கவில்லை.

அந்த வீட்டுக்கு முன்னே நின்றேன். என்னுடன் வந்திருந்த அன்பர்கள் படம் எடுத்தார்கள். ஞானசம்பந்தருடைய நினைவைக் காட்டும் ஏதாவது ஒன்று அங்கே கிடைக்காதா என்று எண்ணி அங்கும் இங்கும் பார்த்தேன். அது கற்கோயிலாக இருந்தால் கல் வெட்டு இருக்கிறதா என்று தேடலாம். வெறும் செங்கல் வீட்டில் என்ன கிடைக்கும்? ஒன்றும் இல்லை. அவர் பாடியதேவாரம்கூட அந்த வீட்டில் இப்போது இருக்காதே! எத்தனை பெரியவர்கள் அவ்விடத்துக்கு வந்திருக்க வேண்டும்! எத்தனை முடிமன்னர்கள் அங்கே வந்து தம் முடி தாழ்த்தி வணங்கியிருக்க வேண்டும்!— இப்படி என் கற்பனையினால் அதைப் பெரிய வீடாக எண்ணி நின்றேன். இந்தக் காலத்துக்கு வந்து பார்த்தபோது அது அழகு அழிந்த சிறிய ஓட்டு வில்லை வீடாகத்தான் நின்றது.

அந்தத் தெருவோடே போனேன். தெருவின் கோடியில் ஒரு சிறிய கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் உள்ள சுவாமியை ஞானசம்பந்தருடைய தந்தையார் பூசை செய்தாராம். சுவாமிக்குச் சோளீசுவரர் என்று திருநாமம். ஸ்ரீ காளி என்ற பெயரில் ளகரம் ழகரம் ஆகிவிட்டது. இங்கே அதற்கு மாறுகச் சோழீசுவரர் என்றது சோளீசுவரர் ஆகி விட்டது! அம்பிகைக்குச் சூளிகாம்பிகை என்று திரு நாமம், சின்னஞ்சிறிய கோயில் அது. அந்தத் திரு வீதியின் ஒரு கோடியில் இந்தக் கோயிலும், மற்ருெரு கோடியில் பெரிய கோயில் திருமதிலும் இருக்கின்றன.

## 2

சிவபாத இருதயர் வழக்கம்போல் அன்றும் காலையில் நீராடச் சென்ருர், திருக்கோயிலுக்குள் இருக்கும் பிரம தீர்த்தத்தில் நீராடுவது அவர் வழக்கம். "நானும் வருகிறேன்" என்று குழந்தை அழுதான். மூன்று வயசுக் குழந்தை; இன்னும் ஆடை கட்டாத பருவம், தம்மைப் பின் தொடர்ந்து வரும் குழந்தையை மிரட்டினுர் தகப்பனுர். குழந்தை அன்று உலகத்துக்கே தாயும் தந்தையுமாக இருப்பவர்களேப் பார்க்க வேண்டிய நாள். குழந்தைக்கு அது அப் போது தெரியாவிட்டலும் உலக மாதாவுக்கும் பிதாவுக்கும் அது தெரியும். அவர்கள் இந்தக் குழந்தைக்காகக் காத்திருத்தார்கள். தகப்பனுர் மிரட்டியும் அந்தக் குழந்தை பிடிவாதம் செய்தான். கிண்கிணி அணிந்திருந்த காலேத் தரையிலே தூக்கித் தூக்கி வைத்து அழுதான். தகப்பனுர். "சரி, வா" என்று சொல்லி அழைத்துச் சென்ருர்.

பிரமன் பூசித்த இந்தத் தலத்துக்குப் பிரமபுரம் என்பது ஒரு பெயர், அவன் உண்டாக்கியது பிரம தீர்த்தம் என்று புராணம் சொல்கிறது. அங்கே சிவ பாத இருதயர் நீராடப் புகுந்தார். குழந்தை கரையிலே நின்று கொண்டிருந்தான். தகப்பனார் நீராடிவிட்டு அகமருஷணம் என்ற மந்திரத்தை ஜபித்து நீரில் மூழ்கினார். சிறிது நேரம் அவர் மூழ்கியிருந்தபோது குழந்தை பார்த்தான். தந்தையாரைக் காணவில்லை.

சுற்றும்முற்றும் பார்த்தான். அப்பாவைக் காண வில்லை; அழத் தொடங்கினான். அருகிலே உள்ள கோயிலில் உயர்ந்து தோன்றும் திருத்தோணியைப் பார்த்து அழலானான். கண்ணில் நீர் ததும்பக் கையால் கண்ணைக் கசக்கி வாயிதழ் துடிக்க அந்தத் திருத் தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மா! அப்பா!" என்று கூறி அழுதான்.

> கண்மலர்கள் நீர்ததும்பக்
> கைம்மலர்க ளாற்பிசைந்து
> வண்ணமலர்ச் செங்கனிவாய்
> மணியதரம் புடைதுடிப்ப
> எண்ணில்மறை ஒலிபெருக
> எவ்வுயிரும் குதுகலிப்பப்
> புண்ணியக்கன் றனையவர்தாம்
> பொருமிஅழு தருளினார். *

'அழுதருளினார்' என்று அருமைப்பாடு தோன்றச் சேக்கிழார் பாராட்டுகிறார். உலகத்தில் உள்ள உயிர்கள் அழுது மயங்குவது போலன்றி, இந்தக் குழந்தை அம்மையின் ஞானப் பாலுக்காக ஏங்கி அழுதான்.

---

*. மணி அதரம்–அழகையுடைய வாயிதழ், கன்று–யானைக்கன்று.

எல்லாக் காலத்தும், எல்லாவிடத்தும், எல்லா உயிர் களுக்கும் அம்மாவும் அப்பாவுமாக இருப்பவர்களைப் பார்த்து அழுதான். அவனுடைய அழுகைக்காகக் காத்து நின்ற தோணியப்பர் அம்பிகையுடன் விடை மேல் எழுந்தருளினர். 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்ற பழமொழி அன்றுதான் உண்டாயிற்றுப் போலும்! உமாதேவியார் பொற்கிண்ணத்தில் திருமுலைப் பாலைக் கறந்து குழந்தைக்கு ஊட்டியருளி னர். அது மெய்ஞ்ஞானப் பாலாதலால் குழந்தைக்குச் சிவஞானம் உண்டாகிவிட்டது. மற்றப் பிள்ளைகளைப் போல் இருந்த நிலை மாறி ஞானப் பிள்ளை ஆனன்; திருஞானசம்பந்தப் பெருமானுக மாறினன்.

பாலை வழங்கியவுடன் தோணியப்பரும் அம்மை யும் மறைந்துவிட்டார்கள். குழந்தை வாயில் பாலொழுக நின்று கொண்டிருந்தான். நீரில் மூழ்கிய தந்தையின் நினைவே மறந்து போயிற்று. இப்போது அவர் இந்தக் குழந்தையிடம் வந்தார். வாய்க் கடை யில் வழியும் பாலோடு பாலருவாயனுக நின்ற குழந்தையைக் கண்டு, 'யார் கொடுத்ததையோ வாங்கி உண்டு விட்டானே!' என்ற கோபம் வந்தது, அவருக்கு. கையில் ஒரு கோலை எடுத்துக்கொண்டு, "யார் உனக்குப் பால் கொடுத்தார்கள்?" என்று கேட்டார். குழந்தை அமைதியாக விடை சொன்னன். அந்த விடை வார்த்தையாக இருக்கவில்லை; இறைவன் திருவரு ளிலே ஊறி இறைவி அளித்த ஞானப் பாலின் சுவை யோடு கலந்து பாட்டாக வந்தது. "அதோ அந்தக் கள்வன்தான்" என்று தன் விரலாலே சுட்டிக்

காட்டியபடி பாட்டைப் பாடத் தொடங்கினன் ஞானக் குழந்தை,

தோடுடைய செவியன்விடை ஏறிஓர்
　　தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
　　உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாள்பணிந்து
　　ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
　　பெம்மான் இவன்அன்றே!

என்று பாட்டு வந்தது. தகப்பனர் பிரமித்துப் போனர். அவர் பழுத்த சிவபக்தர். ஆனந்தக் கண்ணீர் பொழிய இறைவன் திருவருளை எண்ணி நின்றர்.

அன்று முதல் திருஞான சம்பந்தர் திருநெறித் தமிழாகிய தேவாரத்தைப் பாடத் தொடங்கினர். இறைவன் திருவருளால் விளையும் பல அற்புதங் களைத் தமிழுலகத்தார் புறக்கண்ணுலும் காணும்படி செய்து சிவபக்தியைப் பரப்பினர்.

சீகாழித் திருக்கோயிலில் திருஞானசம்பந் தருக்குத் தனியே ஓர் ஆலயம் இருக்கிறது. அங்கே சம்பந்தப் பெருமானை லிங்க வடிவாகவும் விக்கிரக வடிவமாகவும் பிரதிஷ்டை செய்து பூசித்து வருகிறர் கள். லிங்கம் இருப்பதால் அங்கே அம்பிகைக்கும் ஒரு சந்நிதி இருக்கிறது.

திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி உடையது. முதலில் பிரமபுரீசருடைய சந்நிதி இருக் கிறது. அதற்குப்பின் கட்டுமலையின்மேல் தோணி

புரேசர் சந்நிதி இருக்கிறது. அம்பிகையின் கோயில் பிரம தீர்த்தக் கரையில் அதற்கு மேற்கிலும் பிரம புரீசர் கோயிலுக்கு வடக்கிலும் இருக்கிறது. இந்த இரண்டு கோயில்களுக்கும் இடையில் திருஞான சம்பந்தர் கோயில் இருக்கிறது.

திருஞான சம்பந்தருடைய உற்சவ விக்கிரகம் பிரமபுரீசர் கோயிலுக்குள், சந்நிதிக்குத் தெற்கே இருக்கிறது. இடக்கையில் பால் கிண்ணமும் வலக் கையில் சற்றே நீட்டிய சுட்டு விரலும் உடைய கோலத்தில் ஞானசம்பந்தர் காட்சி தருகிறார். பால் குடித்த இன்ப நிலையில் இருப்பதை முகபாவம் நன்றாகக் காட்டுகிறது. இந்தத் திருவுருவைப் பார்த்தால் மிக மிகப் பழங்கால முதல் வழிபடப் பெற்றது என்பது தெரியவரும்.

இங்கே சித்திரை மாதம் பிரமோற்சவம் நடைபெறும். எல்லாக் கோயில்களிலும் நடைபெறுவது போல ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வாகனங்களில் சிவபெருமான் எழுந்தருளுவார். திருத்தேர் விழாவும் நடைபெறும், அந்த உற்சவத்தின் இடையில் இரண்டாம் நாள்தான் இந்தத் திருக்கோயிலுக்கே உரிய சிறப்புத் திருவிழா நடைபெறும். தமிழ் நாட்டிலுள்ள வெவ்வேறு ஊர்களிலிருந்து அந்த விழாவைப் பார்க்க அன்பர்கள் வந்து கூடுவார்கள். திருமுலைப்பால் உற்சவம் என்று சொன்னாலே போதும், பக்தர்களுக்குச் சீகாழியின் நினைப்பு வந்துவிடும். தோணியப்பரும் பெரியநாயகியும் எழுந்தருளி ஞானசம்பந்தருக்குப் பால் வழங்கும் காட்சியைக் கண்டு பக்தர்கள் மன முருகி நிற்பார்கள். ஞானசம்பந்தர் சிவிகையில் எழுந்தருளுவார். பிரமதீர்த்தத்தின் தென்கரையில் திரு

முலைப் பால் வழங்கும் காட்சி நிகழும். விழாவுக்கு வந்தவர்கள், பாத்திரங்களில் பாலைக் கொணர்ந்து ஞானசம்பந்தருக்கு நிவேதனம் செய்யச் செய்து வாங்கிச் செல்வார்கள். அந்தப் பிரசாதத்தை ஞானப் பாலாகவே எண்ணி உண்டு இன்புறுவார்கள். இந்த நாட்டில் பக்தியினால் அன்பர்கள் மேற்கொள்ளும் பாவனையின் உயர்வை என்னவென்று சொல்வது!

## தோரணிபுரம்

ஓர் ஊரில் உள்ளவர்களெல்லாம் சேர்ந்து ஒரு கோயிலைக் கட்டினார்கள். அவரவர்கள் தங்கள் தங்களால் இயன்ற தொண்டுகளைப் புரிந்தார்கள். பணக்காரர்கள் பணத்தைக் கொடுத்தார்கள், தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். சிற்பக் கலையில் வல்லவர்கள் கோயிலில் அங்கங்கே சிற்ப உருவங்களை வடித்தார்கள்.

அந்த ஊரில் ஒரு முதிய சிற்பி இருந்தான். அவனுக்கும் கோயிலில் ஏதாவது செய்ய வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. "எனக்கும் ஏதாவது வேலை கொடுங்கள்" என்றான்.

"நீ கிழவன்; உன்னால் என்ன செய்யமுடியும்?" என்று அந்த நிர்வாகி அலட்சியமாகக் கேட்டார்.

"ஏதோ என்னால் முடிந்ததைச் செய்கிறேன். ஏதாவது மூலையைக் காட்டுங்கள்; அங்கே எதையாவது செதுக்குகிறேன்" என்று கெஞ்சினான்.

கிழவனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி அவர் கோயிலில் இருட்டாக இருந்த ஓரிடத்தில்

உள்ள கம்பத்தைக் காட்டி, "அதில் எதையாவது செய்துகொள்" என்று சொன்னார்.

கிழவன் அந்த இடமாவது கிடைத்ததே என்ற மகிழ்ச்சியோடு வேலைசெய்யத் தொடங்கினான். அவனுக்கு வயசு ஆயிற்றே ஒழியச் சிற்பத் திறனில் தளர்ச்சி உண்டாகவில்லை. மெல்ல அந்தத் தூணில் ஓர் அழகிய உருவத்தைக் கோலம் செய்யத் தொடங்கினான். ஆர்வத்தோடும் பக்தியோடும் உருவைச் செதுக்கினான். நாளுக்கு நாள் அவனுக்கு ஊக்கம் மிகுந்தது. உருவமும் அழகு பெற்று வந்தது.

ஒரு நாள் வெளியூரிலிருந்து கலை நயம் காணும் ஒருவர் வந்தார் கோயிலில் பல சிற்பிகள் அமைத்து வரும் சிற்ப உருவங்களையெல்லாம் கண்டு இன்புற எண்ணிக் கோயிலுக்குள் புகுந்தார். முகப்பில் பல சிற்பிகள் வேலை செய்துகொண்டிருந்தனர். அவர்களுடைய உழைப்பில் உருவாகி வந்த சிற்பங்களைக் கண்டு வியந்தார். முன்பக்கத்திலும் தூண்களிலும் சிற்ப வடிவங்கள் பல முற்றுப்பெற்றிருந்தன. சில முடிவடையும் நிலையில் இருந்தன. ரசிகர் எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்தார்.

பிறகு கோயிலைச் சுற்றிக்கொண்டு வந்தார். ஒரு மூலையில் உள்ள தூணில் கிழச் சிற்பி வேலை செய்து கொண்டிருந்தான். அவன் செதுக்கிய உருவம் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது. சிறிது நகாசு வேலை செய்து கொண்டிருந்தான். சற்றே இருண்ட அந்த மூலைக்கும் ரசிகர் சென்றார். சிறிது நேரம் நின்ற பிறகுதான் தூண் தெரிந்தது; தூணில் உருவாகிய வடிவமும் தெரிந்தது. கண்களைச் சுருக்கியும்


விரித்தும் பார்த்தார். அங்கேயே நின்றுவிட்டார். மயில்மேல் ஏறிவரும் முருகன் திருவுருவத்தைக் கிழவன் அங்கே படைத்து முடித்திருந்தான். அந்த உருவத்தின் ஒவ்வோர் அங்கமும் குழைந்துஇழைந்து கொஞ்சியது. திருமுக மண்டலம் உயிர் பெற்று விளங்கியது. இத்தனை நேரமும் ரசிகர் கண்ட சிற்பங்களை யெல்லாம் எங்கோ தள்ளிவிட்டு இந்த முருக வடிவம் மேலோங்கி நின்றது. ரசிகர் உலகை மறந்து பார்த்தார். பிறகு சிற்பியைப் பார்த்தார். அந்தக் கிழவனுடைய கையில்தான் எத்தனை திறமை!

அவர் எதையோ நினைத்துக் கொண்டார். கண்ணில் நீர் துளித்தது. அவனைப் பார்த்துப் பேசலானார்: "அப்பா! இந்த அழகிய உருவத்தை இந்த இருண்ட மூலையிலே அமைக்கிறாயே! இதை யார் அப்பா பார்க்கப் போகிறார்கள்? உனக்கு இந்த இடந்தானா கிடைத்தது? மூலஸ்தானத்து விக்கிரகத்தைச் செய்யும்படி அல்லவா உன்னிடம் சொல்லியிருக்க வேண்டும்? சொல், இதை யார் பார்த்து மகிழப் போகிறார்கள்?" என்று கேட்டார்.

சிற்பி கனைத்துக் கொண்டான். "ஒருவரும் பார்க்க மாட்டார்கள் என்றா சொல்கிறீர்கள்? அவர்கள் பார்க்க வேண்டாமே! ஒருவன் நிச்சயமாகப் பார்ப்பான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்று தலைநிமிர்ந்து அவன் சொன்னான். அவனுடைய நெஞ்சத் திண்மையைக் கண்டு ரசிகர் பிரமித்துப் போனார்.

கிழவன் கூறியபடி அவனுடைய சிற்பத்தை அந்த ஒருவன்தானா கண்டான்? கோயிலைப் பார்க்க

சீகாழி - தோணியப்பர் கோயில் →
பக்கம் 20





← திருஞான சம்பந்தர்
(சீகாழியில் உள்ள உற்சவமூர்த்தி)
பக்கம் 13



சீகாழி - முத்துச் சட்டைநாதர்

பக்கம் 23

சீகாழி - கங்கா விஸர்ஜனமூர்த்தி

பக்கம் 24



வந்தவர்கள் எல்லோரும் கண்டார்கள். கர்ப்பக் கிருகத்துக்குள் இருக்கும் சுவாமிக்குப் பூஜை செய் வதுதான் வழக்கம். ஆனால் யாரோ ஒரு பக்தர் இந்தத் தூணைச் சுற்றிக் கம்பி கட்டி அதையே ஒரு கோயில் ஆக்கிவிட்டார்; விளக்குப் போட்டார்; தனியே பூஜையை நடத்தினார். முருகன் கம்பத்து இளையவனாகக் காட்சி தரலானான். இப்படி ஒரு கதை உண்டு.

திருவண்ணாமலையில் கோயிலுக்குள் இருக்கும் தீர்த்தக் கரையில் கம்பத்து இளையனார் கோயில் என்று ஒரு சந்நிதி இருக்கிறது. அருணகிரி நாதருக்கு அருள் செய்த பெருமான் திருக்கோயில் அது. ஒரு மண்ட பத்தின் தூணில் முருகன் எழுந்தருளியிருக்கிறான். அந்தத் தூணே கர்ப்பக்கிருகமாக ஒரு கோயில் பிறகு எழும்பியிருக்கிறது. அந்த மண்டபத்தைக் கட்டிய போதும், தூணில் உருவத்தை வடித்தபோதும் அங்கே இந்தச் சிறப்பு ஏற்படும் என்று அந்தக் காலத்தில் யாரும் உணர்ந்திருக்க மாட்டார்கள்.

சிதம்பரத்தில் கோயிலில் ஒரு தூணில் தண்டாயுதபாணி எழுந்தருளியிருக்கிறார். அந்தத் தூணே இப்போது தனிச் சந்நிதியாகிவிட்டது. இப்படியே தூணில் உள்ள ஆஞ்சநேயருக்கும், தண்டபாணிக்கும் மகிமை உண்டான இடங்கள் பல.

சீகாழியிலும் இப்படி ஒரு மூர்த்திக்குச் சிறப்பு உண்டாகியிருக்கிறது. அந்தத் தலத்தில் மூலலிங்கத் துக்குப் பிரமபுரீசர் என்று பெயர் அந்தக் கோயிலுக்குப் பிரமபுரீசர் கோயில் என்று நியாய

மாகப் பெயர் வழங்கவேண்டும். ஆனல் இப்போது தேவஸ்தானம் யாருடைய பெயரால் நடக்கிறது தெரியுமோ? சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் என்ற பெயரில்தான் எல்லாம் நடைபெறுகின்றன. அந்தத் தேவஸ்தானத்தின் தலைமைப் பதவியைச் சட்டை நாதர் தம்முடைய மகிமையினல் பெற்றார். அவருடைய சக்தியை இப்போதும் பக்தர்கள் பாராட்டிப் புகழ்கிறார்கள்; அவரை வேண்டிக் கொள்கிறார்கள்.

இந்தச் சட்டைநாதர் உருவம் தோணியப்பர் கோயிலைச் சார்ந்த ஒரு மூலையில் இருக்கிறது. கோயிலில் பிரமபுரீசர் சந்நிதிக்குப் பின்னே ஒரு கட்டுமலை இருக்கிறது. அந்த மலையில் தோணிபுரேசர் எழுந்தருளியிருக்கிறார். உமாபாகர், பெரிய நாயகர் என்று அப்பெருமானுக்குப் பெயர்கள் வழங்கும். கைலாயத்திலிருந்து பெயர்ந்து வந்த சிகரம் ஒன்று இந்தத் தலத்தில் விழுந்தது என்றும், அந்தச் சிகரம் சில காலத்தில் மறைந்து போக, அதன் அறிகுறியாக இந்தக் கட்டுமலையை ஒரு மன்னன் கட்டினன் என்றும் தலபுராணம் தெரிவிக்கிறது. கைலாசச் சிகரத்தை இருபது பறவைகள் ஏந்தி வந்தனவாம்.

பிரளய காலத்தில் உலகமெல்லாம் நீரில் மூழ்கி விட்டது. உயிர்கள் யாவும் இறைவனுடைய திருவடியில் ஒன்றி நின்றன. மறுபடியும் உலகத்தைப் படைக்கச் சிவபெருமான் திருவுள்ளம் கொண்டான். பிரணவத்தைத் தோணியாகக் கொண்டு அத்தோணியில் உமாதேவியாருடன் தானும் ஏறிச்

செலுத்திக்கொண்டு வந்தான். நாகப் பணியும், பிறையும், கொன்றை மாலையும், புலித் தோலாடையும் இன்றி அறுபத்து நான்கு கலைகளையே ஆடையாகப் புனைந்து பெரிய திருவுருவத்துடன் தோணியில் எழுந்தருளி வந்தான்.

நஞ்சுமிழ் உரகப் பூணும்
நகைநிலாக் கொழுந்தும் வாசப்
பைஞ்சுடர் இதழித் தாரும்
பாய்புலி அதளும் இன்றி
மஞ்சுறழ் கருமென் கூந்தல்
மாதொடு மருவி எண்ணெண்
துஞ்சருங் கலைகள் என்னும்
துலங்குபொற் கலைகள் தாங்கி*

வந்தானென்று சீகாழிப்புராணம் சொல்கிறது.

சிவபெருமான் அப்படி வரும்போது இந்தத் தலத்தைக் கண்டான். இது பிரளய நீரில் மிதந்து நின்றது. இதுவே மூலாதார க்ஷேத்திரம் என்று அருளிச்செய்து இங்கே தோணியுடன் நிலையாக எழுந்தருளினான்.

இந்தத் தோணிபுரக் கோயிலை மலையென்றும்; திருத் தோணிமலையென்றும் வழங்குகிறார்கள். இதற்குப் போக மேலைப் பிராகாரத்திலும் வடக்குப் பிராகாரத்திலும் படிக்கட்டுகள் இருக்கின்றன. இந்தக் கோயிலைச் சுற்றிப் பல பழஞ் சிற்பங்கள் சுதையால்

---

* உரகப்பூண்-பாம்பாகிய ஆபரணம். நகை-ஒளி. இதழித் தார்-கொன்றை மாலை. புலி அதள்-புலித் தோல். மஞ்சு உறழ்-மேகத்தை ஒத்த. துஞ்சரும் கலைகள்-அழியாத கலைகள். பொற் கலைகள்-பொன்னுடைகளை.

அமைந்திருக்கின்றன. பிரமபுரீசர் கோயில் விமானமும் இந்தக் கோயில் சுற்றுப் பகுதியும் ஒட்டியிருக்கின்றன. திருமலையில் ஞானசம்பந்தப் பெருமானுடைய தந்தையார் கையிற் கோலொடு நிற்க அந்தக் குழந்தை தோணிபுரேசரைச் சுட்டிக் காட்டுவது போன்ற சுதைச் சிற்பம் ஒன்று உள்ளது.

இந்த மலை கைலாய மலையின் சிகரத்தின் சின்னமென்றும் அந்தச் சிகரத்தை இருபது பறவைகள் தாங்கி நின்றன என்றும் புராணம் சொல்கிறது. இந்தச் செய்தி அப்பர் காலத்திலும் வழங்கியிருக்கிறது. அவர் பாடிய பாசுரத்தில்,

**பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட**
**ஞான்றுநின் பாதமெல்லாம்**
**நாலஞ்சு புள்ளினம் ஏந்தின**
**என்பர்; நளிர்மதியம்**
**கால்கொண்ட வண்கைச் சடைவிரித்**
**தாடும் கழுமலவர்க்கு**
**ஆளன்றி மற்றுமுண் டோஅந்தண்**
**ஆழி அகலிடமே***

என்று இச்செய்தியைக் குறிப்பிடுகிறார்.

இப்போது உள்ள புராணத்தை இயற்றியவர் இராம நாடகக் கீர்த்தனத்தைப் பாடிய அருணாசலக் கவிராயர். அவர் வடமொழியிலுள்ள புராணங்களை அறிந்து இப் புராணத்தைப் பாடினார். அவர் கி. பி. 1712 முதல் 1779 வரையில் வாழ்ந்தவர். இந்தப் புராணம் உண்டாவதற்கு முன்பே இத்

* புள்ளினம்- பறவையினம். நளிர்-குளிர்ச்சி. அந்தண் ஆழி அகலிடம்-அழகிய குளிர்ந்த கடல் சூழ்ந்த பூமி.

தலத்தைப் பற்றிய வரலாறுகள் வழங்கி வந்தன. தேவார காலத்தில் எத்தனையோ வரலாறுகள் வழங்கின என்பதைத் தேவாரப் பதிகங்களைக் கொண்டு அறியலாம்.

இத்தலத்துக்கு 71 தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன. அவற்றில் திருஞான சம்பந்தர் பாடியவை 67. சீகாழிக்கும் திருவீழி மிழலைக்கும் அதிகப்படியான பதிகங்களை ஞானசம்பந்தர் பாடினர். அதனால், "காழிபாதி, வீழி பாதி" என்று ஒரு பழமொழிகூட உண்டாகிவிட்டது. திருஞானசம்பந்தர் இத்தலத்தைப் பற்றிய வரலாறுகள் பலவற்றைக் குறிப்பிடுகிறார்.

**ஊர்பரந்தஉல கின்முத லாகிய**
**ஓர்ஊர் இதுவென்னப்**
**பேர்பரந்தபிர மாபுரம்**

என்றும்,

**கருமை பெற்றகடல் கொள்ள மிதந்ததோர்**
**காலம் இதுவென்னப்**
**பெருமை பெற்றபிர மாபுரம் மேவிய பெம்மான்**

என்றும் முன்னே சொன்ன செய்திகளை அவர் வாக்கிலும் காணலாம்.

திருமலையின்மேல் எழுந்தருளியிருக்கும் உமாபாகருடைய திருவுருவம் மிகப் பெரியது. அங்கே போனால் உருவத்தின் அழகிலே ஈடுபடாமல் இருக்க முடியாது.

இந்தத் தலம் மிகப் பழையது என்பதை உமாபாகரைத் தரிசித்தாலே தெரியும். அவர் தாருகாவனத்து முனிவருடைய யாகத்தை அழிப்பதற்கு முன்பே உண்டான ஊர் இது என்று

அவரைப் பார்த்தே தெரிந்துகொள்ளலாம். அவர் கையில் மான் இல்லை; மழு இல்லை. தாருகா வனத்து முனிவர் அனுப்ப இறைவன் அவற்றைப் பற்றித் தன் கையில் வைத்துக் கொண்டான். உமாபாகர் இங்கே எழுந்தருளியது அந்த நிகழ்ச்சிக்கு முற்பட்ட காலம். உமாபாகர் மான் மழுவின்றிப் பழைய யவராகக் கோலம் கொண்டிருப்பதை ஞானசம்பந்தரும் சொல்கிறார்.

செறிமுள ரித்தவி சேறி ஆறும்
    செற்றதில் வீற்றிருந் தானும் மற்றைப்
பொறியர வத்தணை யானும் காணாப்
    புகலி நிலாவிய புண்ணிய னே
எறிமழு வோடிள மான்கை இன்றி
    இருந்த பிரான்!*

என்பது அவர் பாட்டு. பழமையைக் குறிக்க எத்தனை அழகான அமைப்பு!

வடக்குப் பிராகாரத்தில் உள்ள படிக்கட்டின் வழியே ஏறி, மலையில் உள்ள பறவைகளையும் கண்டு, உமாபாகர் திருமுன் நின்றேன். அந்தக் கம்பீரமான கோலம் முன்னே நிற்பவர்களுடைய சிறுமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது. சாந்தமே வடிவமாகக் கருணை பொலியும் திருமுகத்தோடு வீற்றிருக்கிறார் அவர். அந்தப் பெருமானுடைய தரிசனத்தால் மனம் சாந்தி பெறுகிறது.

---

* முளரித் தவிசு-தாமரையாகிய ஆசனம், ஆறும் செற்று-காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறு உட்பகைகளையும் அழித்து. வீற்றிருந்தான்-பிரமன். அரவத்தணையான்-திருமால்.

உமாபாகர் முன் நின்றபோது கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருடைய நினைவு எனக்கு வந்தது. அவர் இந்த ஊரில் பல காலம் வாழ்ந்தவர். உமாபாகரையும் சட்டை நாதரையும் திருஞானசம்பந்த மூர்த்தியையும் வழிபட்டவர்.

உமை வாழும் பாகத்தானை அப் பெரும் புலவர் வழி பட்டார். தாம் இயற்றிய தக்கயாகப் பரணியில் காப்புக்குப்பின் நூலைத் தொடங்குகிறார். எடுத்த எடுப்பில் உமாபாகரை வாழ்த்துகிறார்:

**புயல்வாழ நெடிதூழி புவிவாழ**
**முதல்ஈறு புகல்வேதநூல்**
**இயல்வாழ உமைவாழ்வ தொருபாகர்**
**இருதாளின் இசைபாடுவாம்.**

உலகம் வாழ இறைவன் இப்படியெல்லாம் கோலம் கொண்டு வீற்றிருக்கிறானும். ஒழுக்கமும் அமைதியும் பெற்று, அன்பும் தியாகமும் மலிய, கலையும் கல்வியும் ஓங்க விளங்கிய தமிழ் நாட்டில் இத்தகைய மூர்த்திகளும் கோயில்களும் தமிழர் வாழ்வை எவ்வளவு தூரம் பண்படுத்தின என்பதை நினைந்து புளகம் பூத்தேன்.

உமாபாகர் சந்நிதியை வலம் வந்து மற்றொரு சிறிய படிக்கட்டில் ஏறினால் சட்டைநாதர் சந்நிதிக்குப் போகலாம். சட்டைநாதர் மிகவும் சக்தியுள்ள தெய்வம். நீராடித் தூய்மையாகவே அவர் இருக்கும் இடத்துக்குப் போக வேண்டும். சட்டைநாதர் பைரவ மூர்த்தி தோலால் அமைந்த சட்டை புனைந்து, எலும்புகள் முறுக்கிய தண்டத்தை ஏந்தியிருப்பவர். தோற்சட்டை அணிந்தமையால்

சட்டைநாதர் என்ற பெயர் வந்தது. அவருக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் நள்ளிரவில் பூசை நடைபெறும். அப்போது புனுகு சாத்துவார்கள், புனுகு சட்டத்திலிருந்து புனுகை எடுக்க இந்தக் கோயில் பிராகாரத்தில் தனி அறையே இருக்கிறது. சட்டைநாதரைத் தரிசிக்கும் பொருட்டுப் படியின் மேல் ஏறும்போதே கம்மென்று புனுகு வாசனை வீசும்.

உமாபாகர் கோயில் விமானத்தில் உள்ள ஒரு மூர்த்திதான் சட்டைநாதர். கம்பத்திளையனாரைப் போலத் தம்முடைய சக்தியினால் மகிமை பெற்றவர் அவர். தேவஸ்தானத்தையே தம்முடையதாக்கிக் கொண்டவர். கோயில் பிராகாரத்தைச் சுற்றியுள்ள தாழ்வாரத்துக்குத் திருமாளிகைப் பத்தி என்று பெயர். திருமாளிகைப் பத்தியில் முத்துச் சட்டைநாதர் என்ற மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். மேலே எழுந்தருளியிருப்பவர் சுதை உருவமுள்ளவர்; முத்துச் சட்டைநாதர் சிலா வடிவமுடையவர். திகம்பரமும் தோல் சட்டையும் கிங்கிணி மாலையும் கையில் தண்டும் உடைய இவரைப் படம் எடுக்க முடிந்தது.

திருமாளிகைப் பத்தியில் ஒரு பலி பீடம் இருக்கிறது. அங்கிருந்து மேலே பார்த்தால் சட்டைநாதர் சந்நிதி தெரியும். அந்தப் பலி பீடத்துக்கே தினமும் பூசை நடைபெறுகிறது.

பிரமபுரேசர் கர்ப்பக்கிருகத்துச் சுவர்களில் சில சிற்ப உருவங்கள் இருக்கின்றன. நீண்ட தமிழால் உலகை அளந்த குறுமுனிவர் தென்புறத்தில் எழுந்தருளியிருக்கிறார். மற்றோரிடத்தில் கங்காவிசர்ஜனருடைய அற்புதக் கோலத்தைக் கண்டேன்.

ஆகா! என்ன அழகு! அந்த உருவத்தின் படத்தை இங்கே காணலாம். அதில் அந்த அழகு முழுவதும் வரவில்லை. நிழற் படந்தானே? அந்த உருவம் கல்லா? இல்லை, மெழுகா? அதுவும் இல்லை. ஆனால் அது பேசுகிறது; பேசாமற் பேசுகிறது. கங்கையாகிய பெண்ணை இறைவன் தாங்கியிருக் கிறான். அவளை வெளியிலே எடுத்து விடுகிறான். அவள் மறைந்திருந்த வரையில் ஒன்றும் இல்லை. வெளிப்பட்டபோது குடும்பக் கலகம் ஒன்று உண்டாகிவிட்டது. உமாதேவி ஊடல் கொண்டாள். 'நம்முடைய கணவனுடைய தலையை மிதித்துக் கொண்டல்லவா இவள் இருக்கிறாள்?' என்று அம்பிகை சினந்தாள். அவள் கோபத்தை இறைவன் ஆற்றப் புகுகிறான். அப் பெருமாட்டியின் தாவாங் கட்டையைப் பிடித்துக்கொண்டு 'தாஜா' செய்கிறான். அம்பிகையின் அலட்சிய பாவத்தையும், இறை வனுடைய வணக்க நிலையையும் அந்த உருவத்தில் சிற்பி அமைத் திருக்கிற அழகே அழகு! கல்லிலே வடித்த கவிதை அது!

சீகாழியில் சுவாமி சந்நிதிக்குள் நுழைந்து பிரம புரேசரையும், உமாபாகரையும், சட்டைநாதரையும் தரிசித்துச் சுற்றுப் பிராகாரத்தில் உள்ள மூர்த்தி களையும் தரிசித்துவிட்டு வெளியே வந்தால், வெளிப் பிராகாரத்தில் பிரம தீர்த்தத்தைப் பார்க்கலாம். கோயிலைப் பிரதட்சிண மாகவே சுற்றி வரலாமே. கிழக்கு, தெற்கு, மேற்குப் பிராகாரங்களைச் சுற்றி வந்துவிட்டோம். மேற்குப் பிராகாரமும் வடக்குப் பிராகாரமும் சேரும் மூலையிலேதான் திருஞான சம்பந்தர் திருக்கோயில் இருக்கிறது. அது தனிக்

கோயில். பிராகாரம் தனியே உண்டு. அங்கேதான் லிங்கமும் அதன்பின் ஞானசம்பந்தர் உருவமும் இருக்கின்றன.

ஞானசம்பந்தரைத் தரிசித்துக்கொண்டு வந்தால் அக்கோயிலை அடுத்து அம்பிகையின் கோயில் இருக்கிறது. திருநிலைநாயகி என்று தமிழிலும், ஸ்திர சுந்தரி என்று வடமொழியிலும் அம்பிகையின் நாமங்கள் வழங்குகின்றன. அம்மை கோயிலுக்கு முன்பும் வடபுறத்திலுமாகப் பிரம தீர்த்தம் இருக்கிறது. பிரம தீர்த்தத்தின் தென் கரையில் ஒரு பக்கம் சின்னப் புரைகளில் ஞானசம்பந்தர் உருவமும், மறு பக்கம் அவர் தந்தையார் உருவமும் இருக்கின்றன. இந்த இடத்தில்தான் திருமுலைப் பால் உற்சவத்தன்று சம்பந்தர் திருமுலைப் பாலைப் பெறும் நிகழ்ச்சி நடைபெறும்.

சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் நடுவில் முருகன் இருக்கும் அமைப்பு ஒன்று உண்டு. அந்தக் கோலத்தில் உள்ள பெருமானைச் சோமாஸ்கந்தர் என்று சொல்லுவார்கள் ; உமாதேவியுடனும் ஸ்கந்தருடனும் உள்ளவர் என்பது அந்தத் தொடருக்குப் பொருள் திருஞான சம்பந்தர் முருகனுடைய திருவவதாரம் என்று கொள்வது ஒரு மரபு. அதன் படி இத் திருக்கோயிலில் சோமாஸ்கந்த மூர்த்தி அமைப்பில் பிரமபுரீசர் கோயிலுக்கும் திருநிலை நாயகி திருக்கோயிலுக்கும் இடையில் ஞானசம்பந்தர் திருக்கோயில் இருக்கிறது.

மற்றொரு சிறப்பும் இந்தக் கோயிலில் இருப்பதாகச் சொல்லுவார்கள். மூன்று மூன்றாக அடுக்கும்

விஷயங்கள் பல உண்டு. குருலிங்க சங்கமம் என்பது ஒருவகை அடுக்கு. குரு என்பது ஞானசிரியரைக் குறிப்பது. லிங்கம், இறைவன். அடியாரைச் சங்கமம் என்பர்; நடமாடும் கடவுள் ஆதலின் சங்கமர் என்ற பேர் வந்தது. சீகாழியைக் குருலிங்க சங்கம ஸ்தலம் என்று சொல்வார்கள். பலருக்கு ஞான உபதேசம் செய்த உமாபாகர் குருமூர்த்தி; சிவலிங்கப் பெருமானாகிய பிரமபுரேசர் லிங்கம்; பைரவராகிய சட்டைநாதர் சங்கமர்.

புராணத்தில் சொல்லாமல் இருந்தாலும் எனக்கு இன்னும் சில மூன்றுகள் தோன்றின. இங்கே குளம், ஆறு, கடல் மூன்றும் இருக்கின்றன. "கடல் எங்கே?" என்று கேட்டு விடாதீர்கள். முன்பே சொல்லியிருக்கிறேன், இது காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்தது என்று. ஆகையால் இது கடற்கரையில் இருப்பதாகவே கருதுவதற்குரியது. இது என் கற்பனை அல்ல. சம்பந்தரே அதற்குச் சாட்சி சொல்கிறார்.

**பாயோங்கு மரக்கலங்கள்**
**படுதிரையால் மொத்துண்டு**
**சேயோங்கு வேணுபுரம்**
**செம்பதியாத் திகழ்ந்தீரே.**
**நெருக்குற்ற கடல்திரைகள்**
**முத்தமணி சிந்தச்**
**செருக்குறு பொழிற்பொலி**
**திருப்புகலி யாமே.**

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறந்த இடம் இது. தேவாரம், புராணம், மற்றத் துதிகள் என்று மூன்று வகையான பாடல்களைப் பெற்ற தலம் இது. இன்னும் அடுக்கிக் கொண்டு போகலாம்.

இந்தக் கோயிலில் பல பழைய கல்வெட்டுகள் இருக்கின்றன. ஒரு சாசனம் இரண்டாம் குலோத்துங்கன் அரியணையேறிய நான்காம் ஆண்டில் பொறிக்கப் பெற்றது, சம்பந்தர் கோயிலில் தேவார ஏடுகளைப் பல காலமாக வைத்துப் பாதுகாத்து வந்தார்கள். அதைத் தினந்தோறும் பூசித்துக் காப்பாற்றுவதற்கென்றே ஒரு தமிழ் விரகர் இருந்தார். ஏடுகள் சிதிலம் அடைந்தால் மீட்டும் புதுப்பித்தார்கள். இந்தச் செலவுகளுக்காக நிலம் விட்டிருந்தார்கள். இந்தச் செய்திகளை அந்தச் சாசனம் சொல்கிறது. தேவாரத்தை அருமையாக வைத்துக் காப்பாற்றிய முறை எத்தனை உயர்வாக இருக்கிறது !

இந்தக் கோயில் ஆட்சி தருமபுர ஆதீனத்தின் சார்பில் இருக்கிறது. அவ்வாதீனத்தைச் சார்ந்த தம்பிரான் சுவாமிகள் ஒருவர் கோயில் பரிபாலனத்தை மேற்பார்த்து வருகிறார். அவரைப் பார்த்தாலே பழங்காலத்துத் தொண்டர்களுடைய நினைவு வரும். 1700 ஏக்கர் பூமியும் அரசாங்கம் உதவும் 2500 ரூபாய் ஆண்டு வருவாயும் இவ்வாலயத்தின் ஆட்சிக்குப் பயன்படுகின்றன.

ஞானக் குழந்தையின் நினைவை உண்டாக்கும் திருத்தோணிபுரம் அன்று பிரளயத்தில் மிதந்தது. இன்றும் தேவார திருவாசகப் பனுவல்களிலே ஈடுபட்டுத் திருஞான சம்பந்தருடைய பெருமையிலே ஊறிய உள்ளங்களில் எல்லா நினைவுகளையும் அழுத்தி விட்டுத் தோணிபுரம் மேலே மிதந்து கொண்டுதான் இருக்கிறது.

## சோதியமும் விதியும்

அப்பைய தீட்சிதர் என்றால் வேதாந்த சாஸ்திரம் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்; வடமொழி வித்துவான்களுக்கும் தெரியும். அவர் வடமொழியில் மகாபண்டிதர்; வேதாந்தத்தில் சிங்கம்; பரம சைவர். அவர் எத்தனையோ நூல்களை யும் வியாக்கியானங்களையும் எழுதியிருக்கிறார். ராஜ ராஜாக்களிடம் பல பல சம்மானங்களைப் பெற்றிருக் கிறார்.

அவர் ஒரு சமயம் தம்முடைய மாமனார் ஊருக்குப் போனார். காதிலே குண்டலங்கள் அசைய, மேலே சால்வை பளபளக்க, மத்த கஜம் போல அவர் நடந்து வந்தார். அவரை ஊரிலுள்ள பெண்கள் வாயிலில் தலையை நீட்டி நீட்டிப் பார்த்தார்கள். நாலு பேராகக் கூடியும் பார்த்தார்கள். ஒருத்தி, "யாரடி இந்தப் பிராமணன்?" என்று கேட்டாள். "இவர்தாண்டி நம் ஆச்சாள் ஆம்படையான்!" என்று வேறு ஒருத்தி பதில் சொன்னாள்; கொஞ்சம் உரக்கவே சொன்னாள். அது அப்பைய தீட்சிதர் காதிலும் விழுந்தது. அவர் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டார். அவரை அந்தப் பெண்மணி மகா வித்துவான் என்று சொல்லவில்லை; பெரிய நூலாசிரி யர் என்று குறிப்பிடவில்லை; வேதாந்த சாஸ்திர நிபுணர் என்று சுட்டவில்லை; சிவபக்தர் என்றும் சொல்லவில்லை. 'ஆச்சாள் ஆம்படையான்' என்று தான் சொன்னாள். அவர்களுக்கு ஆச்சாளைத் தெரியும்; அவள் மூலமாகத்தான் அப்பைய தீட்சி தரைத் தெரிந்து கொண்டார்கள். அவளுடைய

அகமுடையான் என்பதனால்தான் அவர்களுக்கு அவரிடம் சிரத்தைகூட. பிறகு ஒரு சமயம் அப்பைய தீட்சிதர் இதை நினைத்து, "அஸ்மின் க்ராமே ஆச்சாள் ப்ரஸித்தா" என்று சொன்னாராம். 'நமக்கு எத்தனை பெருமை இருந்தாலும் இந்தக் கிராமத்தில் ஆச்சாள்தான் புகழுடையவள்' என்று அவர் சொன்னதில் ஆச்சரியம் இல்லை.

ஆச்சாள் என்பது பழகு தமிழில் பெண்கள் தேய்த்துவிட்ட உருவம். அதன் மூல உருவம் ராஜம். ராஜம்மாவை ஆச்சாள், ஆச்சாள் என்றே அழைத்து அந்தப் பேரே நிலைத்து விட்டது.

ஆச்சாள் என்ற பெயரைப்போலவே ஆச்சாள் புரம் என்ற ஊரும் புகழ் பெற்றிருக்கிறது. திருஞான சம்பந்தர் திருமணம் நடந்த இடம் அது. அப் பெயரைத் தந்த ஆச்சாள் யார் என்று திட்ட மாகத் தெரியவில்லை. அப்பைய தீட்சிதர் மனைவியின் பெயர் ராஜம்மா; அது ஆச்சாள் என்று திரிந்தது. இப்போதும் ராஜம்மாவை ஆச்சாள் என்று அழைக்கும் வழக்கம் இருக்கிறது. ஆனால் ஆச்சாள் புரத்துக்குப் பெயர் தந்த ஆச்சாள், ராஜம் அல்ல என்கிறார்கள். ஆயாள் அல்லது ஆத்தாள் என்பது அப்படித் திரிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அந்த ஆயாள் யார்?

ஆச்சாள்புரத்தில் எழுந்தருளியிருக்கும் அம் பிகை என்று சிலர் சொல்கிறார்கள். "ஞான சம்பந் தருக்கு இங்கே திருமணம் ஆயிற்று. அவருடைய மனைவி நமக்குத் தாய் போன்றவள். அப்பெருமாட்டி

யாகிய ஆத்தாள் பிறந்த இடம் ஆனதால் ஆத்தாள் புரமாகி அதுவே ஆச்சாள்புரம் என்று மருவியது'' என்று சொல்கிறவர்களும் இருக்கிருர்கள்.

வேறு ஒருவரை, ''இங்கே யாராவது ராஜம்மாள் என்ற பெயரோடு யாவரும் புகழும் வண்ணம் இருந்த துண்டா ?'' என்று கேட்டேன். ''இங்கே இரண்டு மைல் தூரத்தில் ஒரு தோப்பு இருக்கிறது. அங்கே ஓர் அம்மையாரின் சமாதி இருக்கிறது. மிகவும் சக்தி யுள்ளவர் என்று சொல்கிருர்கள். ஒருகால் அவருடைய பெயர் நீங்கள் சொல்கிற மாதிரி இருக்க லாம்'' என்று அவர் சொன்ஞர். வேறு சிலர், ''ஆசார்யபுரம் என்பதே அப்படி மருவியது. சைவ சமயாசாரியராகிய திருஞான சம்பந்தர் சோதியுட் புக்க தலம் ஆதலின் அவர் பெயரால் இந்தப் பெயர் வந்தது'' என்கிருர்கள். இத்தனை ஆராய்ச்சி செய்தும் இன்னும் இதுதான் ஆச்சாள்புரம் என்னும் பெயருக்குக் காரணம் என்று தெரிந்துகொள்ள முடிய வில்லை.

தேவாரத்திலும் இலக்கியத்திலும் இந்த ஊருக்கு நான்கு வகையாகப் பெயர் வழங்குகிறது. நல்லூர் என்பது ஒரு பெயர்; பெருமணம் என்பது ஒரு பெயர்; நல்லூர்ப் பெருமணம் என்பது ஒரு நாமம்; பெருமண நல்லூர் என்று ஒரு பெயர். வாய்க்கால் இருக்கிறதே; அதைக் கால் என்றும் சொல்வார்கள்; வாய் என்றும் சொல்வதுண்டு. இரண்டையும் சேர்த்துக் கால்வாய் என்றும், வாய்க்கால் என்றும் சொல்வது வழக்கம். திருப் பெருமண நல்லூராகிய ஆச்சாள்புரத்தின் பெயரும் அப்படித்தான் நான்கு வகையாக மாறி வழங்குகிறது.

இந்த ஒப்புமை நானுகக் கண்டு பிடித்தது அன்று. என்னுடைய ஆசிரியருக்கு ஆசிரியராகிய மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சொல்லியிருக்கிருர். அவர் இந்த ஊருக்கு வந்தபோது இங்குள்ளவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கே எழுந்தருளியிருக்கும் திருவெண்ணீற்றுமை யம்மையைப்பற்றி ஒரு பிள்ளைத்தமிழ் பாடினுர். அதில் ஒரு பாட்டில் இந்தக் கருத்தைச் சொல்லி யிருக்கிருர்.

வண்கால் என்ன வாய்என்ன
வாய்க்கால் எனக்கால் வாய்எனப்பேர்
மருவி மாரு வளங்கொள்நமை
மான நல்லூர்ப் பெருமணம் வான்
எண்கா நல்லூர்ப் பெருமணம்,ஏர்
ஏய்பெ ருமண நல்லூர்என்று
இலகு பெயர்பூண் டுறுவளம்ஏய்ந்து
என்றும் விளங்கும் இந்நகரை.

தம் பெயருக்கும் இந்தத் தலத்தின் பெயருக்கும் இத்தகைய ஒப்புமை இருப்பதை எண்ணி இந்த ஊரைச் சுற்றிப் பல கால்வாய்கள் சூழ்ந்திருக்கின்றன வாம். இப்படி ஒரு கற்பனையை அக்கவிஞர் பாடி யிருக்கிருர்.

## 2

ஊருக்குச் சிவலோகம் என்று பெயர் உண்டு. ஆனல் இப்போதுதான் இது உண்மையாகவே சிவலோகமாக விளங்குகிறது. எங்கே பார்த்தாலும் திருநீற்றின் ஒளி; எங்கே பார்த்தாலும் ருத்திராட்சக் காட்சி; ஹர ஹர என்ற முழக்கம். ஒரே கோலாகலம்;

கல்யாணக் கோலாகலம். நம்முடைய திருஞான சம்பந்த மூர்த்திக்குத்தான் திருமணம் நிகழப் போகிறது. பதினாறு வயசு நிரம்பி அழகு பொங்கும் அற்புத மேனியோடு சிவப்பொலிவு திகழ விளங்கு கிறார் அவர்.

ஞானசம்பந்தர் முதலில் கல்யாணம் செய்து கொள்ள இசையவில்லையாம். பெற்றோர்களும் மற்றோர்களும், "திருமணப் பருவம் வந்துவிட்டது; மணம் செய்தருள வேண்டும்" என்று சொன்னார் களாம். மாதவத்தின் கொழுந்தனைய சம்பந்தர் சுற்றத் தொடக்கை விரும்பாதவராய், "வயசானால் என்ன ? திருமணம் வேண்டாம்" என்றார்.

"மறையவராகப் பிறந்தமையாலும் வேத நெறி தழைக்கச் செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டமை யாலும் அந்தணர்களுக்குரிய ஆறு தொழில்களும் செய்ய வேண்டும்; அதற்குத் திருமணம் செய்து கொள்வது இன்றியமையாதது" என்று பழுத்த முது மறையவர்கள் கூற, இறைவன் திருவருளை எண்ணி அவர் உடன்பட்டார்.

இந்தத் திருப்பெருமண நல்லூரில் இருந்த நம்பாண்டார் நம்பியின் பெண்ணைப் பேசினார்கள். அப்போது இதற்கு நல்லூர் என்றபெயர்தான் வழங்கி வந்தது. கல்யாணத்துக்கு வேண்டிய காரியங்க ளெல்லாம் முறையாக நடைபெற்றன. மாப்பிள்ளையும் வந்துவிட்டார். அவருடன் சிவபக்தர் கூட்டமும் வந்தது. திருநீலநக்க நாயனார், முருக நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் ஆகிய நாயன் மார்களும் வந்திருந்தார்கள்.

பாணிக்கிரகணம் ஆயிற்று. தீயை வலம் செய்ய வேண்டும். "ஞானுக்கினியாக இருப்பவர் சிவ பெருமானே; அவரை வலஞ் செய்யப் போகலாம்" என்று சொல்லித் தம் மனைவியின் திருக்கரத்தைப் பற்றிக்கொண்டு கோயிலை நோக்கி நடந்தார் ஞான சம்பந்தர். அவர் மனத்துக்குள், 'இந்த இல்லொழுக் கம் வந்து சூழ்ந்ததே! இனி என் செய்வேன்! இவளோடும் சிவபெருமான் திருவடியை அடை வேன்' என்று எண்ணி நேரே கோயிலுக்குச் சென்ருர். திருமணக் கூட்டம் முழுவதும் உடன் சென்றது.

சிவபிரான் சந்நிதியை அடைந்த சம்பந்தர் தம் கருத்தில், 'இனி எனக்கு விடுதலை வேண்டும்' என்ற வேட்கை மீதூர, "நல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்" என்று ஆரம்பிக்கும் திருப்பதிகத்தைப் பாடினுர்.

அப்போது அங்கே ஒருபெருஞ் சோதிப் பிழம்பு தோன்றியது. "நீயும் உன் மனைவியும் மணத்திற்கு வந்தவர்கள் யாவரும் இந்தச் சோதிக்குள் புகுங்கள்" என்று ஓர் அசரீரி வாக்கு வானில் எழுந்தது. அந்தப் பெருஞ் சோதியினிடையே ஒரு வாயில் தோன்றிற்று. அதைக் கண்ட ஞானசம்பந்தர்,

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினுர்.

யாவரும் சோதியில் ஒவ்வொருவராகப் புகக் கடைசி யில் தாமும் தம் மனைவியுடன் எழுந்தருளினுர்.

> சோதி மலைஒன்று தோன்றிற் றதில்ஒரு
> வீதிஉண் டாச்சுதடி

என்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிருர். அவர் இந்தச் சோதியையும் வீதியையும் நினைந்துதான் பாடினுரோ, யாதோ, தெரியவில்லை. திருஞான சம்பந்தருடைய திருமணம் நடந்ததனுல் இந்த ஊருக்குப் பெருமண நல்லூர் என்று பெயர் வந்த தாம்.

## 3

கோயிலுக்குப் போனேன். சந்நிதி கிழக்கு நோக் கியது. சந்நிதியில் ஒரு குளம் இருக்கிறது. அதற்குப் பஞ்சாட்சர தீர்த்தம் என்று பெயர். கோயில் மிகப் பெரியதும் அன்று; மிகச் சிறியதும் அன்று. முன்னுல் பழைய கோபுரம் இருக்கிறது. நேரே சென்று சுவாமி யைத் தரிசித்தேன். சிவபெருமான் திருநாமம் சிவலோகத்தியாகர். இங்கே பல முனிவர்களுக்கும் அன்பர்களுக்கும் சிவலோகக் காட்சியை இறைவன் காட்டியதால் அப்பெயர் வந்ததென்று புராணம் சொல்கிறது. சுவாமி சந்நிதியில் நூற்றுக்கால் மண்ட பத்தில் திருஞானசம்பந்தர் தம் மனைவியாரோடு எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் இருக்கிறது, கல்யாணசம்பந்தர் என்று சொல்கிருர்கள். அவரைத் தரிசித்துக்கொண்டேன். அர்ச்சகர் ஓர் அர்ச்சனை செய்தார். அது திருஞானசம்பந்தருக்கென்று அமைந்த தனி அர்ச்சனை. சீகாழியில் ஞானசம்பந் தருக்கு முருகப் பெருமானுடைய அஷ்டோத்

தரத்தையே சொல்லி அர்ச்சனை செய்கிறார்கள். இங்கே அர்ச்சனையைக் கூர்ந்து கவனித்தேன். கடைசியில் திருஞானசம்பந்தருடைய மனைவியார் திருநாமம் வரும் என்று ஆவலோடு கவனித்தேன். ஆச்சாள் என்ற பெயருக்குரிய மூலத்தைக் கண்டு பிடித்து விடவேண்டும் என்று ஆசை. நூற்றெட்டுத் திருநாமங்கள் முடிந்தன. "ஸ்தோத்திர பூரணீ சமேத ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி..." குருக்கள் அர்ச்சனையைச் சொல்லி முடித்தார். திருஞான சம்பந்தப் பெருமானுடைய பத்தினியின் திருநாமம் ஸ்தோத்திர பூரணி என்று தெரிந்து கொண்டேன்.

இந்தப் பெயருக்கு என்ன காரணம்? திருஞான சம்பந்தர் இவ்வுலகில் திருவவதாரம் செய்து தேவாரம் பாடினார். அவைசிவபெருமானுடைய தோத்திரங்கள். அவர் திருமணத்தன்று பாடியவையே இறுதித் தோத் திரங்கள். திருஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரம் அன்றோடு முற்றுப் பெற்றது; அந்தத் தோத்திரத்தைப் பூரணமாக்க வந்தவரைப் போல அவருடைய மனைவியார் விளங்குகிறார். அதனால் ஸ்தோத்திர பூரணி என்று பெயர் ஏற்பட்டதோ? வேறு காரணம் தெரிகிற வரையில் இப்படி வைத்துக் கொள்வதில் என்ன தவறு?

அவ்விருவருடைய உற்சவ விக்கிரகங்களும் திருக்கோயிலுக்குள் இருக்கின்றன. கையில் பாற் கிண்ணத்தோடு மூன்றாண்டு உருவமுடைய சம் பந்தர் விக்கிரகமும் தனியே இங்கே இருக்கிறது.

"இவை பழங்கால முதலே இருந்துவரும் விக்கிர கங்கள் தாமா?" என்று அயலில் உள்ளவர்களைக் கேட்டேன்.

என் கண்ணை அருகிலே ஓடவிட்டேன். "நீயே தெரிந்துகொள்" என்பது போல அங்கே திரி புரசங்காரர் நின்று கொண்டிருந்தார். "இது அல்லவா கலைப்படைப்பு!" என்று வியந்து நின்றேன். வேறு சில பழைய விக்கிரகங்களும் இருந்தன. அவற்றோடு ஒப்பு நோக்கும் போது சம்பந்தருடைய திருமேனிகள் நிச்சயமாகப் பிற்காலத்தில் அவசரத்தில் அமைக்கப் பெற்றவை என்றே புலப்பட்டது.

அப்போதுதான் கோயிலின் தர்மகர்த்தா ஒரு விஷயத்தைச் சொன்னார். அவரைப்பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். தாடியுடன் திருநீறு சண்ணித்த மேனியுடன், "அடியேன்" என்ற பணிவுப் பேச்சுடன் நிற்கும் அவரைப் பார்த்தாலே இவரும் ஒரு நாயனரோ என்று தோன்றும். கோயில்களில் தக்க வர்களை அதிகாரியாக வைத்துப் பாதுகாத்துவரும் தருமபுர ஆதீனத்தினர் இவரைப் பொறுக்கி இந்த ஆலயத்தை ஒப்பித்திருக்கிறார்கள்.

ஸ்ரீமான் வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் ஒரு சரித்திரச் செய்தியைச் சொன்னார். "இந்த ஊரில் ஒரு யுத்தம் நடந்ததென்று தெரிகிறது" என்றார்.

"எப்போது? யாருக்கும் யாருக்கும்?"

"கும்பினிக்காரர்களுக்கும் தஞ்சை மன்னருக்கும் இடையே போர் நிகழ்ந்தது, அப்போது லாரென்ஸ்

என்ற துரை இந்தக் கோயிலைக் கைப்பற்ற வந்தாராம். இங்கு இருந்தவர்கள் அவர் காலில் விழுந்து கோயிலை ஒன்றும் செய்யவேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்களாம். இது இருநூறு வருஷங்களுக்கு முன் நடந்த செய்தி'' என்றார்.

''கும்பினிக்காரர்கள் பழைய விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு போயிருக்கலாம். திருஞான சம்பந்தர் திருவவதாரத் தலமாகிய சீகாழியில் உள்ள சம்பந்தர் உற்சவ விக்கிரகம் மிகப் பழையதாக இருக்கிறது. அப்படியே இங்கும் இருந்திருக்க வேண்டும். அப்பெருமான் திருமணக் கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் பழைய விக்கிரகத்தை அந்த வெள்ளைக்காரன் எடுத்துக்கொண்டு போயிருப்பான். அந்தத் துரையின் பெயர் என்ன?''

ஆச்சாவுக்கும் அவன் பெயருக்கும் ஏதாவது முடிச்சுப் போடலாமோ என்ற எண்ணத்தால்தான் கேட்டேன். ''லாரென்ஸ் துரை'' என்று மறுபடியும் அவர் சொன்னபோது எனக்குச் சப்பிட்டுவிட்டது. ''அவன் பேர் எதுவாக இருந்தால் என்ன?'' என்று என் ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டேன். இந்தப் போரைப்பற்றிய செய்திகள் தஞ்சை ஜில்லா கெசட்டியரில் இருக்கிறதாம். இந்தச் சண்டை 1749-இல் நடைபெற்றதாகத் தெரிய வந்தது.

இறைவன் திருக்கோயிற் கோபுரத்தை அன்பர் காட்டி, ''அதோ பாருங்கள்!'' என்றார். அவர் எதைச்

சுட்டிக் காட்டுகிருர் என்று தெரியாமல், "எதைப் பார்க்கச் சொல்கிறீர்கள்?" என்றேன்.

"அதோ தலை கீழாய் நிற்கிற உருவம்." நான் பார்த்தேன்.

"காக புசுண்டர் என்ற முனிவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"அவர் பேரால் ஒரு நாடி சாஸ்திரம் இருக்கிறது தெரியும்."

"அவர் இந்தத் தலத்துக்கு வந்தாராம். கைலையிலிருந்து வந்தவர் இறைவன் ஆணையின் படி திருஞானசம்பந்தர் திருமணத்தில் முக்தி பெறலாம் என்ற எண்ணத்தோடு நெடுங்காலத்துக்கு முன்பு இங்கே வந்தார். இத் தலத்தின் பெருமையை உணர்ந்து இங்கே தலைகீழாக நடந்து வந்தார். தலைகீழாக இருந்து தவம் செய்தார். அவர் பிரதிஷ்டை செய்த யோகீசர் என்ற சுவாமி கோயில் ஒன்று இவ்வூரில் இருக்கிறது. காகமா முனிவர் ஞான சம்பந்தர் இங்கே வரும்வரையில் தலைகீழாக நின்று காத்திருந்து சோதியில் கலந்தார்."

இந்தத் தலத்தில் பஞ்சாட்சரம், திருநீறு இரண்டுக்கும் மகிமை அதிகம். இறைவன் தன் சூலத்தைக் குத்தி ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அதில் தன் சடையிலுள்ள கங்கையிலிருந்து புனலை நிரப்பிப் பஞ்சாட்சரத்தை ஆவாகனம் செய்தான். அதனால் பஞ்சாட்சர தீர்த்தம் என்ற பெயர் வந்ததாம். யாவரும் சோதியிலே புகுவதற்கு முன் இத்தீர்த்தக் கரையில் அம்பிகை எழுந்தருளி யாவருக்கும்

வெண்ணீறு அளித்தருளினாள். அதனால் அம்பி கைக்கு வெண்ணீற்றுமையம்மை என்ற திருநாமம் உண்டாயிற்று.

இந்தத் தலத்துக்குக் கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் இயற்றிய புராணம் ஒன்று இருக் கிறது. 533 விருத்தங்கள் அடங்கியது அது. அந்தக் காலத்தில் தலங்களில் உள்ள மக்கள் தலபக்தியை யும் சிவபக்தியையும் வளர்ப்பதற்கு எவ்வளவோ காரி யங்களைச் செய்திருக்கிறார்கள். உண்மை நிகழ்ச்சி களையும் கற்பனைக்காட்சிகளையும் இணைத்துக் கவிதையிலும் வைத்து இன்புற்றார்கள்.

தலபுராணத்தில் திருஞானசம்பந்தர் திரு மணத்தைப் பற்றிய வரலாற்றில் பெரிய புராணத்தில் இல்லாத செய்திகளும் இருக்கின்றன.

சோதி தோன்றியபோது பலர் அதைக் கண்டு அஞ்சினார்களாம். அடித்து அமுது ஊட்டும் அன்னையைப் போல, இந்தப் பேறு பின் வராது என்று உணராமல் நின்றவர்களையும் பயனடையச் செய்ய விரும்பினான் இறைவன். நந்தியெம் பெருமானை அனுப்பி அருகில் நின்றவர்கள் யாவரை யும் வெருட்டி இங்கே சேர்க்கும்படி செய்தானாம். அப்படி வெருட்டிய இடம் இன்று நந்தி வெருட்டி என்ற பெயரோடு விளங்குகிறது. அங்கே நந்தி மடு என்ற மடுவும் உண்டு.

கர்ண பரம்பரையில் வரும் செய்திகளும் சில உண்டு. இதற்கு அருகில் கடைக்காநல்லூர் என்ற ஊர் இருக்கிறது. அது கடைக் கண் விநாயக

நல்லூர் என்பதன் மரூஉ. அங்கே ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. அவர் கடைக்கண் விநாயகர் என்ற பெயருடையவர். சோதியில் போய்ச் சேருங்கள் என்று கடைக் கண்ணால் அவர் காட்டினாராம்.

இந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்குச் சைவ சமயாசாரியர்களிடம் எத்தனை பக்தி உண்டென்பதை, இப்படியெல்லாம் வரலாறுகளைச் சொல்லி அவற்றோடு தொடர்புடையவை என்று ஊர்களை நிறுவி வாழ்தலால் தெரிந்து கொள்ளலாம் இத்தலத்துக்கு அருகில் திருஞானசம்பந்தபுரம், திருநாவுக்கரச நல்லூர், ஆலால சுந்தரம், மாணிக்க வாசல் என்று நான்கு ஊர்கள் நால்வருடைய திருநாமத்தை நினைப்பூட்டிக்கொண்டு இருக்கின்றன.

இத் தலத்தின் கோயிலில் வழித்துணை விநாயகர் என்றும், மாவடி விநாயகர் என்றும் விநாயகப் பெருமான்கள் எழுந்தருளி யிருக்கின்றனர் மாவடி விநாயகர் ஒரு காலத்தில் மாமரத்தின் அடியில் எழுந்தருளியிருந்தார் போலும்!

திருவெண்ணீற்றுமை கோயில் தனியே இருக்கிறது. முன்பு திருஞானசம்பந்தர் திருக்கோயில் அம்பிகை கோயிலுக்கு வடக்குப் பக்கத்தில் இருந்ததாம்; திருப்பணி செய்தபோது நூற்றுக்கால் மண்டபத்துக்குக் கொண்டுவந்து அமைத்து விட்டார்களாம்.

கோயிலுக்கு வடக்கே உள்ள வீதியில் திருஞானசம்பந்தர் மடம் என்ற பெயரோடு ஒரு மடம் இருக்கிறது. ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் எங்களை

அங்கே அழைத்துச் சென்ருர். ஞானசம்பந்தப் பெருமான் திருமணக் கோலத்தோடு காட்சி தரும் அழகிய படம் ஒன்றை அங்கே வைத்துப் பூசித்து வருகிருர்கள்.

"பெரிய புராணத்தில் சம்பந்தப் பெருமான் கோயிலுக்கு அருகில் ஒருமடத்தில் புகுந்து திருமணக் கோலம் புனைந்ததாகச் சேக்கிழார் பாடுகிருர்;

**நாதரைப் பணிந்து போற்றி**
**நற்பொருட் பதிகம் பாடிக்**
**காதல்மெய் அருள்முன் பெற்றுக்**
**கவுணியர் தலைவர் போந்து**
**வேதியர் வதுவைக் கோலம்**
**புனைந்திட வேண்டும் என்னப்**
**பூதநா யகர்தம் கோயிற்**
**புறத்தொரு மடத்திற் புக்கார்**

என்று சொல்லும் பாட்டில் இங்கே ஒரு மடம் இருந்ததாகச் சொல்கிருர். அதை நினைந்து இந்த மடம் எழுந்தது. நீலநக்கர், முருகநாயனுர் முதலிய நாயன்மார்கள் எழுந்தருளிய மடம் இது. இப்போது......"

அவர் இன்னது சொல்லப் போகிருர் என்று ஊகித்துப் பேச்சை மாற்றினேன். அவர் எங்களை உள்ளே அழைத்துச் சென்ருர். அங்கே ஒரு முற்றம். அதில் ஒரு ரோஜாச் செடி. அதில் அன்று ஒரு மலர் மலர்ந்திருந்தது.

"ஆண்டவன் திருவருளை என்னென்று சொல்வேன்! உங்களை இந்த மலர் வரவேற்கிறது. இதுவே முதற்பூ. உங்களைக் கண்டு மலர்ந்த பூ" என்ருர்

வைத்தியலிங்கம் பிள்ளை. அன்பு இருந்தால் எதை யுமே பிணைத்து இனிக்க இனிக்கப் பேச வரும்போல் இருக்கிறது! அந்த மலரை என் கையில் அவர் கொடுத்தார். ஞானசம்பந்தப் பெருமானது தமிழ் மணம் போல மலர்ந்து மணந்தது அது.

"இங்கே வைகாசி மூலத்தில் சம்பந்தர் திருமணம் சிறப்பாக இருக்கும். ஞானசம்பந்தர் சோதியில் தோற்றிய வீதியில் புகுந்த நாள் அது. பிரம்மோற் சவம் முடிந்த மூன்றும் நாள் ஞான சம்பந்தர் திருமணம் நடைபெறும். தமிழ்நாட்டு மக்கள் பலரும் கூடியிருந்த பழைய காட்சியைச் சேக்கிழார் வருணிக்கிறார். இப்போதும் அப்படிப் பக்தர்களும் புலவர்களும் ஆயிரமாயிரமாகக் கூடி நிற்கும் காட்சியைக் காணவேண்டும் என்பது அடியே னுடைய ஆசை. திருவருள் துணை நிற்க வேண்டும்."

அவருடைய கனிவு என் உள்ளத்தை உருக் கியது.

**சோதி மலைஒன்று தோன்றிற் றதில்ஒரு**
**வீதிஉண் டாச்சுதடி**

என்ற பாடற் பகுதி என் உள்ளே ஒலித்தது.

# அரியர் உதித்த ஊர்

"இங்கெல்லாம் கரும்புத் தோட்டம் அதிகம்" என்றார் என்னுடன் வந்த அன்பர்.

"தென்னார்க்காடு ஜில்லாவில் கரும்புத் தோட்டம் அதிகம் என்பதை ரெயிலில் பிரயாணம் செய்யும்போதே தெரிந்து கொள்ளலாமே!" என்றேன் நான்.

"ஆம்! இருமருங்கும் கரும்புத் தோட்டங்களைப் பார்க்கலாம் அல்லவா?" என்று அவர் கூறினார்.

"அதனால் அல்ல. ராத்திரி வண்டியில் வந்தால் நெல்லிக்குப்பத்திலோ வேறு ஸ்டேஷனிலோ வண்டி நிற்கும். அடுத்த தண்டவாளத்தில் மொட்டைக் கூட்ஸ் வண்டிகளில் கரும்பை ஏற்றியிருப்பார்கள், இந்த வண்டியில் இருப்பவர்கள் அந்தக் கரும்பைத் தாராளமாகக் கைநீட்டி உருவி எடுத்துக் கடித்துச் சுவைப்பார்கள்."

"அதையா சொல்கிறீர்கள்?"

"கரும்பு இருக்கும் இடத்தில் அழிம்புங்கூட இருக்கும். 'ஆலை பாதி, அழிம்பு பாதி' என்று ஒரு பழமொழிகூடத் தமிழில் வழங்குகிறது" என்று நான் சொல்லிக்கொண்டிருந்தபோது எங்கள் கார் திருவாமூரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது. பண்ணுருட்டியிலிருந்து வரும் சாலையிலிருந்து ஒரு கிளைப் பாதையில் திரும்பிச் செல்ல வேண்டும். அதற்கு

முன் அப்பர் சுவாமிகள் மடம் என்று ஒரு கட்டிடம் பெரிய சாலையின்மேல் இருக்கிறது.

"இந்தக் கரும்புத் தோட்டங்களைப் படம் பிடிக்கலாம்'' என்று நான் சொன்னேன்.

"ஏன் ? என்னிடம் முன்பே சில கரும்புத் தோட்டங்களின் படங்கள் இருக்கின்றன. அவற்றை உபயோகப் படுத்திக் கொள்ளலாமே !'' என்றார். எங்கள் போட்டோக் கலைஞர் ஸ்ரீ என். ராமகிருஷ்ணன்.

"அந்தப் படங்கள் எதற்கு ? இந்தப் பக்கத்துக் கரும்புத் தோட்டப் படந்தான் வேண்டும்'' என்றேன். பிறகு, "படம் எடுத்தால் இந்த ஊர்க் கரும்புத் தோட்டந்தான் இது என்று எப்படித் தெரிந்துகொள்ள முடியும் ? வேண்டாம்'' என்று சொல்லி விட்டேன்.

கார் ஊரை அணுகிக் கொண்டிருந்தது, ஒரு கரும்புத் தோட்டத்திற்குப் பாயும் மடையின் வழியே அது செல்லும்போது உடம்பு ஒரு குலுங்கு குலுங்கியது.

அந்தக் காலத்திலும்—அதாவது அப்பர் சுவாமிகள் இந்தத் திருவாமூரில் அவதாரம் செய்த காலத்திலும்—இந்தப் பக்கங்களில் கரும்புத் தோட்டங்கள் மிகுதியாக இருந்தன. இந்தச் செய்தியைச் சேக்கிழார் சொல்கிறார். கவிஞருக்கு எப்போதுமே கற்பனை வளம் மிகுதி. உண்மை ஒரு பங்கானல் கற்பனை பத்துப் பங்காக வளரும். சேக்கிழார் காட்டும்

கருப்பந்தோட்டம் மிகச்சிறப்பான வளம் பெற்று விளங்குகிறது.

வயல்களில் முதிர்ந்து விளைந்த கரும்புகளைத் தொழிலாளிகள் வெட்டுகிறார்கள். அப்படி வெட்டின இடங்களிலிருந்து கொழுஞ்சாறு ஊற்றெடுத்தாற் போல வருகிறது. அங்கங்கே தேனடைகளில் உள்ளே தேனும் விழுந்து அந்தக் கருப்பஞ்சாறு வெள்ளமாகப் பரந்து வண்டுகள் ஒலிக்கும்படியாகப் பாய்கிறது, புதுவெள்ளத்தைப் போல மடையை உடைக்கிறது. அதை உழவர்கள் காண்கிறார்கள். உடைந்த மடையை அடைக்க நறுக்கென்று கைக்கு ஒன்றும் அகப்படவில்லை. அங்கங்கே ஆலைகளில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி வெல்லமாகவும் கற்கண்டாகவும் குவித்திருக்கிறார்கள். அந்தக் கற்கண்டுக் கட்டிகளை எடுத்து, உடைந்த மடையை அடைக்கிறார்களாம்.

இந்த வருணனை கற்பனை என்னும் பூதக் கண்ணாடியினால் கண்டு பாடியது. ஆனாலும் இந்தப் பக்கங்களில் கரும்பு வளம் நெடு நாளாக இருந்து வருகிறது என்று உண்மையை அது தெரிவிக்கிறது.

'இப்படிச் சேக்கிழார் இங்கே எதற்காகப் பாட வேண்டும்?' என்று என் மூளையைக் கொஞ்சம் குடைந்து கொண்டேன். நாட்டு வருணனையானாலும் அங்கே நிகழும் நிகழ்ச்சியினால் பின் உள்ள கதைக்குப் பொருத்தமான குறிப்பு ஒன்று வெளியாகும்படி அமைப்பது பெருங் கவிஞர்களின் வழக்கம். அப்படி ஏதேனும் குறிப்பை இந்தக் கரும்பு வருணனை காட்டுகிறதோ என்று சிந்தித்துப் பார்த்தேன்.

பாட்டை முதலில் பார்க்கலாம்.

**கடைஞர்மிடை வயற்குறைத்த**
**கரும்புகுறை பொழிகொழுஞ்சாறு**
**இடைதொடுத்த தேன்கிழிய**
**இழிந்தொழுகு நீத்தமுடன்**
**புடைபரந்து ஞிமிறொலிப்பப்**
**புதுப்புனல்போல் மடைஉடைப்ப**
**உடைமடைஅக் கரும்படுகட்**
**டியின் அடைப்ப ஊர்கள்தொறும்**

'உழவர்கள் நெருங்கிய வயலில் வெட்டிய கரும்பின் குறைப் பகுதிகள் பொழிகின்ற கொழுவிய கருப்பஞ்சாறு இடையிலே தேனீக்கள் வைத்த தேன் அடை கிழியும்படியாக விழுந்து ஒழுகுகின்ற தேன் வெள்ளத்துடன் பக்கங்களில் பரவி, வண்டுகள் முரலப் புது வெள்ளத்தைப்போல மடையை உடைக்க, அவ்வாறு உடையும் மடையைக் கருப்பஞ் சாற்றைக் காய்ச்சிய கற்கண்டுக் கட்டிகளால் ஊர்தோறும் அடைப்பார்கள்' என்பது இதன் பொருள்.

இது சேக்கிழார் திருநாவுக்கரசு நாயனார் வரலாற்றை உரைக்கப் புகும்போது அவர் பிறந்த நாட்டைப்பற்றிச் சொல்லும் வருணனை. திருநாவுக்கரசர் கதையின் நிகழ்ச்சிக்கும்[1] இந்தக் கரும்புத் தோட்ட நிகழ்ச்சிக்கும் ஏதாவது ஒப்புமை இருக்கிறதா?—யோசித்தேன். இருக்கிறது போலத் தோன்றிற்று. சொல்லட்டுமா?


உழவர் வெட்டிய கரும்பின் சாறு ஆலையில் காய்ச்சப் பெற்றுக் கட்டியாகப் பயன்பட்டது. ஆனால் அதன் அடிப்பாகத்திலிருந்து வந்ததோ விளை நிலத்தில் சென்று மடையை உடைத்தது. ஆயினும் இது மேலே ஓடாமல் நிற்கும்படி காய்ச்சின கட்டி தடுத்தது.

அப்பர் சுவாமிகளின் தமக்கையாகிய திலகவதியார் சிவசமய நெறி நின்று தவம் புரிந்தார். அப்பரோ அதைத் துறந்து வேறு நெறி புகுந்து பயனின்றி இருந்தார். அதை மாற்றி அவரை மீட்டும் சிவநெறிக்கே புகும்படி தடுத்து உய்யச் செய்தார், திலகவதியார். சாறு அட்ட கட்டி போன்றவர் திலகவதியார்; நிலத்தில் ஓடிய சாறு போன்றவர் அப்பர்.— இப்படி ஒரு வகையில் ஒப்புமை இருப்பதாகச் சொல்லலாம் அல்லவா ? இந்தக் கரும்பில் அப்பரும் திலகவதியாரும் இல்லை என்று உங்களுக்குப் படுமானால் நான் வற்புறுத்தவில்லை. திருவாமூருக்குப் போகும்போது என் மனசுக்குள் இந்த வருணனையும் அதன் உள்ளுறையும் நினைவுக்கு வந்தன. அதனால் இங்கே சொன்னேன்.


ஊருக்குள் சென்றேன். முதலில் ஒரு கோயில் தென்பட்டது. அது மாரியம்மன் கோயில். அந்த ஊர்ச் சிவபிரானது கோயிற் கோபுரம் தென்படுமா என்று பார்த்தேன். தெரியவில்லை. முன்பே சில நண்பர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அவர்கள் வந்தார்கள். அவர்களை நான் சில கேள்விகள் கேட்டேன். அவற்றிற் கெல்லாம் இல்லை, இல்லை என்றே விடை வந்தது.




← அச்சாபுரம் - திரிபுர
சங்கார மூர்த்தி
பக்கம் 37



ஸ்தோத்திர பூர்ணாம்பிகை →
பக்கம் 36



← கல்யாண சம்பந்தர்
பக்கம் 35



திருவாரூர் – கோயிலும் குளமும் →
பக்கம் 52



திருவாரூர் - அப்பர் உற்சவ விக்கிரகம்
பக்கம் 56

"இந்த ஊருக்குத் தேவாரப் பாடல் உண்டா?"
"இல்லை."
"இதற்குத் தனியே புராணம் உண்டா?"
"இல்லை."
"இந்த ஊர்க் கோயிலில் பெரிய கோபுரம் உண்டா ?"
"இல்லை."
"இங்கே தபாலாபீஸ் உண்டா ?"
"இல்லை."
"அப்பர் சுவாமிகள் வாழ்ந்த வீடு இருக்கிறதா?"
"இல்லை."
"தெருவாவது இருக்கிறதா?"
"இல்லை."

இன்னும் எவ்வளவு கேள்விகளைக் கேட்டு இல்லை இல்லை என்ற பதிலைப் பொறுமையுடன் கேட்பது? "பின் என்னதான் இருக்கிறது ?" என்று கேட்டேன்.

"இந்த ஊரில் அப்பர் சுவாமிகள் தாய் தந்தையர் வாழ்ந்த இடத்துக்கு அடையாளம் இருக்கிறது" என்றார், அவ்வூர் அன்பர்களில் ஒருவர்.

"இடிந்த வீடு ஏதாவது இருக்கிறதோ ?"

"இல்லை இல்லை; உயிருள்ள மரம் ஒன்று, மிகப் பழையதாக இருக்கிறது. வாருங்கள், அங்கே போகலாம்" என்று அவர் என்னையும் பிறரையும் அழைத்துச் சென்றார். ஒரு தெருவின் வழியே போனோம். ஊரில் இரண்டே தெருக்கள். தெருக் கோடியில் வெறும் வெட்ட வெளி. அங்கே ஒரு பழைய மரம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் மேடை கட்டியிருக்கிறார்கள்.

"இந்த இடந்தான் அப்பருடைய வீடு இருந்த இடம். இந்தப் பாகம் இப்போது பொட்டலாக இருந்தாலும் இன்னும் வேளாளத் தெரு என்றே சொல்லுகிறோம். வீடு இல்லாவிட்டாலும் தெரு என்றே பெயர் மாறவில்லை" என்று விளக்கினார்.

மரத்தைப் பார்த்தேன். அதன் அடிமரத்தைப் பார்த்தாலே அது பல காலங் கண்டது என்று தெரிய வந்தது. பல முருடுகள் இருந்தன. இலைகளெல்லாம் மிகவும் சிறுத்திருந்தன.

"இது இன்ன மரமென்று தெரிகிறதா ?" என்று விசாரித்தேன்.

"தெரிந்தவர்கள் களரி வாகையென்று சொல்கிறார்கள். ஆனால் அது குத்துச் செடிகளாக வளருமே ஒழிய இப்படி மரமாக வளர்வதில்லை. இது மாத்திரம் மரமாகவே வளர்ந்திருக்கிறது" என்று விடை வந்தது.*

அப்பர் சுவாமிகள் புகழனார் என்னும் வேளாளச் செல்வருக்கும் மாதினியார் என்னும் அன்னையாருக்கும் மதலையாகப் பிறந்தவர். அவருக்கு முன் பிறந்தவர் திலகவதியார். அவர்கள் சைவ வேளாள குலத்தில் குறுக்கையர் குடியிற் பிறந்தவர்கள். அவர்களுடைய குலத்தில் உதித்தவர் யாரேனும் அவ்வூரில் இருக்கிறார்களா என்று விசாரித்தேன். யாரும் இல்லையாம். ஆனால் அருகே உள்ள

* இப்போது இந்த இடத்தில் ஒரு மடம் கட்டி அப்பர் சுவாமிகள் திருவுருவத்தை நிறுவி வழிபட்டு வருகிறார்கள்.

கூடப் பள்ளி, இளம்பாஹூர், நெடும்பூர் முதலிய இடங்களில் இருக்கிறார்களாம், பிள்ளையென்ற பட்டம் வைத்துக் கொள்கிறார்கள். ஏறத் தாழ ஆயிரத்து எண்ணூறு பேர்கள் அந்தக் குடியைச் சார்ந்தவர்கள் இன்றும் இருக்கிறார்களாம். அவர் களுடைய வழக்கம் ஒன்றை நான் விசாரித்து அறிந்து கொண்டேன்.

அப்பருடைய தமக்கையாராகிய திலகவதியா ருக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடாயிற்று. கலிப்ப கையார் என்பவருக்குக் கொடுப்பதென்று முடிவு செய்தார்கள். திருமணம் நடப்பதற்குள் அரச னுடைய ஏவலால் கலிப்பகையார் ஒரு போருக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. அப்போரில் அவர் இறந்துவிட்டார். இங்கே திலகவதியாருடைய தாய் தந்தையர் முன்பே இறந்தனர். தமக்குக் கணவராக வர இருந்தவர் இறந்தார் எனக்கேட்ட திலகவதியார் தாமும் தீப் புக எண்ணினர். ஆனல் மருள்நீக்கியார் என்ற இயற்பெயரோடு இருந்த அப்பர் அவர் காலில் விழுந்து அவ்வண்ணம் செய்ய வேண்டா மென்று கெஞ்சினர். அவர் உயிர் நீத்தால் தாமும் உயிர் விடுவதாக சொன்னர். அது கேட்ட திலகவதி யார் தம் கருத்தை மாற்றிக்கொண்டு வாழ்நாள் முழு வதும் தவக்கோலம் பூண்டு திருவதிகையில் சிவத் தொண்டு புரிந்து கொண்டு வாழலானர்.

முன்பே பெண் பேசித் திருமணம் நடப்பதற்குள் இடையூறு நேர்ந்து திலகவதியார் மணமின்றியே வாழ்ந்தார். இதை நினைந்து அக்குடியில் பிறந்த வேளாளர்கள் இக்காலத்தில் ஒருநாளில் பெண்ணைப்

பேசி முடித்து நிச்சயம் செய்து அன்றே திருமணத்தையும் நிறைவேற்றி விடுகிருர்களாம்.

ஊருக்குப் புறம்பே உள்ள திருக்கோயிலை அணுகினேம். அருகில் குருக்கள் வீடு மாத்திரம் இருக்கிறது. சின்னஞ் சிறிய கோயில். கோயிலின் சந்நிதி தெற்கு நோக்கி இருக்கிறது. ஆயினும் ஊர்க்காரர்கள் போவதற்கு மதிற் சுவரில் மேற்கு நோக்கி ஒரு சிறிய வாசலை வைத்திருக்கிருர்கள். அப்பர் சுவாமிகள் எளிமையே உருவமானவர். படாடோபம் சிறிதும் இல்லாதவர். அவர் பிறந்த ஊர்க் கோயிலும் எளிய உருவத்தில் இருக்கிறது. ஊரே பெருவழிக்குப் புறம்பே நாகரிகக் காற்றுப் புகாத சூழலில் அமைந்திருக்கிறது. அந்த ஊருக்குக் கார் போவதே ஆச்சரியம். உழவாரப் பணிசெய்து வாழ்ந்த நாவுக்கரசர் ஊரில் இப்போது ஓர் ஆதாரப் பள்ளி நடந்து வருகிறது; ஊருக்குப் பொருத்தமானது அல்லவா? அதன் தலைமையாசிரியரும் எங்களுடன் கோயில் முதலிய இடங்களுக்கு வந்து, தம் பள்ளிக்கூடத்துக்கும் அழைத்துக் கொண்டு போய்க் காட்டினர்.

கோயிலுக்குத் தெற்கே ஒரு குளம் இருக்கிறது. எங்கும் பரந்த வயற்பரப்புக்கு இடையே இயற்கைத் தேவியின் எழில் குலவும் சூழலிலே குளமும் கோயிலும் அப்பர் சுவாமிகளின் திருக் குறுந்தொகைப் பாசுரம் போலச் சிறிய உருவத்தில் பெரிய அழகு உடையனவாய்த் திகழ்கின்றன.

அக்காலத்தில் இது பெரிய ஊராகத்தான் இருந்திருக்க வேண்டும்.

சைவநெறி ஏழுலகும்
　　பாலிக்கும் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும்
　　திருஆம் ஊர் திருவாரூர்

என்று சேக்கிழார் பாடுகிறார்.

மலர்நீலம் வயல்காட்டும்;
　　மைஞ்ஞீலம் மதிகாட்டும்;
அலர்நீடு மறுகாட்டும்
　　அணியூசல் பலகாட்டும்;
புலர்நீலம் இருள்காட்டும்
　　பொழுதுழவர் ஒலிகாட்டும்;
கலம்நீடு மனைகாட்டும்
　　கரைகாட்டாப் பெருவளங்கள்

என்று அழகாக அவர் ஊரின் வளத்தைப் பாடுகிறார். அவர் நல்ல முழு நிலா எறிக்கும் இரவிலே ஊரைப் பார்த்து இன்புறுகிறார். நிலவு கண்டு மலர்ந்த நீல மலர்களை வயல்கள் காட்டுகின்றன. வான்மதியும் சிறிய கறுப்பைத் தன்னிடத்திலே காட்டுகிறது. மலர் நிறைந்திருக்கும் வீதியில் அலங்காரமான ஊஞ்சல் போட்டு ஆடுகிறார்கள். ஆயிற்று; இரவு ஒருவாறு விடியப்போகிறது; அப்போது அதிக இருளாக இருக்கிறது. அந்த விடியற்காலையில் உழவர்கள் கழனிகளை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களுடைய ஒலி கேட்கிறது. புலரும் பொழுதானது அந்த ஒலியைக் காட்டுகிறது. வீடுகளில் அணிகலன்கள் நிறைந்திருக்கின்றன. அவை மட்டுமா? இன்னும் எத்தனையோ பண்டங்கள் உண்டு. கரையில்லாத பெருவளங்களை அந்த மனைகள் காட்டுகின்றன.

தனியே இந்த ஊருக்குப் புராணம் எதற்கு? எல்லாவற்றையும்விடப் பெரிய புராணமாகிய பெரிய புராணத்தில் சேக்கிழார் பாடியிருக்கும் சில பாடல்களே போதுமே!

கோயிலில் ஒரே பிராகாரம். அதில் முருகன் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. சின்னஞ் சிறிய கோயில். ஆனால் அங்கே எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியிருக்கிறார். தலைவியின் விரக தாபத்தை அறிந்த தோழி பாடுவதாக அமைந்திருக்கிறது பாட்டு.

**சீத மதியம் எறிக்கும் தழலாலே**
**சீறி மதனன் வளைக்கும் சிலையாலே**
**ஓதம் மருவி அலைக்கும் கடலாலே**
**ஊழி இரவு தொலைக்கும் படியோதான் ?**
**மாது புகழை வளர்க்கும் திருவாமூர்**
**வாழும் மயிலில் இருக்கும் குமரேசா !**
**காதல் அடியர் கருத்தின் பெருவாழ்வே !**
**காலன் முதுகை விரிக்கும் பெருமாளே!**

"மாது புகழை வளர்க்கும் திருவாமூர்" என்று அருணகிரி நாதர் சொல்கிறார். திலகவதியார் இந்தத் தலத்திலே பிறந்து இதன் புகழ் வளரும்படி செய்தார் என்ற கருத்தை நினைந்து அப்படிப் பாடுகிறார். "ஒரு மாது உன் பிரிவால் வருந்துவதை நீ கருத்திற் கொள்ளாமல் இருக்கிறாயே! ஒரு மாது புகழை வளர்க்கும் இந்த ஊரிலே இப்படி நடப்பது நியாயமா?" என்று குறிப்பை வைத்துச் சொல்லுகிறார்.

முருகன் கோயிலுக்கு அருகே லக்ஷ்மி நாராயணர் கோயில் ஒன்றைப் புதிதாகக் கட்டியிருக்கிறார்கள். பிராகாரத்துக்குள்ளே ஒரு பழைய கிணறு இருக்கிறது.

அதன் அருகே தலவிருட்சமாகிய சரக்கொன்றை நிற்கிறது. அதில் எந்த நாளும் மலர் இருந்து கொண்டே இருக்கிறதாம். கிணற்றுக்கு அருகில் புதிதாகத் திலகவதியாரையும், அப்பர் சுவாமிகளையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இவ்வூரினர் இக் கோயிலைப் புதுப்பித்து 1946-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாகப் பழைய சுவர்களை அப்படியேவைத்திருக் கிறார்கள்.அவற்றில் கல்வெட்டுகள் இருக்கின்றன. ஒரு கல்வெட்டு, "புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப" என்னும் மெய்க்கீர்த்தியோடு ஆரம்பமாகிறது. கி.பி. 1070 முதல் 1118 வரையில் ஆட்சி செய்த முதற் குலோத்துங்க சோழனது மெய்க் கீர்த்தி அது. அவன் காலத்தில் இந்தக் கோயில் புதுப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு முன்பே கோயில் இருந்தது. அப்பர் காலத்தில் இருந்த கோயில் அல்லவா? அவர் நாற்பத்தெண்ணாயிரம் பதிகம் பாடினாராம். அவற்றில் பல அழிந்து போயின. தாம் பிறந்த ஊரை அவசியம் அவர் பாடியிருப்பார். மறைந்த பாடல்களோடு திருவாமூர்ப் பதிகங்களும் மறைந்து போயின.

கோயிலுக்குள் புகுந்தேன் சின்னக் கோயிலில் தனித் தனியே விரிவான சந்நிதியைக் காண முடியுமா? சிவபெருமான் பசுபதீசுவரர் என்னும் திருநாமத்தோடு கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக் கிறார். அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியது. திரிபுர சுந்தரி என்பது அம்பிகையின் திருநாமம். சந்நிதியில் அப்பர் சுவாமிகளின் பழைய சிலாவிக்கிரகம் இருட் டில் இருக்கிறது. உற்சவ விக்கிரகம் ஒன்றும் அங்கே

உண்டு. சமீப காலத்தில் அமைத்ததென்று அந்தத் திருமேனியின் நிலையே சொல்கிறது.

அப்பர் திருவவதாரம் செய்தது பங்குனி மாதம், ரோகிணி நட்சத்திரம். பெரும்பாலும் அப்பர் முத்தி பெற்ற நட்சத்திரமாகிய சித்திரைச் சதயத்தில்தான் அவர் விழாவைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் திருவாமூருக்குப் பெருமை அங்கே அவர் பிறந்ததுதானே? அதனால் அவர் பிறந்த பங்குனி ரோகிணியன்று அங்கே அப்பருக்குத் திருவிழா நடைபெறுகிறது. சித்திரைச் சதயத்திலும் உற்சவம் உண்டாம். திலகவதியார் முத்தி பெற்றது தை மாதம் உத்தர நட்சத்திரம்.

பங்குனி உத்தரத்தில் முருகனை எழுந்தருளச் செய்வித்துத் தெப்பத் திருவிழா நடத்துகிறார்கள். திருக்கோயிலுக்கு எதிரே உள்ள தீர்த்தத்தில் தெப்பம் நடைபெறுகிறது. அந்தத் தீர்த்தத்தை அப்பர் வெட்டுவித்தார் என்று சொல்கிறார்கள். பழங் காலத்தில் அது நான்கு புறமும் நல்ல படித்துறை களோடு இருந்திருக்க வேண்டும். படிக்கட்டுகள் சில அங்கங்கே இருந்து அந்தப் பழமையை நினைப் பூட்டிக் கொண்டிருக்கின்றன.

பண்ணுருட்டிக்கும் இதற்கும் ஐந்து மைல் தூரம். இந்தத் தலத்துக்கு வெளியூரிலிருந்து வந்து தரிசிப்பவர்கள் மிக அருமை. அப்பர் சுவாமிகள் திருவருள்பெற்ற திருவதிகையை அறியாத சைவர் இல்லை. அங்கே ஆலயமும் சிறப்பாக இருக்கிறது. ஆனால் அவர் திருவவதாரம் செய்த ஊரும், அங்குள்ள கோயிலும் கவனிப்பார் இல்லாமல் ஒரு

மூலையில் இருக்கின்றன. பதினைந்து ஏகரா நிலத்தை வைத்துக்கொண்டு ஊரில் உள்ள மூன்று தர்ம கர்த்தர்கள் ஆலயத்தை நிர்வகித்து வருகிறார்கள். வருகிற வரும்படியில் அரசாங்கத்துக்குப் பதினெட்டு ரூபாய் கப்பம் வேறு செலுத்துகிறார்கள் !

இந்தத் தலத்துக்குரிய தேவாரப் பதிகங்களில் ஒன்றாவது கிடைத்திருந்தால் இந்தக் கோயில் இப்படி இருக்குமா ? அப்பர் சுவாமிகளையும் திலகவதியாரையும் அளித்த திருவாமூர் சேக்கிழார் பாட்டையும் அருணகிரிநாதர் திருப்புகழையும் பெற்றிருக்கிறது. கோபுரம் இல்லை; தேர் இல்லை; பிராகாரங்கள் பல இல்லை; பேணி வளர்க்கச் சொத்து இல்லை. ஆனாலும் அதன் பெருமை குறையுமா? அப்பர் திருவாய் திறந்து பாடிய இன்பக் குரலைக் கேட்ட இடங்கள் பல பல. ஆனாலும் அவர் உதயமானபோது அவருடைய முதற் குரலைக் கேட்ட ஊர் இதுதானே ?

## திரு அதிகை

அஸ்தமிக்கும் மாலை நேரம். தருமசேனர் பாடலிபுத்திர நகரில் சைன மடத்தில் அமர்ந்திருந்தார். திருப்பா திரிப்புலியூரில் ஒரு பகுதியில் சைனர்கள் வாழ்ந்திருந் தனர். அந்தப் பகுதிக்குத்தான் பாடலிபுத்திரம் என்று பெயர்.

சைவ வேளாளர் குலத்தில் பிறந்து அறிவிலே சிறந்து நின்றார் மருள்நீக்கியார். பல சமய நூல்களை யும் ஆராயும் ஆசை உண்டாயிற்று அவருக்கு. அக் காலத்தில் காஞ்சியிலிருந்து அரசாண்ட பல்லவன்

சமணனாதலின் சைன சமயத்தை ஆதரித்தான். எங்கும் சைன சமயப் பிரசாரம் சிறப்பாக நடை பெற்றது.

அந்தப் பிரசாரத்திலும் சைன நூல்களிலும் அறிவைச் செல்லவிட்ட மருள்நீக்கியாருக்கு அந்தப் பக்கமாக அறிவு சாய்ந்தது. சமணர் ஆனார். சாமானியச் சமணர் மாத்திரம் அல்ல; சமணர்களில் ஆசாரிய பதவியே அவருக்குக் கிடைத்தது. தருமசேனர் என்னும் பெயரோடு சைன சமயப் பிரவர்த்தகராக வாழ்ந்தார். பௌத்தர்களோடு வாதம் செய்து வென்றார்.

அறிவாராய்ச்சியிலே ஊறிச் சைன மதத்தில் ஈடுபட்டாலும் பரம்பரையாகச் சைவ நெறி நின்ற குலத்தில் பிறந்தமையால் அவரை அறியாமலே அவருடைய அடிமனத்தில் சைவ உணர்வு படிந்து கிடந்தது. சைனர்களுடன் சேர்வதற்கு முன் அவருடைய அறிவு சைன நூல்களின் நுட்பத்திலே புகுந்து ஆராய்ந்து கொண்டிருந்தது. சைனர்களைச் சார்ந்து தம் அரும்பெறல் தமக்கையராகிய திலகவதியாரைப் பிரிந்து வாழத் தொடங்கிய போது அவர் அடிமனத்தில் இருந்த சைவ உணர்வு நெளியலாயிற்று. ஒவ்வொரு நாளும் அந்தப் பழைய வாசனை அவருடைய உள்ளத்தில் ஒரு பெரிய போராட்டத்தை உண்டாக்கியது.

இன்றும் அத்தகைய போராட்டம் ஒன்று தருமசேனருடைய மனத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. இருள் புலரும் இந்த வைகறையில் அவருடைய

தமக்கையாராகிய திலகவதியார் நீராடிவிட்டுத் திருக் கோயிலை மெழுகுவார்; அலகிடுவார்; திருநந்தவனத் திற் புக்கு மலர்களைக் கொய்வார்; தம்முடைய ஆத்மார்த்த பூசையைச் செய்வார். திருவதிகைத் திருக்கோயிலில் திருப்பள்ளியெழுச்சி நடைபெறும்.

இந்த நினைவுகள் தருமசேனருடைய உள்ளக் கிழியில் உருவெடுத்தன. அந்தப் பெண்மணியார் தாம் பிறந்த குலத்துக்குப் பெருமை தேடும் வகையில் சிவபக்திச் செல்வம் நிறைந்தவராய் விளங்கத் தரும சேனரோ—? இதை நினைக்கையில் அவருக்கு உள்ளம் துணுக்குற்றது. அப்போது அறிவு தான் படித்தநூல்களின் நுணுக்கங்களையெல்லாம் எடுத்துக் காட்டியது. ஆனாலும் ஏதோ ஓர் உணர்ச்சி உள்ளத் தின் ஆழத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது. அவர் தம் மனத்தினாலே தாம் பிறந்த திருவாமூர்க் கோயி லுக்குள் புகுந்தார்; வணங்கவும் வணங்கினார்,

"சே! என்ன பைத்தியக்காரத்தனம் இது? கிழிந் தெரிந்த ஆடையைத் தைத்து அணிவதா? பல காலம் ஆராய்ந்து பொருத்தமானதென்று எண்ணி இறங்கின துறையை மாற்றுவதா?" — அறிவு முரணியது.

ஆனாலும் உள்ளுணர்ச்சியின் ஈரம் உலரவில்லை. இப்பொழுது அவர் தம் தமக்கையார் அருகில் நின்றார்; நினைவுலகத்தில்தான். இறந்துபோன அவருடைய தந்தையார் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்கிறார்; அருச்சனை செய்கிறார்; கண்ணீர் வாரத் துதிக்கிறார்.

உடம்பு சைனக் கோலத்தில் இருந்தாலும் உள்ளம் சைவ வாசனை வீசுகிறது. நடுநடுவே அறிவு மோதுகிறது. இந்த மோதல் ஒரு நாளா, இரண்டு நாளா? இந்த இடத்துக்கு வந்தது முதலே இந்தப் போராட்டந்தான்.

"டணூர்! டணூர்! டணூர்!"— இது திருப்பாதிரிப் புலியூர்த் தோன்றுத்துணையப்பர் திருக்கோயில் மணி ஓசை. தருமசேனர் உடம்பு புல்லரித்தது. நெற்றியைத் தடவிக்கொண்டார். திருநீற்றின் நினைவு போலும்! அவர் உள்ளத்துள்ளே ஒரு நாக்கு இருக்கிறதே, அது ஹரஹர என்ற ஒலியை முழங்கியது.

இப்படித் தருமசேனர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்தார். எதையாவது ஒன்றை எறிந்து விடலாமென்று எண்ணினார். அறிவு புறத்தை விட உடம்படவில்லை. உணர்ச்சியோ உள்ளத்தைப் பற்றிக் கொண்டு ஒன்றி நின்றது.

அங்கே, திருவதிகை வீரட்டானத்தில், திலகவதியார் நாள்தோறும் வீரட்டேசுவரரிடம் தம்முடைய தம்பியை மீட்டுத் திருவருளுக்கு ஆளாக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொண்டு வந்தார். அவருடைய பிரார்த்தனை பயன் தரவேண்டும் அல்லவா? இறைவன் தருமசேனருடைய இரட்டை வாழ்க்கையைப் போக்கத் திருவுள்ளம் கொண்டான்.

திடீரென்று தருமசேனருக்கு வயிற்று வலி உண்டாயிற்று. உணவில் எந்த வகையான மாற்றமும் இல்லை. அவருக்கு உணவு சமைத்துத் தருகிறவன் அவரிடம் மிக்க அன்பு பூண்டவன். சைன மத ஆசிரியர் என்ற முறையில்ன்றி அவரிடமுள்ள தனித்

தன்மையிலே ஈடுபட்டு அன்பு செய்தவன். அவன் அன்போடு தரும் உணவில் குறைபாடு இருக்க நியாயம் இல்லை.

வயிற்று வலி கடுமையாயிற்று. மருந்து உண்டார். விரதம் இருந்தார். குடலைச் சுருட்டி முடக்கித் துன்புறுத்தியது வயிற்றுவலி. அது வெறும் வயிற்று வலியாக இருக்கவில்லை; சூலை நோயாக இருந்தது. சைனர்கள் மந்திரம் போட்டார்கள், நோய் தீரவில்லை.

நாட்கள் கழிந்தன. வாரங்கள் சென்றன. நோயும் கடுமையாயிற்று. தருமசேனர் சூலை நோயால் துடிதுடித்தார். சைன நூல்களின் நுட்பங்களை ஆராய்ந்த அவருடைய அறிவு எங்கோ போய் ஒளிந்து கொண்டது. அவர் உடம்பின் வேதனை தான் இப்போது பெரிதாக இருந்தது. சைன மதச் சிங்கமாக இருந்த அவர் சூலைநோய் சுண்டி இழுக்கப் புழுப்போலத் துடிதுடித்தார். பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல் கதறினர். உயிரையே உண்டுதான் தீரும் இந்தச் சூலைநோய் என்ற எண்ணம் அவருக்கு வந்துவிட்டது.

"அக்கா!" என்று அழுதார். உடம்போடு ஒட்டிய உறவு என்று சொல்லத் திலகவதியார் ஒருவரே இருந்தார். அப்பெருமாட்டியின் மெய்யன்பைத் தருமசேனர் நன்கு உணர்ந்தவர். தமக்கு மணம் பேசியிருந்த கலிப்பகையார் போரில் இறந்து படவே, திலகவதியார் தாமும் தீப் புகுந்து உயிர்விடத் துணிந்தார். அப்போது மருள்நீக்கியார் அவர் காலில் விழுந்து, "நீர் உயிர் விட்டால் நானும் உயிர் விடுவேன்" என்று கதறினர். அது கேட்டு இரங்கி, தம் தம்பியார் உளராக வேண்டும் என்ற விருப்பத்தால் அவர்

உயிர் தாங்கினார். அத்தகையவரைப் பிரிந்து வாழ்ந்தார் தருமசேனர். பழைய அன்பு இப்போது சமயத்தில் வந்து வட்டியும் முதலுமாகப் பற்றியது.

தம்முடைய சமையற்காரனிடம் தாம் படும் வேதனையை இரவோடு இரவாகச் சொல்லியனுப்பினார் தருமசேனர். அவனுக்கு அவரிடம் உண்மையான அன்பு இருந்ததற்கு இந்தச் சான்றே போதுமே. இல்லையானால், 'இவர் நம் சமயத்துக்குத் துரோகம் செய்ய எண்ணுகிறார்' என்று உடனே தூற்றப் புறப்பட்டுவிட மாட்டானா? அவன் சென்று திலகவதியாரை அணுகி அவருடைய தம்பியார் நிலையை எடுத்துச் சொன்னான். திலகவதியார் அது கேட்டு, "அமணர் இருக்கும் இடத்துக்கு நான் வர மாட்டேன்" என்று சொல்லியனுப்பி விட்டார்.

அதைக் கேட்ட தருமசேனர், 'இனி இங்கிருந்து இந்த நோயினால் உயிர்தீர்வதைவிட நம் தமக்கையாரிடம் போய்ச் சேர்வதே நலம்' என்று கருதிப் புறப்பட்டார். சைனர்களுக்குரிய சின்னங்களையெல்லாம் அங்கே போட்டுவிட்டு, ஒரு வெள்ளாடையால் உடம்பையெல்லாம் மறைத்துக்கொண்டு இரவில் நடந்து திருவதிகையை அடைந்தார். தம் தமக்கையாரை எண்ணிய போதே அவருக்கு ஒரு வகை ஊக்கம் உண்டாயிற்று; நடக்கவும் முடிந்தது.

திலகவதியார் திருவதிகையில் ஒரு திருமடத்தில் இருந்து வந்தார். அந்த மடத்தை அடைந்து உள்ளே புகுந்து தமக்கையார் காலில் விழுந்தார்.

"தம்பீ! வந்தாயா?" என்று அன்பொழுகக் கேட்டார் திலகவதியார்.

"சூலை நோயால் வேதனைப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாக வந்திருக்கிறேன். இனிமேல் என்னைக் கரையேற்ற வேண்டும்" என்று அவர் அழுதார்.

"சைவ குலத்தில் பிறந்தும் ஏதோ பள்ளத்தில் போய் விழுந்தாயே; எருந்திரு" என்று திலகவதியார் கூற அவர் எழுந்தார்; அப்போதே அவருடைய வாழ்க்கையும் எழுச்சிக்குரிய நிலையைப் பெற்றது.

"இறைவன் திருவருள்தான் உனக்குச் சூலை நோயைத்தந்து ஆட்கொண்டது. அவனடியையன்றி வேறு புகலில்லை" என்று சொல்லித் திலகவதியார் திருநீற்றை எடுத்துப் பஞ்சாட்சரத்தைச் சொல்லித் தம்பியாரி கையில் அளித்தார். அவர் அதைப் பணிவோடு வாங்கி அணிந்துகொண்டு தமக்கையாரைப் பின் தொடர்ந்தார்.

அப்போதுதான் திருப்பள்ளியெழுச்சி நடை பெற்றுக் கொண்டிருந்தது. கங்குல் புலர்ந்தது. இறைவன் திருக்கோயிலை வலஞ்செய்து கோயிலுக்குள்ளே சென்று சந்நிதி முன் அடியற்ற மரம் போல வீழ்ந்தார். கூற்றைப் போல உயிர் கொள்ள வந்த தம் வேதனையை விலக்க வேண்டுமென்று அகத்தெழுந்த பேருணர்ச்சி பாட்டாக வந்தது.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
    கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
    பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
    குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில
    வீரட்டா னத்துறை அம்மானே !

அவர் உயிர் உடம்பில் இருக்கும்போதே கூற்றத்தின் கொடுமையை உணர்ந்தவரைப்போலத்தான் துடித்தார். அது உடலுக்கு மாத்திரம் துன்பம் செய்ய வந்ததாகத் தெரியவில்லை. உயிருக்கே மோசம் வந்துவிடும் என்றே அவர் எண்ணினர். அணு அணுவாக உயிரைச் செதுக்கி எடுப்பதுபோல அல்லவா அது நலிந்தது ? "சுவாமி, இதுவரையில் நான் உன்னை உடம்பால் வணங்கவில்லை. இனி உன்னை இரவும் பகலும் பிரியாது வணங்குவேன்" என்று கதறினர். அப்போது அவருக்குப் பழைய நிலை நினைவுக்கு வந்தது. "எம்பெருமானே, முன்பு நான் செய்கையால் உனக்கு வழிபாடு ஆற்றவில்லையே ஒழிய, உன்னை எப்போதும் அடிமனத்திலே நினைத்துக்கொண்டுதானே இருந்தேன் ? உன் பூசை முதலியவற்றை நான் மறக்க முடியவில்லையே! மனத்தின் ஆழத்தில் நான் சலத்தையும் பூவையும் மறந்தறியேனே !" என்று புலம்பினர்.

> நெஞ்சம்உமக் கேஇட மாகவைத்தேன்
> நினையாதொரு போதும் இருந்தறியேன்.
> சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
> தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
> நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
> உன்னாமம்என் நாவில் மறந்தறியேன்.

ஆம். ஒன்றையாவது அவர் மறக்கவில்லை. எல்லாம் உள்ளத்தினூடே நடந்து கொண்டிருந்தன. அறிவு என்னும் அலை மோத மோத உணர்ச்சிக் கரை சிறிதே கரைந்ததே ஒழிய அது அகன்றபாடில்லை. இப்போது அவற்றையெல்லாம் சொல்லி அரற்றினர்.

பாடப் பாட அவர் வேதனை குறைந்தது. உள்ளொளி கிளர்ந்தது. அவர் புதிய மனிதரானார். உணர்ச்சி விஞ்சியது. இசைப்பாடலாகப் பொழிந்தார். இறைவன் செய்த பேரருளை எண்ணி எண்ணி வியந்தார். "இந்த ஏழையையும் ஆட்கொள்ளத் திருவுள்ளம் வந்ததோ! ஏற முடியாத குழியில் விழுந்த என்னைக் கரையேற்றிய கருணையை என்னென்று சொல்வேன்!" என்று உருகினார்.

இறைவன் அவருடைய உருக்கம் நிறைந்த பாடலைக் கேட்டு அருள் புரிந்தான். அசரீரியாக, 'திருநாவுக்கரசர்' என்ற சிறப்புப் பெயர் கேட்க, அப்பெயர் மருள் நீக்கியாருக்கு உரியதாயிற்று. யாவரும் அவரைத் திருநாவுக்கரசர் என்றே வழங்கத் தலைப்பட்டனர்.

## 2

இந்த அற்புத நிகழ்ச்சி நடந்த திருத்தலம் திருவதிகை. நடுநாட்டில் பண்ணுருட்டி ரெயில் நிலையத்துக்கு முக்கால் மைல் தூரத்தில் கெடில நதியின் வடகரையில் இது இருக்கிறது; இதன் பெயர் அதியரைய மங்கை என்பது. அதுவே அதிகை என்று குறுகியது. அதிகாபுரி என்றும் சொல்வது உண்டு. சேரர் குலத்தைச் சார்ந்த ஒரு குலம் அதியமான் அல்லது அதிகன் குலம். அதிராஜர் என்று அவ்வரசர்களைக் கூறுவார்கள். அவர்கள் கொங்கு நாட்டில் உள்ள தகடூரில் இருந்து வாழ்ந்தார்கள். கொங்கு நாட்டுக்கு அதிராச ராச மண்டலம் என்ற பெயர் பழங்காலத்தில் வழங்கி வந்தது. அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளல் தகடூரில் இருந்து

ஆண்டு வந்தவன். அக்குலத்தில் வந்த ஒருவன் இவ்வூர்க் கோயிலை நிறுவியமையால் இதற்கு அதியரைய மங்கை என்ற பெயர் வந்தது. நாமக் கல்லில் உள்ள கோயிலுக்கு அதியேந்திர விஷ்ணுக் கிருகம் என்று பெயர். அதியேந்திரன், அதியரையன் என்பவை ஒருவனையே சுட்டும் பெயர்கள்.

"அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை" என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

சிவபெருமானுடைய வீரச் செயல்களில் முக்கிய மானவை எட்டு. அந்த எட்டுச் செயல்களையும் செய்த போது இறைவன் தாங்கிய கோலங்கள் எட்டு. ஒவ்வொரு வீரச் செயலுக்குரிய கோலத்தை யும் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு தலத்தில் சிறப்பாக வைத்துப் பூசித்து வருகிறார்கள். வீரச் செயல் செய்ததை நினைவுறுத்தும் இடமாதலின் வீரஸ்தானம் என்ற பெயர் அவற்றிற்கு வந்தது. அது மாறி வீரட்டானமாகிப் பின்பு வீரட்ட மெனச் சிதைந்தது. எட்டுத் தலங்களாதலின் அட்ட வீரட்டம் என்பார்கள். அந்த எட்டுத் தலங்களில் திருவதிகையும் ஒன்று. அதனால் இதற்குத் திரு வதிகை வீரட்டம் என்ற பெயர் வந்தது. கெடில நதியின் கரையில் இருப்பதால் இதற்குத்திருவதிகைக் கெடில வீரட்டானம் என்றும் பெயர் அமைந்தது. இங்கே, திரிபுர சங்காரம் செய்த திருக்கோலத்தோடு இறைவன் எழுந்தருளியிருக்கிறான்.

கோயில் பழையது. பல கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்தில் திலகவதியார் ஒரு மடத்தில் இருந்து வாழ்ந்து வந்தார். அவர் எவ்வளவு அடக்க மாக இருந்தாரோ அவ்வளவு அடக்கமாகத்தானே

அந்த மடமும் இருக்கும்? அதே மடத்தை இப்போது பார்க்க முடியாது. ஆனாலும் அது இருந்த இடம் இருக்கிறது. அங்கே நல்ல முறையில் ஒரு மடம் கட்ட வேண்டும் என்ற முயற்சியும் நடந்ததாக அங்கே நிற்கும் தூண்கள் தெரிவிக்கின்றன. அந்த மடம் அன்பர்களுடைய முயற்சியினால் நிறை வேறினால் எவ்வளவு அருமையாக இருக்கும்!

மடத்துக்குப் பின்னாலே ஒரு நந்தவனம் இருக்கிறது. கெடில நதி சற்றே ஒதுங்கிச் செல்ல, அதிலிருந்து பிரிந்த சிறு கிளையின் கரையில் அந்த நந்தவனம் வளர்கிறது. அந்தக் கிளையைக் குட்டியாறு என்று சொல்கிறார்கள். கெடிலமும் இதுவும் சேர்ந்து ஒரே ஆறாக முன்பு இருந்திருக்கும். முன் போல் ஆற்றில் வெள்ளம் வராமையினால் நடுவில் மேடிட்டுப் போய்க் கிளையைப் போலக் காட்சி அளிக்கிறது. மேலே சொன்ன நந்தவனம் திலகவதியார் பரிபாலித்த நந்தவனத்தின் பரம்பரை என்று சொல்கிறார்கள். கமுகும் வாழையும் மலர்ச்செடிகளும் வளர்ந்துள்ள அது இன்றும் நன்றாகவே இருக்கிறது. திலகவதியார் காலத்தில் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்க வேண்டும்! இந்தத் தலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குரிய மடம் ஒன்று இருக்கிறது. ஆதீனத்தைச் சார்ந்த தம்பிரான் ஒருவர் அங்கே இருந்து வருகிறார்.

திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. முதலில் ஒரு கோபுரமும் பின் இடைநிலைக்கோபுரமும் உள்ளே கர்ப்பக்கிருகத்தின்மேல் விமானமும் இருக்கின்றன. இடைநிலைக் கோபுரத்தைத் தாண்டிச் சென்றால் இறைவன் திருக்கோயிற்

பிராகாரத்தைக் காணலாம். இங்கே அம்பிகையின் சந்நிதி இறைவனுக்கு வலப்பாகத்தில் இருக்கிறது.

அப்பர் சுவாமிகளுடைய உற்சவ விக்கிரகம் உள்ள இடம் மேற்குப் பார்த்த சந்நிதியாக இருக்கிறது. இங்குள்ள திருவுருவம் கோவணம் பூண்ட நெடிய கோலமுடையது. இடக்கையில் உழவாரத்தோடு அம்மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். நூறு ஆண்டுகளுக்குள்ளேதான் இதனை இயற்றியிருக்க வேண்டுமென்று தோன்றியது.

"இதுதான் எப்போதும் உள்ள உற்சவ மூர்த்தியா?" என்று கோயில் குருக்கள் ஒருவரை விசாரித்தேன்.

"இதைத்தான் இப்போது உற்சவத்தில் எழுந்தருளச் செய்கிறோம். இதற்கும் முந்திய பழைய விக்கிரகம் ஒன்று கோயிலுக்குள்ளே அர்த்த மண்டபத்தில் இருக்கிறது" என்றார்.

அந்தப் பழைய திருமேனியைக் காணவேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. அதைப் பார்க்கும் போதே பழமை நன்றாகத் தெரிந்தது. கையைக் குவித்துக் கொண்டு, நின்ற திருக்கோலத்தில் முழங்காலுக்குமேல் ஆடை புனைந்தபடி விளங்குகிறார் நாவுக்கரசர். உழவாரம் இடத்திருத்தோளில் சார்த்தியபடி இருக்கிறது. இது சிறிய திருவுருவம். பழைய காலத்தில் உற்சவ நாட்களில் இந்த விக்கிரகத்தை அப்பர் பிறந்த திருத்தலமாகிய திருவாமூருக்கே எடுத்துச் சென்று அங்கிருந்து எழுந்தருளுவித்துக் கொணர்வார்களாம்.

கோயிலுக்குள் திலகவதியாருடைய உற்சவ விக்கிரகமும் இருக்கிறது. தலையில் கொண்டை

யிட்டுக் கை குவித்த நிலையில் நிற்கிறார் அப்பெரு மாட்டியார். இந்த விக்கிரகமும் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் அமைத்தது என்று தெரிய வந்தது.

தெற்குப் பிராகாரத்தில் திலகவதியாருடைய சந்நிதி இருக்கிறது. கையில் பூக்குடலையுடன் அவர் நிற்கிறார். திலகவதியார் இறைவனுக்கு மலர் தொகுத்துக் கொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தா ரென்று அந்த விக்கிரகத்தின் அமைப்பே சொல்கிறது.

திருநந்தவனத்தில் மலர்களைக் கொய்து கொண்டு வந்து கொடுப்பதோடு, அவற்றை மாலை களாகவும் தொடுத்துக் கொடுத்தார் திலகவதியார் என்று சேக்கிழார் பாடுகிறார்.

**புலர்வதன்முன் திருவலகு**
**பணிமாறிப் புனிறகன்ற**
**நலமலிஆன் சாணத்தால்**
**நன்குதிரு மெழுக்கிட்டு**
**மலர்கொய்து கொடுவந்து**
**மாலைகளும் தொடுத்தமைத்துப்**
**பலர்புகழும் பண்பினால்**
**திருப்பணிகள் பலசெய்தார்.**

திலகவதியார் சந்நிதிக்கு அடுத்தபடி தெற்குப் பிராகாரத்தில் அப்பர் சந்நிதி ஒன்று இருக்கிறது. திருநாவுக்கரசர் கை குவித்துக்கொண்டு அமர்ந்த திருக்கோலத்தில் அங்கே எழுந்தருளியிருக்கிறார். நால்வருடைய திருவுருவங்கள் பல இடங்களில் மூல மூர்த்திகளாகவும் உற்சவ மூர்த்திகளாகவும் இருக் கின்றன. யாவும் நின்ற திருக்கோலத்திலே உள்ளன.

இந்த ஓர் இடத்தில்தான், எனக்குத் தெரிந்தவரை யில், அப்பர் சுவாமிகள் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டேன். இதிலே எனக்குச் சிந்தனை ஓடியது. 'பணிவே உருவாக விளங்கியவர் திருநாவுக்கரசர். மற்ற மூவருமாவது அமர்ந்த கோலத்தில் இருக்கலாம். இவர் இப்படி இருக்கிறது அதிசயமாகத் தெரி கிறதே!' என்று எண்ணமிட்டேன்.

"கீழே பீடத்தில் ஏதாவது விசேஷம் உண்டோ?" என்று கேட்டேன்.

"இது அப்பர் சுவாமிகள் கடலிலிருந்து கல்லையே தெப்பமாகக் கொண்டு எழுந்தருளிய கோலம்" என்று குருக்கள் சொன்னார். அந்த உருவத்தை வடித்த சிற்பி அதைக் கருதிச் செய்தானோ, இல்லையோ; குருக்கள் சொன்னது என் ஐயத்தைப் போக்கியது.

சைனர்களுடைய ஏவலால் அரசன் அப்பர் சுவாமிகளைக் கல்லைக் கட்டிக் கடலில் விட, அவர் பஞ்சாட்சரப் பதிகம் பாடிக் கரையை அடைந்தார். அப்படி அடைந்த இடம் இன்றும் கடலூருக்கு அருகே கரையேறவிட்ட குப்பம் என்று வழங்குகிறது.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே**

என்று தொடங்கும் பதிகம் கல்லைத் தோணி யாகக் கொண்டு பாடப்பெற்றது.

இங்கே சித்திரை மாதத்தில் சுவாதி தொடங்கி அப்பர் சுவாமிகள் திருவிழா நடைபெறுகிறது. அவர்

முத்தி பெற்ற நாளாகிய சதயத்தன்று விழா நிறை வேறும். திலகவதியாரிடம் அப்பர் வந்து திருநீறு பெறுவது, அப்பால் இருவரும் திருக்கோயிலுக்குள் போவது முதலிய காட்சிகள் இந்த விழாவில் நடை பெறுகின்றன.

அடியார்களுடைய பெருமையை நினைக்கவும் போற்றவும் அவர்களை வழிபட்டு அந்த நெறியில் வாழவும் இந்த நாட்டினர் என்ன என்ன முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்! மற்ற நாடுகளிலானால் படித்தவர்கள் சிலர் சேர்ந்து விழாக் கொண்டாடி நூலாராய்ச்சி செய்து பேசுவார்கள். இந்த நாட்டிலோ படித்தவர்களும் படிக்காதவர்களும் சேர்ந்து திருவிழாக் கொண்டாடுகிறார்கள். அப்பருடைய தேவாரத்தைப்பற்றித் தெரிந்து கொண்டவர்கள் சிலரே இருக்கலாம். ஆனால் அப்பரைப் பற்றியோ யாவரும் தெரிந்து கொண்டிருந்தனர். அப்பர் சுவாமிகள் உற்சவம் வரப்போகிறது என்றால் முன் கூட்டியே எதிர்பார்த்து நின்றனர். உற்சவத்தில் கலந்து கொண்டனர். அப்பர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ வில்லையே என்ற குறைக்கே இடமின்றி மீட்டும் அப்பர் பிறந்து வாழ்வது போன்ற பாவனை யில் திருவிழாவை நடத்திக் களிப்புற்றார்கள். பல பல சிக்கல்களையும் மேடு பள்ளங்களையும் உடைய வாழ்வில் சமுதாயம் அனைத்தும் ஒருங்கே சேர்ந்து மற்ற அல்லல்களைச் சில நாளைக்கு மறந்து அப்பர் சுவாமிகளுடைய நினைவோடு விழாவில் ஈடுபட்டார் கள். அடியார்களை உபசரித்தார்கள். அந்தச் சில நாட்களில் அவர்கள் பெற்ற அமைதி அவர்கள் மனத்தை ஏற்றத்தாழ்வு இல்லாத சமநிலையில்

வைத்தது. அதன் பயன், அவர்கள் வாழ்வில் புதிய ஊக்கம் தழைத்தது. இந்த அமைதி சில ஆண்டு களுக்குத் தாங்கும். அது தேய்வதற்குள் அடுத்த ஆண்டுவிழா வந்து விடுகிறது அல்லவா ?

வெறும் இலக்கிய ஆராய்ச்சியில் மாத்திரம் போதைப் போக்காமல் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் மனத்தைப் பழக்குவதற்கு இத்தகைய விழாக்கள் உதவின. இன்றும் அந்த விழாக்களைப் பேருக்கு நடத்தி வருகிறோம். ஆனால் நம்பிக்கையும் பக்தியும் இல்லாமல் போனமையால் விழாவில் பக்தி மணம் பரவுவதில்லை; மக்களுக்கு அமைதியும் கிடைப்பதில்லை.

அப்பர் சுவாமிகளின் மூல விக்கிரகத்துக்கு முன் நின்றபோது அப்பெருமானுடைய பெருமையை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தேன். சூலை நோயினால் படாத பாடு பட்டுத் துடித்துப்போன அந்த முதியவர் இப்போது கொந்தளிக்கும் அலைகடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு வீற்றிருக்கிறார் என்ற நினைவு வந்தபோது, ஆண்டவனுடைய திருவருட் பலத் துக்கு மிஞ்சியது வேறு என்ன இருக்கிறது என்ற எண்ணம் தோன்றியது. அந்தப் பலத்தைக்கொண்ட திருநாவுக்கரசருக்குச் சூலை பணிந்தது. கடல் கல்லை ஆழ்த்தாமல் ஏந்தியது. தீயானது சுடாமல் குளிர்ந்தது. நஞ்சு அமுதாயிற்று.

திருநாவுக்கரசர் செய்த அற்புதங்களை நாம் நேரே இருந்து பார்க்கவில்லை. ஆனால் அவர் பாடியுள்ள தேவாரம் செய்யும் அற்புதத்தை இன்றும் காணலாம். கனமான கல்லை மிதக்க வைத்தது அவர் பாட்டு என்று சொல்வார்கள். இன்று அந்தப் பாட்டு நெஞ்ச

மாகிய கனத்த கல்லை உருக வைக்கிறது. திருத் தாண்டகப் பாடல்களைப் பக்தியுடன் யாரேனும் மெல்லப் பாடும்போது கேட்டுப் பாருங்கள். எதை எதையோ நினைந்து அலையும் இந்தப் பாழும் மனம் சிறிதே நெகிழ்வதை அநுபவத்தில் உணரலாம். நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடிய பாடல்கள் அவை. அதனால்தான் நாம் அவற்றைக் கேட்கும்போது நமக்கும் நெஞ்சு ஓரளவு நெகிழ்கிறது.

# அதிகைத் திருக்கோயில்

அழகான மண் பொம்மைகளைப் பண்ணுருட்டியில் செய்து வந்தார்கள். "மண்ணுருட்டிப் பொம்மை செய்யும் பண்ணுருட்டி" என்று யாரோ எதுகை நயம் தோன்றச் சொன்னது இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. திருவதிகைஇந்தப் பண்ணுருட்டிக்கு முக்கால் மைல் தூரத்தில்தான் இருக்கிறது. பண்ணுருட்டியில் இப்போது பொம்மை செய்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. அதற்கு அருகில் உள்ள திருவதிகையில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்துக்கு மேல் உள்ள விமானத்தில் பல அழகிய சுதை உருவங்களைக் கண்ட போது பண்ணுருட்டிக் கலைஞர்கள்தாம் இவற்றைப் பழங்காலத்தில் சமைத்தார்களோ என்ற எண்ணம் உண்டாயிற்று. பெரும்பாலும் மற்ற இடங்களில் கர்ப்பக் கிருகத்தின்மேல் விமானமும் அதில் வண்ண உருவங்களும் இருக்கும். இங்கேயோ கீழிருந்தே சுதை வடிவங்களை அமைத்திருக்கிறார்கள்.

விமானத்துக்குப் போவதற்கு முன் மற்ற இடங்களையெல்லாம் பார்க்க வேண்டாமா ? நின்று நிதானமாக இன்று திருவதிகையைத் தரிசிக்கலாமே.

இதுதான் கோயிலுக்கு முன் உள்ள தென் வடல் வீதி. கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. கோபுரத்துக்கு முன்னாலே உயரமான கல் மண்டபம் ஒன்று இருக்கிறது. சற்றே அண்ணாந்து பாருங்கள். மண்டபத்தின் முகப்பைப் பார்த்தீர்களா?

அங்கே உள்ள வண்ணச் சுதை வடிவம் கண்ணில் தெரிகிறதா? இறைவனுடைய திருமணக் கோலத்தைச் சிற்பி எவ்வளவு அழகாக வடித்திருக்கிருன்! சற்றே கூர்ந்து பாருங்கள். ஆம்; இதில் கவனிக்க வேண்டிய புதுமை ஒன்று இருக்கிறது. எங்கும் பரம சிவனுக்கு இடப் பாகத்தில்தான் பார்வதியம்மை இருப்பது வழக்கம். இந்தத் திருமணக் கோலத்தில் அம்பிகை எம்பெருமானுடைய வலப்புறத்திலே நிற்கிருள்.

தல வரலாற்றைக் கேட்டவர்களுக்கு இந்தப் புதுமை விளங்கும். அம்பிகை தவம் செய்து இந்தத் தலத்தில் இறைவனைத் திருமணம் செய்து கொண்டாள். "நான் தேவரீருடைய வலப் பாகத்தில் இருக்க வேண்டும்" என்று வரம் பெற்ருள். அதனுல் இந்தத் திருமணக் கோலத்தில் அம்பிகை வலப் புறத்தே நிற்கிருள் இங்கே மட்டும் என்ன? உள்ளே உள்ள சில சிற்பங்களிலும் இந்த நிலையைக் காணலாம். இறைவன் சந்நிதிக்கு வலப் பாகத்தே தான் அம்பிகையாகிய பெரியநாயகியின் திருக்கோயில் இருக்கிறது. இந்த முன் மண்டபத் தூண்களில் சில அன்பர்களுடைய வடிவங்கள் இருக்கின்றன. மண்டபத்துக்குத் தெற்கே குருக்கள் வீடு; வடக்கே திருவாவடுதுறை மடம். மண்டபத்தை அடுத்துக் கோபுர வாசல் இருக்கிறது. கோபுரம் ஓரளவு பெரி தென்றே சொல்ல வேண்டும்.

கோபுர வாசலுக்குள் கண்ணை மூடிக்கொண்டு நுழையாதீர்கள். கண்ணைத் திறந்து பார்த்து இன்புறுவதற்கு ஏற்ற சிற்ப வடிவங்களைக் காணுமற் போகலாமா? இருபக்கச் சுவர்களிலும் நடனமிடு மடவாரின்

பல வகைக் கூத்துக்களைக் காண்கிறோம். எத்தனை வகையான கூத்துக்கள்! இந்த மாதிரி நடனமிடுபவர்களின் உடம்பு மெழுகால் அமைந்திருக்குமோ? எப்படியெல்லாம் வளைந்து காட்டுகிறார்கள்! அவர்களின் நெகிழ்வும் குழைவும் வளைவும் மெழுகை நினைக்கச் செய்தாலும், சிற்பி என்னவோ எல்லாவற்றையும் கல்லிலேதான் உருவாக்கியிருக்கிறான்.

ஊர்த்துவ தாண்டவம் என்றால் உங்களுக்குத் தெரியுமே; ஒரு காலை மேலே தூக்கி ஆடும் நடனம் அது. திருவாலங்காட்டில் சிவபெருமான் காளியோடு நடனத்தில் போட்டியிட்டார். பல விதமாக அவர் ஆடினார்; காளியும் ஆடினாள். ஆனால் ஊர்த்துவ தாண்டவமாடிய போது, பெண்ணாகிய காளி அவ்வாறு செய்ய இயலாமல் தோல்வியுற்றாளாம். அந்தக் காளியினால் ஆடமுடியாத ஊர்த்துவ தாண்டவத்தை இதோ ஒரு பெண் ஆடிக் காட்டுகிறாள்! இங்கே உள்ள கூத்து வகைகள் எல்லாவற்றையும் ஆர அமரப் பார்க்க நேரம் இல்லை. சிவபெருமானைத் தரிசிக்க வேண்டாமா ?

கோபுர வாசலின் படியைத் தாண்டும்போது இருமருங்கும் உள்ள மெல்லியலாரைப் பாருங்கள். கொடியைப் பற்றிக்கொண்டு ஒல்கிய கொடி போலவே நிற்கும் அணங்குகள் அவர்கள். என்ன ஒயில்! என்ன எழில்!

கோபுர வாயிலைத் தாண்டி உள்ளே புகுவோம். இதோ ஒரு பெரிய முற்ற வெளி. இதன் நடுவே ஒரு நாலுகால் மண்டபம். இதற்குத் தெற்கே உள்ள குளந்தான் சக்கர தீர்த்தம். அதை அடுத்து ஒரு சிறிய மண்டபம் இருக்கிறதே, அதில்தான் உற்சவ

காலத்தில் திரிபுர சங்கார மூர்த்தியை எழுந்தருளச் செய்விப்பார்கள்.

வலப்புறம் சற்றே பாருங்கள். திருமதிற் சுவரை ஒட்டி அமர்ந்திருப்பவர் யார் தெரிகிறதா? நன்ருகப் பாருங்கள். புத்தர் மாதிரி தோன்றவில்லையா? ஆம். சாட்சாத் புத்த பகவானேதான். இந்தப் பெரிய விக்கிரகம் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து கவனிப்பாரற்று இந்த இடத்தில் இருக்கிறது. இது எப்படி இங்கே வந்தது?

நரலோக வீரன், காளிங்கன், மணவிற்கூத்தன் என்ற பெயர்களை உடைய சிற்றரசன் இந்தத் திருக் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்தான். அவன் 12-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவன். மண்டபம், மாளிகை, திருமதில், ஏரி எல்லாம் கட்டினன். அவன் இந்த ஊரில் புத்தருக்கும் ஒரு கோயில் கட்டினனும். இக்கோயிலில் பல கல் வெட்டுக்கள் இருக்கின்றன. வெண்பாவாகவே பல சாசனங்கள் உள்ளன. அவை இந்தச் செய்திகளைச் சொல்கின்றன.

**போதியின் நீழற் புனிதற் கிறையிலிசெய்து**
**ஆதி அதிகையின்வாய் ஆங்கமைத்தான்—மாதர்நகில்**
**நீடுழக்காண் ஆகத்து நேரலரைத் தன்யானைக்**
**கோடுழக்காண கூத்தன் குறித்து***

என்ற பாட்டில் அந்த மணவிற் கூத்தன் திருவதிகை யில் போதி நீழற் புனிதனுகிய புத்த பகவானுக்கு நிலங்களை விட்டுக் கோயில் அமைத்தான்

---

* போதி-அரச மரம். புனிதன்-புத்த பகவான். இறையிலி-வரி யில்லாமல் நிவந்தமாக விடப்படும் நிலம். நீடு உழக் காண்-பலகால மாக உழ அதைக் காணும். ஆகம்-மார்பு. நேரலர்-பகைவர்.

என்ற செய்தி வருகிறது. இந்தப் பக்கங்களில் மிகப் பழங்காலத்தில் பௌத்தர்களும் சைனர்களும் சைவர்களும் வாழ்ந்து வந்தார்கள். திருநாவுக்கரசர் சைன சமய ஆசாரியராக இருந்தபோது பௌத்தர் களை வாதில் வென்ருர் என்று சேக்கிழார் சொல் கிருர். அதனுல் அக்காலத்தில் இப் பக்கங்களில் பௌத்தர்களும் இருந்திருக்க வேண்டும். பிற்காலத் திலும் இருந்தார்கள் போலும் ! அவர்கள் வழிபடுவ தற்காகப் புத்தர் கோயில் ஒன்றை நரலோக வீரன் அமைத்தான். பாட்டு, புத்தர் கோயிலை அமைத் தான் என்று தெளிவாகச் சொல்லவில்லை. முன்பே இருந்த புத்தர் கோயிலுக்கு இறையிலி நிலங்களை வழங்கினுன் என்றும் பொருள் செய்து கொள்ளலாம்.

எப்படியாறுலும் இந்த ஊரில் புத்தர் கோயில் ஒன்று இருந்தது என்பது உண்மை. நாளடைவில் பௌத்தர்கள் மறைந்தனர். புத்த விகாரமும் மறைந் தது. புத்தர் மாத்திரம் சிவபிரான் திருக்கோயில் முற்ற வெளியிலே வானமே கூரையாக மாரியே திரு மஞ்சனமாக எழுந்தருளியிருக்கிருர்.

இந்த முற்றத்தைக் கடந்தால் அப்பால் இடை நிலைக் கோபுரம் இருக்கிறது. இதையும் கடந்து புகுந்தால் திருக்கோயிற் பிராகாரத்துக்குள் அடியிடு வோம். திருக் கோயிலை வலமாக வரலாமா?

சந்நிதிக்கு நேரே வாசல் இல்லை. தென் புறத் தில் உள்ள படிக்கட்டில் ஏறிக் கோயிலுக்குள் செல்ல வேண்டும். இப்படிச் சில கோயில்கள் அமைந்திருப் பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். தெற்குப் பிரா காரத் தொடக்கத்தில் மேற்கு நோக்கி அப்பர் உற்சவ மூர்த்தி எழுந்தருளி யிருக்கிருர். இவரை முன்பே

பார்த்தோம். தெற்குப் பிராகாரத்தின் திருமாளிகைப் பத்தியில்தான் திலகவதியார் அப்பர் சுவாமிகளின் சந்நிதிகள் உள்ளன. இங்கே தல விருட்சமாகிய சரக் கொன்றை நிற்கிறது. அப்பர் பிறந்த ஊராகிய திருவாமூரிலும் தலவிருட்சம் சரக்கொன்றைதான்.

தெற்குப் பிராகாரத்தில் இறைவனுக்குப் பக்கத்தில் அம்பிகை கோயில் இருக்கிறது. பிருகந்நாயகி என்று வட மொழியிலும் பெரிய நாயகி என்று தென் மொழியிலும் அம்மைக்குப்பெயர்கள் வழங்குகின்றன. அம்பிகையின் கோயிலை ஒட்டியே சிவபெருமானுடைய கர்ப்பக் கிருக விமானம் இருக்கிறது. விமானத்தின் அடியிலிருந்தே சிற்பவடிவங்கள் ஒளிர் கின்றன. விநாயகர், திருக்கல்யாண மூர்த்தி, நடராஜா முதலிய பல வடிங்களைப் பார்க்கிறோம். இந்த விமானம் எண்கோண முள்ளது. அங்கங்கே சிறு சிறு புரைக்குள் சில அழகிய உருவங்கள் இருக்கின்றன.

இதோ பாருங்கள். இவர்தாம் திரிபுர சங்கார மூர்த்தி. அட்ட வீரட்டங்களுள் ஒன்று இத் தலம் என்பது முன்பே உங்களுக்குத் தெரியும். திரிபுர சங் காரச் செயலுக்குரிய மூர்த்தியைத் தலைவனாகக் கொண்டு வழிபாடு நடத்தும் தலம் இது.

இந்தப் பெருமானுக்குப் பன்னிரண்டு கரங்கள் இருக்கின்றன. தேரின்முன் பிரம்மா சாரதியாய் அமர்ந்திருக்கிறார். இறைவன் காலை மடித்துப் போருக்கு ஆயத்தமாக இருக்கிறான். வில்லை வளைத்து அம்பைக் கோத்தான். ஆனால் அம்பை விடவில்லை. புன் முறுவல் பூத்துப் புரம் மூன்றையும் எரித்துவிட்டான். விமானத்தின்மேல்

அதைத் தாங்குபவரைப் போலச் சில பூதகணங்கள் இருக்கின்றன. அந்தக் கணங்களைப் பார்த்தாலே சிரிப்பு வருகிறது. திரிபுர சங்காரம் செய்யும்போது சிவபிரான் சிரித்ததை நாம் பார்த்ததில்லை. இந்தப் பூதகணங்கள் கையை விரித்துக்கொண்டு விமானத்தைச் சுமப்பதாகக் காட்டும் வேடிக்கையைக் கண்டு தான் இப்போது அவன் சிரிக்கிறான் போலும்!


அம்பிகையின் திருக்கோயிலை வலம் வந்து விமானத்தின் மேல்புறத்தையும் பார்த்துக்கொண்டு வடக்கே வரலாம். இங்கும் பல உருவங்களைக் காண்கிறோம். துர்க்கை, கோவர்த்தன கோபாலன் முதலியவர்களைத் தரிசித்துக் கொள்ளலாம். இராவணன் கைலை மலையைத் தூக்கும் காட்சியும் இங்கே இருக்கிறது.

இவரைப் பாருங்கள். இவர் திருவடிகளைக் கவனித்தீர்களா? திருவடிகள் இல்லை; திருவடி ஒன்றுதான் இருக்கிறது. ஆம்! சிவபெருமானுடைய பல வகையான மூர்த்தங்களில் ஏகபாத மூர்த்தி என்பதும் ஒன்று. ஒரே காலையுடைய கோலம் அது.

சற்றே இப்படிப் பாருங்கள். இவர் யார் தெரிகிறதா? இவருக்குக் கால் மூன்று; கையோ ஏழு; தலை இரண்டு. ஒன்றுக்கொன்று பொருத்தமாகவே தோன்றவில்லை. இவர் அக்கினி பகவான். இவருக்கு அருகில் நிற்பவள் இவருடைய தர்மபத்தினி சுவாகா தேவி. அக்கினி பகவான் என்பதைப் புலப்படுத்தச் சிற்பி அருகில் தீக்கொழுந்தைக் காட்டியிருக்கிறான்.

இப்போது நாம் வடக்குப் பிராகாரத்தில் நிற்கிறோம். இதோ இருக்கிறதே, இந்தக் கிணற்றுக்


திருஅதிகை -உற்சவர்
திரிபுரசங்காரர்
பக்கம் 66





திருஅதிகை - திலகவதியார்
பக்கம் 69

திருஅதிகை ஏகபாத மூர்த்தி →
பக்கம் 80





←திருஅதிகை - அக்கினி பகவ
பக்கம் 80

குச் சூல தீர்த்தம் என்று பெயர். அப்பர் சுவாமிகள் இந்தத் தீர்த்தத்திலிருந்து நீரை உட்கொண்டு சூலை நோய் தீர்ந்தாராம். சூலைத் தீர்த்தம் என்றும் இதைச் சொல்லலாம் போல் இருக்கிறது. இங்கே நின்று மேற்கே பார்த்தால் மேற்குத் திருமாளிகைப் பத்தியில் ஆறு முகங்களோடு மயிலின் மேல் எழுந்தருளி யிருக்கும் முருகனைத் தரிசிக்கலாம். அருணகிரிநாதர் இங்கே வந்து இப்பெருமானைத் தரிசித்துத் திருப்புகழ் பாடியிருக்கிறார்.

வடக்குப் பிராகாரத்தைக் கடந்து மீட்டும் கிழக்குப் பிராகாரத்தை அடைகிறோம். தெற்குப் பக்கத்திலுள்ள படிகளில் ஏறிக் கோயிலுக்குள் போகலாம். இதோ எதிரே தெற்கே நோக்கியபடி எழுந்தருளி யிருப்பவர்தாம் திரிபுர சங்கார மூர்த்தி; உற்சவ மூர்த்தி. நாலு திருக்கரமும், வேலும், அம்பும் கொண்டு விளங்குகிறார். வைகாசி மாதம் நடைபெறும் உற்சவத்தில் இந்தப் பெருமான்தான் திருத்தேரில் எழுந்தருளுவார். முன்பும் பூமியாகிய தேரில் ஊர்ந்தவர் அல்லவா? கோயிலுக்கு முன்னே ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. இதுதான் அலங்கார மண்டபம் போலும். இங்கே உற்சவ காலத்தில் பல கல்யாணங்கள் நடைபெறுகின்றன. ஏழைகள் பலர் சுருக்கமான செலவில் இங்கே வந்து திருமணங்களை நடத்திக்கொண்டு செல்கிறார்கள். இறைவனுக்குத் திருமணம் நடந்த பதி அல்லவா?

கோயிலுக்குள் இறைவன், திருவதிகையுடையானாகிய அதிகாபுரி நாதன் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளியிருக்கிறான். பதினாறு பட்டைகளையுடைய

சோடச கலாலிங்கம். இப்பெருமானுக்குப் பின்னால் கர்ப்பக்கிருகச் சுவரில் உமாபாகருடைய திருவுருவம் இருக்கிறது. கர்ப்பக் கிருகத்துக்குள் இவ்வாறு எம்பெருமான் உமா தேவியாரோடு எழுந்தருளி யிருக்கும் தலங்கள் வேறு சில உண்டு. வேதாரணி யத்தில் பார்க்கலாம். அநேகமாகத் திருமணம் நடந்ததாக எங்கெங்கே பழஞ் செய்தி வழங்கு கிறதோ, அங்கே இந்த அமைப்பைக் காணலாம்.

இங்கே வைகாசி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் திருத்தேர் விழா நடைபெறுகிறது. கார்த்திகைச் சோம வாரங்களில் பக்தர்கள் அதிகமாக இத்தலத் துக்கு வந்து வழிபடுகிறார்கள். மூன்றாவது சோம வாரம் மிகவும் சிறப்பாக இருக்கும்.

கோயில் உள்ள இடத்துக்கு வடகைலாசம் என்று பெயராம். திருவதிகையின் ஒரு பகுதி இது. நில வரிக்கணக்கில் இந்தப் பெயர் பதிவாகி யிருக்கிற தென்று சொல்கிறார்கள்.

நான் திருவதிகையைப்பற்றிய செய்திகளை விசா ரித்துக் கொண்டிருந்தபோது ஓர் அன்பர், ''நீங்கள் வேகாக் கொல்லையைப் பார்த்திருக்கிறீர்களோ?'' என்று கேட்டார்.

"அது எங்கே இருக்கிறது ?"

"இங்கிருந்து தெற்கே ஏழு மைல் தூரத்தில் ஓர் ஊர் இருக்கிறது"

''அதற்கு ஏன் அப்படிப் பேர் வந்தது ?"

''இங்கே உள்ள மண்ணைப் பாருங்கள். சிவப் பாக இருக்கிறது அல்லவா? இது சுட்ட மண். சுடாத மண் அது. வேகாத இடம் அது. ஆதலால்

வேகாக் கொல்லை என்று பெயர் வந்தது. அங்கே மாத்திரம் மண் வெள்ளையாக இருக்கும்" என்று அவர் சொன்னார்.

"சுட்ட மண்ணா? எதற்குச் சுட்டார்கள்?" என்று ஆவலோடு கேட்டேன்.

"இறைவன் திரிபுர சங்காரம் செய்தபோது நெற்றிக் கண்ணால் சுடப்பட்ட இடம் இது. அதற்குத் தப்பி வேகாமல் இருந்த இடம் அது" என்று விளக்கினார் அந்த அன்பர்.

இறைவனுடைய திருவிளையாடல்களைப் புராணத்திலும் காவியத்திலும் தோத்திரத்திலும் வைத்துப் போற்றி வருவதோடு, இயற்கையிலும் செயற்கையிலும் உள்ள இடங்களிலும் அவற்றை நினைத்துப் பார்க்க வழி வகுத்து, கற்பனையிலும் சிந்தனையிலும் இறைவனைப் பல வகையில் வழிபட்டு வரும் மக்களின் பண்பை எண்ணிப் பார்த்து வியந்தேன். இறைவன் கண் பார்வை பட்டுச் சுட்ட மண் செம்மையான மண்; அது படாத மண் வெள்ளை மண்!— நல்ல கற்பனை அல்லவா? அப்பர் சுவாமிகள் சுட்டுச் செம்மையான மண் போலும்!

# புகலூர் மேவிய புண்ணியன்

விநாயகருடைய திருக்கோயிலுக்கு முன் நின்று அவர் கண்ணை மூடியபடியே தியானம் செய்து கொண்டிருந்தார். சற்றுத் தூரத்தில் யாரோ இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தால் அரசனுடைய ஏவலாளரைப் போலத் தோன்றினர். விநாயகரை வணங்கிக் கொண்டிருந்தவர் நல்ல வளப்பமான மேனி உடையவர். கண்ணில் நீர்வார நின்றபடியே தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

சிறிது போது ஆனவுடன் அவர் ஏதோ பாடத் தொடங்கினார். மெல்ல மெல்ல நிறுத்தி அந்தப் பாடலைச் சொன்னார். பாட்டு அப்போது அவர் புதியதாகப் பாடியது. அதனால்தான் மெல்ல மெல்லச் சொன்னார்.

அவர் பாடலைச் சொல்லியபோது அருகே நின்றவர்கள் அதைக் கூர்ந்து கவனித்தார்கள். அந்தப் பக்கமாக ஓர் அழகிய பெண் வந்தாள்; திருக்கோயிலுக்குப் போவதற்கு முன் விநாயகரைத் தரிசிக்கும் முறைப்படி இங்கே வந்தாள். சந்நிதியில் நின்றிருந்த அன்பரைக் கண்டாள். அவர் ஏதோ பாடலைச் சொல்லுகிறார் என்பதையும் உணர்ந்தாள். அதை உற்றுக் கேட்கத் தொடங்கினாள்.

பாட்டை அவர் மெல்லச் சொல்லிக்கொண்டே போனார்:

உரைசெய் மறைக்கும்
　　தலைதெரியா ஒரு கொம்பனையென்றே
பரசும் அவர்க்குப்
　　பெருநிழல் ஆக்கும். பழனமெல்லாம்
திரைசெய் கடல்துறைச்
　　சங்கம் உலாவும் திருப்புகலூர்
அரசி னிடத்து
　　மகிழ்வஞ்சி ஈன்றதோர் அத்திநின்றே

[ஓதப்பெறுகின்ற வேதங்களுக்கும் முடிவு அறியாத ஒற்றைக் கொம்பை உடையவனே என்று துதிசெய்யும் அவர்களுக்குப் பெரிய அருளை உண்டாக்குவார், வயல்களில் அலைகள் வீசும் கடல் துறையில் உள்ள சங்குகள் உலவுகின்ற திருப்புகலூரிலுள்ள அரசாகிய இறைவனது இடப்பாகத்தில் இருந்து மகிழ்கின்ற வஞ்சிக்கொடி போன்ற உமாதேவியார் பெற்றெடுத்த ஒப்பற்ற யானையாகிய விநாயகர் நின்று, அத்திநின்று நிழல் ஆக்கும் என்று வாக்கியத்தை முடிக்க வேண்டும்.]

பாட்டை இரண்டு மூன்று முறை சொன்னார். அதைக் கேட்ட அந்தப் பெண்மணி அது புதிய பாடல் என்று தெரிந்து கொண்டாள். அவள் தமிழறிவிற் சிறந்தவள். பாட்டு அழகாக இருப்பதை உணர்ந்து இன்புற்றாள். அவள் மகிழ்ச்சி அடைவதோடு நிற்கவில்லை. "இந்தப் பாடலை ஓர் அந்தாதிக்குக் காப்பாகக் கொள்ளலாமே!" என்று சொன்னாள்.

அந்தப் பாட்டைப் பாடியவர் நல்ல புலமையை உடையவர் என்பதை அதன் அமைப்பினால் தெரிந்து கொண்ட அந்த நங்கை, அவர் வாயிலாகவே ஒரு

நூலே வெளி வந்தால் நன்ருக இருக்கும் என்று ஆசைப்பட்டாள். அந்த ஆசையையே அப்படித் தெரிவித்தாள்.

அவள் கூறியது காதில் விழுந்தவுடன் அந்த அன்பர் திரும்பிப் பார்த்தார். உடனே அவர், "அந்தாதிக்குக் காப்பாக்கினுல் அரசனுக்கு வரி யாகுமா ?" என்று ஒரு கேள்வி கேட்டார். அந்தப் பெண்மணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிறிது யோசித்த பிறகு அருகில் நின்றவர்களை விசாரித்தாள். உண்மை தெரியவந்தது.

தொண்டை நாட்டில் நெற்குன்றம் என்ற ஊரில் களப்பாளர் வமிசத்தில் உதித்தவர் அவர். நெற்குன்ற வாணர் என்னும் பெயருடையவர். பெரிய வள்ளல். பஞ்சம் வந்தமையால் அவர் அரசனுக்கு உரிய வரியைச் செலுத்த முடியாமற் போயிற்று. தம் ஊரில் வருவோரைப் பாதுகாக்க இயலாத நிலையில் இருப் பதைவிடத் தல யாத்திரை செய்து வரலாம் என்று புறப்பட்டார். திருப்புகலூருக்கு வரும்போது அரசனுடைய ஏவலாளர்கள் வரிகொடாமையால் அவரைப் பற்றிக் கொண்டனர். "நீராடிச் சுவாமி தரிசனம் செய்துகொண்டு வருகிறேன்" என்று நெற் குன்றவாணர் சொல்ல, அவர்கள் அதற்குச் சம்மதித் தார்கள். அவர் நீராடிச் சுவாமி தரிசனம் செய்யத் தொடங்கி முதலில் திருக்கோயிலுக்கு வெளியே உள்ள ஞான விநாயகர் ஆலயத்தை அடைந்து வழி பட்டார். அப்போது நிகழ்ந்த செய்தியே மேலே சொன்னது.

அந்த ஊரில் சிந்தாமணி என்னும் பெயருடைய தாசி ஒருத்தி இருந்தாள். அவள் திருப்புகலூர்ச்

சிவபெருமானுடைய கோயிலைச் சார்ந்த ருத்திர கணிகையரில் ஒருத்தி. பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் நிரம்பப் பெற்றவள். சிவபக்தியிலும் சிறந்தவள். நெற்குன்றவாண முதலியார் பாடலைப் பாடும்போது வந்து கேட்டவள் அவள்தான்.

சிந்தாமணி நெற்குன்ற வாணருடைய வரலாற்றை அறிந்து மிகவும் மனம் இரங்கி, "இறைவனைப் பாடினால் பொன்னும் கிடைக்கும்; புகழும் கிடைக்கும். புகலூர்ப் பெருமான் சுந்தர மூர்த்தி நாயனாருக்குப் பொன் அளித்தவராயிற்றே. நீங்கள் இறுக்க வேண்டிய வரியை அவர் அளித்தருள்வார். அந்தாதியைப் பாடுங்கள்" என்று சொன்னாள். ஏவலாளரை நோக்கி, "அவர் அளிக்க வேண்டிய வரிப்பணத்தை இதோ நான் தருகிறேன்" என்று சொல்லி அவ்வாறே கொடுத்து விட்டாள்.

அவளுடைய அன்பைக் கண்டு வியந்த நெற்குன்றவாணர் அத்தலத்தில் சில நாள் இருந்து நூறு பாடல்கள் அடங்கிய அந்தாதி ஒன்றை இயற்றினார். அதற்குத் "திருப்புகலூர் அந்தாதி" என்று பெயர். இறைவனுடைய திருவருளால் தமக்கு உண்டான துன்பம் நீங்கியதனால் நெற்குன்ற வாணருக்குத் திருப்புகலூரில் மிக்க அன்பும் சிந்தாமணியென்னும் தளிப் பெண்டினிடம் நன்றியறிவும் உண்டாயின. அவர் தம் ஊர் சென்றடைந்தார். பஞ்சம் நீங்கி மீட்டும் வளம் உண்டான காலத்தில் அவர் திருப்புகலூரில் திருக்குளத்தின் தென்கரையில் ஓர் அன்னசத்திரம் நிறுவி அதில் ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு அந்தணர்கள் உண்ணும்படியாக நிவந்தம் அமைத்தார்.

இவ்வூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், "நம்பியார் குளத்தின் தென்கரையிலே நிசதம் பன்னிரண்டு பிராமணர் உண்பதாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேரூர் நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங்கிழார் அரயன் கருவுணையகரான களப்பாள ராஜா செய்வித்த சாலை" என்ற குறிப்புக் காணப்படுகிறது.

சிந்தாமணியென்னும் கணிகை முடிகொண்டான் ஆற்றுக்கு அக்கரையில் ஒரு பெரிய மாளிகை கட்டிக் கொண்டு வாழ்ந்தாள். அதில் கூடமும் கோபுரமும் இருந்தன. அக்காலத்தில் இப்பக்கத்தில் இருந்த அரசன் ஒருநாள் அவ்வழியே சென்றபோது அவள் மாளிகையைக் கோயில் என்று நினைத்துக் கையெடுத்துக் கும்பிட்டான். அப்போது அருகில் இருந்த ஒருவர், "அது தாசி வீடு" என்று சொன்னார். அதைக் கேட்ட மன்னனுக்குக் கோபம் வந்து விட்டது. "தன் வீட்டைக் கோயில் போலவா அவள் கட்டியிருக்கிறாள் ? அந்த வீட்டை இடித்து விடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அரசனுடைய ஆணையை மறுப்பவர் யார்? ஏவலாளர்கள் சிந்தாமணியின் மாளிகையை இடிக்கச் சென்றார்கள். செய்தியை அறிந்த அவள் மன்னனை அணுகி வணங்கி, "அடியேன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன்" என்றாள்.

"உன் வீட்டை இடிக்கத்தான் வேண்டும்" என்று கடுமையாகக் கூறினான் அரசன்,

"தேவரீருடைய ஆணையை மறுக்க அடியேன் இங்கு வரவில்லை. என் மாளிகையை இடிப்பதைத் தடுக்கப் போவதில்லை."

'பின்பு என்ன சொல்ல வேண்டுமென்று இங்கே வந்தாய் ?''

''என் வீட்டை நானே இடித்துக் கொள் கிறேன்.''

''அதில் என்ன லாபம் ?''

''அரசருடைய கோபத்துக்கு ஆளான அடிமை அரசருடைய ஏவலாளருக்கு வேலை கொடுப்பது அடாது. அதைக் கட்டுவித்த நானே இடித்து விடு கிறேன். இடிக்கும் பொருளைக்கொண்டு அடியேன் இந்தத் திருக்கோயிலுக்கு ஒரு மதிலைக் கட்டலா மென்று எண்ணுகிறேன்'' என்றாள் சிந்தாமணி.

அரசன் அவள் விருப்பத்துக்கு இணங்கினான். அவள் தன் மாளிகையை இடித்து அந்தச் செங் கல்லைக் கொண்டு திருக்கோயிலுக்குப் புற மதிலைக் கட்டுவித்தாள். வெளிப் பிராகாரத்தில் ஒரு மண்ட பத்தையும் அதற்கு அருகே ஒரு சிவாலயத்தையும் நிறுவினாள். அந்த மண்டபத்துக்குச் சிந்தாமணி மண்டபம் என்றும், ஆலயத்துக்குச் சிந்தாமணீசர் ஆலயம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

## 2

அப்பர் சுவாமிகள் முத்தி பெற்ற தலம் திருப் புகலூர். அது நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. அப்பர் சுவாமிகள் பிறந்த தலமாகிய திருவாமூரையும் அருள் பெற்றதாகிய திருவதிகையையும் பார்த்து அந்த அந் தத்தலத்துச் செய்திகளையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு, அவர் முத்தியடைந்த தலமாகிய திருப்புகலூரையும் தரிசிக்க வேண்டும் என்ற அவா

வோடு அவ்வூருக்குப் போனேன். முன்பே ஒரு முறை இந்தத் தலத்துக்குப் போயிருக்கிறேன். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி அப்போது ஒரு மாநாட்டுக்குத் தலைமை தாங்கச் சென்றிருந்தேன். அப்போது ஆசாரிய சுவாமிகள் பேரருள் கூர்ந்து எளியேனுக்கு "வாகீச கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியருளினார்கள்.

அந்தத் தலத்தைப் பின்னும் நன்றாகத் தரிசித்து வரலாறுகளையும் அறிந்து வரலாம் என்று மீண்டும் சென்றேன். அப்போது மேலே சொன்ன வரலாறுகளை அங்கே கேட்டேன். திருப்புகலூர் அந்தாதி தோன்றிய வரலாற்றை என்னுடைய ஆசிரியப் பிரானாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கோயிலின் கோபுரம் நெடுந்தூரத்தில் வரும் போதே நம்மை வா வா என்று அழைக்கிறது. கோயிலைச் சுற்றிலும் ஓர் அகழி இருக்கிறது. கோயிலைச் சூழ மூன்று புறங்களிலும் இந்த அகழியைக் காணலாம். ஒரு காலத்தில் நான்கு புறத்திலும் இந்த அகழி இருந்ததாகவும், பின்பு ஒரு புறத்தைத் தூர்த்து மக்கள் எளிதிலே போய் வரும்படி வழி அமைத்ததாகவும் சொல்லுகிறார்கள்.

ஊரினுடைய பேர் திருப்புகலூர். சரண்யபுரி என்று வடமொழியில் அதைப் பெயர்த்துச் சொல்கிறார்கள். இறைவன் இறப்புக்கும் பிறப்புக்கும் அஞ்சிச் சரண் அடைந்தவர்களுக்குப் புகலாக விளங்குகிறான். அவன் எழுந்தருளியிருக்கும் தலம்

உயிர்களுக்குப் புகலிடமாக விளங்குகிறது. ஆதலின் திருப்புகலூர் என்ற பெயர் மிகப் பொருத்தமானது தான் என்று முதலில் எனக்குத் தோன்றியது. அந்த எண்ணம் அப்படியே நின்றுவிடுகிறதா? எதையும் தூண்டித் துருவி ஆராய வேண்டும் என்று நினைவு சில சமயங்களில் உண்டாகிறதல்லவா? "எல்லா ஊரும் புகலூர்தானே? இதற்கு மாத்திரம் அந்தப் பேர் வருவானேன்?" என்ற கேள்வியை என் அறிவு கேட்டது. 'யாராவது ஆபத்துக் காலத்தில் இந்த இடத்தில் வந்து மறைந்து வாழ்ந்திருக்க வேண்டும். தம்மை ஒருவரும் எளிதில் அணுகாதபடி அகழியை வெட்டிக்கொண்டு கோயிலுக்குள் பதுங்கியிருக்க வேண்டும்' என்று என் கற்பனை வேலை செய்தது.

"இந்த அகழிக்கு என்ன பேர்? யார் வெட்டினார்கள்?" என்று ஆலயக் குருக்களில் ஒருவரும் முதியவருமாகிய ஸ்ரீ குப்புசாமி குருக்களவர்களைக் கேட்டேன்.

"இதற்கு அக்கினிதீர்த்தம் என்றும் பாணதீர்த்தம் என்றும் இரண்டு பேர்கள் உண்டு. இதைப் பாணாசுரன் தன் கதையால் உண்டாக்கினான் என்று தலமாகாத்மியம் சொல்கிறது."

"அந்த மாகாத்மியம் தமிழில் இருக்கிறதா? வடமொழியில் இருக்கிறதா?"

"சரண்யபுர மாகாத்மியம் என்று சம்ஸ்கிருதத்தில் இருக்கிறது. பன்னிரண்டு அத்தியாயங்கள் உள்ள கிரந்தம்."

"பாணாசுரன் கதையால் அகழியை உண்டாக்கிய கதை என்ன?"

அவர் அந்த வரலாற்றைச் சொன்னார். பாணாசுரனுடைய தாய் மாதலி என்பவள் தினந்தோறும் நூற்றெட்டு லிங்கங்களை வைத்துப் பூசித்தாளாம். நூற்றேழு சிவலிங்கங்களை மண்ணால் செய்து அமைத்துத் தன் தாய்க்குக் கொடுப்பான் பாணாசுரன். பிறகு எங்கேனும் கோயிலில் உள்ள சிவலிங்கம் ஒன்றை எடுத்து வந்து நூற்றெட்டாவது லிங்கமாக வைப்பான். ஒவ்வொரு நாளும் இது நடந்து வந்தது. ஒரு நாள் நூற்றெட்டாவது சிவலிங்கமாக இந்தத் தலத்தில் உள்ள அக்கினீசுவரரை வந்து எடுத்தான். எடுக்க முடியவில்லை. அசைத்தான். அவர் சற்றே கோணலாகச் சாய்ந்தாரே ஒழியப் பேர்ந்து வரவில்லை. உடனே பாணாசுரன் தன் தாயை இங்கே அழைத்து வந்து பூசை புரியச் செய்தான். அவள் தன் வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருந்து வழிபட்டுக் கடைசியில் இத்தலத்திலே உயிர் நீத்தாள்.

"பாணாசுரன் அசைத்து எடுத்தபோது ஒருபக்கம் சாய்ந்தமையால் இங்குள்ள மூர்த்திக்குக் கோணப் பிரான் என்று ஒரு திருநாமம் வழங்குகிறது" என்று குருக்கள் வரலாற்றைக் கூறி முடித்தார். அவர் பாணாசுரனைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் என் மனம் சரித்திர உலகத்துக்குத் தாவிக் கொண்டிருந்தது. வாணர் அல்லது பாணர் என்ற குலத்து அரசர் பலர் அங்கங்கே சிவபிரானுக்கு ஆலயம் அமைத்தும் நிவந்தங்கள் அமைத்தும் இருக்கிறார்கள். அவர்களுக்குள் யாரோ ஒரு பாண அரசன் இதை வெட்டியிருக்கலாம் என்று எண்ணினேன். பாண அரசனோ பாண அசுரனோ, யார் வெட்டினாலும் சரி, இந்த அகழி பழமையானது என்பதில் ஐயமில்லை.

பொங்கு தண்டலைச் சூழ்ந்து
போதணி பொழிற் புகலூர்
பொய்கை சூழ்ந்த புகலூர்

என்று திருஞானசம்பந்தர் பாடுகிருர்.

இங்குள்ள கோணப்பிரானை அப்பர் சுவாமிகள்,

...தொல்லைச் சீர்ப் புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக்
குறுகா கொடுவினையே

என்று பாடுகிருர்.

நெற்குன்றவாணர் பணிந்த ஞான விநாயகர், அகழிக் கரையில் தென்மேற்கில் தனிக் கோயிலில் எழுந்தருளியிருக்கிருர். அவரைத் தரிசித்துக் கொண்டு அகழிக்கு மேற்கே உள்ள ஒரு சிறு கோயிலுக்குப் போனேன். அதைச் சித்தர் கோயில் என்று சொன்னுர்கள். கோயிற் சுவர்களில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. கோயிலுக்குள் உமாபாகர் சுதை வடிவாக எழுந்தருளி யிருக்கிருர். இங்கே போகர் முதலிய சித்தர்கள் வழிபட்டமையால் சித்தர் கோயில் என்ற பெயர் வந்ததாம்.

இத்தலத்து ஆலயம் கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. இரண்டு பிராகாரங்களும் இரண்டு கோபுரங்களும் இருக்கின்றன. முதல் பிராகாரத்தில் தெற்குப் பக்கத்தில் சிந்தாமணி மண்டபமும் சிந்தாமணி ஈசுவரர் ஆலயமும் இருக்கின்றன. சிந்தாமணியின் மாளிகை இருந்த இடம் இன்று சிந்தாமணித் திடல் என்று வழங்குகிறதாம்.

முதல் பிராகாரத்தைச் சுற்றி வந்தபோது எனக்கு அப்பர் சுவாமிகளுடைய வரலாறு நினைவுக்கு வந்தது.

# 3

திருநாவுக்கரசர் இராமேசுவரத்தைத் தரிசித்துக் கொண்டு திருநெல்வேலிக்குச் சென்று நெல்லையப்பரை வழிபட்டார். பிறகு பாண்டி நாட்டிலுள்ள வேறு பல தலங்களுக்கும் சென்று தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனை இறைஞ்சினார்.

அப்பால் திருப்புகலூருக்கு வந்தார். அங்கேயே தங்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. உடம்பும் அறிவும் பக்தியும் முதிர்ந்து பழுத்த பழமாகிய அவர் தம்முடைய பாசம் நீங்கிப் பரமன் பாதத்தில் ஒன்றும் காலம் அணிமையில் இருக்கிறதென்ற உணர்ச்சியைப் பெற்றார். அதனால் அங்கே கோணப்பிரானைத் தொழுது நாள்தோறும் உழவாரத் திருத்தொண்டு செய்து வந்தார். உடம்பினாலும் உரையினாலும் உள்ளத்தினாலும் இடையறாது தொண்டு புரியும் பெரியார் அவர். உடம்பு வருந்த, அடியார் நடக்கும் வழியில் உள்ள புல்லைச் செதுக்கிக் கல்லை ஒதுக்கி உழவாரத் தொண்டு செய்தார். இறைவனே மகிழ்ந்து அருளிய திருநாவுக்கு அரசர் என்னும் பெயரைப் பெற்ற அந் நாவலர் பக்திச் சுவை கனிந்து ஒழுகும் பல பாடல்களைப் பாடி வாக்கினால் தொண்டு செய்தார். நின்றும் இருந்தும் கிடந்தும் எப்போதும் சிவனடியே சிந்திக்கும் இயல்பிலே சிறந்து விளங்கி நின்றார்.

அவர் ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் வீரம் உடையவர் என்பதையும் பொன்னாலும் பூவை

யாராலும் அவருடைய உள்ளத்தைச் சலிக்கச் செய்ய இயலாது என்பதையும் உலகினர் அறியும் சந்தர்ப்பம் வந்தது. அப்பர் உழவாரத் தொண்டு செய்யும் போது பொன்னும் மணியும் அங்கே கிடக்கச் செய்தான் இறைவன். அவற்றையும் கல்லையும் மண்ணையும் போலக் கருதிப் புறத்தே ஒதுக்கித் தள்ளினுர் அப்பர். அழகுடைய அணங்கினர் பலர் தம்முடைய ஆடல் பாடல்களால் கண்டோர் மயங்கும்படி கவரத் தொடங்கினர். வாகீசப் பெருந்தகையார் சிறிதும் தளர்வின்றித் தம் தொண்டிலே கண்ணுடையவராகியிருந்தார்.

அன்பர்கள் இந்த அதிசயத்தைக் கண்டு அப்பரைப் போற்றி வழிபட்டார்கள். புடமிட்ட பொன்னைப்போல வாகீசர் ஒளிவிட்டுப் பிரகாசித்தார்.

சித்திரை மாதம் வந்தது. அப்பர் சுவாமிகளுக்கு இறைவனுடைய திருக்குறிப்புப் புலப்பட்டது. இந்த உடற் சிறையினின்றும் விடுதலை பெறும் காலம் சமீபித்து விட்டது என்பதை உணர்ந்தார். இறைவனுடைய அடியையன்றிப் புகல் புகும் இடம் வேறு ஏது?

இறைவனை நினைந்து மனமுருகி, "அப்பனே! உன் திருவடியைச் சேரும் காலம் குறுகுகின்றது. குடியிருந்த இந்த வீட்டை விட்டு உயிர் அகலும் போது எத்தகைய வேதனை உண்டாகுமோ, யான் அறியேன். அப்போது இன்ன அநுபவம் உண்டாகும் என்பதை நான் உணர மாட்டேன். உன் திருவடிக்கண்ணே அடைக்கலம் புகுவதுதான் என்னுடைய லட்சியம். புண்ணியா, உன் அடிக்கே போதுகின்றேன்'' என்று பாடினுர், போகிற ஊருக்கு,

முன்பே பிரயாணச் சீட்டு வாங்கி வைத்துக் கொள்ளும் செல்வரைப் போல அவர் இடத்தைப் பதிவு செய்து கொண்டார். என்ன உருக்கமான பாட்டு அது !

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்;
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால் ;
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்;
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் ;
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!.

இப்படிப் பத்துப் பாடல்கள் பாடினார். இறைவன் திருவருளால் சதய நட்சத்திரம் சேர்ந்த திருநாளில் 'நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக் கீழ்' அடைந்து பேரின்ப வாழ்வு பெற்றார்.

வெளிப் பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு வந்தேன். வடக்குப் பக்கம் வந்து தென்கிழக்கு மூலையை அடைந்தேன். அங்கே அம்பிகையின் திருக்கோயில் இருக்கிறது. அதற்குள் சென்று பார்ப்பதற்கு முன் புற மதிலின் உட்புறத்தே கோபுரத்துக்கு வடக்கில் சில சிற்ப உருவங்கள் இருப்பதைப் பார்த்தேன். இந்த இடத்தை ஒரு சிறு கோயிலைப் போல் சுவரும் மேற்கூரையும் எடுத்துப் பாதுகாப்புச் செய்திருக்கிறார்கள்.

---

* ஒண்ணுளே—உடம்பாகிய ஒன்றுக்குள் ஒன்பது வாசல்—கண்கள், காதுகள், மூக்குத் துளைகள், வாய், எருவாய், கருவாய் என்பன.

கோணப்பிரானுகிய புகலூர் இறைவனுக்கு அக்கினீசுவரர் என்பது திருநாமம். அக்கினி பகவான் இங்கே வந்து பூசித்ததாக ஓர் ஐதிஹ்யம். அக்கினிக்குத் தனியே மூல மூர்த்தியும், உற்சவ மூர்த்தியும் இங்கே இருக்கின்றன. மதிலில் இருந்த சிற்பத்தில் சிவலிங்கப் பெருமானை அக்கினி பூசிக்கும் நிலையில் ஓர் உருவம் இருக்கிறது. ஆதிசேடன் பூசித்ததற்கு அடையாளம் இருக்கிறது. காமதேனு பூசித்ததாம். அந்த அடையாளமும் இருந்தது. இவை மேல்வரிசையில் அமைந்த சிற்பங்கள். கீழ் வரிசையிலும் சில சிற்ப உருவங்கள் இருந்தன. அவற்றின் மேல் கண்ணை ஓட்டினேன்.

அப்பர் சுவாமிகளின் இறுதிக் காலத்தைப் பற்றி ஒரு வைத்தியக்காரக் கதை வழங்குகிறது. அந்தக் கதையைச் சொல்வதற்கு முன்னுல் அது எப்படி உண்டாகியிருக்க வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திருப்புகலூருக்கு ஒருவர் வந்தார். அப்போது வேறு அன்பர் ஒருவர் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்தைப் பாடிக்கொண்டிருந்தார். "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று முதற் பாட்டைப் பாடிவிட்டு இரண்டாவது பாட்டைப் பாடினுர். "சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச், சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன் திருப்புகலூர் மேவிய தேவ தேவே" என்று அந்தப் பாட்டைப் பாடி முடித்தார். அருகில் நின்று கேட்டவருக்கு இந்தப் பதிகம் அப்பர் சுவாமிகள் பாடிய இறுதிப் பதிகம் என்பது

தெரியும். அவர் காதில், "சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்" என்ற சொற்கள் விழுந்ததும் அவ ருடைய கற்பனை வேலை செய்யத் தொடங்கியது. புகலூர்ப் புண்ணியனைச் சிங்க உருவம் எடுக்கச் செய்தார். அப்பர் சுவாமிகளை விழுங்குவதாக அவர் கற்பனை ஓடியது. ஒரு கதையைக் கட்டி விட்டார். அதைப் பரப்பியதோடு, "சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்" என்பதையே ஆதார மாகக் காட்டினார். எதையும் நம்பும் சில அப்பாவி கள் அந்தக் கதையை நம்பினார்கள். தம்மால் ஆன கைங்கரியத்தைச் செய்யத்தொடங்கிப் பிறர் காதிலும் இதைப் போட்டு வைத்தார்கள்.

கதை இதுதான். அப்பர் சுவாமிகள் இந்தப் பதிகத்தைப் பாடினவுடன் சிவபிரான் சிங்க உருவம் எடுத்து அப்பரை விழுங்கினான். அப்போது அப்பர், "வலிக்குதே!" என்றாராம். சிங்கம், "இனிக்குதே!" என்று விழுங்கியதாம். இந்தக் கசக்கும் கதையைச் சொல்லிவிட்டு, "அப்பர் சுவாமிகள் உடம்பையும் இறைவன் எடுத்துக்கொண்டான். அதனால்தான் அவருக்கு இங்கே சமாதி ஒன்றும் இல்லை" என்று தம் ஆராய்ச்சித் திறத்தைக் காட்டுகிறவர்களும் இருக் கிறார்கள். மற்ற நாயன்மார்களுடைய சமாதிகளைக் கண்டு பிடித்து நிலைநாட்டிவிட்டு, இங்கே அப்படிச் செய்ய வகையில்லாமல், ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டு பிடித்தவர்கள் போல அவர் கள் பேசுகிறார்கள்!

சொல்லிலே இந்தப் பொய்க் கதையைச் சொல் வது போதாதென்று கல்லிலேயும் இதை வெட்டி

வைத்திருக்கிறார்கள். திருமதிற் சிற்பத்தில் கீழ்வரிசையில் ஒரு சிங்கம் அப்பரை இடுப்பளவும் விழுங்கி விட்டது போன்ற உருவம்* ஒன்றும் அதன் அருகில் அப்பர் உருவமும் இருக்கின்றன. இந்த இரண்டையும் படத்தில் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது கற்பனை தோன்றுகிறதா? நான் ஒன்று சொல்கிறேன்; சரியாயிருக்கிறதா என்று சொல்லுங்கள். இந்தச் சிற்பத்தை அப்பர் சுவாமிகள் வந்து குனிந்து பார்க்கிறார். "அட பாவமே! இப்படியா கதை கட்டிவிட்டார்கள்? அட பாழும் கற்பனையே!" என்று சொல்கிறார். சற்றே சிற்பத்தைக் கூர்ந்து பாருங்கள். அப்பர் இப்படிச் சொல்வதாகக் கூறுவதில் ஏதாவது பிழை உண்டா? நீங்களே சொல்லுங்கள். சிங்கக் கற்பனையைவிட இந்தக் கற்பனை சிறந்ததென்றே நான் எண்ணுகிறேன்.

---

* இப்போது இந்த உருவத்தைச் செதுக்கி எடுத்து விட்டார்கள்.

## முக்காலக் கடவுள்

அப்பர் சுவாமிகள் திருப்புகலூரில் இருந்தபடியே பல பொதுப்பதிகங்களையும் பாடினார். எந்தத் தலத்தின் பெயரையும் குறிக்காமல் இறைவனுடைய பெருமைகளைப் பொதுவாகச் சொல்லுபவை பொதுப் பதிகங்கள். ஒரு பாட்டில் அவன் ஐம்பூதங்களாகவும், இரு சுடர்களாகவும், உயிராகவும், நன்மை தீமைகளாகவும், பெண் ஆணாகவும், உறவு நட்பாகவும், முக்காலமாகவும் விளங்குகிறான் என்று அப்பர் பாடுகிறார்.

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எரியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர்உருவும் தம்உருவும் தாமே ஆகி
நெருநலையாய் இன்றாகி நாளை ஆகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே!*

இதில், "நெருநலையாய் இன்றாகி நாளையாகி" என்று பாடியிருக்கிறார். இறைவன் நேற்றாகவும் இன்றாகவும் நாளையாகவும் இருக்கிறானாம். நெருநலை (நேற்று) என்பது இறந்த காலத்தையும், இன்று என்பது நிகழ்காலத்தையும், நாளை என்பது எதிர் காலத்தையும் குறித்து நிற்பவை.

*இயமானன்-வேள்வித் தலைவன் (யஜமானன்). எரி-நெருப்பு, நெருநலை-நேற்று.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் காலத்துள்ளும் இடத்துள்ளும் அடங்கி நிற்பவை; காலதேச பரிச்சின்னம் உடையவை. அறிவினால் மற்றவற்றின் எல்லையை ஒருவாறு நாம் ஊகித்து அறியக்கூடும். ஆனால் காலம் எப்போது தோன்றியது, எப்போது முடியப் போகிறது என்பதை நினைக்கும்போது அறிவு மயங்கும். அப்படியே இடம் எங்கே முடிகிறது என்பதைச் சிந்திக்கப் புகுந்தாலும் அறிவு முடிவு காணாமல் நின்றுவிடும். உலகத்துப் பொருள்களை அடக்கி நிற்கும் காலமும் இடமும் எல்லையற்றவைபோல நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் அவை எல்லை இல்லாதவைதாமா?

வீட்டுக்குள்ளே இருப்பவன் அந்த வீட்டின் புற எல்லையைக் காண முடியாது. வீட்டுக்கு வெளியே நின்று பார்த்தால் அந்த எல்லை தெரியும். அப்படியே, காலம், இடம் என்ற இரண்டுக்கும் அப்பாற்பட்டு நின்றால் அந்த இரண்டின் எல்லையையும் உணர்ந்து கொள்ளலாம். அவ்விரண்டையும் கடந்து நிற்பது ஒருபொருள். அதுதான் பரம்பொருளாகிய இறைவன். கால எல்லையையும் இட எல்லையையும் கடந்து இறைவனோடு ஒன்றுவதையே முக்தி என்று சொல்வார்கள்.

இறைவன் காலமும் இடமும் கடந்தவன் என்றது, அவற்றிற்குள்ளே அடங்காமல் வழிந்து நிற்பவன் என்பதைக் குறிக்கும். அவன் காலமாகவே விளங்குகிறான். "ஞாலமே பிறவே அவை வந்து போம் காலமே" என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

காலத்தை இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று மூன்றாகப் பிரித்துப் பார்க்கிறோம்.

காலத்தைப் பற்றி இலக்கணக்காரர்களும் தத்துவ அறிஞர்களும் வான சாஸ்திரிகளும் பிறரும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். 'நிகழ் காலம் என்பது ஒன்று இல்லை. அதற்குப் பரிமாணமே இல்லை. ஒன்றை இதுதான் நிகழ்காலம் என்று கூறினால், அப்படிச் சொல்வதற்குள் அது இறந்த காலம் ஆகிவிடுகிறது. எதிர்காலம் இறந்த காலம் ஆகும் நிலையில் இடையே நிகழ் காலம் போன்ற தோற்றம் உண்டாகிறது. அப்படி ஒன்று இல்லவே இல்லை' என்பது சிலர் கொள்கை. 'நாம் கண்கூடாக வாழ்வது நிகழ்காலத்தில்தான். இறந்த காலமும் எதிர் காலமும் நினைவளவில் இருப்பனவே ஒழிய உண்மையாக அநுபவத்தில் தோற்றுவது நிகழ்காலந்தான்' என்பது வேறு சிலர் கொள்கை.

ஜியாமெட்றி என்ற க்ஷேத்திர கணிதத்தில் புள்ளி என்பது இன்னதுதான் என்று சுட்ட இயலாத தாகையால், பெருக்கல் குறி போன்ற இரு கோடுகள் இட்டு அவை சந்திக்கும் இடத்தையே புள்ளியாகக் கொள்வர். அந்தப் புள்ளிக்கு அளவு இல்லை. ஆனாலும் புள்ளி என்பது ஒன்று உண்டு. அது போலவே இறந்த காலமும் எதிர்காலமும் சந்திக்கும் காலம் நிகழ் காலம். அது இன்ன அளவுடையது என்று சுட்டிக் காட்ட இயலாதபடி நுட்பமுடைய தானாலும் அப்படி ஒன்று இருப்பது உண்மை.

இந்த மூன்று காலமுமாக இறைவன் விளங்குகிறான் என்பதை அப்பர் சுவாமிகள், "நெருநலையாய் இன்றாகி நாளையாகி" என்று இந்தத் தலத்தில் பாடுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இங்கே மூன்று

காலத்தையும் தனித்தனியே குறிக்கும் சந்நிதிகள் இருக்கின்றன.

திருப்புகலூர்த் தேவஸ்தானம் அக்கினீசுவரருடைய திருநாமத்தால் வழங்குகிறது. அப்பெருமானே கோயிலின் பிரதான மூர்த்தி. அம்மூர்த்திக்குரிய அம்பிகை கருந்தாழ் குழலி அல்லது சூளிகாம்பிகை. அப்பிராட்டியின் திருக்கோயில் முதல் பிராகாரத்தில் வடக்கே இருக்கிறது. உற்சவ விக்கிரகம் அழகாக இருக்கிறது.

கிழக்கு நோக்கிய சந்நிதியை உடைய அக்கினீசுவரருக்குப் பக்கத்தில் அதனை ஒட்டி வடக்கே மற்ருெரு சந்நிதி இருக்கிறது. வெளியிலிருந்து பார்த்தால் இரண்டு சந்நிதிகளின் விமானங்களும் அடுத்தடுத்துத் தோன்றும். வடக்கே உள்ளது வர்த்தமானேசுவரர் சந்நிதி. வர்த்தமானம் என்பது நிகழ்காலத்தைக் குறிக்கும் வட சொல். நிகழ்காலமாக நிலவும் பெருமான் என்ருே, நிகழ்காலத்தை நிகழ்த்தும் இறைவன் என்ருே, நிகழ்காலத்துக்குத் தலைவன் என்ருே அத்தொடருக்குப் பொருள் செய்து கொள்ளலாம்.

ஆலயத்தில் இரண்டாம் பிராகாரத்தைச் சுற்றி வந்தால் தென்மேற்கு மூலையில் பூதேசுவரர் திருக்கோயிலைக் காணலாம்; கிழக்குப் பார்த்த சந்நிதி. இறந்த காலக் கடவுள் அவர்; இன்னும் காட்சியளித்துக் கொண்டிருக்கிருர். பிராகாரத்தின் வடக்குப் பக்கத்தில் தலவிருட்சமாகிய புன்னை நிற்கிறது. அது மிகப் பழைய மரம். அதன் எதிரே மேற்கு நோக்கிய சந்நிதியில் பவிஷ்யேசுவரராகிய எதிர்காலத்து இறைவர் எழுந்தருளியிருக்கிருர். இவர் இருவருக்கும்

இடையேதான் நிகழ்கால நாயகர் நிலவுகிறார். வரிசை யாகப் பார்த்தால் பூதேசுவரரும் வர்த்தமானே சுவரரும் பவிஷ்யேசுவரரும் வீற்றிருப்பது தோன்றும்.

இந்த மூன்று சந்நிதிகளிலும் வர்த்தமானேசுவரர் சந்நிதிக்குத்தான் இங்கே சிறப்பு. அந்தச் சந்நிதி பிரதானமான அக்கினீசுவரர் சந்நிதியோடு ஒட்டி யிருக்கிறது. மற்ற இரண்டு இறைவர்களும் சக்தி யின்றி—அம்பிகை இல்லாமல்—இருக்கிறார்கள். வர்த் தமானேசுவரர் சந்நிதியில் தெற்கு நோக்கியபடி மனோன்மணியம்மை எழுந்தருளியிருக்கிறாள்.

வர்த்தமானேசுவரர் சிறப்பு அதோடு நிற்க வில்லை. திருப்புகலூர்க் கோணப்பிரானாகிய அக்கினீ சுவரரை மூவரும் பாடியிருக்கிறார்கள். வர்த்தமானே சுவரரும் தேவாரப் பாடல் பெற்றவர். திருஞான சம்பந்த சுவாமிகள் ஒரு திருப்பதிகம் பாடியிருக்கிறார். இந்தச் சந்நிதியில் ஓர் அடியவருடைய திருவுருவம் இருக்கிறது. திருஞான சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த முருக நாயனார் அவர். அவருக்கு நிகழ்காலப் பிரானி டம் ஈடுபாடு அதிகம். அவர் ஆதிசைவர் என்று தெரிகிறது. அவர் முப்போதும் வர்த்தமானேசுவரரின் திருமேனி தீண்டி வழிபாடு ஆற்றி வந்தார். மலரைத் தொகுத்து இறைவருக்குச் சாத்தும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார். இதைத் திருஞான சம்பந்தர் சிறப்பிக்கிறார்.

ஈசன் ஏறமர் கடவுள்
இன்னமுது எந்தைஎம் பெருமான்
பூசும் மாசில்வெண் ணீற்றர்
பொலிவுடைப் பூம்புக லூரில்

மூசு வண்டுஅறை கொன்றை
முருகனமுப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமலர் உடையார்
வர்த்தமா னீச்சரத் தாரே.

முருக நாயனார் இந்த ஊரிலே பிறந்து வாழ்ந்தவர். அவர் ஒரு திருமடம் கட்டிக்கொண்டு வாழ்ந்தார். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் ஆகியவர் வந்து அதில் தங்கினார்கள். இங்கே உள்ள கல்வெட்டு ஒன்றில் 'நம்பி முருகன் திருமடம்' என்று ஒரு மடம் இங்கே இருந்த செய்தி வருகிறது, நம்பி என்பது ஆதிசைவரைக் குறிப்பது. அதுவே முருக நாயனாரின் மடம் என்று தோன்றுகிறது.

அப்பர் சுவாமிகள் வாழ்ந்திருந்த மடம் ஒன்றும் இவ்வூரில் மேல் வீதியில் இருக்கிறது. அது பொலிவழிந்து கிடக்கிறது. அதைப் பரிபாலிக்கத் தனியே நிலங்கள் உண்டென்று சொன்னார்கள்.

2

முதற் பிராகாரத்திலிருந்து இரண்டாம் பிராகாரத்துக்குச் செல்லும் இடைகழி ஒன்று உண்டு. அதன் மேல் இடைநிலைக் கோபுரம் நிற்கிறது. அந்த இடைகழியில் தென் புறத்தில் அதிகார நந்தி எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு அருகில் அவருடைய தேவியார் இருக்கிறார்.

"தேவியாருக்குப் பெயர் ஏதாவது உண்டோ ?" என்று குருக்களைக் கேட்டேன். "தெரியாது" என்ற

* மூசு வண்டு – மொய்க்கும் வண்டு. முப்போதும் செய்- முப்போதும் வழிபாடு செய்யும்.

விடையைத்தான் எதிர் பார்த்தேன். அவரோ, "ஜ்வாலா கேசி" என்று உடனே விடை கூறினார். அந்தப் பெயர் எந்தப் புராணத்தில் இருக்கிறதோ, தேடியல்லவா கண்டு பிடிக்க வேண்டும் ?

இரண்டாம் பிராகாரத்தில்தான் பல மூர்த்திகள் எழுந்தருளி யிருக்கிறார்கள். பிராகாரத்துக்குள் நுழைந்தவுடன் தெற்குப் பக்கத்தில் அக்கினியின் மூல உருவமும் உற்சவ மூர்த்தியும் இருப்பதைக் காணலாம். அக்கினிபகவான் பூசித்த இடமாதலின் அவருக்கு ஒரு நாள் உற்சவத்தில் சிறப்பு உண்டு; அன்று அவர் எழுந்தருளுவார். பிராகாரத்தின் தெற்குத் திருமாளிகைப் பத்தியில் உற்சவவிக்கிரகங்களும் மூலவிக்கிரகங்களுமாகப் பல மூர்த்திகள் எழுந்தருளி யிருக்கின்றனர். இந்தத் தல வரலாற்றோடு தொடர்புடைய வாணாசுரன், அவன் தாய் மாதலி, போக சித்தர், கந்தமாதனர் முதலியோருடைய திருவுருவங்கள் இங்கே வழிபடப் பெறுகின்றன.

கர்ப்பக் கிருகத்தின் தெற்கே ஒரு பலகணி இருக்கிறது. இரண்டாம் பிராகாரத்தில் வலம் வரும் போது இந்தப் பலகணியைப் பார்க்கலாம். இது தென்றல் வாசல் என்று வழங்கும். திருவாரூரில் இப் படி ஒன்று உண்டு. தென்றல் வாசலுக்கருகில் காற்று வாங்கிக்கொண்டு ஒரு பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

தெற்குப் பிராகாரத்தில் மேற்குப் பக்கத்தில்தான் முன்னே சொன்ன பூதேசுவரர் சந்நிதி இருக்கிறது. அவருக்குப் பின்னால் வாதாபி கணபதி, அப்பர் சுவாமிகள், திரிமுக சங்கார மூர்த்தி என்னும் மூவர்

சந்நிதிகள் இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் சந்நிதியில் மூலமூர்த்தியும் மிகப் பழைய உற்சவத் திருமேனியும் காட்சி யளிக்கின்றன.

அந்தச் சந்நிதியைச் சார்ந்தே திரிமுக சங்காரர் எழுந்தருளி யிருக்கிறார். அந்த மூர்த்தி இந்தத் தலத்துக்கே உரியவர். அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் திரிமுகாசுரன் என்பவனுடைய கதையைக் கேட்க வேண்டும்.

அந்த அசுரனுக்கு மூன்று முகம். ஒன்று மனித முகம்; மற்றொன்று பன்றி முகம்; பின்னும் ஒன்று பட்சி முகம். அவன் இங்கே இறைவனைப் பூசித்தானும். பன்றி முகத்தால் நீரும் பட்சி முகத்தால் மலரும் கொண்டுவந்து மனித முகத்தால் பூசித்தானும். பூசிக்கும் வேளை போக மற்ற நேரங்களில் இங்குள்ள அடியார்களைத் துன்புறுத்தினும். கந்த மாதனர் என்ற முனிவர் இங்கே தவம் செய்து கொண்டிருந்தார். அவரை அவன் கொல்லப்போனன். இறைவன் இனி இவன் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றெண்ணிச் சங்காரம் செய்தானும். அந்த அசுரனே இறைவனைப் பூசித்த புண்ணியத்தால் இத்தலத்தில் புன்னை மரமாக முளைத்தானும். அசுரன், திரிமுக சங்கார மூர்த்தி, சிவலிங்க மூர்த்தி மூவரின் உருவங்களையும் ஒன்ருகப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

இந்தக் கதையைக் கேட்டேன். புராணக் கதை கற்பனையானலும் அதனூடே ஒருபொருள் இருக்கும். யோசனை செய்து பார்த்தேன். மூன்று முகமுடைய அசுரன் மனித முகத்தால் பூசித்தான். பன்றி முகமும்

பறவை முகமும் படைத்திருந்தான். அந்தத் திரி முகாசுரன் ஒருவன் அல்ல. உலகத்து மக்கள் யாவருமே திரிமுகாசுரர்கள்தாம். உடம்பு, உள்ளம், உரை என்ற மூன்று கரணங்களையும் கொண்டு நாம் செயல் செய்கிறோம். உடம்பால் மனிதராக இருக்கிறோம். உரையினால் வானத்தையளாந்து பேசிப் பறவையாக இருக்கிறோம். உள்ளத்தாலோ தூய்மையற்ற சிந்தனைகளை எழுப்புகிறோம்; அழுக்கில் அளையும் பன்றியைப் போன்ற நிலை அது. மொத்தத்தில் நாம் அசுரனைப் போல நல்லவர்களுக்குத் தீங்கு இழைக்கிறோம். இறைவன் திருவருள் கிடைத்தால் இப்படி ஓடியாடித் திரியும் நிலை மாறிப் பசுமை கொழிக்கும் மரத்தைப் போல, அன்பு கொழிக்க, அவன் சந்நிதியில் நின்ற நிலையினின்றும் மாறாமல் இருக்கலாம். இப்படிப் பொருள் செய்தால், அத்தக் கதை எவ்வளவு அருமையானதாகத் தோன்றுகிறது!

இந்தத் தலத்துக்கு வடாரண்யம், சம்பகாரண்யம், புன்னாகவனம் என்று மூன்று பெயர்கள் உண்டாம். கல்லால், சண்பகம், புன்னை என்ற மூன்றும் இந்தத் தலத்துக்குரிய தலவிருட்சங்கள் என்று குருக்கள் சொன்னார். புன்னைமரம் வடக்குப் பிராகாரத்தில் பவிஷ்யேசுவரர் சந்நிதிக்கு எதிரில் நிற்கிறது.

இந்தக் கோயிலில் சந்திரசேகர மூர்த்தி சிறப்புப் பெற்றவர். திருத்தேரில் எழுந்தருளும் பெருமான் அவரே. அக்கினிக்கு எதிரே அவர் சந்நிதி இருக்கிறது. பிரமன் இத் தலத்தில் பூசித்துப் பேறுபெற்றான். அவனுடைய திருவுருவம் ஒன்று மிக அழகிய கோலத்துடன் இருக்கிறது. தாமரை மலர்மேல் வீற்

திருந்து வேள்வி செய்யும் பாவனையில் ஒரு கையில் சிருக்கும் மற்றொரு கையில் சிருவமும் கொண்டு நான்கு முகங்களோடும் அயன் திகழ்கிறான். ஜபவடமும் கமண்டலமும் பின் இரண்டுகைகளில் உள்ளன. பிரமனது உற்சவ விக்கிரகம் மிகவும் அரிதாகவே காணப்படும். இங்குள்ள திருவுருவம் கண்டு கண்டு இன்புறுவதற்குரியது.

அப்பர் இறைவன் திருவடியை அடைந்த சித்திரைச் சதயத்தைச் சார்ந்த பத்துநாட்களில் அவருக்குரிய திருவிழா இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. சதயத்தோடு நிறைவுறும். அப்பர் சுவாமிகளுடைய வரலாற்றுக் காட்சிகளை நாடகம் போலக் காட்டி ஒவ்வொரு நாளும் இங்கே கொண்டாடுகிறார்கள். வைகாசி மாதப் பௌர்ணமியில் நிறைவேறும் பிரம்மோற்சவமும் இங்கே பத்து நாட்கள் நடைபெறும். சந்திரசேகரர் திருத்தேரில் ஒன்பதாம் நாள் எழுந்தருளிக் காட்சியளிப்பார்.

இத் தலத்துக்கு மூவரும் வந்திருக்கிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கே வந்தபோது செலவுக்குப் பொன் வேண்டும் என்று விரும்பினார். அயர்வினால் செங்கல்லைத் தலைக்கு வைத்துப் படுத்து உறங்கிவிட்டார். துயில் நீங்கி எழுந்து பார்த்த போது தலைக்கு உயரமாக வைத்த செங்கற்கள் பொன்னாக மாறி யிருப்பது கண்டு இறைவன் அருளை எண்ணி வியந்தார்; உருகினார். உடனே ஒரு பதிகம் பாடினார்.

பழங்காலத்தில் தேவாரப் பதிகங்களை முறையாக இங்குள்ள இறைவன் சந்நிதியில் சிலர் பாடினார்கள். அவ்வாறு 'திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வாருக்கு' முற்றூட்டாக அரசர்கள் நிலம் வழங்கியிருந்தார்கள். இந்தச் செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

திருப்புகலூருக்குச் சென்று ஆலயத்தை நிதானமாகத் தரிசித்துக்கொண்டு அதன் சம்பந்தமான பல செய்திகளையும் தொகுத்துக் கொண்டேன். காவியத்திலும் ஓவியத்திலும், சிற்பத்திலும் ஆலயத்திலும், தோத்திரத்திலும் சாத்திரத்திலும், அறிவிலும் உணர்ச்சியிலும், அகத்திலும் புறத்திலும் பல பல வகையில் இணைந்து விரிந்து விளங்கும் கடவுள் உணர்வைத் தமிழர்கள் எப்படியெல்லாம் பாதுகாத்தார்கள் என்பதை எண்ணும்போது பெருமிதமும் அடுத்து இரக்கமும் உண்டாயின; திருப்புகலூர், மூன்று காலமுமாகி நிற்கிறான் கடவுள் என்ற உண்மையைப் புலப்படுத்தும் தலம் என்பது உள்ளத்தில் அழுத்தமாக நிலவியது.

நெருநலையாய் இன்றாகி நாளை யாகி

என்ற தேவாரப் பகுதி இன்னும் நெஞ்சிலே சுருதி போடுகிறது.

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்**
**சார்வி னுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள் !**
**இம்மை யேதரும் சோறும் கூறையும் ;**
**ஏத்த லாம் ; இடர் கெட லுமாம் ;**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுற வில்லையே !***

என்று பாடிக் களிக்கூத்தாடினார். "யார் யாரையோ பாடிப் பொன்னுக்கும் பொருளுக்கும் ஏங்கிக் கிடக்கிறார்களே, இந்தப் புலவர்கள். தமக்குப் புலமையைத் தந்த ஆண்டவனைப் புகல் அடைந்து பாடிப் பக்தி பண்ணினால் இக வாழ்விலும் மறுமையிலும் இன்பம் பெறலாமே!" என்ற எண்ணத்தால் புலவர்களைப் பார்த்துப் பத்துப் பாடல்களைப் பாடினார்.


திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் மூன்றும், அப்பர் சுவாமிகள் அருளியவை ஐந்தும், சுந்தரர் திருவாய் மலர்ந்தது ஒன்றுமாக ஒன்பது பதிகங்கள் இத் தலத்தைப் பற்றித் தேவாரத்தில் இருக்கின்றன. நெற்குன்றவாண முதலியார் பாடிய திருப்புகலூர் அந்தாதியும் இத்தலத்தின் பெருமையைச் சொல்கிறது. அது ஒவ்வோரடியின் முதலிலும் முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் சில ஒரே மாதிரி வரும் பாடல்களையுடைய திரிபு அந்தாதியாகும்.

* தொண்டர்த் தருகிலா-தொண்டருக்குத் தராத. கூறை-ஆடை. அம்மை-அடுத்த பிறவி-

# சுந்தரர் தோன்றிய ஊர்


வழக்கம்போல் அன்றும் அரசர் சுவாமி தரிசனம் செய்யும்பொருட்டு வந்திருந்தார். அரசர் வந்தார் என்றால் ஊரில் உள்ளவர்கள் யாவரும் கூடிக் கொண்டு மரியாதை செய்வது அதிசயம் அல்லவே! அன்றும் அப்படியே அரசரைப் பார்க்கப் பலர் கூடி விட்டனர். திருநாவலூர்க் கோயிலில் இறைவனை எப்போதும் திருமேனி தீண்டிப் பூசை புரியும் ஆதி சைவராகிய சடாதர சிவாசாரியாருக்கும் அரசருக்கும் நட்பு உண்டு. ஆகமத்திலும் தமிழிலும் வல்லவராகிய சடாதரரைச் சடையனார் என்றே ஊரினர் யாவரும் வழங்குவார்கள்.


தரிசனத்துக்கு வந்த அரசர் நரசிங்க முனையரையர். இன்று தமிழுலகம் அவரை நாயன்மார்களுள் ஒருவராக வைத்துக் கொண்டாடுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதியும் வட ஆர்க்காட்டின் ஒரு பகுதியும் அக்காலத்தில் நடுநாடு என்று வழங்கி வந்தது. சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் நடுவில் இருந்தமையால் அதற்கு அப்பெயர் வந்தது. நடு நாட்டின் ஒரு பகுதி திருமுனைப்பாடி நாடு. அதன் தலைநகரம் திருக்கோவலூர். மிகப் பழங்கால முதலே சிற்றரசர்களின் இருப்பிடமாக விளங்கியது திருக்கோவலூர். சங்க காலத்தில் இருந்த ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக் காரி என்பவன் அந்நகரில் இருந்தவனே.



← திருப்புகலூர்-அக்கினி
பக்கம் 91


திருப்புகலூர்-அகழியும் கோயிலும்
பக்கம் 91






← பயித்தியக்காரச் சிற்பம்
(இப்போது செதுக்கப்பட்டது)
பக்கம் 98

திருநாவலூர்-தட்சிணமூர்த்தி →
பக்கம் 125





← திருவெண்ணெய் நல்லு
பொல்லாப் பிள்ளையார்
பக்கம் 145

நரசிங்க முனையரையர் சிவபக்தியிற் சிறந்தவர். சிவனடியார்களிடத்தில் ஆராத அன்பு உடையவர். சிவச் சின்னங்கள் பூண்டவர் யாராயினும் அவர் குணங்களைக் கருதாமல் பணிந்து உபசாரம் செய்கிறவர். ஒவ்வொரு திருவாதிரை நட்சத்திரத்திலும் சிவபெருமானுக்குச் சிறப்பாகப் பூசை செய்வித்துச் சிவனடியார்களுக்குப் பொருளும் உணவும் வழங்குவார். ஒவ்வொருவருக்கும் நூறு பொன்னுக்குக் குறையாமல் கொடுப்பார்.

**ஆறு அணிந்த சடைமுடியார்க்கு**
**ஆதிரைநாள் தொறும்என்றும்**
**வேறுநிறை வழிபாடு**
**விளங்கியபூ சனைமேவி**
**நீறு அணியும் தொண்டர் அணைந்**
**தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்**
**நூறுகுறை யாமல்அளித்து**
**இன்னமுது நுகர்விப்பார்**

என்று அவருடைய பெருமையைச் சேக்கிழார் கூறுகிறார்.

திருநாவலூரில் ஆதிசைவர்களும் மற்ற வேதியர்களும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் சடையனார் இறைவனிடம் மிக்க பக்தி உடையவர். அவருடைய தேவியார் இசை ஞானியார். அவர் இசையில் சிறந்தவராக இருந்திருத்தலும் கூடும்.

அன்று நரசிங்க முனையரையர் திருக்கோயிலுக்குள் புகுந்து தரிசனம் செய்து கொண்டிருந்தபோது சடையனார் பூசை முதலியன புரிந்தார். அவருடன் ஓர் இளம் பிள்ளையும் உடன் இருந்தான்;

அவனுடைய முகத்தில் பால் வடிந்தது; தேசு திகழ்ந்தது. அவன் சிறுவனாக இருந்தாலும் சில சமயங்களில் தந்தையுடன் மந்திரங்களைச் சொல்லும் போது கணீர் என்று சொன்னான். அவனுடைய முகப் பொலிவையும் சுறுசுறுப்பையும் வாக்கின் வளத்தையும் அரசர் கவனித்தார். அவருடைய உள்ளம் அவன்பால் சென்றது.

"சிவாசாரிய சுவாமிகளே, இந்தக் குழந்தை யார் ?" என்று கேட்டார் அரசர்.

"இவனா? இவனைத் தெரியாதா உங்களுக்கு? இவன்தான் என்னுடைய பிள்ளை ஆரூரன்."

"இதுவரையில் இவனை நான் கண்டதில்லையே! நல்ல புத்திசாலியாக இருப்பான் போல் இருக்கிறதே! அர்ச்சனைகள் எல்லாம் நன்றாக வருமா?"

"நன்றாகச் சொல்வான். கொஞ்சம் அலங்காரப் பிரியன். இறைவன் திருவருளால் முன்னுக்கு வர வேண்டும். இன்னும் பூணூல் போடவில்லை. போட்ட பிறகு வேதமும் ஆகமமும் பயிலச் செய்ய வேண்டும்."

அன்று முதல் நரசிங்க முனையரையருக்கு அவன் மேல் ஒரு கண் இருந்து வந்தது. அவனைத் தம் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எழுந்தது. 'ஆதிசைவர் குலத்திலே பிறந்த குழந்தையை நாம் எப்படி அழைத்துச் செல்வது?' என்ற எண்ணம் இடையிடையே தோன்றினாலும் ஆசை தளரவில்லை. சில சமயங்களில் அரசர் குதிரை மீது ஏறி வருவார். அப்போது அந்தச் சிறுவனையும் குதிரையின்மேல் ஏற்றிக் கொண்டு சிறிது தூரம் போய்வருவார்.

"நீ குதிரையேறப் பழகிக் கொள்கிருயா?" என்று கேட்பார்.

"ஓ! சொல்லிக் கொடுத்தால் நன்ருகப் பழகு வேன்" என்று சிறுவன் கூறுவான்.

அவனுக்கு நல்ல குரல் இருந்தது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்களை இசையுடன் பாடினன்.

"உனக்கு யார் இவற்றைச் சொல்லித் தந்தார் கள்?" என்று அரசர் கேட்டார்.

"என்னுடைய அம்மா" என்று விடை வந்தது.

தன் வயசுக்கு மிஞ்சிய அறிவும் சுறுசுறுப்பும் அந்தச் சிறுவனிடம் இருப்பதைக் காணக் காண நரசிங்க முனையரையருக்கு அவனைத் தம் அரண்மனை யில் கொண்டு போய் வளர்க்க வேண்டும் என்ற ஆசை முறுகி வளர்ந்தது.

அரசர் தரிசனத்துக்கு வந்துவிட்டார் என்ருல், ஆரூரன் குடுகுடுவென்று அவரிடம் ஓடுவான்; "அப்பா, மன்னர் வந்து விட்டார்!" என்று முழங்கிய படியே ஓடுவான். அரசர் இறைவனுடைய பூசைக் குரிய பண்டங்களைக் கொண்டுவர மறந்தாலும் மறப்பார்; ஆரூரனுக்குரிய பண்டத்தைக் கொண்டு வர மறக்கவே மாட்டார். சில நாள் பழம் கொணர்ந்து தருவார்; சில நாள் ஆடை கொண்டு வந்து வழங்குவார்; சில நாள் ஏதாவது அணிகலன் கொணர்வார். அரசருக்குத் தம் மகன் மேலுள்ள அன்பைச் சடையனுர் நன்கு உணர்ந்தார். நாவலூ ரில் வாழ்ந்த மக்கள் யாவரும் தெரிந்து கொண்டார் கள். "ஆரூரன் மன்னர் குலத்தில் பிறக்க வேண்டிய

வன், இங்கே பிறந்திருக்கிறான். அவன் முகத்தில் ராஜகளை யல்லவா சொட்டுகிறது?'' என்று முதியவர் கள் கூறக் கேட்டு, ஆரூரனுடைய தாயார் இசை ஞானியார் உள்ளம் குளிர்ந்து பெருமிதம் அடைவார்.

ஒருநாள் நரசிங்க முனையரையர் தம்முடைய விருப்பத்தை மெல்லச் சடையனாரிடம் வெளியிட்டார். "நான் சொல்வதைத் தாங்கள் தவறாக எண்ணக்கூடாது. தங்களுடைய மகனிடம் எனக்கு உள்ள அன்பு இந்தப் பிறவியிலே உண்டானதென்று சொல்வதற்கில்லை. முன் பிறவிகளில் இருந்த உறவு தான் இந்த அன்புக்குக் காரணம் என்று நினைக்கிறேன். இவனை என்னுடன் சில காலம் இருக்கும் படி செய்தால் எனக்குப் பெரிய வரம் தந்ததாகக் கொள்வேன். இங்கே வந்துவிட்டு ஊருக்குப் போனால் இரண்டு மூன்று நாள் சரியானபடி தூக்கமே வருகிறதில்லை. இவன் நினைவாகவே இருக்கிறது. என் மனைவியையும் அன்று கூட்டி வந்தேன். அவளும் இவனைப் பார்த்தது முதல் இவனிடம் அன்பு கொண்டு விட்டாள். குழந்தையை நான் நல்ல முறையில் பாதுகாத்து வருவேன். அதில் தங்களுக்குச் சிறிதும் ஐயமே வேண்டாம்.''

சடையனார் முதலில் சற்றே திகைத்துப் போனார். அரசருக்கும் தம்மகனுக்கும் உள்ள அன்புப் பிணைப்பு மிக வலியதென்று அவர் தெரிந்து கொண்டிருந்தாலும் இந்த அளவுக்கு முற்றியிருக்கும் என்று எண்ணவில்லை. "மன்னர்பிரான் விருப்பத்தை மறுக்க நான் யார்? அவனுக்கு இன்னும் உபநயனம் செய்யவில்லை. மரபுக்கு ஏற்றபடி அத்தியயனம் ஆகவேண்டும்'' என்றார்.

"அவற்றில் ஒன்றும் குறை வராமல் பார்த்துக் கொள்கிறேன். என்னிடம் சில காலமும் உங்களிடம் சில காலமும் மாறி மாறி இருக்கட்டுமே. இறைவன் திருவருள்தான் இப்படிச் செய்யும்படி என் உள்ளத்தில் நின்று தூண்டுகிறதென்று நினைக்கிறேன்."

"இறைவன் திருவருளை நம்பி வாழும் நமக்கு அவனுடைய ஆணையே இப்படிக் கூட்டுவிக்கிறது என்று எண்ணுவதுதான் முறை. மன்னர்பிரான் விருப்பம் போல் செய்யலாம்."

அன்று முதல் ஆரூரன் நரசிங்க முனையரையருடைய அபிமான புத்திரனாக—காதற் பிள்ளையாக—வளர்ந்து வரலானான். அரசகுமாரனைப் போலக் குதிரையேற்றம் ஆனையேற்றம் ஆகியவற்றைப் பழகிக் கொண்டான். உரிய பருவத்தில் மிகச் சிறப்பாக உபநயனம் நடை பெற்றது. வேதமும் ஆகமமும் பயிலத் தொடங்கினான். வைதிகத்திருவும் அரசத்திருவும் ஒருங்கே இணைந்து விளங்க, நரசிங்கமுனையரையரும் சடையனாரும் அவனைக் கண்டு கண்டு உள்ளம் பூரிக்க, ஆரூரன் திருமணப் பருவத்தை அடைந்தான்.

**பெருமைசால் அரசர் காதற்**
**பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்**
**வருமுறை மரபில் வைகி**
**வளர்ந்துமங் கலம்செய் கோலத்து**
**அருமறை முந்நூல் சாத்தி**
**அளவில்தொல் கலைகள் ஆய்ந்து**
**திருமலி சிறப்பின் ஓங்கிச்**
**சீர்மணப் பருவம் சேர்ந்தார்.**

**(பெரிய புராணம்.)**

## 2

ஆரூரர் என்ற திருநாமத்தோடு சடையனுருக்கும் இசை ஞானியாருக்கும் அருமைக் குழந்தையாய் உதித்து நரசிங்க முனையரையர் விரும்பித் தம் வளர்ப்புப் பிள்ளையாய் ஏற்று மகிழநின்ற பெருமானே சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தை அவர் பாடியதனால், அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றிய செய்திகளை உலகம் அறிய முடிந்தது. அந்தத் திருத்தொண்டத் தொகையைச் சற்றே விரித்து நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலைப் பாடினார். இந்த இரண்டையும் பின்பற்றி விரிவாகப் பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார். பல்சுவைக்கனிகளும் கனிந்துதிகழும் பெரியபுராணம் என்னும் கற்பகமரத்துக்கு விதை திருத்தொண்டத் தொகை. இதை நினைத்தே பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார்,

> **நேசம் நிறைந்த உள்ளத்தால்**
> **நீலம் நிறைந்த மணிகண்டத்து**
> **ஈசன் அடியார் பெருமையினை**
> **எல்லா உயிரும் தொழஎடுத்துத்**
> **தேசம் உய்யத் திருத்தொண்டத்**
> **தொகைமுன் பணித்த திருவாளன்**
> **வாச மலர்மென் கழல்வணங்க**
> **வந்த பிறப்பை வணங்குவாம்**

என்று மனமுருகிப் பாடியிருக்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த திருநாவலூருக்கு உளுந்தூர்ப்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனில்

இறங்கிப் போகவேண்டும். ஊர் சிறியதுதான். ஆனாலும் அதன் பெருமை பெரிது. முன் பெல்லாம் இதைத் திருநாமநல்லூர் என்று சொல்லி வந்தார்கள். பெரும்பாலும் ஊர்களின் பெயர்கள் உருவம் தேய்ந்துதான் வழங்கும். திருச்சிராப் பள்ளியைத் திருச்சி என்றும், பழைய ஜயங்கொண்ட சோழபுரத்தைப் பழைய சங்கடம் என்றும் சிதைத்துச் சொல்வது நமக்கு வழக்கமாகப் போய்விட்டது. திரு நாவலூருடைய பெயரோ விரிந்திருக்கிறது; திரு நாமநல்லூர் என்று அதிக எழுத்துக்களைப் பெற்று விட்டது!

திருநாவலூருக்கு நான் போனபோது சுந்தரர் பிறந்த இடத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவ லோடு போனேன். திருஞானசம்பந்தர் பிறந்த இடம் இப்போது குடியிருக்கும் வீடாக இருக்கிறது. அப்பர் சுவாமிகள் பிறந்த இடத்தில் மரமும் மேடையும் இருக்கின்றன. சுந்தரர் பிறந்த இடம் எப்படி இருக் கிறது? மற்ற இரண்டு இடங்களையும்விட இது ஊராருடைய சிரத்தையை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. சுந்தரர் மடம் என்ற கட்டிடம் ஒன்று இப்போது கோயிலை அடுத்த வீதியில் கிழக்குப் பார்த்து இருக்கிறது. அதுதான் சுந்தரர் திருவவ தாரம் செய்த இடம் என்று சொன்னார்கள். அவ் விடத்தில் பஜனை நடந்து வருகிறதாம். சுந்தரர் படத்தை வைத்துப் பூசித்து வருகிறார்கள். அந்த மடத்துக்கு எதிரே இரண்டு மூன்று ஆதி சைவர் களின் வீடுகள் இருக்கின்றன. அந்த வீதி முன்பு சிறப்பாக இருந்திருக்க வேண்டும்.

திருத்கோயிலுக்குச் சென்றேன். இரண்டு பிரா காரங்களையுடைய அக்கோயிலில் எங்கும் உள்ளது போல் கோபுரம் நிமிர்ந்து நின்று வரும் அடியார்களை வாருங்கள், வாருங்கள் என்று அழைக்கின்றது. உள்ளே நுழைந்து வெளிப் பிராகாரத்தைச் சுற்றிப் பார்க்கலாம். வழியில் நெருஞ்சி முள்ளில் கால் வைக்காமல் நிதானமாக நடக்க வேண்டும். ஓரறி வுயிர்களாகிய புல் பூண்டுகளும் கெடக்கூடா வென்று அவற்றை ஒன்றும் செய்யாமல் வைத்திருக் கிறார்கள். வெளிப்பிராகாரத்தைப் பிரதட்சிணம் செய்யும் பொறுமை இங்கே வரும் பக்தர்களுக்கு இல்லையென்றே நினைக்கிறேன். நேரே ஆண்டவ னிடம் போகவேண்டும் என்ற வேகம் அவர்களுக்கு.

நமக்கு அவ்வளவு தீவிரமான பக்திவேண்டாம். நிதானமாகக் காலில் முள் குத்தினாலும் எடுத்து எறிந்து விட்டு மெல்ல மெல்லப் போகலாமே. இங்கே என்ன அவசரம்? ரெயில் ஊதிவிடுமா? அல்லது பஸ்ஸுக்கு நேரம் ஆகிவிடும் என்று துரிதப்படுத்த வேண்டுமா? இரண்டு வசதியும் இல்லாமல் விருப்ப முள்ளவர்கள் வந்து இறைவனைத் தரிசனம் செய்து இன்புறுவதற்கு ஏற்றபடி தனிமையில் இலகுகிறது ஊர். "வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க" என்று மாணிக்க வாசகர் சொல்கிறார். இந்த ஆலயத்தில் வேகமின்றி மெல்லவே பார்க்க லாம்.

வெளிப்பிராகாரத்தில் இடப்பக்கத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் தேவிமாருடன் திருக்கோயில் கொண்டிருக்கிறார். கையில் தாளத்தைப் பிடித்த கோலத்தில் மேற்கு நோக்கியபடி, அவர் நிற்பதைக்

காணலாம். அவர் திருக்கைலாயத்துக்குப் போகும் போது யானையின்மேல் சென்றார். ஆதலால் சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குத் தனியே சந்நிதி இருந்தால் அங்கெல்லாம் முன்னே யானை வாகனந்தான் இருக்கும். இங்கும் அதைக் காணலாம். வெளிப்பிராகாரத்தைச் சுற்றி வருகையில் பின்னே திருமதிலில் ஒரு பெரிய யானையும் அதன்மேல் ஒருவர் உருவமும் இருப்பதைக் கண்டேன். "சுந்தரமூர்த்தி சுவாமிகள் யானையின்மேல் ஏறிக் கைலாசம் செல்லும் கோலம் இது" என்று அன்பர்கள் காட்டினார்கள்.

"இது இவ்விடத்தில் இயற்கையாகஇருப்பதாகத் தெரியவில்லையே! வேறு எங்கிருந்தோ கொண்டு வந்து பதித்திருக்க வேண்டும்" என்று எனக்குத் தோன்றியதைத் சொன்னேன். அன்பர்கள் அதை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் எங்கிருந்து கொண்டு வந்தது என்பதை அவர்களால் சொல்ல முடியவில்லை.

யானையைப் பார்த்துவிட்டு மேலே நடந்தேன். அந்தப் பிராகாரத்தில் அம்பிகையின் திருக்கோயில் தனியே இருக்கிறது. மனோன்மணி என்பது அம்மையின் திருநாமம். அம்பிகையைத் தரிசித்துக் கொண்டு பிராகாரத்தின் வழியே வலம் வரும்போது அங்கே நின்ற நாவல் மரத்தைக் காட்டி, "இதுதான் இந்தத் தலத்துக்குரிய புனித மரம்" என்று அன்பர்கள் சொன்னார்கள். திருநாவலூர் என்ற பெயருக்குக் காரணம் தெரிய வந்தது. சுந்தரர் நாவலர்கோன், நாவலாரூரன் என்று தம்மைச் சொல்லிக்கொள்கிறார். நாவலூர் என்பது நாவல் என்று குறுகிப் பாட்டில் வருகிறது. நாவலில் பிறந்தமையால் சுந்தரர் நாவலர்

கோன் ஆனார். வாக்கு வன்மையுடையவர்களை நாவலர் என்று சொல்வது வழக்கம். யாழ்ப்பாணத்தில் பிறந்து தமிழுக்கும் சைவத்துக்கும் ஈடு எடுப்பில்லாத தொண்டுபுரிந்து விளங்கிய ஆறுமுக நாவலரை நாவலர் என்று சொன்னாலே போதும்; அவருடைய சொற்பொழிவாற்றல் அவ்வளவு சிறப்புடையது. அப்படியெல்லாம் சிரமப்படாமல், நாவலர் பட்டம் கிடைக்க வேண்டுமானால் திருநாவலூரிற் பிறந்தாற் போதும். அது நாவல்; அதில் பிறந்தவர் நாவலர். இது என் கற்பனை அன்று; சுந்தரமூர்த்தி நாயனார் காட்டிய வழி; திருநாவலூரிற் பிறந்தவர்களிற் சிறந்தவராதலின் அவரை நாவலர்கோன் என்று சிறப்பித்துச்சொல்கிறோம்,

நாவல் மரத்தைக் கண்டவுடன் என் சிந்தனை இப்படியெல்லாம் ஓடியது. நல்ல வேளை! கட்டுக் கதைகளாகிய நாவலை நான் நினைக்கவில்லை. அது ஆங்கில வார்த்தை அல்லவா? அதையும் சேர்த்துக் கொள்வதானால் நாவலர் என்பதற்கு நான்கு பொருள்கள் கிடைக்கும். பழங்காலத்தில் நன்றாகக் கவி பாடுகிறவர்களை நாவலர் என்று சொல்வார்கள்; அது முதல் பொருள். பிறகு நன்றாகப் பேசுகிறவர்களை நாவலர் என்றார்கள்; இது இரண்டாவது பொருள். நாவல் எழுதுகிறவர்களை நாவலர் என்று சொல்லலாம்; இது புதிய மூன்றாவது பொருள். திருநாவலூரிற் பிறந்தவர்களை நாவலர் என்று கூறலாம்; இதற்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாக்கு ஆதாரம்; இது நான்காவது பொருள்.

மந்தம் முழவும் குழலும் இயம்பும்
வளர்நாவலர் கோன்நம்பி யூரன்.
நண்புடைய நன்சடையன்
இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன்.

இப்படிப் பல இடங்களில் திருநாவலூர்க்காரர்களை நாவலர் என்றும் தம்மை அவர்களுக்குத் தலைவர் என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளே சொல்கிறார்.

○

"இது என்ன சந்நிதி?"

"பெருமாள் சந்நிதி."

"பழைய சந்நிதியா?"

"ஆமாம், இங்கே வரதராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். வாருங்கள், தரிசனம் செய்யலாம்" என்று அழைத்துச் சென்றார்கள். அம்பிகையின் சந்நிதிக்கும் இறைவன் கோயிலுக்கும் இடையே அவர் கோயில் இருக்கிறது, சற்று உயரமான இடத்தில் வரதராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்,

சிவாலயத்தில் திருமால் கோயிலும் சேர்ந்திருக்கும் இடம் தமிழ் நாட்டில் பல ஊர்களில் உண்டு. கோயில் என்று சிறப்பித்துச் சொல்லும் சிதம்பரத்தில் நடராஜரும் கோவிந்தராஜரும் அருகருகே சேவை சாதிக்கிறார்கள். சைவரென்றும் வைணவரென்றும் வேறு வேறாக இருந்தாலும் சமுதாய வாழ்வில் இரு சாராருக்கும் பொதுவாக எத்தனையோ காரியங்கள் உண்டு. அவர்கள் ஒரே எல்லைக்குள் வழிபடுவதற்கு ஏற்றபடி திருக்கோயில்களும் வகுத்திருக்கிறார்கள்.

வரதராஜப் பெருமாளையும் தரிசித்துக் கொண்டேன்.

இனிமேல் உள் பிராகாரத்தில் போய்ப் பார்க்கலாமா? இங்கே ஓர் உண்மையைச் சொல்லிவிட எண்ணுகிறேன். நான் முதலில் உள் பிராகாரத்துக்குள் புகுந்து சுவாமியைத் தரிசித்து விட்டுத்தான் வெளிப்பிராகாரத்தை வலம் வந்தேன். கோயில் வாயில் திறப்பதற்காகக் கொஞ்ச நேரம் வெளிப் பிராகாரத்தில் நின்றுகொண்டு சுவரில் உள்ள சிலாசாசனங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நான் நேரே உட்பிராகாரத்துக்குள் போனதற்கு, முதலில் இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற பக்தி காரணம் அல்ல; என்னவோ போனேன்.

எப்படியானால் என்ன? நான் கண்டதைச் சொல்கிறேன்.

இறைவன் திருக்கோயிலுக்குள் நுழைந்தேன். சுவாமிக்குப் பக்தஜனேசுவரர் என்பது திருநாமம். பக்தஜன ரட்சகர் என்றும் சொல்வது உண்டு.

அர்த்த மண்டபத்தில் புகுந்தேன்,

ஆ! என்ன அற்புதம்! சாட்சாத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உபய நாச்சியார்களோடு எதிரே நின்றார். என்ன அழகு! என்ன அழகு! நரசிங்கமுனையரையர் ஒரு பக்கத்தில் நின்றார். மிகவும் அழகான திருவுருவங்கள். சுந்தரமூர்த்தியைக் கண் இமைக்காமல் பார்த்தேன். அத்தகைய அழகிய விக்கிரகத்தை வேறு எங்கும் காண முடியாதென்றே நினைக்கிறேன். எத்தனை நாழிகை நின்று பார்த்தாலும் தெவிட்டாத அழகு சொட்டும் உருவங்கள் அவை.

உள் பிராகாரத்தை வலம் வரும்போது தெற்கு நோக்கியுள்ள தட்சிணாமூர்த்தி சந்நிதியில் ஒரு புதுமை கண்டேன். பெரும்பாலும் தட்சிணாமூர்த்தி கல்லாலின்கீழ் அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருப்பார். இங்கே நிற்கும் தட்சிணாமூர்த்தியைக் கண்டேன். பின்னே இடப வாகனம் நின்று கொண்டிருக்க அதன்மேல் சற்றே சாய்ந்தபடி நிற்கிறார், இங்குள்ள தென்முகக் கடவுள். அம்மூர்த்தி மிகப் பழங்காலத்தவர் என்பது பார்த்தவுடனே தெரிகிறது.

இவ்வூரில் சுந்தரர் செந்தமிழ்க் கழகம் என்ற சபை ஒன்று இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநட்சத்திரத்தைச் சபையினர் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அதைச் சார்ந்தவர்களுக்குத் திருநாவலூரைப்பற்றித் தமிழுலகம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இருக்கும் ஆசைக்கு அளவே இல்லை. அந்தக் கோயிலைத் தலையில் தூக்கிக்கொண்டு ஊரூராகச் சென்று, "எங்கள் ஊர் ஆலயத்தையும் அற்புதமான மூர்த்திகளையும் பாருங்கள், பாருங்கள்! இந்த மாதிரி வேறு எங்கேயாவது பார்க்கமுடியுமா ?" என்று சொல்ல முடிந்தால் அதற்கும் அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் அது நடக்கக்கூடிய காரியமா ?

இதற்கு ஒரு புராணம் இருக்கிறது. எழுபது ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்திருந்த திருவெண்ணெய் நல்லூர் இராசப்பக் கவிராயர் பாடியது. 514 பாடல்கள் உள்ளது. 1889—ஆம் வருஷம் பதிப்பிக்கப் பெற்ற அது இன்னும் மறு பிறவி எடுக்கவில்லை. பக்தர்களைப்போல அதற்கு மறுபிறப்பே இல்லாமற் போய்விடுமோ என்று கூட அஞ்சுகிறேன். எத்

தனையோ பழைய நூல்கள் இப்படி விதேக முக்தி பெற்றிருக்கிற நாடு அல்லவா இது ?

பிரம்மாண்ட புராணத்தில் தல விபவ கண்டத்தில் இந்தத் தலத்தின் பெருமை வருகிறதாம். உமா தேவியார் இங்கே அர்ச்சித்தாராம். திருமால் பூசித்தாராம். சண்டேசர் வழிபட்டாராம். கருடன் வழிபட்டு நஞ்சின் வாதை தீர்ந்தானும். நரசிங்கமுனையரையர் உற்சவம் நடத்தினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபட்டதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இவற்றையெல்லாம் அந்தப் புராணம் எடுத்துச் சொல்கிறது.

கோயில், கோபுரம், அழகான திருவுருவங்கள், புராணம், சுந்தரர் தேவாரம் எல்லாம் பெற்ற திருத்தலம் திருநாவலூர். அங்கே சென்றால் கூட்டம் இன்றி, பரபரப்பு இல்லாமல் அமைதியாகப் பக்த ஜனேசுவரரையும், மனோன்மணியம்மையையும் சுந்தர மூர்த்தியையும், நரசிங்கமுனையரையரையும் தரிசித்து இன்புற்று வரலாம்.

# வெண்ணெய் நல்லூர்ப் பித்தன்

"கல்யாணம் நடக்கிறதாமே, கல்யாணம்! எனக்குத் தெரியாமல் எப்படி நடத்தலாம்?" என்று சொல்லிக் கொண்டே அந்தக் கிழவர் நடந்தார். அவருடைய வயசுக்கு அவருடைய நடை மிடுக்காகவே இருந்தது. தம்முடைய சொத்துப் பறி போகிறதென்று கேள்வியுற்றால் எப்படி விரைவாரோ, அப்படி விரைந்து கொண்டிருந்தார்.

சற்றுத் தூரத்தில் கல்யாண மாப்பிள்ளை வந்து கொண்டிருந்தார். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. மாப்பிள்ளை ஊர்வலந்தான் அது. வைதிகத் திருவும் அரசத் திருவும் ஒருங்கே பெற்ற ஆரூரருக்குக் கல்யாணம். நரசிங்கமுனையரையரின் வளர்ப்புப் பிள்ளை அல்லவா அவர்? அரச குமாரருக்கு நடக்க வேண்டிய சிறப்புக்களுக்கெல்லாம் உரியவர் அவர். ஆனாலும் அந்தணர் மரபிற்கு உரியவற்றைப் புறக்கணிக்காமல் அதற்கு ஏற்ற வகையில் விரதம் முதலியவை செய்ய ஏற்பாடாகியிருக்கிறது.

திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில் உள்ள புத்தூர் என்ற ஊரில் ஆதிசைவ குலத்துப் பெரியாராகிய சடங்கவி சிவாசாரியாருடைய பெண்ணை நம்பியாரூரருக்குப் பேசி இருக்கிறார்கள். கல்யாணம் புத்தூரில் நடைபெறப் போகிறது, மாப்பிள்ளை கோலம் பூண்டு வந்து கொண்டிருக்கிறார். ஒரு பக்கம் வாத்திய முழக்கமும் மற்றொரு பக்கம் வேத கோஷமும் விண்ணைப் பிளக்கின்றன. இயற்கையி

லேயே பேரழகராகிய ஆரூரர் திருமணக் கோலம் புனைந்து வரும்போது, "புராணத்தில் மன்மதன் மன்மதன் என்று சொல்கிருர்களே ; அந்தப் பேர்வழி இவரை விடவா அழகாக இருப்பான் ? எப்படி இருக்க முடியும் ?" என்று கண்டவர்கள் பேசிக் கொண்டார்கள். ஆரூரர் நடந்தா வருவார் ? ஜம்மென்று அழகிய குதிரையொன்றில் ஏறிக்கொண்டு வருகிருர். அரசருக்குரிய மதிப்புடையவர் அல்லவா? இறைவனுடைய திருவடியை நினைத்தபடி அந்த யோகப் புரவியிலே வருகிருர்.

**மன்னவர் திருவும் தங்கள்**
**வைதிகத் திருவும் பொங்க**
**நன்னகர் விழவு கொள்ள**
**நம்பியா ரூரர் நாதன்**
**தன்அடி மனத்துட் கொண்டு**
**தருந்திரு நீறு சாத்திப்**
**பொன்அணி மணியார் யோகப்**
**புரவிமேற் கொண்டு போந்தார்.**

உடன் வருபவர்கள் பல்லக்கு முதலிய வாகனங்களில் வந்தார்கள். பெரிய கூட்டந்தான். திருநாவலூரிலிருந்து புத்தூரை நோக்கி அந்தக் கல்யாணக் கூட்டம் வந்து கொண்டிருந்தது.

புத்தூர் எல்லையை மிதித்துவிட்டார் நம்பியாரூரர். புரவியிலிருந்து இறங்கிஞர். நிறை குடம், வாசனைப்பண்டங்கள், விளக்குகள், மலர், சுண்ணம், அறுகு, பொரி முதலிய மங்கலப் பொருள்களை ஏந்தி அவரைப் பெண் வீட்டுக்காரர்கள் வரவேற்ருர்கள். சந்தனத்தையும் பூவையும் வாரி இறைத்தார்கள்.

வாத்தியங்கள் எல்லாம் சேர்ந்து கடல் முழங்குவது போல முழங்கின. மகளிர் கீதம் பாடினார்கள். இந்த அழகான கூட்டத்தினிடையே நம்பியாரூரர் திரு மணம் நிகழவேண்டிய சடங்கவி சிவாசாரியாருடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

அப்போதுதான் முன்னே சொன்ன கிழவர் ஏதோ குறை உடையவரைப் போல விரைந்து கொண்டிருந்தார். அவருடைய நெற்றியில் திருநீறு பளிச்சென்று தோன்றியது. உடம்பெல்லாம் நரை. காதில் ருத்திராட்சங்களைத் தொங்கவிட்டிருந்தார். மார்பிலே பூணூல் அசைந்தது. உத்தரியம் தோளில் நுடங்கிக் கொண்டிருந்தது. கையில் ஒரு தாழங் குடையை வைத்திருந்தார். எத்தனையோ காலமாகத் தோய்த்து நீர்க்காவியேறிய ஆடையைப் பஞ்ச கச்ச மாக உடுத்திருந்தார். கையில் உள்ள மூங்கில் தடி யில் சிறிய துகில் ஒன்றும் தருப்பையும் முடிந்திருந் தார். தள்ளாடி நடந்தாலும் அதிலும் ஒரு வேகம் இருந்தது.

'அழகு முதுமை பெற்றால் இப்படித்தான் இருக் குமோ? அல்லது முதுமை என்பதற்கே இதுதான் உரு வமோ? வைதிகம் தோன்றிய மூல மூர்த்தி இவர் தாமோ? இவரைப் பார்த்தால் அழகு, முதுமை, வைதிகம் எல்லாம் ஒன்றாய்க் கலந்த திருக்கோலமாக இருக்கிறதே!' என்று கண்டவர் அதிசயிக்கும்படி இருந்தார் அந்தக் கிழவர்.

**மொய்த்துவளர் பேரழகு**
**மூத்தவடி வேயோ**
**அத்தகைய மூப்பெனும்**
**அதன்படிவ மேயோ**

**மெய்த்ததெறி வைதிகம்**
**விளைந்தமுத லேயோ**
**இத்தகைய வேடம்என**
**ஐயமுற எய்தி.**

இந்த முதுமையழகு பழுத்த அந்தணர் பெருமான் இளமையழகு கொழுந்துவிடும் நம்பியாரூரருக்கு முன்னே சென்றார். ஆரூரர் கல்யாணக் கோலத்தில் நடந்தார். இந்தக் கிழவர் ஏதோ உரிமைபற்றித் தளர்ச்சியிலும் மிடுக்குத் தோன்ற எதிரே சென்றார்.

"நில்லுங்கள். நான் ஒன்று சொல்ல வேண்டும். எல்லோரும் கேளுங்கள்."

கணீரென்று கூறிக் கிழவர் தம் கையை ஓங்கிக் காட்டிக் கூட்டத்தை நிறுத்தினர். அவருடைய தோற்றமே கூட்டத்தினரை நிறுத்திவிட்டது. கூட்டத்தில் இருந்தவர்களும் கல்யாணப் பிள்ளையும் அவரைப் பார்த்தார்கள். 'இந்தச் சமயத்தில் இந்த ஒற்றைப் பிராம்மணர் குறுக்கே வந்து நிற்கிறரே!' என்று பெண் வீட்டுக்காரர்களுக்கு உள்ளுக்குள் கோபம் உண்டாயிற்று. மற்றவர்களோ ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தபடியே நின்றார்கள்.

நம்பியாரூரருக்குக் கோபம் உண்டாகவில்லை. அந்தணர் பெருமானுடைய கோலம் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்தக் கிழவருடைய திருமுகத் தேசு ஆரூரருடைய அன்புணர்ச்சியை மலரச் செய்தது. இன்னதென்று சொல்ல முடியாத ஏதோ ஒன்று அவரை அந்தக் கிழவரோடு பிணைத்தது. எத்தனையோ பிறவிகளில் பிரியாதிருந்தவர் சிறிது பிரிந்து

மீண்டும் வந்து சேர்ந்தது போன்ற பற்று, பசை யுணர்வு, ஈடுபாடு, ஆரூரர் உள்ளத்தில் முளைத்தது.

"பிராம்மணோத்தமரே, வாருங்கள். இவ்வளவு பெரியவர்கள் இந்தக் கல்யாணத்துக்கு வந்திருப்பது எங்கள் தவப்பயன் என்றே நினைக்கிறேன். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்" என்று நம்பியாரூரர் அன்போடு சொன்னார்.

"இந்தக் கல்யாணம் நடப்பதற்கு முன்னால், எனக்கும் உனக்குமிடையே ஒரு வழக்கு இருக்கிறது; அதைத் தீர்க்க வேண்டும்."

"வழக்கா !" மற்றவர்கள் வியந்தார்கள்.

"அப்படியா? அது என்ன வழக்கு? அதைத் தீர்த்து வைத்துவிட்டுப் பிறகு கல்யாண காரியத்தில் புகுகிறேன்" என்று ஆரூரர் சொன்னார்.

கிழவர் இப்போது ஆரூரரை மாத்திரம் பார்க்க வில்லை. கூட்டத்தில் இருந்த மறையோர் அனை வரையும் பார்த்து, "பிராம்மணர்களே, என் வழக்கைக் கேளுங்கள். நாவலூரில் உள்ள இந்த நம்பி ஆரூரன் என் அடிமை" என்று உரக்கச் சொன்னார்.

"இந்தக் கிழம் என்ன உளறுகிறது ?" என்று பெண் வீட்டுக்காரர்கள் கோபம் கொண்டார்கள். "இந்தப் பேர்வழி என்ன சொல்லுகிறார்?" என்று அசட்டையாகச் சிலர் பார்த்தார்கள். "இவர் பாவம், பைத்தியம்போல் இருக்கிறது!" என்று சிலர் சிரித்தார்கள்.

ஆரூரருக்கும் சிரிப்புத்தான் வந்தது. 'இந்தப் பிராம்மணர் வார்த்தை நன்றாயிருக்கிறது!' என்று எண்ணிச் சிரித்தார்.

அந்தச் சிரிப்புக் கிழவரிடம் கோபத்தை மூட்டியது. "நான் சொல்கிறேன். நீ சிரிக்கிறாயே! இது என்ன விளையாட்டா?" என்று சொல்லிக்கொண்டே மேல் வேட்டியைப் பிரித்து, "இங்கே பார்த்தாயா? உன்னைப் பெற்ற அப்பனுக்கு அப்பன் எழுதிக் கொடுத்த அடிமையோலை இருக்கிறது. ஏதோ சொல்கிறேனென்று நினைத்தாய்?" என்று படபடப்பாகச் சொன்னார் அவர்.

அதைக் கண்டவுடன் ஆரூரர் சிரிப்பை மாற்றினார். அவர் மனசுக்குள் ஏதோ நெகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால் அந்தணருடைய வார்த்தைகளோ எங்கும் இல்லாத புதுமையாக இருந்தன. "இந்தப் பிராம்மணர் கூறுவது அதிசயமாக இருக்கிறதே. பிராம்மணர் பிராம்மணருக்கு அடிமையாவது இது வரைக்கும் கேட்டதே இல்லையே! இவர் பித்தரோ?" என்றார்.

கிழவர் சும்மா விடுபவராகத் தோன்றவில்லை. "பித்தனாகட்டும், பேயனாகட்டும். நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள். அதற்காக நான் வெட்கப்படவும் இல்லை; பயப்படவும் இல்லை. என் உரிமை உனக்குத் தெரியவில்லை. வீண் வாய் வீரம் ஏன் பேசுகிறாய்? நீ எனக்கு அடிமை செய்ய வேண்டும். நான் உன்னை விடப் போவதில்லை" என்று மிடுக்குக் குறையாமல் பேசினார்.

'இதென்ன, இவர் இப்படிப் பேசுகிறாரே! இவரைக் கண்டால் என் மனசு இவரிடம் போய் ஒட்டிக் கொள்கிறது; உருகுகிறது. ஆனால் இவர் பைத்தியக்காரத் தனமாகச் சொல்கிற வார்த்தையோ

கோபத்தை உண்டாக்குகிறது. ஏதோ ஓலை கீலை யென்று பேசுகிறாரே; அதையும் கொஞ்சம் பார்த்து விடுவோம்' என்ற எண்ணம் தோன்றியது. "எங்கே, உம்முடைய ஓலையைக் காட்டும். பார்க்கலாம்" என்று கேட்டார் சுந்தரர்.

"ஓலையை உனக்குக் காட்டவேண்டிய அவசியம் இல்லை. சபையினர் முன்பு காட்டுகிறேன், வா" என்று கிழவர் சொன்னார். அது கேட்டவுடன் நம்பிக்குக் கோபம் மூண்டது. "அப்படியா சொல்கிறீர்? நான் அதைப்பார்த்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கிழவர் கையில் உள்ள ஓலையைப் பறிக்கச் சென்ற போது, முதியவர் அவர் கையில் அகப்படாமல் விரைவாக நடக்கலானார். ஆரூரர் வேகமாகச் சென்று அவர் கையில் இருந்த ஓலையைப் பிடித்திழுத்துப் பற்றி, "பிராம்பணனுக்குப் பிராம்பணன் அடிமையாம்! ஓலையாம்! இது என்ன புரட்டு?" என்று சொல்லிக் கோபத்தோடு அதைக் கிழித்து எறிந்து விட்டார்.

"இது நியாயமா? இந்த அக்கிரமம் நடக்கலாமா?' என்று முதிய அந்தணர் முறையிடவே, அருகில்உள்ளவர் அவரைச் சமாதானம் செய்து, "உலகத்தில் இல்லாத புதிய வழக்கைப் பேசுகிறீரே; நீர் யார்? எங்கே இருக்கிறீர்?" என்று கேட்டார்கள்.

"என்னையா கேட்கிறீர்கள்? நான் இங்கேதான் இருக்கிறேன். அதோ பக்கத்தில் இருக்கிறதே, அந்த வெண்ணெய் நல்லூர்தான் என்னுடைய ஊர். அது கிடக்கட்டும் ஐயா. இவ்வளவு பேருக்கு முன்பு பலாத்காரமாக என் கையில் இருந்த ஓலையை வாங்கி

இவன் கிழித்தானே; இதிலிருந்தே உண்மை தெரிய வில்லையா? அடிமையோலை இருந்தால் அடிமை செய்ய வேண்டியிருக்கும் என்ற அச்சத்தால்தானே இவன் அதைக் கிழித்து விட்டான்?''—கிழவர் இப்படிப் பேசினார்.

'இவர் வெகு நாள் பேர்வழிபோல் இருக்கிறது' என்று எண்ணி, "ஐயா, நீர் வெண்ணெய் நல்லூர்க் காரர் என்று சொல்கிறீரே; அப்படியானால் உம்முடைய வழக்கை அந்த ஊர்ச் சபையினர் முன்பு பேசித் தீர்த்துக் கொள்ளலாம், வாரும்'' என்றார் கல்யாணப்பிள்ளை

''நல்லது, அப்படி வா வழிக்கு. வெண்ணெய் நல்லூர்ச் சபையில் உள்ள அந்தணர்களிடம் உண்மையைத் தெரிவித்து நியாயம் பெறலாம். நல்ல வேளை! நீ கிழித்தது படியோலைதான். மூல ஓலை என்னிடம் இருக்கிறது. அதையே அந்தப் பெரியவர்களிடம் காட்டுகிறேன்'' என்றார் அந்தணர்.

கிழவர் முன் போக, அவரைப் பின் தொடர்ந்து கல்யாணப் பிள்ளையாகிய இளைஞரும் அவரைச் சார்ந்த சுற்றத்தாரும் சென்றார்கள். திருவெண்ணெய் நல்லூர் அருகில் இருக்கும் ஊராதலின் சிறிது நேரத்தில் அங்கே போனார்கள். அங்கே உள்ள அந்தணர்களின் சபைக்குச் சென்று, "இவன் எனக்கு அடிமை. இதை நான் சொல்லி ஓலையைக் காட்டினேன். இவன் கிழித்துவிட்டான். அவனை இழுத்துவந்திருக்கிறேன்'' என்று கிழவர் தம் வழக்கை உரைத்தார்.

அந்தச் சபையினருக்கும் அந்தச் செய்தி புதிதாக இருந்தது. "மறையவருக்கு மறையவர் அடிமை

யாதல் உலகில் எங்கும் இல்லையே! நீர் ஏதோ சொல்கிறீரே !" என்று கேட்டார்கள்.

"நான் சும்மாவா சொல்கிறேன்? இவனுடைய தகப்பனுக்குத் தகப்பன் கொடுத்த ஓலை இருக்கிறதே. இவன்கிழித்த ஓலையில் அதைக் கண்டிருக்கலாமே!"

உடனே அவையினர் நம்பியைப் பார்த்து, "இவர் ஓலை காட்டினாரானால் அதை நீர் வலிந்து பறித்துக் கிழிக்கலாமா ? இவர் தம் வழக்கைச் சொன்னார். நீர் என்ன சொல்கிறீர்?" என்று கேட்டனர்.

சுந்தரர் சொல்லலானார் : "பெரியோர்களே, நீங்கள் நியாய சாஸ்திரங்களை நன்றாகக் கற்றவர்கள். நான் ஆதி சைவன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இவர் என்னைத் தமக்கு அடிமையென்று சாதிக்கிறார். இதை எங்காவது கண்டதுண்டா? இது மனத்துக்கே எட்டாத மாயையாக அல்லவா இருக்கிறது ? எனக்கு இது பற்றி ஒன்றும் தெளிவு உண்டாகவில்லை."

உடனே அவையினர் அந்த முதியவரை நோக்கி, "ஐயா, நீர் இவரை உம்முடைய அடிமையென்று சொல்கிறீர். இதை நீர் எம் முன்பு நிரூபிக்க வேண்டும். ஆட்சி, ஆவணம், சாட்சி என்று மூன்று ஆதாரங்கள் உண்டு. அநுபோக பாத்தியத்தைக் கொண்டு இவரை உம் அடிமையென்று சொல்கிறீரா? அல்லது ஆவண ஓலையின்ஆதாரம் கொண்டு சொல்கிறீரா ? அன்றி யாரேனும் உமக்குச் சாட்சி சொல்வார்களா ? இந்த மூன்றுவகை ஆதாரங்களில் நீர் எதைக் காட்டி உம்முடைய வழக்கைச் சாதிக்கப் போகிறீர்?" என்று கேட்டார்கள்.

"நான்தான் சொன்னேனே! ஆவண ஓலை தான் எனக்கு ஆதாரம். நான் முன்பு காட்டியது படிஓலை; அதன் மூல ஓலை என்னிடம் இருக்கிறது."

"அப்படியானால் அதைக் காட்டும்."

கிழவர் சுற்று முற்றும் பார்த்தார்; "அதையும் இவன் பறித்துக் கிழித்து விட்டால் என்ன செய்வது? அப்படி நடக்காமல் நீங்கள் பாதுகாத்தால் காட்டு வேன்" என்றார்.

"ஐயா, அப்படி நடக்கவொட்டோம். நீர் பயமின்றிக் காட்டலாம்" என்று அவையினர் உறுதி மொழி புகன்றனர்.

கிழவர் சிறிது வெளியே சென்று கையில் ஓர் ஓலையுடன் வந்தார். அந்த ஓலையை அங்கிருந்த ஊர்க்கரணத்தான் வாங்கிச் சுருளைப் பிரித்து வாசித் தான். அது பழைய ஓலையாக இருந்தமையால் மெல்லப் பிரித்து யாவரும் கேட்க வாசிக்கலானான்.

"திருநாவலூர் ஆதி சைவ குலத்தினனாகிய ஆரூரனேன் எழுதிய ஆளோலை. திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்னுடைய பரம்பரை யினரும் அடிமை செய்யக் கடவோமாக. இந்த ஓலையை மனப்பூர்வமாகவும் சொன்ன பேச்சின்படி யும் எழுதினேன். இதற்கு இது என் கையெழுத்து" என்று அந்த வாசகத்தை அவன் வாசித்தான். பிறகு அதற்கு மேலெழுத்திட்டவர்கள் பெயர்களையும் வாசித்தான். அவற்றை உள்ளபடியே உணர்ந்த சபையினர், நாவலாரூரைப் பார்த்து, "ஐயா, இது உம்முடைய பாட்டனாருடைய எழுத்துத்தானா என்

பதைத் தெளிவாகப் பார்த்துச் சொல்லும்'' என்றார் கள்.

அப்போது வழக்குக் கொண்டுவந்த அந்தணர், ''இன்னும் ஓலையை இவனிடம் ஏன் காட்டுகிறீர்கள்? இவனுடைய பாட்டன் எழுதிக்கொடுத்த வேறு ஓலை ஏதேனும் இருந்தால் அதை வைத்து ஒப்பு நோக்கிப் பாருங்கள்'' என்றார்.

உடனே ஆவணக் களரியிலிருந்து ஆரூரர் பாட்டனார் எழுதிய வேறு ஓலை ஒன்றை எடுத்துவரச் செய்தார்கள். அதையும் இதையும் ஒப்பு நோக்கினார் கள். இரண்டும் ஒரே எழுத்தாக இருந்தன ''இனி என்ன சொல்லக் கிடக்கிறது? இந்த அடிமையோலை உண்மையானதுதான்!'' என்று அவையினர் தெளிந்தார்கள்.

ஆரூரரைப் பார்த்து, ''இது புதுமையான வழக்குத்தான். ஆனால் இந்தப் பெரியவரிடம் நீர் தோல்வியுற்றீர். இவருக்கு நீர் அடிமையாகி ஏவல் செய்வதுதான் முறை'' என்று அவையினர் தீர்ப்புக் கூறினார்கள். ''நியாயம் அப்படியானால் உடம்பட மாட்டேன் என்று என்னாற் சொல்ல இயலுமா?'' என்று கூறித் தலை குனிந்தபடி நின்றார் நம்பியாரூரர்.

அப்போது அவையில் உள்ள அந்தணர்கள் முன் நின்ற கிழவரைப் பார்த்து, ''ஐயா, நீர் காட்டிய ஓலையில் நீர் எங்கள் ஊர் என்றிருக்கிறதே! இங்கே உம் வீடு எங்கே இருக்கிறது? அங்கே நீர் வாழ்கிறீரா?'' என்று கேட்டார்கள்.

வழக்கு வென்ற மறையவர், ''என்னை உங்களில் ஒருவருக்கும் தெரியாதா? அப்படியானால், வாருங்

கள்'' என்று சொல்லி வெற்றிக் களிப்போடு புறப்பட்டார். அவரைத் தொடர்ந்து நம்பியும் மறையவர்களும் சென்றார்கள். கிழவர் திருக்கோயிற் பக்கம் சென்றார். கோயிலுக்குள்ளே புகுந்தார். அப்புறம் அவரைக் காண வில்லை. வந்தவர்கள் யாவரும் திகைத்து நின்று விட்டார்கள், நம்பியாரூரர். 'எம்பிரான் கோயிலுக்குள் இவர் புகுந்தாரே; ஏன்?' என்று எண்ணிப் பேரார்வத்தோடு கோயிலுக்குள் தனியே சென்று, "சுவாமி!" என்று அழைத்தார். அடுத்த கணம் அவர்முன் வானவெளியில் சிவபெருமான் இடப வாகனத்தின்மேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்தான்.

"ஆரூரா, நீ ஆலால சுந்தரன் என்ற தொண்டன். திருக்கைலாயத்தில் நமக்குத் தொண்டு புரிந்து கொண்டிருந்தவன். உலகில் பிறக்க வேண்டுமென்று நாம் கட்டளையிட்டபோது உன் வேண்டுகோளுக்கு இணங்கி, உன்னைத் தடுத்து ஆட்கொள்வதாகச் சொன்னோம். அதன்படியே மறையவர்களுக்கு முன் தடுத்து ஆட்கொண்டோம்'' என்று இறைவன் திருவாய் மலர்ந்தருளினான்.

சுந்தரர் இன்பப் புயலிடையே சிக்கித் தடுமாறினார் அவர் உடம்பு புளகம் போர்த்தது. கண் அருவி சோர்ந்தது. கதறினார். "எம்பெருமானே! தேவரீர் வலிய ஆட்கொண்ட செயலோ இது?'' என்று பக்தி பரவசமாக நின்று துதித்தார்.

''அப்பா, நீ வல்வழக்குப் பேசினமையால் வன்றொண்டன் என்ற பெயர் உனக்கு ஆகுக. நமக்கு அர்ச்சனை செய்யும் குலத்தில் உதித்தாய். நமக்குச்

சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் நீ இவ்வுலகில் உள்ள மட்டும் தமிழ் பாடுவாயாக!" என்று இறைவன் அருளினான்.

"வேதியராக எழுந்தருளி வழக்கினால் வெல்ல வந்த பாக்கியத்தை அறியாத ஏழையாகிய எனக்கு உணர்வு தந்து உய்யக்கொண்ட கோதிலா அமுதே! உன்னுடைய கல்யாண குணங்கள் அளப்பரிய கடல் போன்றவை. அவற்றில் இந்த எளியேன் எதை அறிந்திருக்கிறேன் ? நான் உன்னை எப்படி அறிந்து என்ன பாட முடியும் ?" என்று உருகினார் சுந்தரர்.

"அப்பா, நீ என்னைப் பித்தன் என்று சொன்னா யல்லவா ? அப்படியே என்னை வைத்துப் பாடு" என்று இறைவன் கூறினான்.

இறைவன் அருள் முன்னின்று இயக்கும்போது பாட்டு வெள்ளம்போல் வராதா ? இறைவனுடைய காட்சியிலே இன்பம் பெற்று மெழுகாகக் குழைந்து நின்ற சுந்தரர் உள்ளம் பழுத்த பழம் போலாகி விட்டது. கனிந்து சாறு ஊறும் கனியாகிவிட்ட அதிலிருந்து அந்தத் தேறல் கவியாக வழிந்தது. பாடத் தொடங்கிவிட்டார் :

பித்தா பிறை சூடீ, பெரு
    மானே அருளாளா,
எத்தால்மற வாதேநினைக்
    கின்றேன்மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
    நல்லூர் அருட் டுறையுள்
அத்தா: உனக்கு ஆளாய்இனி
    அல்லேன்என லாமே ?

[பித்தா, பிறையைச் சூடினவனே, அருள் நிரம்பியவனே, எதனாலும் மறவாமல் நினைக்கின்றவனாகிய என் உள்ளத்தில் உன்னை வைத்தவனே, பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர் என்னும் தலத்தில் அருட்டுறையென்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அப்பனே, உனக்கு ஆளாகிவிட்டு, இப்போது நான் அடிமையல்லேன் என்று சொல்ல முடியுமா ?]

இறைவனுடைய சந்நிதியில் நின்ற சுந்தரமூர்த்தி நாயனார் தாயை இழந்த கன்று மீட்டும் தாயை அடைந்தால் எந்த நிலையில் இருக்குமோ அத்தகைய உணர்ச்சி நிலையில் இருந்தார்.

இறைவன் ஆருயிர்களுக்கெல்லாம் தாய் போன்றவன். குழந்தைகள் தாயை மறந்து விடுகின்றன. ஆனால் தாயோ குழந்தைகளை மறப்பதில்லை. தமக்குத் தாய் ஒருத்தி இருக்கிறாள் என்பதைக்கூடக் குழந்தைகள் உணராமல் இருக்கிறார்கள்.

தாய் குழந்தையை என்றும் மறப்பதே இல்லை. அந்தக் குழந்தையுடன் என்றைக்குக் கூடப் போகின்றோம் என்று பித்துப் பிடித்து அலைகிறாள். அவளுக்கு இருக்கிற உணர்ச்சியைக் குழந்தை உணர்வதில்லை. அவளைச் சென்று சாரவேண்டும் என்ற நினைவே அதற்கு இருப்பதில்லை. "பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்று ஒரு பழமொழி உண்டு. எத்தனைதான் தாய் அருகிலே வந்தாலும் அவளுடைய அருமைப்பாட்டை அறியாத பிள்ளை அவளைப் புறக்கணித்து உதறிவிடுகிறான். ஆயினும் அவள் மீட்டும் மீட்டும் அவனை எந்த வழியிலாவது

தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையோடு முயற்சி செய்து கொண்டே இருக்கிறான்.

அவ்வாறே இறைவன் ஆருயிர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகிறான்; தன் கருணைக் கரத்தினாலே அணைக்க வேண்டுமென்று முயல்கிறான். நாம் செய்கிற பக்திக்கு அதிக ஆற்றல் இருக்கிறதென்று நினைக்கிறோம். அது வெறும் வியாஜமாத்திரம். 'எப்படியாவது இவன் நம்மை அண்ட வேண்டும். இவன் நம் பக்கம் திரும்புகிறானா?' என்று ஆண்டவன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். அவனை நோக்கி நாம் ஓர் அடி எடுத்து வைத்தால், அவன் நூறு, ஆயிரம் அடி எடுத்து வைத்து வேகமாக வருகிறான். "அப்பா வந்தாயா?" என்று மிக்க ஆர்வத்தோடு நம்மை அணைந்துகொள்ள வருகிறான். நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று எம்பெருமானுக்கு உள்ள கருணையின் வேகம் மிகுதியானது. அவன் எடுக்கும் திரு அவதாரங்களுக்கும், அவன் செய்யும் திருவிளையாடல்களுக்கும், கொள்ளும் கோலங்களுக்கும் இந்தக் கருணையே காரணம். அது ஒரு பித்து அல்லவா? குணம் குறி ஒன்றும் இல்லாத பரப்பிரம்மமாகிய கடவுள் எல்லா விதமான காரியங்களையும், பராக்கிரமங்களையும், அவதூறுகளையும், புகழ்களையும் ஏற்றுக் கொள்வதற்குக் காரணம், ஆருயிர்களை மீட்டும் தனக்கு அடிமையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற அருள் நினைவுதான். அந்தக் கருணையால் அவன் பித்தாகித் திரிகிறான்,

சுந்தரமூர்த்தி நாயனார், முன்பு ஆண்டவனுடைய திருவருளை நிரம்பப் பெற்ற ஆலால சுந்தரர்.

ஆயினும் இவ்வுலகில் பிறந்த பின் சில காலம் அவனை மறந்திருந்தார். உலக வாழ்விலே இன்பம் பெற வேண்டும் என்று கருதித் தாய் தந்தையர் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தத் திருமணம் ஆகியிருந்தால் நாவலாரூரர் ஆண்டவனுடைய அடிமையாக இராமல் உலகத்தின் அடிமையாகியிருப்பார். அதை மாற்றுவதற்காகப் பித்தேறி நின்றான் எம்பெருமான்; நாவல் ஆரூரரை ஆண்டு இவர் மூலமாக உலகத்துக்கு நல்லருளைக் காட்ட வேண்டும் என்று கருதினான்.

இவற்றையெல்லாம் நினைத்தால், சுந்தரர் தம் சொல் அர்ச்சனையை, "பித்தா!" என்று தொடங்கியது எவ்வளவு பொருத்தமாகத் தோன்றுகிறது!

## 2

திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தனைத் தரிசித்து வரலாம் என்று புறப்பட்டேன். வெளியிலே ராஜகோபுரம் தனியே இங்கே இல்லை. இடை நிலைக் கோபுரந்தான் இருக்கிறது. கோயிலுக்குள் நுழைவதற்கு முன் வாயிலுக்கு எதிரே சுவாமி சந்நிதியை நோக்கி உள்ள ஒரு சிறு கோயிலைக் கண்டேன். பெருமாள் கோயிலில் பெரிய திருவடிக்கு அப்படிக் கோயில் அமைந்திருக்கும். "இது என்ன சந்நிதி?" என்று கேட்டேன். "இதுதான் சுந்தரமூர்த்தி நாயனார் சந்நிதி'' என்று கோயில் குருக்கள் சொன்னார். "கோயிலுக்குள் அல்லவா சுந்தரர் சந்நிதி இருக்க வேண்டும்? இங்கே இருக்க ஏதாவது காரணம் உண்டா ?'' என்று விசாரித்தேன்.

"சுந்தரர் ஆவணம் காட்டிய கிழவரைத் தொடர்ந்து வந்தபோது இங்கே நின்றபடியே இறைவனுடைய காட்சியைக் கண்டார். அதோ பாருங்கள். கோயிலில் அலங்கார மண்டபத்துக்கு மேலே ஒரு சிறிய கோயில் மாதிரி மேல்தளத்தில் இருக்கிறதே, அதுதான் தடுத்தாட் கொண்டார் உள்ள இடம். இங்கிருந்து சுந்தரர் அங்கே தோன்றிய இறைவனைத் தரிசித்தார்" என்று கூறினார்கள்.

தடுத்தாட்கொண்டார் அந்தக் கோயிலுக்குள் சுதையுருவில் இடபாருடராய் எழுந்தருளியிருக்கிறார். அங்கே ஏறிப் போக வழியில்லை. அம்மூர்த்திக்குப் பூசை முதலியன இல்லை. "இறைவன் அங்கே தோன்றி உடனே மறைந்தருளினன். அதை நினைக்கும் சின்னந்தான் அது" என்று விளக்கினார்கள், உடன் இருந்த அன்பர்கள்.

சுந்தரர் கோயில் தெருவின் கோடியிலே இருந்ததாம். இடையில் ஒரு காலத்தில் அயல் மதத்தினர் இந்தப் பக்கங்களில் வந்து தம் அரசுரிமையை நாட்டியபோது கலாபம் நிகழ்ந்ததாம். அப்போது சுந்தரர் கோயிலை இடித்து விட்டார்களாம். அதனால் இங்கே கோயில் வாசலுக்கு எதிரில் புதிதாக இந்தச் சந்நிதியைக் கட்டியிருக்கிறார்களென்று தெரிய வந்தது. ஓர்ம் (Orme) என்ற ஆசிரியர் எழுதியுள்ள வரலாற்றில் இந்தப் பக்கங்களில் பல இடங்களில் போர் நிகழ்ந்ததாகக் குறித்திருக்கிறார். 1760-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் திருவெண்ணெய் நல்லூரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார்களாம்.

சுந்தரர் சந்நிதிக்குச் சென்று, "சுவாமி, நீங்கள் அருள் பெற்ற அருள்துறைக்கு வந்திருக்கிறேன்.


உமக்குக் கிடைத்த அருளில் எள்ளளவாவது எனக்குக் கிடைக்கும்படி கிருபை செய்ய வேண்டும்'' என்று பிரார்த்திக்கொண்டு அவரை அணுகினேன். உற்றுப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அங்கே சுந்தரமூர்த்தி இல்லை. திருஞானசம்பந்தர் கையில் தாளத்துடன் நின்ருர். நன்ருகக் கவனித்தேன், நிச்சயமாக ஆளுடைய பிள்ளையாரே! குழந்தைக் கோலத்தில் ஆடை புனையாத அரையுடன் நின்று கொண்டிருக்கிருர் !

"இவர் ஞானசம்பந்தராயிற்றே! இவர் இங்கே எப்படி வந்தார்?'' என்று கேட்டேன்.

"கலாப காலத்தில் இப்படி மாறிவிட்டது'' என்று விடை வந்தது. இன்னும் அவரைச் சுந்தர மூர்த்தியென்றே நினைத்துப் பூசித்து வருகிருர்கள்!


ஊரின் பெயர் திருவெண்ணெய் நல்லூர். அம்பிகை வெண்ணெயாலே கோட்டை கட்டி அதனுள்ளே பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம் செய்தாளாம். அதனுல் அப்பெயர் வந்ததாம். கோயிலுக்கு அருட்டுறை என்று தனிப் பெயர் இருக்கிறது. கிருபாபுரி என்று வட மொழியில் வழங்குகிருர்கள். இறைவனுக்கு அருளாளன் என்று பழம் பெயர். கிருபாபுரீசுவரர் என்றும் வேணுபுரீசர் என்றும் வேறு பெயர்கள் உண்டு. இந்தத் தலத்தின் விருட்சம் மூங்கில்; அதனுல் இது வேணுபுரி ஆயிற்று. சுந்தரர் காலத்துக்குப் பின் தடுத்தாட் கொண்டார், ஆட்கொண்ட தேவர், பித்தனென்று பாடச் சொன்னுர் என்ற திருநாமங்கள் உண்டாயின.


கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி உடையது. உள்ளே புகுந்தவுடன் வடக்கு மூலையில் நூற்றுக்கால்



திருவெண்ணெய்நல்லூர் -
தடுத்தாட்காண்டவர் சந்நிதி
பக்கம் 143


திருநாவலூர் - சுந்தரர்,
பரவை நாச்சியார்
சங்கிலி நாச்சியார்
பக்கம் 121





மேல் : திருவஞ்சைக்களம், ஆலயத் திருவாசல் பக்கம் 207

கீழ் : திருவஞ்சைக்களம் - விளக்குச்சுவர்கள் பக்கம் 213



மண்டபம் இருக்கிறது. அதற்கு வழக்கு வென்ற திருவம்பலம் என்று பெயர். இறைவன் வழக்கிட்டு வென்ற சபையின் நினைவாக இதைக் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டினார்கள் என்று கல்வெட்டினால் அறிகிறோம்.

உள் பிராகாரத்தில் தென்புறத்தில் சுந்தரருடைய உற்சவ மூர்த்தியின் சந்நிதி இருக்கிறது. பிற்காலத்தில் அமைத்த திருவுருவமானாலும் அழகாக இருக்கிறது. சுந்தரர் தம் திருக்கையில் ஆவண ஓலையுடன் நிற்கிறார்.

பிராகாரத்தில் தெற்கே பொல்லாப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார். இம்மூர்த்தி முழு உருவமாக இல்லை. புடைப்புத் திருவுருவத்தில் (Bas-relief) காட்சி அளிக்கிறார். பொல்லாப் பிள்ளையார் என்பதற்கு உளியினால் செதுக்காத சுயம்பு மூர்த்தியாகிய பிள்ளையார் என்று பொருள். இவர் வலம்புரி விநாயகர்; அதாவது இவருடைய துதிக்கை வலப்பக்கத்தே சுருண்டுள்ளது.

இந்த மூர்த்தி மிக்க அருட்பெருக்கு உடையவர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் உதித்தவரும் சைவ சித்தாந்தப் பெருஞ்செல்வமாகிய சிவஞான போதத்தை அருளியவருமாகிய ஸ்ரீமெய்கண்ட தேவ நாயனார் இத்தலத்தில் பல காலம் வாழ்ந்தார். அவர் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டு அருள் பெற்றவர். அவருடைய திருக்கோயில் இந்த ஊரில் இருக்கிறது. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துக்கு உரியதாகிய அத் திருக்கோயிலில் மெய்கண்ட தேவருக்குப் பூசை முதலியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பொல்லாப் பிள்ளையாருடைய பேரருளாற்றலை விளக்க இக்காலத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. இவ்வூருக்கு அருகில் சிறு மதுரை என்ற ஊரில் இப்போது சற்றேறக் குறைய 65 வயசுடைய மாசிலாமணி உடையார் என்பவர் இருக்கிறார். அவர் எட்டு வயசு வரையில் ஊமையாக இருந்தாராம். திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து பொல்லாப் பிள்ளையாரைத் தினந்தோறும் காலையில் வழிபட்டு வந்தார். எட்டாவது வயசில், பேசும் ஆற்றல் அவருக்கு உண்டாயிற்று. அவர் இன்னும் காது கேளாதவராக இருப்பினும் பேசுகிறார். பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால்தான் அவருக்குப் பேசும் ஆற்றல் வந்தது என்பதை அவ்வூரினரும் பிறரும் சொல்லுகிறார்கள். தென் ஆர்க்காடு ஜில்லா போர்டு துணைத் தலைவர் திரு அண்ணாமலை உடையாருடைய சிற்றப்பா அந்தப் பெரியவர். திரு அண்ணாமலை உடையாரே எனக்கு இச்செய்தியைச் சொன்னார்.

வெளிப் பிராகாரத்தில் சுவாமி கோயிலுக்கு வடக்கே அம்பிகைக்குத் தனிக் கோயில் இருக்கிறது. மங்களாம்பிகை என்றும் வேற்கண்ணியம்மை என்றும் திரு நாமங்கள் வழங்குகின்றன.

கோயிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. "ராஜ ராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி திருவெண்ணெய் நல்லூர் நாட்டு ப்ரம்மதேயம் திருவெண்ணெய் நல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்கு......" என்று வரும் ஒரு சாசனத்தின் ஆரம்பத்தைப் படித்துப் பார்த்தேன். திருமுனைப் பாடி நாடு என்பது நடுநாட்டின் பெரும் பகுதி.

கோயிலுக்கு வெளியே தெற்கே ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதற்கு அப்பால் வைகுண்டநாதப் பெருமாள் கோயில் இருக்கிறது. தீர்த்தம் இரண்டு கோயிலுக்கும் பொதுவானது. ஆனால் ஒவ்வொரு கோயிலாரும் ஒவ்வொரு பெயர் வைத்து வழங்கு கின்றனர் சைவர்கள் வீதிஹோத்ர மஹரிஷிக்காக இறைவன் தண்டத்தை ஊன்றி இந்தத் தீர்த்தத்தை உண்டாக்கினனென்று கதை சொல்லி, இதற்குத் தண்ட தீர்த்தம் என்ற பெயரை வைத்திருக்கிறார்கள். வைஷ்ணவர்களோ சக்கர தீர்த்தம் என்று சொல் கிறார்கள். எப்படியோ இருவரும் தீர்த்தத்தைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள்.

ஊரின் பெயரிலேகூட இரண்டு வழக்கு உண்டு. சைவர்கள் திருவெண்ணெய் நல்லூர் என்று சொல் வதைச் சாசனமும் இலக்கியமும் மற்ற வழக்குகளும் காட்டுகின்றன. வைஷ்ணவர்கள் நாமும் இதற்கு ஒரு பேர் வைப்போமே என்று எண்ணினர்கள். வீட்டில் உள்ள குழந்தைக்கு அப்பா ஒரு பேரும், அம்மா ஒரு பேரும் வைத்து அழைப்பதில்லையா ? அப்படித்தான் இதுவும். வைஷ்ணவர்கள் கொடுத்த பெயர் திருவோண நல்லூர். திருவெண்ணெய் நல்லூர் என்ற பெயரின் ஒலிக்கும் இந்தப் பெயரின் ஒலிக்கும் உள்ள வேறுபாடு மிகக்குறைவு.

பெயர் வந்ததற்கு ஒரு கதை வேண்டாமா? வைகுண்ட நாதருடைய அன்பர்கள் ஒரு கதையைச் சொல்கிறார்கள். சாண்டில்ய மஹரிஷி ஒவ்வொரு நட்சத்திரத்திலும் ஒவ்வொரு க்ஷேத்திரமாகப் போய் யாகம் செய்து வந்தாராம். அவர் திருமாலுக்கு அன்பர். இங்கே ஒரு திருவோண நட்சத்திரத்தில்

வந்து யாகம் புரிந்து திருமால் அருள் பெற்றாராம். அதனால் திருவோண நல்லூர் என்ற பெயர் வந்த தாம். ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் கோயில் சந்நிதியில் பெரிய திருவடியாகிய கருடன் நிற்க வேண்டிய இடத்தில் சாண்டில்ய மகரிஷியே நிற்கிறார். சிவபெருமான் திருக்கோயிலுக்கு முன் சுந்தரர் நிற்கிறபோது இங்கே ஒரு பக்தர் நிற்க வேண்டாமா?

சுந்தரமூர்த்தி நாயனார், "பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள், அத்தா" என்று பாடியிருக்கிறார். இத்தலம் பெண்ணையாற்றின் தென் கரையிலே இருக்கிறதென்று அந்தப் பாட்டுச் சொல்கிறது. இப்போது பெண்ணையாற்றுக்கும் இந்த ஊருக்கும் மூன்று மைல் தூரம் இருக்கிறது. ஊருக்கு வடக்கே கால் மைல் தூரத்தில் மலட்டாறு என்ற ஆறு இருக்கிறது. அதுதான் பழைய பெண்ணை. புதிய பெண்ணை தன்வழி மாறி இன்னும் வடக்கே மூன்று மைல் தூரத்தில் விலகி ஓடுகிறது. மலட்டாறு என்ற பேர் மலாட்டாறு என்று இருக்க வேண்டும். மலாடு என்பது இப்பகுதியுள்ள நாட்டுக்குப் பழம்பேர்; மலையமான் நாடு என்பது அவ்வாறு மருவி வழங்கியது. மலாடுஎன்ற நாட்டில் ஓடுவதால் மலாட்டாறு என்று பெயர் பெற்று, இப்போது மலட்டாறு ஆகிவிட்டது! தண்ணீர் இல்லாத ஆற்றுக்கு அப்படிப் பேர் சொல்வதும் பொருத்தந்தானே ?

திருநாவலூர்ப் புராணம் இயற்றிய இராசப்ப நாவலர் இந்தத் தலத்துக்கு ஒரு கலம்பகம் இயற்றியிருக்கிறார்.

முன்பு புத்தூராக இருந்தது சுந்தரர் மணம் செய்ய வந்தமையால் மணம் வந்த புத்தூர் ஆகி,

பிறகு மணம் தவிர்ந்தமையால் மணம் தவிர்ந்த புத்தூர் என்று இப்போது வழங்குகிறது. தடுத்தாட்கொண்ட ஊர் என்ற ஊர் இதனருகே இருக்கிறது. பங்குனி மாதம் திருவெண்ணெய் நல்லூரில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

திருவெண்ணெய் நல்லூர் ரோடு என்ற இடத்தில் இறங்கி இத் தலத்துக்குச் செல்ல வேண்டும். விழுப்புரத்திலிருந்து பஸ்ஸில் ஏறியும் செல்லலாம்.

திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் சட்டம் ' வல்ல நாயகன் ; சுந்தரரை விடேன், தொடேன் என்று தொடர்ந்து வழக்கிட்டு ஆட்கொண்டான். உருகும் வெண்ணெயை உருகாமல் வைத்துக் கோட்டையாகக்கட்டினுள் அம்பிகை; உருகாத மனத்தை உருகச் செய்து இடமாகக் கொண்டான் அப்பன்.

அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்
ஆள தாகஎன்று ஆவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த
நித்திலத்திரள்

என்று சுந்தரர் இறைவனைப் பாடுகிறார். அவர் பாடிய பித்தன் இன்றும் வெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கிறான். அந்தப் பித்தனுக்காகப் பித்துப் பிடிக்கும் தொண்டரைத்தான் காணவில்லை.

# பரவையார் ஊர்

"சக்கரவர்த்தியிடம் இந்தக் காவியத்தை இயற்றி முடித்து விடுகிறேன் என்று உறுதி மொழி கூறிவிட்டு வந்திருக்கிறேன். இனிமேல் நான் குன்றத்தூரில் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. ஊரூராகப் போய் அங்கங்கே நாயன்மார்களைப் பற்றிக் கிடைக்கும் செய்திகளைத் தொகுத்துப் பாட ஆரம்பிக்க வேண்டும். இறைவன் திருவருளால் இந்தக் காவியம் நிறைவேற வேண்டும்" என்று சொல்லிச் சேக்கிழார் புறப்பட்டார். சோழ மண்டலத்துப் பேரரசனுக்கு அமைச்சராக இருந்தமையால் அவர் சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்றார். திருக்கோயில்கள் நல்ல முறையில் விளங்கின. நித்திய நைமித்திகங்கள் குறைவின்றி ஒவ்வொரு கோயிலிலும் நிகழ்ந்து வந்தன. தேவாரத் திருப்பதிகங்களை ஓதாத கோயிலே இல்லை. எங்கே எங்கே சமயாசாரியர்கள் வந்து சென்றார்களோ, அங்கேயெல்லாம் அன்பர்கள் அவர்கள் வந்துபோன செய்தியைக் கதை கதையாகச் சொன்னார்கள். அவர்களுடைய பாட்டனுக்குப் பாட்டன் கால முதல் வரும் பழங் கதைகள் அவை.

நாயன்மார்கள் உதித்த இடங்களுக்குச் சென்றார் சேக்கிழார். அவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற ஆலயங்களுக்கெல்லாம் சென்றார். அங்கங்கே தாம் தொகுத்த செய்திகளை எண்ணி எண்ணி அவர் வியப்பில் ஆழ்ந்தார். நாயன்மார்களின் பெருமையை

யும் நினைத்து உருகினர். 'இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளும்படியான வாய்ப்பு நமக்குக் கிடைத்ததே' என்று ஆனந்தம் அடைந்தார்.

ஒருவாறு செய்திகளைச் சேகரித்துக்கொண்டு திருத்தில்லை வந்து சேர்ந்தார். நல்ல நாளில் பாடத் தொடங்கினர். "உலகெலாம்" என்ற அசரீரி வாக்கு அவருக்கு உதவியாக இருந்தது. திருத்தொண்டர் புராணத்தைத் தொடங்கிவிட்டார்.

ஆனல் இப்போது சேக்கிழாருக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்துவிட்டது. நாயன்மார் வரலாறுகளைக் காவியமாகப் பாடுவது அவர் நோக்கம். காவியம் என்ருல் அதற்கென்று சில அமைப்புகள் உண்டு. நாட்டை வருணிக்க வேண்டும். இந்தக் காவியத்தில் எந்த நாட்டை வருணிப்பது? எந்த ஊரை வருணிப்பது ?

அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைக் காவியமாகச்செய்யத் தொடங்கியிருக்கிருர். அந்த அறுபத்து மூன்று பேரும் ஒரு நாட்டில் ஓர் ஊரில் வாழ்ந்தவர்கள் அல்லர். அவர்களை நாயகர்களாக வைத்துப் பாடும் பாட்டில் அத்தனை பேருடைய நாடுகளையும் ஊர்களையும் வருணிப்பதுதான் பொருத்தம். அப்படியானல் ஒவ்வொரு நாயனர் கதையும் ஒவ்வொரு குட்டிக் காவியமாக அல்லவா ஆகிவிடும் ?

இந்த யோசனையில் சேக்கிழார் ஆழ்ந்தார். 'இந்த அறுபத்து மூன்று பேரில் யாராவது ஒருவரை முக்கியமாகக் கொண்டு அவருடைய நாட்டையும் ஊரையும் வருணிக்கலாமே!' என்ற எண்ணம் அடுத்

தபடி அவருக்கு உண்டாயிற்று. 'அப்படிச் சொல்வதாக இருந்தால் யாரைத் தலைமையாக வைப்பது?' என்ற கேள்வி அதைத் தொடர்ந்து அவர் உள்ளத்தில் தோன்றியது.

பளிச்சென்று சேக்கிழாருக்குத் தெளிவுபிறந்தது. பெரிய புராணத்துக்கு ஆதாரம் சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகை. சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காவிய நாயகராகக் கொண்டு பாடிவிடலாம் என்று தோன்றியது. திருத்தொண்டத் தொகையை முன் பணித்த திருவாளராகிய அவருடைய கதையாக வைத்து, இடையிலே உபாக்கியானங்களாக, கிளைக் கதைகளாக, ஏனைய நாயன்மார் வரலாறுகளைப் பாடலாம் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையை அருளிய இடம் திருவாரூர். திருவாரூர்ப் பூங்கோயிலில் தேவாசிரய மண்டபத்தில் எழுந்தருளியிருந்த தொண்டர்களைக் கண்டு, "இவர்களுக்கு ஆளாகும் நிலை வருமா?" என்று ஏங்கி உருகிப் பிறகு பாடிய பதிகம் அது. ஆதலின் பெரிய புராணத்துக்கு வித்தாகிய திருத்தொண்டத் தொகை பிறந்த நாடு சோழ நாடு; நகரம் திருவாரூர்; அதைப் பிறப்பித்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சேக்கிழார் சுவாமிகள் தம்முடைய பெரிய புராணத்துக்குரிய கட்டுக்கோப்பைக் காவிய ரீதியில் உள்ளத்திலே உருவாக்கிக் கொண்டார். சோழ நாட்டின் சிறப்பைச் சொல்லி, பிறகு திருவாரூரின் பெருமையைப் பாடி, அந் நகரத்துப் பூங்கோயிலில் உள்ள தேவாசிரயன் என்னும் திருக்காவணத்தைச்

சிறப்பித்து, அங்கே உள்ள திருக்கூட்டச் சிறப்பைப் பாடினர். அந்த மாதவர் கூட்டத்தை அந்தமில் புகழ் ஆலாலசுந்தரர், சுந்தரத் திருத்தொண்டத் தொகை யால் புகழ்ந்து பாடினர். அந்த வரலாற்றை உரைக்கத் தொடங்கி, சுந்தரர் பிறப்பையும், திருமண முயற்சியையும், இறைவன் தடுத்தாட் கொண்டதை யும் சொல்லி, பிறகு அவர் தலயாத்திரை தொடங்கித் திருவாரூருக்கு வந்து பரவையாரைத் திருமணம் செய்துகொண்டு அவ்வூரிலே வாழும்போது ஒரு நாள் திருக்கூட்டத்தைத் தொழுது, திருத்தொண்டத் தொகையைப் பாடியதையும் சொல்லி, 'தம்பிரான் தோழராகிய அவர் மொழிந்த தமிழ் முறையே, எம்பி ரான் தமர்கள் திருத்தொண்டை ஏத்தலாம்' என்று முடிவுபண்ணினர். அப்படியே பாடி முடித்தார்.

இப்போது பெரிய புராணக் காவியத்துக்கு நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் அமைந்துவிட்டன. சோழ நாட்டின் பெருமையும் திருவாரூர்ச் சிறப்பும் பெரிய புராணத்தின் முகப்பிலே முன் வாயிற் பூஞ் சோலையாக விளங்குகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிலே தங்கும் படி நேர்ந்ததற்குக் காரணம், அவரும் பரவையாரும் இறைவனுடைய திருவருளே துணையாகத் திருமணம் புரிந்து கொண்டதுதான். திருவாரூர் பரவையார் ஊர் ஆதலின், சுந்தரருக்கும் அதுவே வாழிட மாயிற்று.

## 2

"திருவாரூர்த் தேரழகு!" என்று பழமொழி சொல்வார்கள். தேர் மட்டுமா அழகு? அதில் உள்ள கமலாலயம் என்ற பிரம்மாண்டமான குளம் எவ்வளவு

அழகு! திருக்கோயில்தான் சாமானியமானதா? கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி என்று சொல்வார்கள். கிழக்குச் சந்நிதியில் கோபுரத்துக்கு வெளியே நின்று கொண்டிருந்தேன். எதிரே வீதியின் ஒரு பக்கம் இரண்டு கிளைகளோடு ஒரு தென்னமரம் நின்றது. அதைப் பார்த்தவுடன் எனக்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் கதை நினைவுக்கு வந்தது. பெற்ற தகப்பனாரும் வளர்த்த அரசரும்பெண்ணைக்கொடுக்க எண்ணிய சடங்கவி சிவாசாரியாரும் எத்தனை ஆசை யாகச் சுந்தரருக்குக் கல்யாணம் பண்ணிவைக்க முயன்றார்கள்! அந்தக் கல்யாணத்தை வெண்ணெய் நல்லூர்ப் பித்தன் வந்து தடுத்தான். சுந்தரர் தனி மரமாக நின்றார். இந்தத் திருவாரூருக்கு வந்தார். பரவையென்னும் அருள் மடந்தையோடு ஒன்றினார். கிளைக்காத தென்னமரம் கிளைத்ததுபோல, அவர்கள் இருவரும் இரண்டு கிளைகளாக இறைவனருளால் தாங்கப் பெற்று விளங்கினர்.

"பரவையார் வாழ்ந்த இடம் இன்னதென்று தெரிந்து கொள்ள ஏதாவது அடையாளம் இருக் கிறதா ?" என்று விசாரித்தேன்.

"அது இப்போது கோயிலாக இருக்கிறது. பரவை நாச்சியார் கோயில் என்று வழங்குகிறது" என்று சொன்னார்கள். தெற்குச் சந்நிதியில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது அக்கோயில். கோயிலுக்குமுன் போனபோது எம்பிரான் பரவை நாச்சியாருடைய ஊடலைத் தீர்ப்பதற்காக இருமுறை அந்தத் திரு மாளிகை வந்தார் என்ற கதை நினைவுக்கு வந்தது. 'இந்தத் திருவீதிக்குச் செந்தாமரை நாறிய திருவீதி

என்று பெயர்'' என்று ஓர் அன்பர் சொன்னார். இறைவனுடைய திருவடித்தாமரை பதிந்து நடந்த திருவீதியாதலின் அந்தத் தாமரையின் மணம் அங்கே வீசியதாம். இன்னும் காவிய உலகத்தில் அந்த வீதியின் மணம் வீசுவதைக் காண்கிறோம்.

உள்ளே சென்றேன். சந்நிதியில் யானை வாகனம் நிற்கிறது. சுந்தரர் திருக்கைலாயத்துக்குச் செல்லும் போது இறைவன் விடுத்த வெள்ளானையின் மேல் சென்றார். சுந்தரரைக் காவியநாயகராகக் கொண்டு புராணம் பாடிய சேக்கிழார், தம் புராணத்தின் கடைசியில் வெள்ளானைச் சருக்கம் என்பதை வைத்திருக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கதையின் இறுதிப் பகுதியை அதில் சொல்லிப் பெரிய புராணத்தை நிறைவேற்றுகிறார். அந் நாயனார் வெள்ளானையின்மேல் கைலை சென்ற செய்தியைச் சொல்லி முடிப்பதால் அதற்கு வெள்ளானைச் சருக்கம் என்ற பெயர் வந்தது. சுந்தரர் வெள்ளையானையின்மேல் இறைவன்பால் சென்ற சிறப்பை எண்ணி அவருக்கு அதனையே வாகனமாக அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

பரவை நாச்சியாருடைய திருக்கோயிலில் சுந்தரரும் இருக்கிறார். உண்மையில் அது சுந்தரர் கோயில் தான். ஆயினும் நாச்சியாருடைய திருமாளிகை இருந்த இடமாதலின் அக்கோயில் பரவையாருடைய பெயராலே வழங்குகிறது. உற்சவ மூர்த்திகளையும் தரிசித்துக்கொண்டேன். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோழரும் அவருடன் திருக்கைலைக்குச் சென்றவரும் சேர அரசருமாகிய சேரமான் பெருமாள் நாயனாரும் உற்சவ மூர்த்தியாக இக்கோயிலில் இருக்கிறார்.

பரவைநாச்சியார் கோயில் சின்னக் கோயில் தான். ஆனால் அதுதான் சுந்தரரை ஆரூரில் காதற் சிறைப்படுத்திய இடம் என்பதை எண்ணி மனம் உருகியது.

## 3

சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு சமயம் விருத்தா சலத்தில் இறைவன் வழங்கிய பொன்னைப் பெற்றார். "சுவாமி, இந்தப் பொன்னை மணிமுத்தா நதியில் போடுகிறேன்; திருவாரூரில் கமலாலயத்தில் இதை வருவித்துக் கொடுக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அவருடைய தோழனாகிய இறைவன் ஒப்புக்கொண்டான்.

அப்படியே திருவாரூர்த் திருக்குளமாகிய கமலா லயத்தில் வந்து அவர் தேடினார். "ஆற்றிலே போட்டுக் குளத்தில் தேடுகிறமாதிரி" என்று ஒரு பழமொழி வழங்குகிறதே; அது இந்தச் சரித்திரத்தினடியாகப் பிறந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. சிறிது நேரம் பொன் கிடைக்கவில்லை. கரையில் பரவை நாச்சியார் நிற்கிறார். சுந்தரர் குளத்தில் தேடுகிறார். நாச்சியார் குறும்புப் பார்வை பார்க்கிறார். "சுவாமி! என்னை ஆபத்தில் மாட்டி வைக்க வேண்டாம். இவளுக்குமுன் என்னை அவமானப் படுத்தாதே" என்று பாட்டுப் பாடினார். உடனே பொன் கிடைத்து விட்டது. அதை எடுத்து மாற்றுச் சரியாக இருக்கி றதா என்று அங்கே உரைத்துப் பார்த்தாராம். அந்த இடத்தில் மாற்றுரைத்த விநாயகர் என்ற பிள்ளை யார் இருக்கிறார். மாற்றுரைத்த கதையைச் சொல்லா மற் சொல்லிக்கொண்டு கமலாலயத்தின் வடகிழக்கு மூலையில் அந்தப் பிள்ளையார் இன்றும் கோயில் கொண்டிருக்கிறார்.

திருக்கோயிலில் வெளிப் பிரா கா ர த் தி ல் தேவாசிரய மண்டபம் இருக்கிறது. அதை ஆயிரக் கால் மண்டபம் என்று சொல்கிருர்கள். அது மண்டபமாக, மேற்கூரையோடு இல்லை. வேண்டும் போது காவணம் அமைத்துக்கொள்ளும்படி வரிசை யாகக் கல் தூண்கள் நிற்கின்றன. உற்சவ காலங் களில் அவற்றின்மேல் பந்தலை அமைப்பார்கள். இத் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தரிசிப்பதற்காகத் தேவர்களெல்லாம் வந்து எப் போதும் காத்திருக்கும் இடம் என்று இதன் பெருமை யைக் கூறுவர். தேவர்கள் ஆசிரயித்து இருப்பதால் இதற்குத் தேவாசிரயன் என்ற பெயர் வழங்குகிறது. பழங்காலத்தில் திருக்கூட்டத்தினர் வந்து தங்கி இறைவனைத் தியானித்திருக்கும் இடம் இது.

சேக்கிழார் திருவாரூர்ச் சிறப்பை மற்றக் காவியப் புலவர்களைப் போலச் சொல்லவில்லை. அதில் அவர் ஒரு புதுமையைப் புகுத்தி யிருக்கிருர். நகரத்தின் சிறப்பைச் சில பாடல்களால் சொல்லிவிட்டு அங்கே நிகழ்ந்த பழைய கதை ஒன்றை எடுத்துச் சொல் கிருர். மனுநீதிச் சோழனுடைய மனமுருக்கும் வரலாற்றைச் சொல்லித் திருவாரூர்ச் சிறப்பை மிகமிக உயர்த்திவிடுகிருர்.

அடிக்கடி விமான விபத்துக்களைப் பற்றிய செய்தி களைப் பத்திரிகையிலே பார்க்கிரும். பெரிய நகரங் களில் மிகப் பெரிய கார் விபத்தாக இருந்தால் செய்தி பத்திரிகையில் வருகிறது. பெரிய மனிதர்களின் சம்பந்தம் இருந்தால் படங்களுடன் செய்தி வந்துவிடு கிறது; பெரிய மனிதர்கள் குற்றவாளியாக இருந்தால்

வருவதில்லை; விபத்தினுல் சேதம் அடைந்தவர்களானுல்தான் வரும். ஏழை எளியவர்கள் எத்தனையோ பேர்கள் விபத்துக்கு ஆளாகிருர்கள். அவர்கள் உயிரைப் போக்கியவர்களுக்குச் சிலநாட்கள் சிறை வாசம், அல்லது அபராதம் கிடைக்கிறது. அதுவும் இன்றி, செத்துப் போனவர்கள் அறிவின்மையினுல் வண்டிக்குக் குறுக்கே வந்து மாய்ந்தார்கள் என்று தீர்ப்பாகிற விபத்துக்களும் பல உண்டு.

பழைய காலத்தில் ஒரு வீதியில் ஏற்பட்ட விபத்தைப் பற்றிய கதைதான் மனுவின் வரலாறு. மனுவின் குமாரன் வீதியிலே தன் தேரை ஓட்டிக் கொண்டு போனுன். அப்போது தேர் ஒரு பசுவின் கன்றின்மேல் ஏற அது உயிர் இழந்தது. உயிர் இழந்த கன்றின் தாயாகிய பசு அரண்மனையின் வாசலில் இருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினுல் தாக்கி முறையிட்டது. மனுச்சோழன் விசாரிக்கவே, அமைச்சன் ஒருவன் அரச குமாரனைத் தப்புவிக்க வேண்டுமென்ற எண்ணத்தால், நடந்ததை லேசாகச் சொன்னுன்.

"உங்கள் புதல்வன் அரச வீதியிலே வழக்கம் போல் தேரில் போனுன். அதில் மணிகள் கட்டியிருந்தன. நெடுந்தூரத்தில் வரும்போதே தெரியும்படி உயர்ந்துள்ள தேர் அது. அந்தத் தேருக்கு முன்னும் பின்னும் தேர் மேல் பலர் சென்றனர். சேனைகள் சென்றன. ஏதோ ஒரு கன்றுக்குட்டி எப்படியோ வந்து அந்தத் தேர்ச் சக்கரத்தில் புகுந்து செத்துப் போயிற்று. அதனுல் தாய்ப் பசு மணியை அடிக்கிறது" என்று சொன்னுன். 'அரச குமாரன்

மேல் ஒரு குற்றமும் இல்லை, இந்தப் பசுவின் கன்று தற்கொலை செய்து கொள்வதற்காகவே இந்தத் தேர்ச் சக்கரத்திலே பாய்ந்திருக்கிறது' என்று தோன்றும்படி அவன் சொன்னான்.

**வளவநின் புதல்வன் ஆங்கோர்**
**மணிநெடுந் தேர்மேல் ஏறி**
**அளவில்தேர்த் தானை சூழ**
**அரசுஉலாம் தெருவில் போங்கால்**
**இளையஆன் கன்று தேர்க்கால்**
**இடைப்புகுந் திறந்த தாகத்**
**தளர்வுறும் இத்தாய் வந்து**
**விளைத்ததித் தன்மை என்றான்.**

சேக்கிழார் அழகாகப் பாடியிருக்கிறார். விபத்து நேர்ந்தால் போலீஸ்காரர்கள் விசாரிக்கிறார்கள் அல்லவா? "போகக்கூடாத ரோடில் போயிற்றா? ஊதுகுழல் சரியாக இருந்ததா? பிரேக் சரியாய் இருந்ததா?" என்றெல்லாம் கேட்டால், "எல்லாம் சரியாக இருந்தன" என்று சொல்வான், தப்ப எண்ணுபவன். இந்த அமைச்சனும் அப்படித்தான் பேசுகிறான். மணி சரியாக இருந்தது, தேர் உயரமாக இருந்தது, ராஜ வீதியில்தான் போனான், முன்னே போகிற தேர்க் காலில் விழாமல் வேண்டுமென்றே இவன் தேர்க் காலில் வந்து விழுந்தது அந்தப் போக்கிரிக் கன்றுக்குட்டி என்பதுபோல அவன் சொல்கிறான்.

மன்னன் அதையெல்லாம் கவனிக்கவில்லை. தன் மகன் என்றும் பார்க்கவில்லை. "அந்தப் பசு

அடைந்த துயரத்தை நான் அடைவதே முறை'' என்று தன் மகனைத் தேர்க்காலில் இட்டு ஊர்ந்தான். பிறகு இறைவன் திருவருளால் பசுவின் கன்றும் அரசன் கன்றும் உயிர்த்தெழுந்த அற்புதத்தைக் கதை சொல்கிறது,

மனுச்சோழன் கதையைச் சொற்சிற்பியாகிய சேக்கிழார் பெரிய புராணத்தில் காட்டுகிருர். அந்தக் கதையைக் கற்சிற்பிகளும் காட்டி யிருக்கின்றனர். திருவாரூரில் மனுச் சோழன் ஊர்ந்த தேரும், அதன் சக்கரத்தடியில் அவன் மகனும் இருக்கும் அழகிய சிற்பம் ஒன்று உண்டு. அதனருகில் கன்றை இழந்த பசு, இறந்த அக் கன்றின் முன் சோகமே உருவாக நிற்கும் சிலையுருவைக் காணலாம். மிகவும் புனித மாகக் காப்பாற்ற வேண்டிய இச் சிற்பங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் நிலையில் வைத் திருக்கிருர்கள். சின்னப் பள்ளிக்கூடம் ஒன்று அவ் விடத்தில் நடைபெறுகிறது. மனித சாதியே ஜீவ காருணியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டிய கலைக் கூடமாக அது இருக்கவேண்டும். ஆனல் அந்தச் சிற்பத்தின் அருகிலே படம், மடம், படபட, டபடப என்ற பாடங்களைப் படிக்கும் பிள்ளைகளைத்தான் இப் போது காண்கிறோம். சேக்கிழார் திருவாரூர் நகரத் தின் சிறப்புக்கு அடையாளமாகச் சொல்லும் வரலாற்றுச் சிற்பம், சிறைப்பட்டு, கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இன்றைய நகரச்சிறப்பு அதுதானே?*

*இப்போது இந்த இடத்தைப் பாதுகாப்பாக வைத்திருக் கிருர்கள்,

# நிறை செல்வத் திருவாரூர்

"மகாராஜ ராஜ ஸ்ரீ.........அவர்களுக்கு அநேக நமஸ்காரம்........." என்று எழுதுவது தமிழ்நாட்டுப் பழைய வழக்கம். யாராக இருந்தாலும் மகாராஜா வாகச் சொன்னால் அவர்களுக்கு மனம் குளிர்ந்து போகிறது. வடக்கே கூடப் பேசும்போது ஒருவரை ஒருவர் மரியாதையாக 'மகராஜ்' என்று சொல்லிக் கொள்கிறார்கள்,

ராஜாக்களெல்லாம் தங்கள் சம்ஸ்தானங்களை இழந்து குடி மக்களோடு குடி மக்களாய் மாறிக் கொண்டிருக்கிற காலம் இது. அதே சமயத்தில் குடி மக்கள் யாவரும் ராஜாக்களாகி, "எல்லாரும் இந் நாட்டு மன்னர்" என்று சொல்லும் ஜனநாயக காலம் இது. இந்த அரசியல் நிலையை நினைக்காமலே நாம் 'மகாராஜ ராஜ ஸ்ரீ' போட்டு வருகிறோம்.

ஆனாலும் மனிதர்களாகிய மகாராஜாக்களுக்கு மேலே ஒரு சக்கரவர்த்தி இருக்கிறான். எத்தனை ராஜாக்கள் போனாலும் அந்த ராஜா நிரந்தரமாக இருப்பான். அவனுக்கும் நமக்கும் உள்ள உறவு முறை என்றும் மாறாது.

"பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்" என்று முழங்கும் பாரதி, தொடர்ந்து அந்த ராஜாதி ராஜனுக்கு அடிமை செய்வதை விரும்பிப் பாடுகிறார்; "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பாடியிருக்கிறார். அந்தப் பரிபூரணனே உண்மையான ராஜா. எல்லாக் காலங்களுக்கும்

எல்லா இடங்களுக்கும் ராஜாவாக இருந்து அரு ளாணையை நடத்துகிறன். காஞ்சீபுரத்தில் வரத ராஜன் என்றும், ஸ்ரீரங்கத்தில் ரங்கராஜன் என்றும், திருமாலிருஞ் சோலை மலையில் சுந்தரராஜன் என்றும், சிதம்பரத்தில் நடராஜன் என்றும், திருவா ரூரில் தியாகராஜன் என்றும் அந்த ராஜா விலாசத்தை மாற்றிக் கொண்டு அருளாட்சியை நடத்துகிறன்,

திருவாரூரில் உள்ள மூலமூர்த்திக்கு வன்மீக நாதர் என்று பெயர். ஆனல் அங்கே எல்லாச் சிறப் பும் பெறுகிற மூர்த்தி தியாகராஜப் பெருமானே. மற்றத் தலங்களில் எல்லாம் நாயகர் என்றும், சோமாஸ் கந்தர் என்றும் வழங்கும் உற்சவ மூர்த்தியே இங்கே தியாகராஜராக எழுந்தருளியிருக்கிருர்.

பஞ்சபூத ஸ்தலங்களில் திருவாரூரைப் பிருதிவி ஸ்தலம் என்பார்கள். அதாவது மண்ணுடன் தொடர் புடைய தலம் என்று பொருள். இங்குள்ள மூல மூர்த்தி புற்றிலிருந்து எழுந்ததனல் புற்றிடங் கொண் டார் என்று தமிழிலும், வன்மீகநாதர் என்று வட மொழியிலும் திருநாமம் பூண்டார். திரு ஆரூர் என்ற பெயரில் உள்ள ஆர் என்பதற்கே பூமி என்று பொருள் என மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் சொல்வார்கள்.

திருவாரூரில் சிவபெருமான் சோழ சக்கரவர்த்தி யாக எழுந்தருளி ஆட்சி புரித்தார் என்று புராணம் சொல்கிறது. மதுரையிலே பாண்டியனுக இருந்து ஆண்ட பெருமான் இங்கே சோழனுக அரசாண்டது பொருத்தந்தானே? மதுரையில் இறைவன் அறுபத்து நான்கு விளையாடல்களைப் புரிந்தான். இங்கேயோ முந்நூற்றறுபது விளையாடல்களைச் செய்தானும்.

திருமாலினுடைய உபாசனு மூர்த்தியாக இருந்த வர் தியாகராஜர். திருமால் அவரை எப்போதும் தம்முடைய இதய ஸ்தானத்தில் வைத்துப் பூசித்தா ராம். அவர் படுத்திருக்கும்போது இப்பெருமானை இதய பீடத்தில் வைத்திருக்கையில், மூச்சு விடும் போது திருமார்பு மேலேறிக் கீழ் இறங்கியது. உச்சு வாச நிச்சுவாசங்களால் உண்டான ஏற்ற இறக்க அசைவு காரணமாகத் தியாகப் பெருமான் ஆடினர். அமர்ந்திருந்தபடியே ஆடுவதால் அவரை இருந்தா டழகர் என்று சொல்வார்கள். சுவாசத்தை இழுத்துப் பின்பு விடும் அளவில் ஜபிக்கின்ற மந்திரத்திற்கு அஜபா மந்திரம் என்று பெயர். நாவினுல் ஜபிக்கா தது ஆதலின் அம்மந்திரத்திற்கு அப்பெயர் வந்தது. திருமால் அதனை மூச்சுக் காற்ருேடு தியானிக்கையில் தியாகேசர் நடனம் புரிந்ததனுல் அந்த நடனத்துக்கு அஜபா நடனம் என்ற பெயர் உண்டாயிற்று இருந் தாடழகராகிய தியாகராஜருடைய அஜபா நடனத்தை இன்றும் மிகச் சிறப்பாக விழாக்காலத்தில் தரிசித்து இன்புறலாம்.

திருமால் தியாகராஜரை இந்திரனுக்குக் கொடுக்க, இந்திரன் தனக்குத் துணை நின்ற முசுகுந்த சக்கரவர்த்திக்கு அம் மூர்த்தியை அளித்தான். அம் மன்னன் தருவாரூரில் அப் பெருமானை நிறுவி வழி பட்டான்.

திருவாரூர்க் கோயிலில் வெளிப் பிராகாரம் ஒன்றும், உள் பிராகாரம் ஒன்றும், அதற்குள் திருக் கோயிலும் அமைந்திருக்கின்றன. திருக்கோயிலில் வன்மீகநாதராகிய புற்றிடங் கொண்டாரும், நீலோத் பலாம்பிகையாகிய அல்லியங்கோதையும், தியாக

ராஜப் பெருமானும் தனித்தனிச் சந்நிதிகளை உடைய வர்களாய் விளங்குகிருர்கள்.

தியாகேசப் பெருமானுடைய கோயிலுக்குள் முசுகுந்தன் பெற்றுவந்த சிவலிங்கப் பெருமானைத் தனியே தங்கப்பேழையில் வைத்துப் பூசை செய்கிருர்கள்; அவரை விடங்கர் என்று சொல்லுவார்கள். டங்கம் என்பது உளி. உளிபடாத சுயம்புமூர்த்தி என்பது விடங்கர் என்பதன் பொருள். தியாகேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்துக்குப்பின்னுல் ஒருசுவர் இருக்கிறது. அதற்கு அப்பால் சில அடிகளுக்குப் பிறகு கோயிலின் சுவர் இருக்கிறது. இந்த இரண்டு சுவர் களுக்கும் இடையே என்ன இருக்கிறது என்பதை அறிய முடியவில்லை. ஆனல் அந்த இரகசிய இடத்தி லிருந்து அபிஷேக நீர் வெளி வரும்படியாகக் கோமுகி ஒன்று வெளியே இருக்கிறது. முன்காலத்தில் அவ் விடத்தில் விடங்கப் பெருமானுகிய லிங்கத்தை வைத்துப் பூஜை செய்திருப்பார்கள் போலும். தியாகேசர் எழுந்தருளியுள்ள இடத்துக்குத் தேவ சபை என்று பேர். அங்கே சந்நிதியில் நந்தி நின்ற கோலத்தில் இருக்கிறது.

தியாகப் பெருமான் திருமாலின் இதய பீடத்தில் எழுந்தருளியதைக் காட்டும் ஓவியம் ஒன்றை அப் பெருமான் கோயிற் சுவரில் அமைத்திருக்கிருர்கள்.

அல்லியம் பூங்கோதையாகிய நீலோற்பலாம் பிகையின் திருவுருவம் மிக அழகியது. அம்பிகையின் அருகில் இடப்புறத்தில் ஒரு சக்தி முருகனைத் தன் தோளில் வைத்துக்கொண்டு நிற்கிருள். அம்பிகை தன் இடக்கரத்தால் முருகன் கை விரலைப் பிடித்துக்

கொண்டிருக்கிறாள். இந்தச் சந்நிதியின் வெளியே இந்தத் தலத்தோடு தொடர்புடைய ஓவியங்களைத் தீட்டியிருக்கிறார்கள். கர்ப்பக் கிருகத்தினுள்ளே சென்று மூர்த்திகளின் வடிவத்தைத் தெளிவாகப் பார்க்க முடியாவிட்டால், இந்த ஓவியங்களைக் கொண்டு அம் மூர்த்திகளின் கோலத்தைத் தெரிந்து கொள்ளலாம். தியாகேசர், நீலோற்பலாம்பிகை, கமலாம்பிகை முதலியவர்களின் ஓவியங்களை இங்கே காணலாம்.

கமலாம்பிகை பிராகாரத்தில் தனிக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறாள். எம்பெருமானை நோக்கித் தவம் புரியும் கோலத்தில் அந்த அம்பிகை காட்சியளிக்கிறாள். பாசம், ருத்திராட்சமாலை, அபய முத்திரை, மலரம்புகள் இவற்றைத் தாங்கிய திருக் கரங்களோடு, ஒரு காலின்மேல் மற்றொன்றைப் போட்டு மடக்கிய கோலத்தில் வீற்றிருக்கிறாள். சக்திக்குரிய பீடங்களில் இந்தச் சந்நிதியும் ஒன்று.

திருக்கோயிலின் உள்ளே சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் உற்சவமூர்த்தி களாக எழுந்தருளியிருக்கும் சந்நிதி ஒன்று இருக் கிறது.

இக்கோயிலில் பஞ்சமுக வாத்தியம் என்றும் பஞ்சானன முரசு என்றும் வழங்கும் தோற்கருவி ஒன்று இருக்கிறது. பெரிய குடத்தில் நடுவில் ஒரு முகமும் அதைச் சுற்றி நான்கு முகமும் உள்ள வாத் தியம் அது. அந்த ஐந்து முகங்களிலும் தட்டி வாசிக் கலாம். அதைப் பரம்பரை பரம்பரையாக வாசித்து வருகிறவர்கள் இருக்கிறார்கள்.

'திருவாரூரில் பிறக்க முத்தி' என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இவ்வூரில் பிறந்தவர்களுக்கு யமனுடைய தண்டனை இல்லையாம். திருவாரூரில் வாழ்பவர்கள் எல்லோருமே சிவகணங்களாகத் தோற்றமளித்தார்களாம். அதனால்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று பாடினர். பொதுவாக நவக்கிரகங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையை நோக்கிக் கொண்டிருக்கும். இத்தலத்தில் அவை எல்லாம் வரிசையாக இருக்கின்றன இந்தத் தலத்தை அடைந்து வழிபட்டவர்களுக்குக் கிரகங்களால் துன்பம் உண்டாகாது என்ற குறிப்பை இந்த நிலை காட்டுகிறது.

திருவாரூரில் பிறந்தவர்களுக்கு யமவேதனை இல்லை என்பதை வேறு ஒரு வகையிலும் நினைப்பூட்டும் சந்நிதி ஒன்று இங்கே இருக்கிறது. எல்லாக் கோயில்களிலும் சண்டேசர் இருக்கும் இடத்தில் இங்கும் ஒரு விக்கிரகம் இருக்கிறது. ஆனால் அவர் வழக்கமான சண்டேசமூர்த்தி அல்ல. சடையுடனும் முழங்காலில் முகம் வைத்தபடியும் அமர்ந்திருக்கும் ஓர் உருவத்தைத்தான் காணலாம். அவன் யார் தெரியுமா? அவன்தான் யமன். அவனுக்கு வேலை இல்லை. அதனால் இங்கே முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிருன். சிவபெருமான் அவனுக்கு இரங்கி இங்கே சண்டேச பதவியை வழங்கினராம்.

கோயிலின் உள்பிராகாரத்தில் தனித்தனியே பல கோயில்கள் இருக்கின்றன. கட்டுமலையின்மேல் ஒரு கோயில்; அதற்கு அருணசலேசம் என்று பேர்

திருவண்ணுமலையை நினைப்பூட்டுவது அது. பூமி மட்டத்துக்கும் கீழே ஒரு கோயில்; அதற்கு ஆடகேசம் என்று பேர். முன்காலத்தில் இருந்த மன்னர்களும் பக்தர்களும் ஆளுக்கு ஒரு கோயிலைக் கட்டி வைத்திருக்கிருர்கள். அசலேசம் என்பது ஒரு கோயில். திருவாரூர் அரனெறி என்றும் அதற்குப் பேர் உண்டு. அது தேவாரப் பாடல் பெற்றது. நமிநந்தியடிகள் என்ற நாயஞர் அங்கே வழிபட்டார். தண்ணீரால் விளக்கேற்றிஞர். கழற்சிங்கர் என்ற நாயஞரும் செருத்துணை நாயஞரும் அக்கோயிலுக்கு வந்து வழிபட்டிருக்கின்ருர்கள். அழகிய சிற்பங்கள் அமைந்த கோயில் அது.

அந்தக் கோயிலின் நிழல் கிழக்கே சாயுமேயன்றி மேற்கே சாய்கிறதில்லை என்று சொல்கிருர்கள்.

வடக்குப் பிராகாரத்தில் மேற்குப் பார்த்த சந்நிதி ஒன்று இருக்கிறது. அதற்குச் சித்தீசுவரம் என்று பெயர். அக் கோயிலைச் சார்ந்த தட்சிணுமூர்த்திக்குத் தனியான சிறப்பு ஒன்று உண்டு. இப்போது தருமபுரத்தில் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்துப் புகழ் பெற்று விளங்கும் ஆதீனத்தின் மூல ஆசாரியருக்கு ஞானசம்பந்தர் என்று திருநாமம். அவருடைய குரு ஞானப்பிரகாசர் என்னும் பெரியார். அவர் திருவாரூரில் வாழ்ந்திருந்தார். அப்பெரியாரின் பெருமையையும் ஞானச்சிறப்பையும் விளக்கும் தமிழ்ப்பாடல்கள் பல உண்டு. அவர் சித்தீசுவரத்தில் எழுந்தருளியிருக்கும் தட்சிணுமூர்த்தியை இடைவிடாமல் வழிபட்டார். இப்போது அம்மூர்த்திக்குரிய பூசை முதலியன தருமபுர ஆதீனத்தின் ஆதரவில் நடைபெறுகின்றன. அதற்கென்றே ராஜாங்கக்

கட்டளை என்ற அமைப்பும் அதற்குரிய மடமும் திருவாரூரில் இருக்கின்றன.

வெளிப்பிராகாரத்தைக் கடந்து இடைநிலைக் கோபுரத்தின் வழியே சென்றால் அந்த இடை கழியிலே தெற்குப் பக்கத்தில் வடக்கு நோக்கி அமர்ந் திருக்கும் திருவுருவம் ஒன்றைப் பார்க்கலாம். அவர் விறன்மிண்ட நாயனார். அவருக்கு இறைவனிடம் உள்ள அன்பைக் காட்டிலும் அடியார்களிடம் உள்ள அன்பு மிகுதி. அடியார்களிடம் அன்பு இல்லாதவர் என்றால் அத்தகையவரைக் காணவும் சகியாதவர் அவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூர்த் திருக்கோயி லுக்குள் போகும்போது தேவாசிரய மண்டபத்தில் உள்ள அடியார்களைத் தரிசனம் செய்துகொள்ளாமல் போனார். அதனால் விறன்மிண்டருக்கு அவரிடம் கோபம் உண்டாயிற்று. அவரைப் 'புறகு' என்று சொல்லி விலகினார். அத்தகையவரை ஆட்கொண்ட ஆரூர்ப் பெருமானும் புறகு என்று இருந்து, பிறகு இறைவன் திருவருளைப் பெற்றார். இந்த அளவில் தான் அவருடைய கதை பெரியபுராணத்தில் இருக் கிறது. ஆனால் அவரைப் பற்றிய வேறு கதை ஒன்றைத் திருவாரூரில் ஓர் அன்பர் சொன்னார். பெரிய புராணத்தில் காணாத பல கதைகள் அந்த அந்த இடங்களில் வழங்குகின்றன. அவற்றையெல் லாம் தொகுத்துப் பார்த்தால் பல அரிய செய்திகள் புலனாகும். நான் கேட்ட கதையைச் சொல்கிறேன்.

"இவரைச் சாமான்ய மக்கள் என்ன பெயரிட்டு வழங்குகிறார்கள், தெரியுமோ?" என்று அன்பர் கேட் டார்.

"விறன்மிண்ட நாயனார் என்ற இவர் திருநாமந் தான் எனக்குத் தெரியும்" என்றேன்; "அவர் அடியார்களை மதியாதவரிடம் விறலுடன் மிண்டு செய்ததனால் அந்தப் பேர் அவருக்குப் பின்னால் வந்திருக்க வேண்டும்" என்றும் சொன்னேன்.

"அவருடைய முரட்டுத்தனத்தை விளக்குவது போல அவர் பெயரைச் சிதைத்து வழங்குகிறார்கள், வெறி முண்ட நாயனார் என்று சொல்கிறார்கள்!" என்றார் அன்பர். பிறகு கதையைச் சொன்னார்.

அடியாரை மதியாத சுந்தரரை ஆண்டு கொண்டவர் ஆரூர்ப் பெருமான் என்ற எண்ணத்தால் ஆரூரை மிதிப்பதில்லை என்ற விரதம் பூண்டார் விறன் மிண்டர். அவர் மலைநாட்டில் உள்ள செங்குன்றூரில் பிறந்தவர்; பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு வந்தவர், இவ்வூருக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் தங்கியிருந்தார். யாரேனும் திருவாரூரிலிருந்து வந்தவர் என்று தெரிந்தால் உடனே அவர் காலை வெட்டிவிடுவாராம். இந்த வெறியைப் போக்க இறைவன் எண்ணினான். ஓர் அடியார் திருவுருவத்தை எடுத்துக்கொண்டு விறன் மிண்டரிடம் போனான். வழக்கம்போல் விறன்மிண்டர் அடியாரை, "எந்த ஊர்?" என்று கேட்டாராம். அடியார், "திருவாரூர்" என்று சொன்னதுதான் தாமதம், அவர் காலை வெட்டக் கோடரியை எடுத்தார் விறன் மிண்டர். அடியார் ஓட்டமெடுக்கத் தொடங்கினார். நாயனார் அவரைத் தொடர்ந்து ஓடினார். பிடிக்க முடியவில்லை. அவர் ஓட இவர் ஓடக் கடைசியில் அடியார் திருவாரூர் எல்லையை மிதித்து விட்டார். அவரைத் தொடர்ந்து வந்த நாயனாரும் எல்லையை

மிதித்தாராம். அப்போதுசட்டென்று இறைவன், "வந்தோம் இப்பாலே" என்றானும். 'நாம் ஆரூர் எல்லைக்குள்வந்துவிட்டோம். உம்முடைய விரதம் போயிற்று' என்ற குறிப்போடு அப்படிச் சொல்லவே, நாயனார் பிரமிப்படைந்து நின்றார். இறைவன் தன் திருவுருவத்தைக் காட்டி அவருக்கு அருள் செய்தானும்.

இப்போது திருவாரூருக்கு அருகில் வண்டாம் பாலை என்று வழங்கும் ஊர் இருக்கிறது. 'வந்தோம் இப்பாலே' என்று இறைவன் சொன்ன இடம் அது வென்றும், அத்தொடரே வண்டாம் பாலை என்று மருவி வழங்குகிற தென்றும் சொல்கிறார்கள்.

இந்தக் கதையைக் கேட்டபோது எனக்கு வ. வே. ஸு ஐயரவர்கள் வாழ்க்கை நினைவுக்கு வந்தது. ஆங்கிலப் போலீசார் துரத்த ஓடிய ஐயர் புதுச்சேரியில் பிரெஞ்சு எல்லைக்குள் புகுந்தவுடன் தைரியம் பெற்று, "இது பிரெஞ்சு எல்லை" என்று எதிர்த்து நின்றாராம். அடியாராக வந்த இறைவன், வெறி மூண்ட விறன்மிண்டரிடம் சொன்ன, "வந்தோம் இப்பாலே" என்றது போலவே இருக்கிறது அல்லவா? விறன்மிண்ட நாயனார் கையில் கோடரியோடு கோபுர இடைகழியிலே அமர்ந்திருக்கிறார்.

திருக்கோயிலுக்கு மேற்கே கமலாலயம் என்ற பெரிய திருக்குளம் இருக்கிறது. இது ஐந்து வேலிப் பரப்புள்ளது; 64 கட்டங்களை உடையது. தேவ தீர்த்தம் என்றும் ஒரு பெயர் இதற்கு உண்டு. இதன் வடகிழக்கு மூலையில்தான் மாற்றுரைத்த விநாயகர் கோயில் இருக்கிறது.

இதன் நடுவில் ஒரு திட்டும் அதில் ஓர் அழகிய கோயிலும் இருக்கின்றன ஓடத்தில் ஏறி அக்கோயிலுக்குச்செல்லலாம். பூசைமுதலியவை அப்படித்தான் நடைபெறுகின்றன. அந்தக் கோயிலை நடுவ நாயனர் கோயில் என்றும் நடுவனூர் கோயில் என்றும் நடுவிலான் கோயில் என்றும் வழங்குகிறார்கள். அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமான் நாகநாதர்; அம்பிகை யோகாம்பிகை.

கமலாலயத்தின் மேற்குக் கரையில் ஒரு கோயில் இருக்கிறது. தீர்த்தத்தினுள்ளே சிறிது இக்கோயில் சென்றிருக்கிறது. இது யக்ஞேசுவரர் கோயில். கமலாலயத்தின் மேல் கரையில் நின்று பார்த்தால் அந்தக் குளமும் நடுக்கோயிலும் எதிரே தோன்றும் திருக் கோயிற் கோபுரங்களும் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகிய காட்சியை அளிக்கும்.

இவ்வூரில் கிழக்கு வீதியில் துர்வாச நாயனர் கோயில் என்ற பெயரோடு ஓர் ஆலயம் இருக்கிறது. துர்வாசர் பூஜை செய்த கோயில் அது. அதைப் பரவையுண் மண்டளி என்று தேவாரமும் பெரிய புராணமும் கூறுகின்றன. பரவை என்பது கடல். மண்தளி என்றால் மண் கோயில் என்று பொருள். ஏதோ ஒரு காலத்தில் கடலின் நடுவிலே திட்டும் அதில் சிவலிங்கப்பிரானும் இருக்க, அப் பெருமானை இங்கே கொண்டு வந்து யாரேனும் நிறுவியிருக்கலாம். அல்லது கடல் போல எங்கும் நீர் பரந்திருந்த போது அந்த நீர்ப்பரப்பில் மண்திட்டில் இருந்த கடவுளாகவும் இருக்கலாம். வருணன் ஒருமுறை சினம் மூண்டு இவ்வூரை அழிக்கக் கடலை ஏவினானும். கடல் பொங்கி வரவே இக்கோயிலில் உள்ள சிவபெருமான்

அதை வற்றச்செய்தாராம். பரவையை உண்ட மண் தளியாதலால் பரவையுண் மண்டளி என்று பெயர் வந்ததாம். இப்படிப் புராணம் சொல்கிறது.

இப்போது இது மண் தளியாக இல்லாமல் கல் தளியாகவே இருக்கிறது. இங்குள்ள பெருமானுக்குத் தூவாயர் என்று திருநாமம். தூர்வாசேசுவரர் என்பது வடமொழி நாமம்.

சுந்தரமூர்த்தி நாயனுர் திருவொற்றியூருக்கு வந்தார். அங்கே திருக்கோயிலில் மாலை கட்டும் திருப்பணியில் ஈடுபட்டிருந்த சங்கிலி நாச்சியாரைக் கண்டபோது அவர்பால் காதல் உண்டாயிற்று. நாச்சியாரைக் கல்யாணம் செய்துகொள்ள நிச்சயித்தார். "என்னை விட்டுப் பிரியாமல் இருந்தால் திருமணம் செய்து கொள்வேன்" என்று சங்கிலி நாச்சியார் சொல்லவே, நாயனுர் ஒப்புக்கொண்டார். இறைவனுடைய சந்நிதியில் உறுதிமொழிகூறவேண்டும் என்று நாச்சியார் கூறவே, அப்படியே செய்வதாகச் சுந்தரர் கூறினுர், தாம் உறுதிமொழி கூறும்போது மகிழ மரத்தடியில் சென்று இருக்க வேண்டும் என்று அவர் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இறைவன் அவ்வாறே செய்வதாக அருளி விட்டுச் சங்கிலியார் கனவில், தான் மகிழ மரத்தடியில் இருக்கப் போவதாகவும், அம் மரத்தடியில் உறுதிமொழி வழங்கும்வண்ணம் சொல்லும்படியும் அருளினுன். சங்கிலியார் அப்படியே சுந்தரரிடம் சொல்ல, வேறு வழியில்லாமல் அவர் ஒப்புக்கொண்டார்.

திருமணம் இறைவனருளால் நிறைவேறியது. சில நாட்கள் ஆன பிறகு சுந்தரருக்குத் திருவாரூர்

ஞாபகம் வந்துவிட்டது. அங்கே நிகழும் விழாவின் நினைவும் தியாகேசப் பெருமானுடைய நினைவும் உண்டாயின. "நான் எவ்வாறு ஆரூர்ப் பெருமானைப் பிரிந்திருப்பேன்!" என்று ஏங்கினார். தாம் சங்கிலியாருக்கு அளித்த உறுதிமொழியைப் புறக்கணித்து விட்டு, திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். திருவொற்றியூர் எல்லையை நீங்கியவுடனே அவர் கண்கள் இரண்டும் ஒளியை இழந்தன. திருவொற்றியூர்ப் பெருமானை எண்ணி இரங்கிய சுந்தரர் ஆரூரின் மேல் இருந்த பேரன்பினால் புறப்பட்டுவிட்டார்.

கண் இல்லாக் குருடராகச் சில தலங்களின் வழியே வந்த நாயனார் காஞ்சீபுரம் சென்று இறைவனைப் பாடி ஒரு கண்ணைப் பெற்றார். பிறகு பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார். முதலில் இந்தப் பரவையுண் மண்டளிக்கு வந்து இறைவனை வழிபட்டார். "இறைவனே, உனக்குத் தொண்டு பூண்டவர் துக்கங்களைப் போக்கிப் பாதுகாக்க மாட்டாயா?" என்று பாடினார்.

**தூவாயா! தொண்டுசெய் வார்படு துக்கங்கள்**
**காவாயா? கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்**
**நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்கு**
**ஆவாஎன், பரவையுண் மண்டளி அம்மானே!**

[தூவாயன் என்னும் திருநாமம் உடைய பெருமானே, உனக்குத் தொண்டு செய்வார்கள் படுகின்ற துக்கங்களை அவரை அடையா வண்ணம் காக்க மாட்டாயா? என்னிடத்தே என் பலவீனத்தைக் கண்டு என் அறிவைப் பற்றிக்கொண்டு ஐந்து

பொறிகள் வேறு ஒன்றும் செய்ய விடாமல் காவலாக இருந்தாலும், அவரையும் மீறி நாவினாலும் வாயினாலும் உன்னையே நல்ல வார்த்தைகளாற் புகழ்ந்து பேசுகிற எனக்கு, ''ஐயோ பாவம்!'' என்று சொல், பரவையுண் மண்டளியில் இருக்கும் பெருமானே!

தூர்வாஸர் என்பதே தமிழில் தூவாயர் என்று வந்தது. ஆவா : இரக்கக் குறிப்பு.]

இப்படித் தொடங்கிப் பத்துப் பாடலைப்பாடினார். ஒரு பாட்டில்,

> **எண்தானை எழுத்தோடு**
> **சொற்பொருள எல்லாமுன்**
> **கண்டானே! கண்தனைக்**
> **கொண்டிட்டுக் காட்டாயே**

என்று வேண்டினார்.

அவர் அப்போது பாடிய திருப்பதிகத்தை 7-ஆம் திருமுறையில் படித்து இன்புறலாம்.

இக் கோயிலில் சடாமுடியோடு அமர்ந்த திருக்கோலத்தில் துர்வாசர் வீற்றிருக்கிறார். துர்வாசர் என்றால் கோபத்தின் திருவுருவம் என்பது எல்லோருக்கும் தெரியும். அவருக்கு எப்போதும் மூக்குக்கு மேல் கோபம் வரும் என்று புராணக் கதைகள் சொல்கின்றன அல்லவா? யாரோ புண்ணியவான்கள் துர்வாசர் கோபத்தைப் போக்க என்ன வழி என்று பார்த்தார்கள். 'மூக்குக்கு மேல்தானே கோபம் வரும்? அந்த மூக்கை உடைத்து விட்டால், கோபம் வர இடம் எங்கே?' என்று எண்ணி இந்தத் துர்வாசர் மூக்கை உடைத்துவிட்டார்கள்! தாம் பூசித்து

இறைவன் கோயிலில் மூக்கை இழந்து துர்வாசர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.


அவரா மூக்கை இழந்தார்? அவருக்கு அவமானம் ஒன்றும் இல்லை. கோயிலும் கோபுரமும் விக்கிரகங்களும் சிற்பங்களும் தமிழ்நாட்டின் தனிப் பெருஞ் செல்வங்கள். இவற்றை உலகத்தில் வேறு எங்கும் காணமுடியாது. இவற்றைப் பக்தியுடனும் கலை உணர்வுடனும் சமைத்தார்கள் முன்னோர்கள். இவற்றைப்போல நம்மால் அமைக்க முடியாவிட்டாலும் இவற்றைப் பாதுகாக்கும் கடமையையாவது நாம் செய்துவரலாம். ஆனால் நம்முள் சிலர் துர்வாசர் மூக்கை உடைத்துத் தமிழர் மூக்கையே உடைத்துவிட்டார்கள். ஆம்! இத்தகைய அற்புதப் படைப்புக்களைப் படைத்தவர் பரம்பரையில் வந்த நாம் இவற்றை உடைக்கத் தலைப்படுகிறோம். இதைக் காட்டிலும் அவமானம் வேறு உண்டோ? துர்வாசர் மூக்கிழந்த நிலையில் அமர்ந்து, நம்முடைய மூக்குப் போய் அவமானம் படைத்த நிலையைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்!

திருவாரூருக்கு மேற்கே ஏழு மைல் தூரத்தில் கமலாபுரம் என்ற ஊர் இருக்கிறது. அதுவே சுந்தரருடைய அன்னையாராகிய இசைஞானியார் பிறந்த ஊர் என்று சொல்கிறார்கள்.

திருவாரூர்த் தேர் மிகப்பெரியது; அசற்த ஆழித் தேர் என்று பேர். இங்கே எல்லாமே பெரியவை. கோயில் ஐந்து வேலி குளம் ஐந்து வேலி. தியாகேசருக்குக் கழுநீர்ப் பூமாலை சிறப்புடையது; அதற்காகக் கழுநீரை வயலில் விளைத்தார்கள்; அந்தக்

கழுநீர் வயலும் ஐந்து வேலி. தியாகேசர் செய்த திரு விளையாடல்களோ முந்நூற்றறுபது. இந்த ஊரைப் பற்றிய நூல்கள் பல. எதை என்று எடுத்துச் சொல் வது? "நிறைசெல்வத் திருவாரூர்" என்று வாயாரப் போற்றினார்கள், இத்தலத்தை. திருமகள் இங்கே இருந்து தவம் செய்தாள். அதனால் இந்த ஊருக்கே கமலாலயம் என்றும் கமலை என்றும் பெயர்கள் ஏற் பட்டன.


தியாகராஜா எழுந்தருளியிருக்கும் இந்தப் பெரிய நகரத்தைச் சிவராஜதானி என்றே சொல்லலாம்.




← திருவாரூர் – சுந்தரர்,
சேரமான்
பக்கம் 165



விறன்மிண்ட நாயனர் →
பக்கம் 168



கொடுங்கோளூர் - பகவதி கோயில் பக்கம் 192



கொடுங்கோளூர் -சண்டிகேசுவரி - தவிடு
அபிஷேகக் கோலம்
பக்கம் 192

# படகுப் பயணம்

"சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக் களத்திலிருந்து இறைவன் அனுப்பிய யானையின் மேல் ஏறித் திருக்கைலாயம் சென்றார்" என்று பெரிய புராணம் சொல்கிறது. திருவஞ்சைக்களத்துக்குப் போய் அங்குள்ள ஆலயத்தைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. இப்போது நினைத்தால் எந்த ஊருக்கும் சென்று விடலாமே! பழைய காலமா? கட்டுச்சோறு கட்டிக்கொண்டு காடும் மலையும் கடந்து பல நாள் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையே!

ஆனாலும் ஊர் எங்கே இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? கேரள ராஜ்யத்தில் திருவஞ்சைக்களம் இருக்கிறது என்பது தெரியும். திருவாங்கூர், கொச்சி என்னும் இரண்டு ராஜ்யங் களில் திருவஞ்சைக்களம் எங்கே இருக்கிறது? அங்கே போய்ச் சுவாமி தரிசனம் செய்து கொண்ட வர்கள் சிலரே. ஆதலால் வழி சொல்கிறவர்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிருந்தது. "திருச்சூரில் இறங்கி முப்பத்தைந்து மைல் பஸ்ஸில் போய் ஓரிடத்தில் கழியைத் தாண்ட வேண்டும். கழியைத் தாண்டினால் கொடுங்கோளூரை அடையலாம். அதற்கு அருகே மூன்று மைல் தூரத்தில் திருவஞ்சைக் களம் இருக்கிறது. அங்கிருந்து பஸ் போக்குவரத்து உண்டு" என்று சிலர் சொன்னார்கள். சேக்கிழார் என்ன சொல்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ள

வேண்டாமா? அவர், "மலைநாட்டில் இருக்கிறது. கொடுங்கோளூர். அதற்கு மகோதையென்றும் ஒரு பெயர் உண்டு. அதைச் சார்ந்ததுதான் திருவஞ்சைக் களம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தோழரும் சேர மன்னருமாகிய சேரமான் பெருமாள் நாயனர் இருந்து அரசாண்ட இடம் கொடுங்கோளூர்" என்று சொல்கிருர்.

**மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்**
**மன்னும் தொன்மை மலைநாட்டுப்**
**பாவீற் றிருந்த பல்புகழார்**
**பயிலும் இயல்பிற் பழம்பதிதான்**
**சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்**
**களமும் நிலவிச் சேரர்குலக்**
**கோவீற் றிருந்து முறைபுரியும்**
**குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்**

என்று பெரிய புராணத்தில் அவர் சொல்லியிருக்கிருர். திருவஞ்சைக்களத்தைத் தன் ஒரு பகுதியாகப் பெற்றது, சேரர் குலமன்னர் பரம்பரை பரம்பரையாக இருந்து அரசாட்சி புரியும் ஊர் என்று இந்தப் பாட்டுச் சொல்கிறது அல்லவா ?

திருச்சூர் என்பதும் ஒரு சிவஸ்தலம் என்று கேள்வியுற்றிருந்தேன். திருச்சிவப்பேரூர் என்ற பெயரே குறைந்து திருச்சூர் என்று வழங்குகிறது. சிவப்பேரூர் வழியே கொடுங்கோளூரை அடைந்து அங்கிருந்து திருவஞ்சைக்களத்துக்குப் போகலாம் என்று எண்ணியிருந்தேன்.

பழங்காலத்தில்—சுந்தரமூர்த்தி நாயனர் காலமாகிய ஒன்பதாம் நூற்ருண்டில்—கேரளம் தமிழ் நாடாகவே இருந்தது. அப்புறமும் சேக்கிழார்

வாழ்ந்திருந்த 12-ஆம் நூற்றாண்டில்கூட அது தமிழ் நாடாகவே இருந்திருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இரண்டு முறை கொடுங்கோளூர் போய் வந்திருக்கிறார். அவ்வளவு ஒட்டுறவோடு இருந்த பகுதி இப்போது விசாரித்தாலும் விவரம் தெரியாத இடமாகிவிட்டது.

திருச்சூர் வழியாகக் கொடுங்கோளூர் செல்லலாம் என்று எண்ணியிருந்தபோது இறைவன் திருவருள்போல எனக்கு எர்ணாகுளத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. எர்ணாகுளத்தில் ஒரு தமிழ்ச்சங்கம் இருக்கிறது. தமிழன் எங்கே சென்று வாழ்ந்தால் என்ன, தமிழை மறக்க முடியுமா? எர்ணாகுளம் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திரு நாகப்பன் என்ற இளைஞர் தமிழன்பும், தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் உடையவர். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதம் இரண்டு மாதங்களுக்கு முன்பே அவர் எழுதியிருக்கலாம்; அல்லது இரண்டு மாதங்களுக்குப் பிறகு எழுதியிருக்கலாம்; நான் திருவஞ்சைக்களத்துக்குப் போக வழி விசாரித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் அவர் கடிதம் வந்தது; அதைத் திருவருட் செயல் என்று சொல்வதைவிட வேறு எப்படிச் சொல்வது?

அன்பர் நாகப்பன், என்னை எர்ணாகுளத்துக்கு வந்து திருவெம்பாவையைப் பற்றி ஒரு சொற்பொழிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கடிதம் எழுதியிருந்தார். அவர் குறிப்பிட்ட நாளில் என்னால் போக இயலவில்லை. ஆனாலும் மலைநாட்டில் ஓரன்பர் பழக்கம் ஏற்பட்டது பற்றி மனமகிழ்ந்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். "நான் திருவெம்பாவை

பற்றிப் பேச இப்போது வர இயலவில்லை. திரு வஞ்சைக்களத்துக்குப் போய்த் தரிசனம் செய்து கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குப் போகும் வழி என்ன?'' என்று எழுதினேன். இப்படி இப்படிப் போக வேண்டும் என்று தெளிவாக விடை வருமென்று எதிர்பார்த்தேன். ஆனால்—?

உடனே கடிதம் வந்தது. ''நீங்கள் எர்ணுகுளத்துக்கு வந்துவிடுங்கள். மற்றவற்றை யெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். நான் இவ்வளவு காலம் இங்கே இருந்தும் திருவஞ்சைக்களம் போனதில்லை. உங்களோடு வந்து பார்க்க எண்ணுகிறேன்'' என்று நாகப்பன் எழுதியிருந்தார். பண்பாடு என்பது எப்படி எப்படியெல்லாம் உருவெடுக்கிறது பார்த்தீர்களா ?

எனக்குப் பேரானந்தம் உண்டாகிவிட்டது. உடனே போட்டோக் கலைஞர் திரு ராமகிருஷ்ணனைச் சென்னைக்கு வரச் செய்தேன். இருவரும் கொச்சி எக்ஸ்பிரஸ்ஸில் புறப்பட்டுவிட்டோம். எங்கள் வரவைப்பற்றி ஒரு கடிதம் நாகப்பனுக்கு எழுதிப் போட்டுவிட்டு, எப்படிப் போகிறது, எது வழி, எவ்வளவு காலம் ஆகும் என்ற கவலைகளையெல்லாம் மறந்துவிட்டுப் புறப்பட்டேன்.

நேரே எர்ணுகுளம் போனேன். கொச்சி, எர்ணுகுளம் என்ற இரண்டும் அருகில் இருப்பவை என்று அங்கே போன பிறகுதான் தெளிவாகத் தெரிந்தது. 'அந்தப் பக்கங்களில் நூறு நூற்றைம்பது மைல் நீளத்துக்குக் கழிகள் இருக்கின்றன. இருமருங்கும் அழகிய இயற்கை வளங்கள் இருக்கின்றன' என்று யாரோ

சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள் சொன்ன வார்த்தைகள் என் உள்ளத்தே எந்த விதமான உருவத்தையும் பதிவு செய்யவில்லை, நேரே போய்ப் பார்த்து இன்புற்றல்தான் தெளிவாக அந்தக் காட்சிகள் உள்ளத்தே பதிகின்றன. எர்ணுகுளத்துக்கும் கொச்சிக்கும் நடுவே இருப்பது ஒரு பெரிய கழிப் பகுதி. பாலத்துக்கும் இப்பால் எர்ணுகுளம் ; அப்பால் கொச்சி.

போன அன்று திரு நாகப்பனுடைய உதவியால் கொச்சியையும் எர்ணுகுளத்தையும் பார்த்தேன். கொச்சியில் இயற்கையாகவே கடற் பகுதி வளைந்து கொடுத்து ஒரு பெரிய ஏரியைப்போல இருக்கிறது. இந்த இயற்கைத் துறைமுகத்தில்தான் கப்பல்கள் வந்து தங்குகின்றன. கொச்சி நகரம் கேரள அரசாங்கத்தைச் சார்ந்தது. இந்தத் துறைமுகமும் அதைச் சார்ந்த காரியாலயங்களும் சென்னை அரசாங்கத்தைச் சார்ந்தன. அந்த அழகிய துறைமுகத்தைக் கண்டேன்.

எர்ணுகுளத்துக்கு அருகில் திருப்புனித்துறை என்ற ஊர் இருக்கிறது, அவ்விடத்தில் கொச்சி அரசர்களின் அரண்மனை இருக்கிறது. அங்கே மருமக்கள் தாயமுறைதான் இருந்து வருகிறது. அரச பதவிக்கு வரும் உரிமையுடைய பலர் கொச்சியில் இருக்கிறார்கள். முதல் உரிமை இரண்டாம் உரிமை, மூன்றும் உரிமை என்று அவர்களுடைய உரிமை எழுநூறு பேர் வரையில் இருக்கிறதாம். அவர்களைத் தம்பிரான்கள் என்று வழங்குகிறார்கள். திருப்புனித்துறை என்ற ஊர் பூர்ணு நதி என்ற ஆற்றங்கரையில் இருப்பதால் அதற்கு அப் பெயர் வந்ததாம்.

சங்க காலத்தில் சேர அரசர்களுக்கு உரியதாகச் சொல்லப் பெறும் பொருநை, ஆன்பொருநை என் பதே அந்தப் பூர்ணு நதி என்று சில ஆராய்ச்சியாளர் கள் சொல்வார்கள்.

கேரள ராஜ்யத்து ஆலயங்களில் தூய்மை அதிகம். நான் திருப்புனித் துறையில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்றேன். அரசராலு லும் மேலே ஆடையோ சட்டையோ அணிந்து கொண்டு கோயிலுக்குள் செல்லக்கூடாது. கோயில் வாசலில் நம் நாட்டில் உள்ளது போன்ற கோபுரத் தைக் காண இயலாது. தேரின் தட்டுப் போலவும் சீன தேசத்துக் கட்டிடங்களைப் போலவும் மரத் தினல் அமைத்த ஒருவகையான கோபுரத்தைத்தான் காணலாம் விமானமும் மரத்தால் ஆனதே. சில கோயில்களில் விமானத்தைச் செப்புத் தகடுகளால் வேய்ந்திருக்கிறார்கள். உள் பிராகாரம் மரத்தாலான சுவர்களை உடையது. அந்தச்சுவர் முழுவதும் ஆயிரக் கணக்கான இரும்பு அகல் விளக்குகளை அடித்திருக் கின்றனர். உற்சவ காலங்களில் அத்தனை விளக்கு களையும் ஏற்றுகிறார்கள். ஒவ்வொரு கோயிலிலும் சந்நிதிக்குமுன் ஒரு மேடை இருக்கிறது. அதற்கு அப்பால் துவஜஸ்தம்பமும் அதற்கும் அப்பால் ஏழு அடுக்குள்ள பெரிய வெண்கலத் தீபமும் வைத்திருக் கிறார்கள். கோயிலைச் சுற்றி வலம்வரும் இடத்தில் கருங்கல்லால் தளம் அமைத்திருக்கிறார்கள். விடியற் காலையிலேயே நீராடிவிட்டு ஆடவரும் மகளிரும் ஆலய தரிசனம் செய்துகொள்கிறார்கள். எவ்வளவு குளிரானாலும் அதற்கு அஞ்சுவதில்லை.

அவர்களுடைய பக்தி பொதுவானது; சமரச நிலையில் உள்ளது. பலருக்கு விஷ்ணு, சிவன் இரண்டு மூர்த்திக்கும் வேறுபாடு தெரியவில்லை. எந்தத் தெய்வமானாலும் அவர்களுக்கு அப்பன்தான். காளி கோயில்களில் எழுந்தருளியிருக்கும் அம்மையைப் பகவதி என்று சொல்கிறார்கள். மலையாள பகவதி என்று இங்கே நாம் சொல்லிக்கொள்கிறோம் அல்லவா? மற்றப்படி எந்தச் சாமியானாலும் தனிப் பேர் இல்லை. திருப்புனித்துறைக் கிருஷ்ணனுக்குத் திருப்புனித்துறை அப்பன் என்று பேர்; எர்ணாகுளத்தில் உள்ள சிவபெருமானுக்கு எர்ணாகுளத்தப்பன் என்று பேர்; குருவாயூர்க் கிருஷ்ணனைக் குருவாயூரப்பன் என்றும், வைக்கத்து மகாதேவனை வைக்கத்தப்பன் என்றும் வழங்குவது கேரள சம்பிரதாயம்.

திருப்புனித்துறைக் கிருஷ்ணன் வடிவழகு சொட்டும் பெருமான். திருமேனி முழுவதும் தங்கக் கவசம் சாத்தியிருந்தார்கள். திருமுகத்துக்குக்கூடக் கவசம் போடும் வழக்கம் மலையாள தேசத்தில் இருக்கிறது.

நான் போனபோது எர்ணாகுளத்தில் உற்சவம். உற்சவத்தில் தேரோ, இறைவன் பவனியோ இல்லை. வரிசையாக யானைகளை அலங்கரித்துக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். ஏராளமான பணச் செலவில் வெடியும் வாணமும் கொளுத்துகிறார்கள். எர்ணாகுளம் கோயிலில் மரச்சுவரில் பதித்திருந்த அத்தனை விளக்குகளையும் ஏற்றியிருந்தார்கள். ஒரே ஜோதிமயமாக இருந்தது அந்தக் காட்சி. கோயில் பிராகாரத்தில் ஓரிடத்தில் பாட்டுக்கச்சேரி நடந்துகொண்டிருந்தது.

மற்ருேர் இடத்தில் சிறுமியர் கிளிப்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள். பின்னும் ஓரிடத்தில் ஒருவர் தலையில் பட்டுத் தலைப்பாகையுடன் கையை வீசிக் கொண்டு அங்கும் இங்கும் நடந்தபடியே கதாப் பிரசங்கியைப் போல ராகத்துடன் கதை சொல்லிக் கொண் டிருந்தார். பிரசாதமாகத் தீர்த்தமும் சந்தன மும் கொடுக்கிருர்கள். அந்தச் சந்தனத்தை நெற்றி யிலே விபூதியைப் போலத் தீற்றிக் கொள்கிருர்கள். பிரசாதம் தரும் பூசகர், கையில் படாமல் வீசி எறிகி ருர்.

எர்ணுகுளம் கோயிலில் மகாதேவர் சந்நிதி மாத் திரம் உண்டு; அம்பிகையின் சந்நிதி இல்லை. அந்தப் பக்கங்களில் எல்லாக் கோயில்களிலும் அப்பனைத் தான் தரிசிக்கலாமாம்; அம்மை அங்கே இருப்பதில்லை யாம். அம்மைக்குத்தான் தனியே கோயில் கட்டிப் பகவதி என்று வழங்குகிருர்களே!

எர்ணுகுளத்துத் தமிழ்க் கோயிலையும் பார்த்தேன்; தமிழ்ச் சங்கத்தைத்தான் சொல்கிறேன். திருக்குறள் வகுப்பை அன்று தொடங்கினுர்கள். நான் ஒரு சொற் பொழிவு ஆற்றினேன். அமைதியான முறையில் தமிழ் அன்பர்கள் இந்தத் தமிழ்ச் சங்கத்தை நடத்தி வரு கிருர்கள்.

மறுநாள் காலையிலேயே திருவஞ்சைக்களம் புறப் படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார் நாகப்பன். தமிழ்ச்சங்கத்தின் பாதுகாவலரில் ஒரு வரும் தமிழ்த் தெய்வமாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களின் உறவினருமாகிய திரு முத்து சாமி ஐயர் என்ற அன்பர் எங்களுக்கு நல்ல விருந்து அளித்துத் தூங்க வைத்தார்.

திருவஞ்சைக் களத்துக்குக் கழியில் இருபது மைலுக்குமேல் செல்ல வேண்டும். திரு நாகப்பன் இந்த யாத்திரைக்காகத் தனியே ஒரு விசைப் படகை ஏற்பாடு செய்திருந்தார். அது மட்டுமல்ல. இரண்டு நாட்களுக்கு முன்பு அந்தப் படகில் ஏறித் திருவஞ்சைக் களத்துக்குப் போய் விவரங்களை விசாரித்தும் வந்திருந்தார்.

ஆகவே மறுநாள் காலை ஏழு மணிக்கு விசைப் படகில் திரு நாகப்பனுடனும் கலைமகள் போட்டோக் கலைஞர் ராமகிருஷ்ணனுடனும் வேறு சில நண்பர்களுடனும் புறப்பட்டேன். நண்பகல் உணவுகூட எங்களுடன் வந்தது. அந்தப் புளியோரையும், தயிருஞ்சாதமும் எங்கள் பசிக்கு எவ்வளவு சுகமாக இருந்தன என்பதை அன்று நடுப்பகலில் உணர்ந்தோம்.

எர்ணுகுளத்தில் கடலின் பகுதி தேக்கமாக இருக்கிறது. அதிலிருந்து நீண்ட அகன்ற கழி மைல் கணக்கில் பிரிந்து செல்கிறது. வெவ்வேறு திசையில் இந்தக் கழிகள் இருக்கின்றன. அந்தப் பக்கங்களில் பண்டங்களை மிக எளிதில் மலிவாக இந்தக் கழிகளின் வழியாகக் கொண்டு வருகிறார்கள். நிலப் பாதையைப் போலவே இந்த நீர்ப்பாதையாகிய கழிகள் பயன்படுகின்றன. விசைப் படகுகளும், பாய் மரப் படகுகளும், தோணிகளும் இந்தப் புனற் சாலையில் எங்கே பார்த்தாலும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

நாங்கள் ஏறின விசைப் படகுக்கு அசோகா என்று பேர். அது ஏழு குதிரையாற்றல் உடையது. அதிக ஆழம் இல்லாத இடங்களில் அதைச் செலுத்த

முடியாது. படகு புறப்பட்டது. மணிக்கு ஆறு மைல் வேகத்தில் சென்றது. சில இடங்களில் இன்னும் மெதுவாகச் சென்றது. கீழ்ப்பக்கத்தில் வானவெளி யில் சூரியன் தன் யாத்திரையைத் தொடங்கி யிருந் தான். அவனை அந்த நீர்ப் பரப்பினிடையில் இருந்து கொண்டு பார்ப்பதே ஓர் ஆனந்தம். கழியின் இரு மருங்கும் அடர்ந்த தென்னஞ்சோலைகள். அங்கங்கே சிறிய சிறிய ஊர்கள். தமிழ்நாட்டு நெய்தல் நிலத் தில் அத்தகைய வளப்பத்தைக் காண முடியாது. எங்கே பார்த்தாலும் தென்னமரந்தான்.

பெரிய கழியின் இடையில் சில திட்டுக்கள் இருக்கின்றன. அவற்றைத் துருத்தி என்று சொல் கிருர்கள். அது நல்ல தமிழ்ச் சொல். நாம் அதை மறந்துவிட்டோம்; நம்முடைய மலைநாட்டுச் சகோதரர்கள் மறக்கவில்லை. ஆற்றுக்கு நடுவிலே உள்ள திட்டுக்குத் துருத்தி என்று பெயர். இலக்கியங் களில் இந்தச் சொல்லைக் காணலாம். அதற்கு உரை யாசிரியர்கள் "ஆற்றிடைக் குறை" என்று பொருள் எழுதியிருப்பார்கள். இங்கே கழிகள், ஓடாத ஆறு களைப் போல இருக்கின்றன. அவற்றினிடையே உள்ள திட்டுக்களைப் பழந் தமிழ்ச் சொல்லால் துருத்தி என்று மலையாளிகள் சொல்கிருர்கள்.

சில இடங்களில் பெரிய கழியிலிருந்து சிறிய கழி ஒன்று பிரிந்து வளைந்து சென்று மறுபடியும் வந்து கூடுகின்றது. இதனிடையே பெரிய தீவு இருக் கின்றது.

இந்தக் கழியில் நடைபெறும் மிகவும் முக்கிய மான தொழில் மீன் பிடிப்பது. சில இடங்களில் மிகவும் உயரமான ஏற்ற மரத்தைப் போலச் சாய்வாக

இரண்டு மரங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்த இரண்டுக்கும் இடையிலே விரிவான வலையைக் கட்டி யிருக்கிறார்கள். அந்த மரங்களைத் தாழ்த்தி மீண்டும் மேலே எழச் செய்யும் வகையில் அந்த அமைப்பு இருக்கிறது. மரங்களைத் தாழ்த்தும் போது அந்தப் பெரிய வலை கழிக்குள் அமிழ்ந்து விடுகிறது. சிலபோது அப்படியே விட்டுவைத்து மறுபடியும் மரத்தை நிமிர்த்துகிறார்கள், வலை மேலே எழுகிறது. அதில் பல மீன்கள் அகப்படுகின்றன. இந்தக் குதிரை மர வலைகளைச் சீனா தேசத்தில் அதிகமாகப் பயன்படுத்துகிறார்களாம். பெரிய படகுகளிற் சென்றும் சிறிய கட்டுமரத்தில் சென்றும் வலை வீசி மீன் பிடிக்கிறார்கள். அந்த வலைஞர்கள் எவ்வளவு லாகவமாக வலையை வீசுகிறார்கள்! ஒரு சிறிய கட்டுமரத்தில் தூண்டிலும் கையுமாக அமர்ந்து பொறுமையோடு காத்திருக்கும் வலைஞர்களையும் அங்கே காணலாம். விளையாட்டாகச் சிறிய பையன்கள் கூட ஒரு தூண்டிலையும் ஒரு கட்டுமரத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுவார்கள் என்று தோன்றுகிறது. சில இடங்களில் கழி சிறிய கால்வாயைப் போல இருக்கிறது. இரு மருங்கும் உள்ள தென்னமரங்கள் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு கழியின்மேல் பச்சை விதானம் அமைத்தாற்போல நிற்கின்றன. நெடுந்தூரத்துக்குத் தென்னங் குலைகளைக் கட்டிப் பச்சைப் பந்தல் போட யாரால் முடியும்? நெய்தல் நிலமகள் அங்கே அத்தகைய அழகுப் பந்தலைப் போட்டுக்கொண்டு கொலு வீற்றிருக்கிறாள்.

கழியில் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போவது மிக எளிது. கார்களைக்கூட ஓடத்தில்

ஏற்றிக்கொண்டு வந்து விடுகிருர்கள். ஒரு கரையி லிருந்து மறு கரையில் உள்ள பள்ளிக்கூடத்துக்குச் சின்னஞ்சிறு குழந்தைகள் போகிருர்கள். எப்படித் தெரியுமா? சின்னக் கட்டுமரம்; அதில் ஒரு துடுப்பு. நாலு பையன்களாகச் சேர்ந்து கொண்டு அதில் ஏறிக் கொள்கிருர்கள். அவர்களே துடுப்பினுல் ஓடத்தைத் தள்ளிக்கொண்டு போய் விடுகிருர்கள். ஓடக்காரன், காவற்காரன் என்ற பேச்சே இல்லை. நமக்கோ அந்தக் கழியைப் பார்த்தால் பாம்பு நடுவிலே கிடக்கிறது போலத் தோன்றுகிறது. அவர் களுக்கோ ஒரு வீதியிலிருந்து மற்ருெரு வீதிக்குப் போகிறது போல இருக்கிறது, கழியைக் கடப்பது.

படகுகளில் எல்லாப் பண்டங்களும் வருகின்றன. விசைப் படகுக்குப் பின்னுலே இரண்டு மூன்று பாரப் படகுகளை இணைத்து அவற்றில் பண்டங்களைக் கொண்டு போகிருர்கள்.

நோக்கும் நிதியம் பலஎத் தனையும்
கலத்தில் புகப்பெய்து கொண்டேற நுந்தி
ஆர்க்கும் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே !

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிருர். அந்தக் காலத்தில் இப்படித்தான் பெரிய மரக்கலங்களில் பல வகையான விலையுள்ள பண்டங்களைக் கொண்டு போயிருக்க வேண்டுமென்று இந்தப் பாட்டிலிருந்து தெரிகிறதல்லவா ?

முதலில் திருவஞ்சைக்களத்துக்குப் போய் விட்டுப் பிறகு கொடுங்கோளூர் போகலாம் என்று எண்ணினேம். ஆனுல் அப்படிச் செய்ய முடிய

வில்லை. கழியில் காலை நேரங்களில் தண்ணீர் சிறிது வடியும். திருவஞ்சைக் களத்துக்கு ஒரு கிளைக் கழியில் போக வேண்டும். அதில் ஆழம் போதாமையால் நேரே கொடுங்கோளூருக்குப் போனோம். 12 மணிக்கு மேல் கடல் ஓதம் மல்குமாகையால் திருவஞ்சைக்களத்துக்குப் போவது எளிதாக இருக்கும் என்று படகுக்காரர் சொன்னார். கொடுங்கோளூர்தான் சேரமான் இருந்த இடம். திருவஞ்சைக்களம் அவ்விராசதானியில் உள்ள கோயில். ஆகவே சேரமான் ஊருக்குப் போய்விட்டு அங்குள்ள ஆலயத்துக்குப் போவதும் ஒரு வகையில் முறைதான் என்று எண்ணினோம். பன்னிரண்டு மணிக்குக் கொடுங்கோளூரை அடைந்தோம். படகுப் பிரயாணத்தின் இன்பத்தால் ஊக்கம் பெற்றுக் கொடுங்கோளூர்த் தரையில் கால் வைத்தோம்.

# கொடுங்கோளூர்

ஆங்கிலத்தில் முற்காலத்தில் எழுதியுள்ள சரித்திரப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தால் போர்த்துக்கீசியர்களும் மற்றவர்களும் இந்தியாவின் மேல்கரையிலே வந்து இறங்கின செய்தியைக் காணலாம். இந்தியாவை மேல்நாட்டினரின் சந்தையாக்குவதற்கு அஸ்திவாரமாகக் கப்பலில் வந்து இந்நாட்டை அடைந்த வாஸ்கோடகாமா கேரள நாட்டில்தான் வந்து இறங்கினுன். அந்தச் சரித்திரங்களை வாசிக்கும்போது கிராங்கனூர், கிராங்கனூர் என்ற பெயர் அடிபடும். அது இன்ன ஊர் என்று தெரிந்துகொள்ளாமல் புத்தகத்தை மட்டும் படிக்கிறவர்களுக்கு அது குரங்கனூரோ என்ற ஐயம் தோன்றும்.

மேல்நாட்டு மக்கள் இந்த நாட்டுப் பெயர்கள் தம் வாயில் நுழையாமல் மாற்றி வழங்கிய பேர்கள் ஒன்ரு இரண்டா? வெள்ளைக்காரத் துரைமார்கள் அப்படி மாற்றியது அதிசயமன்று. இந்த நாட்டில் உள்ள கறுப்புத் துரைகளும் தங்கள் ஊர்களின் இயற்கையான பெயர்களை வெள்ளைத் துரைகளைப் போல மாற்றிச் சொல்வதில் இன்பம் கண்டார்கள். தூத்துக்குடி இன்னும் ட்யூடிகொரின் என்ற திருநாமத்தை உதிர்க்கவில்லை. திருநெல்வேலி இன்னும் சிலர் திருவாக்கில் டின்னவெல்லியாகவே இருக்கிறது. மெட்ராஸுக்குப் பக்கத்தில் ஸெட்ராஸ் என்ற ஊர் இருக்கிறதே, அது உங்களுக்குத் தெரியுமோ? பல பேருக்கு அப்படி ஓர் ஊர் இருப்பது தெரியாது. சதுரங்கப்பட்டணம் என்று

மகாபலிபுரத்துக்கு அருகில் ஓர் ஊர் இருக்கிறது. யாரோ ஒரு வெள்ளைக்காரன் வாக்கில் அது வரவில்லை. சதுரங்கப்பட்டணம் என்ற நீண்ட பெயரை ஸட், ஸட், ஸட் என்று திக்கித் திக்கி உச்சரிக்க முயன்று தடுமாறியிருக்கிருன். கடைசியில் மெட்ராஸ் பக்கத்தில் இருப்பதால் அதை ஸெட்ராஸ் ஆக்கிவிட்டான். இன்றும் அதை அப்படிச் சொல்லும் நாகரிகப் பேர்வழிகள் இருக்கிருர்கள்,

கிராங்கனூர் என்பதும் அப்படித் துரை மக்கள் திருவாக்கில் உருமாறிய பெயர். அதைச் சரியாகச் சொல்ல வேண்டுமானல் க்ராங்கனோர் (Cranganore) என்றுதான் சொல்ல வேண்டும். பெரிய புராணம் முதலிய தமிழ் இலக்கிய நூல்களில் வரும் கொடுங்கோளூரைத்தான் அப்படி வழங்கினர்கள்; இன்றும் கறுப்புத் துரைமார் சிலர் வழங்குகிருர்கள்.

மலையாளிகள் அதைக் கொடுங்ஙலூர் என்று சொல்கிருர்கள். அவர்கள் மெல்லினத்தில் ஆசையுடையவர்கள். கொடுங்கல்லூர் என்பதே அப்படி உச்சரிக்கப் பெறுகிறது. கொடுங்கோளூர் மாகாத்மியத்தைப் பார்த்தால் அதைக் கோடிலிங்கபுரம் என்று சொல்லுகிறது. இப்படி வெவ்வேறு உருவத்தில் அந்த ஊருக்குத் திருநாமம் அமைந்தாலும் அதன் பழம் பெயர் கொடுங்கோளூர் என்பதுதான்; அதற்கு மகோதை என்றும் ஒரு பெயர் உண்டென்று பெரிய புராணத்தால் அறிகிருேம்.

இந்தக் கொடுங்கோளூர்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தோழராகிய சேரமான் பெருமாள் நாயனர் இருந்து அரசாண்ட இடம். அந்தக் காலத்தில் இது பெரிய நகரமாக இருந்திருக்க வேண்டும்.

சேரமான் வாழ்ந்த இடத்தில் இன்றும் இடிபாடுகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிப் பின்பு சொல்கிறேன்.

நாங்கள் கொடுங்கோளூருக்குப் போவது தெரிந்த அன்பர்கள், "கொடுங்கல்லூர்ப் பகவதியைத் தரிசிக்கப் போகிறீர்களா? மிகவும் சக்தியுள்ள தெய்வம்" என்று சொன்னார்கள். அந்த ஊர் சேரமான் பெருமாள் ஊர் என்றோ, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து தங்கியிருந்த ஊர் என்றோ அங்குள்ளவர்களுக்குத் தெரியாது. கொடுங்கோளூருக்கு இன்று உள்ள பெருமை அங்கே எழுந்தருளியிருக்கும் பகவதியினால் தான். ஆகவே அந்தப் பகவதியின் திருக்கோயிலுக்குப் போனோம். அந்தக் கோயிலும் எர்ணுகுளத்தில் உள்ள கோயிலைப் போலவே இருக்கிறது. பகவதி அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறாள். சேவார்த்திகள் கூட்டம் கூட்டமாக வந்து செல்கிறார்கள். இந்தப் பகவதியைப் பற்றிப் பல பாட்டுக்கள் மலையாளத்தில் இருக்கின்றன. முன்பு இங்கே பௌத்தர்களுடைய ஆதிக்கம் அதிகமாக இருந்ததாம். பிறகு ஹிந்துக்கள் அவர்களை ஓட்டிவிட்டார்கள். பௌத்தர்களைப் பச்சை பச்சையாகத் திட்டும் பாடல்களை முன்பு இங்கே பாடி வந்தார்களாம். அரசாங்கத்தார் அப்படிப் பாடுவதை நிறுத்தி விட்டார்களாம்.

பகவதியின் சந்நிதிக்கு முன்னே சண்டிகேசுவரியின் விக்கிரகம் திறந்த வெளியில் இருக்கிறது. அந்த உருவத்தின்மேல் தவிட்டைப் போட்டிருந்தார்கள். பகவதிக்கு உயிரோடு ஆடுகளை வாங்கிவிடுவது வழக்கம். கோயிலில் உள்ள ஆடுகள் சண்டிகேசுவ

ரியின்மேல் அபிஷேகமாகும் தவிட்டை நாவால் வருடி உண்ணுகின்றன. அந்த அம்பிகைக்குத் தவிட்டபிஷேகத்தைவிட இந்த ஆடுகளுடைய நாக்கின் பரிசம் அதிக இன்பத்தை அளிக்குமென்று தோன்றுகிறது. பகவதிக்கு அருகே இடப்பக்கத்தில் ஏழு மாதாக்களுடைய சந்நிதி இருக்கிறது. அவர்களோடு விநாயகரும் இருக்கிறார். சந்நிதியில் தெற்கு நோக்கிக் கோடிலிங்கபுரேசர் என்ற திருநாமத்தோடு சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார்.

பகவதி எட்டுக் கரங்களும் மூன்று கண்களும் கோரப் பற்களும் உடையவளாக வீற்றிருக்கிறாள். அப்பெருமாட்டியின் உருவத்துக்குக் கீழே யந்திரங்களும் திருவாசியும் வைத்து வழிபடுகிறார்கள். வலப்பக்கத்தில் ஒரு கர்ப்பக்கிருகம் இருக்கிறது. பகவதியின் கர்ப்பக்கிருகத்திலிருந்தே அதற்கு வாயில் இருக்கிறது. ஆனால் அந்த வாயிலை அடைத்திருக்கிறார்கள். வாயிலுக்கு முன் திருவாசியை வைத்திருக்கிறார்கள். பகவதியின் கர்ப்பக்கிருகத்துக்கு வெளியில் மூடப்பட்டிருக்கும் திருக்கோயில் விமானம் இருக்கிறது, அதனுள் என்ன இருக்கிறதென்று தெரியவில்லை.

அங்குள்ள மணியகாரரை விசாரித்தேன். "இங்கே ஆதிசங்கராசாரியார் வந்து ஒரு சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்தார். அதைத்தான் இதற்குள் வைத்திருக்கிறார்கள். அது மிகவும் உக்கிரமாக இருந்ததனால் வாயிலை அடைத்திருக்கிறார்களாம்" என்றார். இப்படி, "அடைத்திருக்கிறார்களாம்", "வைத்திருக்கிறார்களாம்" என்று சந்தேகக் குறிப்பாகிய ஆம் போட்டுச் சொல்லும் செய்திகளை

அப்படியே உண்மை என்று எடுத்துக் கொள்ளவும் முடியாது; எல்லாம் பொய் என்று தள்ளிவிடவும் முடியாது. ஒருவர் சொல்ல மற்றொருவர் கேட்டுச் சொல்ல வருகிற இத்தகைய செய்திகளையே கர்ண பரம்பரைச் செய்திகள் என்று சொல்வார்கள். கண்ணினாலே காண முடியாமல் காதினாலே கேட்டுக் கேட்டு வருவன என்பதனால் அப்படிச் சொல்கிறார்கள்.

“சண்டிகேசுவரிக்கு ஏன் தவிட்டை அபிஷேகம் செய்யவேண்டும்?” என்று கேட்டேன்.

“காச நோய் உள்ளவர்கள் இந்த அம்பிகையைப் பிரார்த்தித்துக் கொள்வார்கள். நோய் தீர்ந்தவர்கள் தம்முடைய பிரார்த்தனையை நிறைவேற்றுவார்கள். அதுதான் இது” என்றார் மணியகாரர்.

“தவிட்டினால் அபிஷேகம் செய்வதாகவா பிரார்த்தனை செய்துகொள்வார்கள்?” என்றேன்.

“ஆம்” என்று விடை வந்தது. காச நோய் தீர்ந்த பக்தர்கள் இடும் தவிடு அங்கே உள்ள ஆடுகளுக்கு உணவாக உதவுகிறது. அன்பர்களுக்குக் காசமும் ஆடுகளுக்குப் பசியும் தீரும்படியாக அருள் செய்யும் ஸ்ரீ சண்டிகேசுவரிக்கு ஒரு கும்பிடு போட்டு நகர்ந்தோம்.

கோயில் மணியகாரர் மற்றொரு செய்தியைச் சொன்னபோதுதான் சற்று என் நினைவை இலக்கிய உலகில் புகுத்த வேண்டி வந்தது.

“இந்தப் பகவதியைத்தான் கண்ணகி என்று சொல்கிறார்கள்” என்றார் அவர். யாரோ தமிழ் நாட்டுக்காரர்களே அந்தச் செய்தியை அவர் காதில்

போட்டிருக்க வேண்டும். கண்ணகி காளியின் அவதாரம் என்று தமிழ்நாட்டுக் கோவலன் கதையும், இலங்கை நாடோடிப் பாடல்களும் சொல்கின்றன. இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் அப்படிச் சொல்லாவிட்டாலும் வேட்டுவவரியில் ஒரு குறிப்பு வருகிறது.

கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கி நடந்து வரும்போது இடையில் பாலை நிலத்தின் வழியே செல்ல நேர்ந்தது. கடுவெயிலாக இருந்தமை யால் அங்கே இருந்த துர்க்கை கோயிலின் ஒரு பக்கத் தில் ஒதுங்கியிருந்தனர். அப்போது அந்நிலத்தில் இருந்த வேட்டுவர் கூடித் துர்க்கைக்குப் பூசையிடத் தொடங்கினர். துர்க்கையைப் பூசிக்கும் பூசாரிச்சி ஆவேசம்வந்து ஆடத் தொடங்கினாள். கணவனோடு அங்கே தங்கியிருந்த கண்ணகியைக் கண்டு, 'இவள் கொங்கச்செல்வி; மேற்கு மலைப்பகுதிகளை உடை யவள்; தென்றமிழ்த்தாய் தவத்தால் பெற்றவள்,' என்று பாராட்டினாள்.

**கணவனோடு இருந்த மணமலி கூந்தலை,**
**"இவளோ, கொங்கச் செல்வி, குடமலை யாட்டி,**
**தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து,**
**ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய**
**திருமா மணி" எனத் தெய்வமுற் றுரைப்ப**

என்று இளங்கோவடிகள் சொல்கிறார். இதன் உரை யில் அரும்பத உரையாசிரியர், 'மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடும் இடம் கூறினபடியாலே இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்றவாறு' என்று எழுதுகிறார். இதனால் கண்ணகி துர்க்கையின்

அவதாரம் என்ற ஒரு செய்தி அரும்பதவுரைகாரர் காலத்தே வழங்கியதென்பது தெரியவரும்.

சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் கண்ணகிக்குத் திருக்கோயில் சமைத்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. வஞ்சி என்பது திருவஞ்சைக்களம், கொடுங்கோளூர் முதலிய ஊர்கள் சேர்ந்த பகுதியே என்று ஆராய்ச்சியாளர் சொல்கின்றனர். சேரர் மரபில் வந்த சேரமான் பெருமாள் இருந்து அரசாண்டது கொடுங்கோளூர் என்று பெரிய புராணக்காரர் சொல்கிறார். அவர் காலத்தில் வஞ்சி என்ற வழக்கு மாறிவிட்டது போலும்.

இலங்கையில் பத்தினித் தெய்வமாகக் கண்ணகியை வணங்குகிறார்கள்; பௌத்தர்களும் ஹிந்துக்களும் வேறுபாடின்றி வழிபடுகிறார்கள். கண்ணகிக்கு முதல் முதலில் கோயில் கட்டியவன் சேரன் செங்குட்டுவன். அதன் பின்னரே கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்னும் அரசன் கண்ணகியை வழிபட்டான். அக்காலத்தில் பௌத்தர்கள் இலங்கையில் கண்ணகி வழிபாட்டை நடத்தியதோடன்றி மூலத் திருக்கோயிலைப் பார்க்கக் கொடுங்கோளூருக்கும் வந்திருக்கலாம். அங்கே வந்து தங்கியபோது தம் சமயப் பிரசாரத்தையும் செய்திருக்கலாம். அது கண்டு வெறுப்புற்ற மலைநாட்டு மக்கள் அவர்களை வைது பாடல்களைப் பாடியிருக்கலாம்; கேரளத்தில் இன்னும் அப்பாடல்கள் வழங்குகின்றன. இப்போது பௌத்தர்களுக்கும் கொடுங்கோளூருக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. அப்படியிருந்தும் இக்கோயிலுக்கு வருகிறவர்கள் பௌத்தர்களைப் பச்சை பச்சையாக வைவதற்குக் காரணம், அந்தப் பழங்கால நிகழ்ச்சிகளென்றே தோன்றுகிறது.

கொடுங்கோளூர்ப் பகவதி என்று இன்று வழிபடும் திருவுருவமே பழைய விக்கிரகமாக இருக்க வேண்டும் என்பதில்லை. மூடிக்கிடக்கும் அறையில் அந்தப் பழைய திருவுருவம் இருந்தாலும் இருக்கலாம்.

பகவதியின் கோயிலுக்குப் புறம்பே ஒரு பக்கத்தில் க்ஷேத்திரபாலராகிய பைரவருடைய கோயில் இருக்கிறது. மற்றொரு பக்கத்தில் ஜ்வரமாலினி என்ற தேவதையின் கோயில் இருக்கிறது. தமிழ் நாட்டு மாரியம்மனைப்போல அம்மை நோய் வந்தால் அந்தத் தேவதையை வழிபடுவார்களாம்.

பாண்டி நாட்டில் 'மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்' கண்ணகியை வழிபட்டதாகச் சிலப்பதிகாரம் சொல்கிறது. வெப்பு நோய் என்பது ஜுரம்; குரு என்பது அம்மை. வேர்வையால் தோற்றும் சிறு கொப்புளத்தை வேர்க்குரு என்று சொல்கிறோம். வேர் என்பது வேர்வை; குரு என்பது நீர்க் கொப்புளம். அம்மையும் கொப்புளமாதலால் அதற்குப் பழம் பெயர் குரு என்பது. கண்ணகி கோயிலுக்கும் அம்மைக்கும் தொடர்பு உண்டு என்ற செய்தியோடு, கொடுங்கோளூரில் உள்ள வழக்கத்தையும் ஒப்புநோக்கினால் இங்கே கண்ணகியின் திருக்கோயில் இருந்திருக்கலாம் என்ற கருத்து வலிமை பெறும்.

வெகுதூரம் ஆராய்ச்சி உலகத்துக்குப் போய் விட்டேன். நாம் இப்போது சுந்தரமூர்த்திகளின் வரலாற்றையொட்டித் தலயாத்திரைசெய்கிறோம். ஆகையால் அதிகமான ஆராய்ச்சியில் தலையிட்டுக்கொண்டால் தலைவலிதான் ஏற்படும்.

கொடுங்கோளூர்ப் பகவதிக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் வாங்கிக்கொண்டோம். "தாயே, திருவஞ்சைக் களத்தைத் தரிசிக்க வந்திருக்கிறோம். நேரே அங்கே போக முடியாமல் கழியில் உள்ள நீர் வற்றியிருக்கிறது. உன் அருளால் இனி நீர் மல்க வேண்டும். திருவஞ்சைக்களத் தரிசனமும் இனிது கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டேன். அர்ச்சனை செய்கிற அடிகள் இருவரும் மணியகாரரும் திருவிழாவுக்கு வாருங்கள் என்று சொன்னார்கள். மணியகாரர் தமிழ் பேசுகிறவர். அவர் பல செய்திகளை எங்களுக்குச் சொன்னார். திருவொற்றியூரில் அம்மன் கோயிற் பூசகர் நம்பூதிரி என்றும், அவருக்கும் இங்கே உள்ள நம்பூதிரிக்கும் உறவுண்டென்றும் சொன்னார்.

பூஜை செய்கிறவர்கள் நம்பூதிரிகள் ; நமக்காக அர்ச்சனை செய்கிறவர்கள் அடிகள். அவர்கள் அப்பாவிகள் ; மலையாளம் பேசுகிறவர்கள். அவர்களையும் ஒரு படத்திற் பிடித்துப் போட்டுக்கொண்டு விடை பெற்றுத் திருவஞ்சைக்களத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

# திருவஞ்சைக்களம்

1

"சுந்தரமூர்த்தி நாயனார் அவிநாசியிலிருந்து மலைநாட்டுத் திருப்பதிகளை வணங்கிவிட்டு வந்துகொண்டிருக்கிறார்" என்ற செய்தி கிடைத்தபோது சேரமான் பெருமாளுக்கு ஒரே குதூகலம் உண்டாகிவிட்டது. அவரோடு பல தலங்களுக்குச் சென்றும், திருவாரூரில் சுந்தரர் வீட்டில் தங்கியும், அவரைத் தம்முடைய வஞ்சிமா நகருக்கு அழைத்து வந்து சில காலம் பலவகை உபசாரங்களைச் செய்து வைத்திருந்தும் இன்புற்ற அவருக்கு மறுபடியும் நம்பியாரூரரோடு காலம் கழிக்கலாம் என்ற ஆர்வம் பெருகியது. உடனே ஊராரெல்லாரும் அவரை மரியாதையோடு எதிர் கொண்டு அழைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். சேரர் சுந்தரர் வரவை முரசடித்துத் தெரிவிக்கச் செய்தார்.

> **செய்வ தொன்றும் அறியாது**
> **சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்து, "என்**
> **ஐயன் அணைந்தான் ; எனை ஆளும்**
> **அண்ணல் அணைந்தான் ; ஆரூரிற்**
> **சைவன் அணைந்தான் ; என் துணையாம்**
> **தலைவன் அணைந்தான் ; தாணியெலாம்**
> **உய்ய அணைந்தான் அணைந்தான்" என்று**
> **ஓசை முரசம் சாற்றுவித்தார்**

என்று சேக்கிழார் பாடுகிறார். அமைச்சர்களோடும் பெரியோர்களோடும் சுந்தரரை எதிர்கொண்டுசென்று

வரவேற்ருர். தமிழின் பெருமாளாகிய அவரைச் சேரமான் பெருமாள் யானையின் மேல் ஏற்றித் தாம் பின் அமர்ந்து குடை பிடித்தார். என்ன அன்பு! ஊர் முழுவதையும் மக்கள் அலங்கரித்திருந்தார்கள். எங்கும் தோரணங்கள்; வாழை, கமுகு முதலிய மரங்கள்; கொடிகள் இருமருங்கும் இசைக் கருவிகள் முழங்க, அந்தணர் மறையொலி எழுப்ப, நடனமாதர் நடமிட, சங்கும் முரசமும் முழங்கச் சுந்தரர் திருவீதி வழியே எழுந்தருளினர்.

அவரை அரண்மனை வாயிலில் இறக்கிக் கைலாகு கொடுத்து உள்ளே அழைத்துச் சென்ருர் சேரர் பிரான். சிங்காதனத்தில் அமரச் செய்து உபசாரம் செய்தார். அவருடைய வருகையைக் கொண்டாடிப் பொன்னும் மணியும் வாரி வழங்கினர்.

சுந்தரர் வஞ்சியில் தங்கி அப் பகுதியிலுள்ள தலங்களுக்குப் போய்த் தரிசித்துக்கொண்டு வந்தார். திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்கும் சென்று வழிபட்டார்.

அவருக்கு உலக வாழ்க்கை இனிப் போதும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இறைவனுடைய கட்டளைப்படி இவ்வுலகில் திருவவதாரம் செய்தவர் அவர். இறைவன் வரையறுத்த காலம் நிறைவேறும் சமயம் வந்துவிட்டது. ஆகவே, திருவஞ்சைக் களத்தில் ஒருநாள் தரிசனம் செய்துவிட்டுத் திருப்பதிகம் பாடுகையில் தம் கருத்தை வெளியிட்டார். "இனி இங்கே மனை வாழ்க்கையை மேற்கொண்டிருத்தலை வெறுத்தேன். இவ்வாழ்க்கையை இனி நிறைவுறுத்த வேண்டும்" என்ற குறிப்பை அமைத்துப் பாடினர்.

**"வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழித்தேன்;**
**விளங்கும்குழைக் காதுடை வேதியனே!**
**இறுத்தாய்இலங் கைக்கிறை யாயவனைத்**
**தலைபத்தொடு தோள்பல அற்றுவிழக்**
**கறுத்தாய்கடல் நஞ்சமு துண்டுகண்டம்**
**கடுகப்பிர மன்தலை ஐந்திலும்ஒன்று**
**அறுத்தாய்கட லங்கரை மேல்மகோதை**
**அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே!"**

என்பது அப்பதிகத்தில் ஒரு பாட்டு.

அவருடைய விருப்பத்தை அறிந்த சிவபெருமான் தேவர்களிடம், "நம்பியாரூரனை வெள்ளை யானையின் மேல் அழைத்து வாருங்கள்" என்று பணித்தான். அவர்கள் திருவஞ்சைக்களம் சென்று திருக்கோயில் வாயிலில் நின்றனர். சுந்தரர் கோயிலிலிருந்து வெளியே வரவும், தேவர்கள் இறைவன் பணித்த படியைச் சொன்னார்கள். அவர் சேரமான் பெருமானை நினைத்தார். பின்பு யானையின்மேல் இவர்ந்து தேவர்களுடன் திருக்கயிலைக்குப் புறப்பட்டுவிட்டார்.

இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற சேரமான் பெருமாள் உடனே தம் குதிரையின்மேல் ஏறி மிக விரைவாகத் திருக்கோயிலை நோக்கி வந்தார். சுந்தரர் வான்வழியே போவதை உணர்ந்து தம் குதிரையின் காதில் பஞ்சாட்சர மந்திரத்தை ஓத, அது வானில் பறந்து செல்லத் தொடங்கியது. விரைவாகச் சென்று சுந்தரமூர்த்தி நாயனார் ஏறிச் சென்ற யானையை வலங் கொண்டு அதற்கு முன் செல்லலாயிற்று.

கயிலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த சுந்தரர், "தான் எனை முன் படைத்தான்" என்று ஒரு பதிகம் பாடினார். அதில் இறைவன் வெள்ளை

யானையை அனுப்பித் தம்மை அழைத்துக்கொண்ட பேருனைச் சிறப்பித்துப் பாடினார்.

**"இந்திரன் மால்பிரமன்**
**எழிலார்மிகு தேவரெல்லாம்**
**வந்தெதிர் கொள்ள என்னை**
**மத்தயானை அருள்புரிந்து**
**மந்திர மாமுனிவர்**
**இவன் ஆர்என எம்பெருமான்**
**நந்தமர் ஊரன்என்றான்**
**நொடித்தான்மலை உத்தமனே"**

என்பது ஒரு பாட்டு. கயிலாய மலைக்கு நொடித்தான் மலை என்பது ஒரு பெயர்.

கயிலையை அடைந்த பிறகு யானையினின்றும் இழிந்து சிவபிரான் திருமுன் சென்று விழுந்து பணிந்தார் சுந்தரர். பல காலமாகப் பிரிந்த பிரிவினால் ஆராமை மீதூர நின்றார். "ஊரனே! வந்தாயா?" என்று இறைவன் அன்புடன் கேட்டருளினான்.

சுந்தரருடன் சென்ற சேரமான் பெருமாள் உள்ளே புக முடியாமல் வாயிலில் தடையுண்டு நின்றார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர் அங்ஙனம் நிற்பதை விண்ணப்பித்துக்கொள்ள, அம் மன்னரையும் அழைத்துவரப் பணித்தான் கயிலைக் கடவுள். சேரமான் வந்தவுடன் இறைவன் புன்முறுவல் பூத்த படியே, "நாம் அழையாமல் இங்கே நீ ஏன் வந்தாய்?" என்று கேட்டான்.

அரசர் கைகுவித்து. "எம்பெருமானே, அடியேன் நம்பியாரூரரைப் போற்றியபடியே அவர் யானைக்கு முன்னே வந்தேன். தேவரீர் திருவருள் என்னை

இங்கே அழைத்து வந்துவிட்டது. மற்றொரு காரியமும் உண்டு. அடியேன் திருக்கயிலாய உலா என்று ஒன்றைப் பாடியிருக்கிறேன். அதைத் திருச்செவி சார்த்தியருள வேண்டும். வன்றொண்டருடைய கூட்டுறவு எனக்குக் கிடைக்கும்படி செய்த திருவருளை என்னென்று வாழ்த்துவேன்! என் பாசம் அகன்றது" என்று அன்பு பொங்கக் கூறினார், இறைவன், "உலாவைச் சொல்லுக" என்று கட்டளையிடச் சேரமான் அதை அங்கே அரங்கேற்றினார். அதனைக் கேட்டுத் திருவுள்ளம் மகிழ்ந்த இறைவன், "நீ ஆலாலசுந்தரனுடன் சேர்ந்து இருவரும் நம் கணநாதர்களாக இருப்பீர்களாக!" என்று அருள் செய்தான்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிய, "தானெனை முன் படைத்தான்" என்ற திருப்பதிகத்தைச் சமுத்திரராஜனாகிய வருணனிடம் அளித்துத் திருவஞ்சைக்களத்திற் சேர்ப்பிக்கும்படி சொன்னார். அந்தப் பதிகத்தின் இறுதிப்பாட்டில் இந்தக் குறிப்பு இருக்கிறது.

**"ஊழிதோ றூழிமுற்றும்**
**உயர்பொன் நொடித் தான்மலையைச்**
**சூழ்இசை இன்கரும்பின்**
**சுவைநாவல ஊரன்சொன்ன**
**ஏழிசை இன்றமிழால்**
**இசைந்தேத்திய பத்திவையும்**
**ஆழி கடலரையா**
**அஞ்சையப்பர்க் கறிவிப்பதே"**

என்பது அந்தப் பாட்டு.

சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞான உலாவை அரங்கேற்றும்போது கேட்ட சாத்தர்

(சாஸ்தா) அதை வாங்கிக்கொண்டு வந்து திருப்பிடவூர் என்ற இடத்தில் வெளிப்படுத்தினர். சுந்தரர் பழையபடியே சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டு புரியும் ஆலால சுந்தரராகி எல்லையற்ற இன்ப வாழ்வு பெற்ருர்.

பெரிய புராணத்தின் இறுதிப் பகுதியாகிய வெள்ளானைச் சருக்கத்தில் இந்த வரலாறு வருகிறது. சுந்தரர் வெள்ளை யானையின்மேல் கைலாயம் சென்ற கதையைச் சொல்வதனால் அதற்கு வெள்ளானைச் சருக்கம் என்ற பெயர் வந்தது. அதனோடு பெரிய புராணம் நிறைவடைகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவராக வைத்துப் பாடிய நூலாதலின் இப்படிப்பொருத்தமாக முடித்தார் சேக்கிழார்.

## 2

கொடுங்கோளூர்ப் பகவதியைத் தரிசித்துக்கொண்டு திரும்புகையில் மணி பன்னிரண்டாகிவிட்டது. நல்ல வெயில். நாங்கள் கொண்டுபோயிருந்த புளியோரையையும் தயிருஞ்சாதத்தையும் சாப்பிட்டோம். அப்போது இருந்த பசியில் அவை அமுதமாக இருந்தன. "இப்போது கழியில் தண்ணீர் உயர்ந்திருக்கிறது; திருவஞ்சிக்குளம் போகலாம்" என்று படகுக்காரர் சொன்னர். நிரம்பின வயிற்ருேடு நாங்கள் புறப்பட்டோம். முன்னே சொன்னபடி குறுகலாக இருந்த ஒரு சிறு கழியின் வழியே படகு சென்றது. திருவஞ்சைக்களத்தை அடைந்து ஊருக்குள் சென்ருேம். கொடுங்கோளூரிலிருந்து திருவஞ்சைக்களத்துக்குப் பஸ் போகிறது. சுகமாகப் படகிலே போவதை விட்டு, அந்தப் பஸ்ஸில் போகவேண்டிய நிலை எங்களுக்கு இல்லை.

இப்போது திருவஞ்சைக்களம் சிறிய கிராமமாக இருக்கிறது, திருவஞ்சிக்குளம் என்றுதான் யாவரும் அதனை வழங்குகிறார்கள். களத்தைக் குளமாக்கினார்களோ, குளந்தான் களமாயிற்றோ தெரியவில்லை. எர்ணாகுளம் என்ற பெயர்கூட எர்ணாகளமாக இருக்கலாமோ என்னவோ !

கொடுங்கோளூர், திருவஞ்சிக்குளம் இரண்டும் மூன்று நான்கு மைல் இடையிட்டிருந்தாலும் பழங்காலத்தில் இவை வஞ்சிமாநகரத்தின் பகுதிகளாகவே இருந்திருக்க வேண்டும். அந்த ஊரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றித் தெரித்தவர்கள் மிகவும் குறைவு. ரெயில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் ராகவையர் என்ற தமிழ்ப் பிராமணர் அங்கே இருக்கிறார். அவர் கோயிலில் புராணம் சொல்கிறவராம். புராண சாஸ்திரி என்று அடையாளம் சொன்னால் அவரை அடையலாம். கோயிலைப்பற்றி யாரிடம் விசாரிப்பது என்று வழியிலே கண்டவர்களைக் கேட்டபோது ராகவ ஐயரிடம் அனுப்பினார்கள் அவர்கள். கோயிலுக்கு அருகில் அவர் குடியிருக்கிறார். நல்ல வெயிலில் அவரைத் தேடிக்கொண்டு போனோம். முதலில் குளிர்ந்த நீர் கொடுத்தார். அப்பால் குளிர்ச்சியாகப் பேசினார், ஆண்டுதோறும் கோயம்புத்தூரிலிருந்து அன்பர்கள் வந்து இங்கே வழிபட்டுப் போவதாகச் சொன்னார். தமக்குத் தெரிந்த செய்திகளையெல்லாம் கூறுவதாக அவர் அபயம் அளித்தார்.

"முதலில் இங்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள சேரமான் பறம்பைப் போய்ப் பார்த்து வாருங்கள்'' என்றார் ராகவையர்.

"அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"சேரமான் பெருமாள் அரண்மனை இருந்த இடம் அது. அந்த இடத்தைச் சேரமான் கோயிலகம் என்று சொல்வார்கள்".

நாங்கள் சேரமான் பறம்பை நோக்கிச் சென்ஞேம், வெயில் கொளுத்தும் அந்த வேளையில் நடந்தோம். திருவஞ்சிக்குளத்துக்குத் தெற்கே ஒரு பர்லாங்கு நடந்து சேரமான் பறம்பைக் கண்டோம். அங்கே வெறும்பொட்டல்வெளி இருக்கிறது. அரசாங்கத்தார் ஒரு கூம்பு போன்ற கட்டிடத்தை எழுப்பி அதில் ஒரு கல்லைப் பதித்திருக்கிருர்கள். "சேரமான் பறம்பு; சேரமான் பெருமாள் அரண்மனை இருந்த இடம்" என்று ஆங்கிலத்திலும், 'சேரமான் பறம்பு' என்று மாத்திரம் மலையாளத்திலும் அந்தக் கல்லில் பொறித்திருக்கிருர்கள்.

நாங்கள் காலையில் கழியில் வந்தபோது, "இதோ இங்கேதான் சேரமான் அரண்மனை, கோட்டை எல்லாம் இருந்தன" என்று கழிக்கரையில் இருந்த இடிபாட்டை உடன் வந்தவர்கள் காட்டிஞர்கள். அந்த இடத்தைக் கிருஷ்ணன் கோட்டை என்றும் கோட்டைமுக்கு என்றும் வழங்குகிருர்கள். அதற்கும் நாங்கள் இப்போது பார்த்த சேரமான் பறம்புக்கும் சிறிது தூரம் இருக்கும். கோட்டை முதலியவை விரிவாக இருந்திருக்க வேண்டுமென்று தோற்றியது.

சேரமான் பறம்பைப் பார்த்துவிட்டுத் திருவஞ்சிக்குளத்தில் உள்ள ஆலயத்துக்குச் சென்ஞேம். போகும் வழியில் கோயிலைச் சார்ந்த தீர்த்தம் ஒன்று

இருந்தது. அப்போது கோயில் சாத்தியிருந்தாலும் தர்மகர்த்தர்கள் எங்களுக்காகத் திறந்து விட்டார்கள்.

கோயில் வாசலில் எர்ணுகுளம் முதலிய இடங்களில் உள்ளது போன்ற கோபுரந்தான் இருக்கிறது. அடிப்படை கருங்கல்லால் இருப்பது ஒரு வித்தியாசம். அதில் சில சிற்ப வடிவங்களும் இருக்கின்றன. சேரமான் பெருமாள் குதிரையின்மேல் ஏறிக்கொண்டிருக்கும் நிலையைப் புலப்படுத்தும் சிற்பமும், சுந்தரர் யானையேறிச் செல்வதைக் காட்டும் சிற்பமும், வேறு சில உருவங்களும் இருக்கின்றன.

கோயிலுக்குள்ளே புகுந்தவுடன் முதலில் காட்சி அளிப்பது ஏழு அடுக்குள்ள பெரிய தீபஸ்தம்பம். அது முழுவதும் வெண்கலத்தால் அமைந்தது.

"இங்கே சேரமான் பெருமாள் நாயனுர் வந்து தரிசித்ததற்கு ஏதாவது அடையாளம் உண்டோ?" என்று ராகவையரைக் கேட்டேன்.

"இங்கே அவர் பூஜை செய்த நடராஜா இருக்கிருர். இந்தக் கோயிலில் மாசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் உல்ஸவம் நடைபெறுகிறது. அமாவாசையன்று பூர்த்தியாகிறது. ஏழாம் நாள் உல்ஸவத்தில் சேரமான் பறம்பில் பறை வைத்துவிட்டு வருவார்கள்."

அவர் மலையாளிகள் சொல்வதைப் போல உத்ஸவத்தை உல்ஸவம் என்றே சொன்னுர்.

"பறை வைப்பதா? அப்படி என்ருல்?"

"கூடையில் அரிசி, பழம், வெற்றிலை பாக்கு, தேங்காய் எல்லாம் கொண்டுபோய் வைப்பார்கள்."

"எதற்காக?''

''இங்கே நடக்கும் உல்ஸவத்துக்குச் சேரமான் பெருமாள் பண்டங்களை அனுப்பி வந்தார். அது பரம்பரை பரம்பரையாக நடந்துவந்தது. இப்போது மகாராஜாவுக்குப் பதிலாக ஒரு பரிசாரகர் பரை வைத்துவிட்டு வருகிறார்'' என்று விளக்கினார் புராண சாஸ்திரி.

மற்றொரு செய்தியையும் அவர் சொன்னார். சேரமான் பெருமாள் நாயனார் தம் காலத்தில் சிதம்பரத்திலிருந்து சில உருத்திர கணிகையரை அழைத்துவந்து இந்தக் கோயிலில் திருத்தொண்டு செய்யும்படி ஏற்பாடு செய்தாராம். மூன்று வீட்டார் பல காலமாக இருந்துவந்தார்களாம். இப்போது ஒரு வீடு இல்லை. இரண்டு வீட்டார் மட்டும் இருக்கிறார் கள்.

"அவர்கள் சிதம்பரத்திலிருந்து வந்தவர்கள் என்று எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன்.

"அவர்களே சொல்லிக் கொள்கிறார்கள். அது மட்டும் அல்ல. பூஜையின்போது சுவாமிக்கு விளக் கெடுக்கிறார்கள் அல்லவா? மலையாளத்தில் மற்ற இடங்களில் எல்லாம் ஆண்கள் எடுப்பதுதான் வழக்கம். இங்கே ஆண்கள் எடுப்பதோடு தமிழ் நாட்டைப் போலப் பெண்களும் எடுப்பார்கள்,''

அப்போது எனக்குத் தமிழ்நாட்டுக் கோயிலில் தீபமும் தட்டும் எடுக்கும் உரிமை தளிப் பெண்டு களாகிய உருத்திரகணிகையருக்கு இருந்தது நினைவுக்கு வந்தது.

**அட்டதிக் கும்புகழும் ஆலவாய்ச் சொக்கருக்குத்**
**தட்ட தெடுக்கும் தளியிலாள்**

என்ற விறலிவிடு தூதிலுள்ள கண்ணியும் நினைவுக்கு வந்தது.

"மலையாளத்தில் மற்றக் கோயில்களின் அமைப்பு வேறு; இந்தக் கோயிலின் அமைப்பு வேறு. பரிவார தேவதைகளும் பிராகாரங்களும் தமிழ்நாட்டுக் கோயில்களைப்போல் இருக்கும்" என்று சொல்லிய படியே எங்களை வெளிப் பிராகாரத்துக்குள் அழைத்துச் சென்றார் அந்த வழிகாட்டி.

# அம்மை இல்லா அப்பன்

என்ன ஆச்சரியம்! ஒரு காலத்தில் தமிழ் நாட்டோடு தமிழ் நாடாகச் சேர்ந்திருந்த பகுதி இன்று வேறு மொழி வழங்கும் நாடாகிவிட்டது. சேரமான் பெருமாள் நாயனர் இருந்து அரசாண்ட இடத்தில் மருந்துக்கு ஓரிரண்டு தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. மலையாளத்தில் குழைத்த தமிழை அவர்கள் பேசுகிருர்கள். சேரமான் பெருமாள் சிறந்த தமிழ்ப் புலமை உடையவர். அவர் இயற்றிய பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞான உலா என்ற மூன்று நூல்களும் பதினோராந் திருமுறையில் சேர்ந்திருக்கின்றன. அவருடைய வாக்கானது பழுத்த தமிழ் வாக்கு. அவர் இயற்றிய உலாவை ஆதி உலா என்றும் சொல்வார்கள். முதல் முதலாக உலா என்ற பிரபந்தம் பாடினவர் சேரமான் பெருமாள் நாயனரே.

அவர் மாத்திரம் புலமை பெற்று மற்றவர்கள் தமிழைப் புறக்கணித்தார்கள் என்று சொல்ல முடியாது. அவருடைய புலமை மற்றவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆயினும் ஓரளவு தமிழ்ப் புலமையுள்ள அறிஞர்களும் தமிழன்பு உடையவர்களும் அக்காலத்தில் அவரைச் சூழ இருந்து கொண்டிருந்தார்கள் என்று சொல்வது பிழை ஆகாது. ஒன்பதாவது நூற்ருண்டில் அங்கே இருந்த தமிழ்வளம் நாளடைவில் மறைந்து போயிற்று.

திருவஞ்சைக்களம் தேவாரம் பெற்ற தலம். ஆனல் அந்தத் தேவாரம் அங்கே வழங்கவில்லை,

தமிழ் நாட்டிலேயே தேவாரம் பெற்ற தலங்கள் சில கவனிப்பாரற்றுக் கிடக்கும்போது இதை ஒரு குறை யாகச் சொல்வதற்கு இல்லை. தேவாரம் வழங்கா விட்டாலும் கோயில் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றி அங்கே யாருக்கும் தெரியாது. சேரமான் பெருமானைப்பற்றிக் கேட்டால் ஆளுக்கு ஒன்று சொல்லுகிறார்கள். புராணமும் அல்லாமல் சரித்திரமும் அல்லாமல் ஒரு புத்தகம் மலையாளத்தில் இருக்கிறதாம். அதற்குக் 'கேரளோல்பத்தி' என்று பெயராம். அதில் உள்ள செய்திகளைத்தான் சொல்கிறார்களேயன்றி வேறு ஆதாரமுள்ளதாக ஏதும் சொல்வதில்லை.

"சேரமான் பெருமாள் மெக்காவுக்குப் போய் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துவிட்டார்" என்று ஒருவர் ஓர் அணுக்குண்டைப் போட்டார். "அவருடன் போனவர்களில் சிலர் திரும்பி வந்தார்கள்; இஸ்லாமி யர்களாக வந்நார்கள். அவர்களே கேரளத்தில் வாழும் மாப்பிள்ளைமார்கள்" என்று அவர் சொன்னார். "கொல்லம் ஆண்டே சேரமான் பெருமாளாலே ஏற்பட்டதுதான்" என்றார். அவரிடம் பேசிக் கொண்டே இருந்தால் புற்றீசல்களைப் போலப் புதிய புதிய விசித்திரச் செய்திகள் கிளம்பும் என்ற அச்சத் தால், "சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாருக்குத் தோழராக இருந்தாரே, அதைப்பற்றி உங்கள் கேரளோல்பத்தி ஏதாவது சொல்கிறதோ ?" என்று கேட்டேன்.

"அப்படி ஒன்றும் இல்லையே!" என்றார் அவர்.

"சேரமான் பெருமாள் அறுபத்துமூன்று நாயன் மார்களில் ஒருவர். அவர் திருக்கைலாயத்துக்குச்

சென்றார். ஆதியுலா என்ற நூலை அரங்கேற்றினார். இந்தச் செய்திகளில் ஏதாவது அந்தக் கேரளோல் பத்தியில் உண்டோ?'' என்று மறுபடியும் கேட்டேன்

''அப்படியெல்லாம் ஒன்னும் கண்டிட்டில்லை''. என்று அவர் கூறினார்.

"அப்படியானால் உங்கள் சேரமான் பெருமாள் மெக்காவிலேயே இருக்கட்டும். இங்கே வரவேண்டாம். எங்கள் சேரமான் பெருமாள்நாயனார் திருமுறைகளில் இன்னும் வாழ்கிறார். சேக்கிழார் கூறும் பெரிய புராண வரலாறு எங்களுக்குப் போதும்'' என்று சொல்லி அவரை அனுப்பினேன்,

திருவஞ்சைக்களத்தின் திருவாசலில் கற்சுவரில் தலையில் பாகையுடனும் கையில் வாளுடனும் குதிரையின்மேல் அமர்ந்த கோலத்தில் காட்சி அளித்த சேரமான் பெருமாள் நாயனார் திருவுருவத்தைப் பார்த்தபோது, ''நல்ல வேளை ! பெரியபுராணத்தைப் படித்துச் சேரமான் பெருமாள் குதிரையில் ஏறிக் கைலை சென்ற வரலாற்றைத் தெரிந்து கொண்டவர்கள் இங்கே பிற்காலத்திலும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அமைத்த திருவுருவம் இதோ இருக்கிறதே!'' என்ற ஆறுதல் பெற்றேன்.

திருவஞ்சைக்களத்துக் கோயிலுக்குள் நடந்து கொண்டிருந்தோம். ஆலயம் பிற்காலத்தில் கட்டப் பெற்ற பகுதிகளை உடையது என்று நன்றாகத் தெரிந்தது. எல்லாம் மரத்தினாலே அமைந்த பகுதிகள். மேலே ஓட்டுவில்லை. சில இடங்களில் பெரும்பாலும் மரத்தினாலே மேற்கூரையை அமைத்திருக்கிறார்கள். கர்ப்பக்கிருகத்தின்மேல் உள்ள விமானத்தைச் செப்புத் தகடுகளால் வேய்ந்திருக்கிறார்கள்.

புறத்திலே ஒரு பிராகாரமும் உள்ளே ஒரு பிராகாரமும் இரண்டுக்கும் நடுவிலே இடைகழியைப் போலக் குறுகலான ஒரு சுற்றுப் பிராகாரமும் இருக்கின்றன. கீழ்ப்புறத்தில் ஒரு வாசலும் மேல்புறத்தில் ஒரு வாசலும் உள்ளன. சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார்

வெளிப்பிராகாரத்தில் ஒவ்வொரு மூலையிலும் தீர்த்தம் இருக்கிறது. கிழக்கு வாசலில் புகுந்தவுடன் தீபஸ்தம்பமும் கொடி மரமும் காட்சியளிக்கின்றன. சுவரெல்லாம் மரத்தால் ஆனவை. சுவர் முழுவதும் இரும்பு அகல் விளக்குகளை வரிசை வரிசையாக அடித்திருக்கிறார்கள். இந்த அமைப்பைத் தமிழ்நாட்டில் காண முடியாது. விழாக் காலங்களில் நாற்புறச் சுவர்களிலும் உள்ள விளக்குகளை ஏற்றிவிட்டால் எங்கும் சுடர்விளக்கு மயமாக இருக்கும். அத்தகைய காட்சியை எர்ணுகுளத்தில் கண்டேன், அத்தனை விளக்குகளையும் ஏற்ற எண்ணெய், திரி எவ்வளவு வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. 'அவ்வளவையும் ஏற்ற எவ்வளவு பொறுமை வேண்டும்! என்றுதான் வியப்புற்றேன்.

வெளிப் பிராகாரத்தில் தெற்கே திரும்பினேன். அங்கே ஒரு சிறிய சந்நிதி இருந்தது. "இது என்ன சந்நிதி?" என்று கேட்டேன். "இதுதான் தக்ஷிணாமூர்த்தி" என்றார் உடன் வந்த புராண சாஸ்திரி.

"தக்ஷிணாமூர்த்தியா ? சந்நிதி கிழக்கு நோக்கியல்லவா இருக்கிறது ?" என்றேன்.

"அது என்னவோ தெரியாது. தக்ஷிணாமூர்த்தி என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள்" என்றார்.

அப்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வந்தது. தமிழ் நாட்டில் ஒருவர் ஒரு பையனைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். தென்முகக் கடவுளைப் பையனுக்குக் காட்டி, "இந்தச் சுவாமிக்குத் தட்சிணாமூர்த்தி என்று பெயர்" என்றார். பையன் கொஞ்சம் யோசித்தான். "தெக்கணா மூர்த்திதானே?" என்றுகேட்டான். "ஆமாம்" என்றார் பெரியவர். "சரி, இனிமேல் மற்றச் சுவாமிகளை எனக்குச் சொல்ல வேண்டாம். எனக்கே தெரிந்து விட்டது" என்று பையன் உற்சாகமாகச் சொன்னான். பெரியவருக்கு ஆச்சரியமாக இருந்தது. "உனக்கு எப்படியப்பா தெரியும்? என்று கேட்டார். "இது என்ன பெரிய ரகசியமா? இதோ இவர் தெற்கே பார்த்த சாமி, தெக்கணாமூர்த்தி; வடக்கே பார்த்த சாமி வடக்கணா மூர்த்தி; கிழக்கே பார்த்தசாமி கிழக்கணாமூர்த்தி; மேற்கே பார்த்த சாமி மேற்கணாமூர்த்தி" என்றானாம், அந்தக் கூரிய அறிவுடைய பிள்ளையாண்டான்!

அவன்கூடத் தட்சிணாமூர்த்தி தெற்கு நோக்கியவர் என்பதை உணர்ந்திருக்கிறான். இங்கேயோ—?

அந்தச் சந்நிதிக்குள் நுழைந்தேன், அங்கே மற்றோர் அதிசயம் காத்திருந்தது. கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் தட்சிணாமூர்த்தியை அங்கே காணவில்லை. சிவலிங்கந்தான் இருந்தது! கிழக்கே பார்த்த சிவலிங்கத்துக்கும் தட்சிணாமூர்த்திக்கும் வித்தியாசம் தெரியாத மக்களின் நடுவே அஞ்சையப்பர் வீற்றிருக்கிறார்! அந்த இடம் தெற்கே நோக்கிய சந்நிதியாக, தட்சிணாமூர்த்தி எழுந்தருளிய

இடமாக முன்பு இருந்திருக்கலாம். அந்தச் சந்நிதிக்குப் பிறகு அந்தத் தெற்குப் பிராகாரத்தில் சாஸ்தா சந்நிதி ஒன்று இருக்கிறது. கோயிலும் வாயிலும் இருந்தாலும் மேலே விதானம் இல்லாமல் சூரியனும் வருணனும் நேரே தம்மைப் பூசிக்கும் நிலையில் அவர் எழுந்தருளியிருக்கிருர். "திருக்கைலாயத்தில் சேரமான் பாடிய பாடல்களை உலகத்துக்கு எடுத்துக் கொண்டு வந்த சாஸ்தா இவர்" என்று புராண சாஸ்திரி கூறினுர். பெரியபுராணத்தில்,

**சேரர் காவலர் விண்ணப்பம் செய்தஅத்**
**திருவுலாப் புறம்அன்று**
**சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா**
**சாத்தனுர் தரித்திந்தப்**
**பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில்**
**வெளிப்படப் பகர்ந்தெங்கும்**
**நார வேலைசூழ் உலகினில் விளங்கிட**
**நாட்டினர் நலத்தாலே**

என்ற பாட்டின் வாயிலாக, "திருக்கயிலாயத்தில் சேரமான் பெருமாள் நாயனுர் அரங்கேற்றிய திருக்கயிலாய ஞானஉலாவைக் கேட்ட மாசாத்தனுர் அதனைத் தாங்கி வந்து அந்தணர் வாழும் திருப்பிடவூர் என்ற ஊரில் வெளியிட்டு உலகமெங்கும் பரவும்படி செய்தார்" என்று தெரிவிக்கிருர். அத்தகைய உபகாரம் செய்த சாத்தனுராகிய சாஸ்தாவுக்குச் சேரமான் பெருமாள் ஊரில் ஒரு சந்நிதி இருப்பது பொருத்தந்தானே? சாத்தனுர், ஐயனுர், சாஸ்தா, ஹரிஹர புத்திரன் என்பவை ஐயப்பனுக்குரிய பெயர்கள்.

வெளிப்பிராகாரத்தில் மேல்பக்கம் சில சந்நிதிகள் இருக்கின்றன. துர்க்கையும் முருகனும் அங்கே எழுந்தருளியிருக்கிறார்கள். மேற்குத் திருவாசலில் ஒரு மரக்கொட்டகை இருக்கிறது. அதை ஆனைப்பந்தல் என்று சொல்கிறார்கள். மலையாளத்தில் கோயில் விழா என்றால் ஆனையை அலங்கரித்துப் பவனிவரச் செய்வது வழக்கம். ஆனையைக் கொண்டு வந்து நிறுத்தும் இடமாதலால் ஆனைப் பந்தல் என்று பெயர் வந்தது. அது பத்து வருஷங்களுக்கு முன் கட்டப் பெற்றது. கொல்லம் ஆண்டு 1122 - இல் அதனை எடுத்ததாக ஒரு குறிப்பு அவ்விடத்தில் இருக்கிறது.

வெளிப்பிராகாரத்தின் வடப் பக்கத்தில் இந்தத் தலத்துக்குரிய விருட்சம் இருக்கிறது. ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு தலவிருட்சம் இருப்பதைத் தமிழ் நாட்டில் பெரும்பாலான திருப்பதிகளில் காண லாம். திருவஞ்சைக் களத்தின் தலவிருட்சம் கொன்றை. அதைப் பார்க்கையில் பல ஆண்டு களாக இருப்பதென்று தோற்றத்தால் தெரிகிறது, மரத்திற்கு அடியில் மேடை போட்டிருக்கிறார்கள்.

ஒருவாறு வெளிப் பிராகாரத்தைத் தரிசித்துக் கொண்டு மேற்கே உள்ள வாயில் வழியே உள் பிரா காரத்துக்குச் சென்றேன். சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் எழுந்தருளி யிருக்கும் சந்நிதியைக் காண வேண்டும் என்னும் ஆர்வம் என்னை உந்தியது. திருவஞ்சைக்களத் துக்குச் சென்று வந்தவர்கள் இந்த இரண்டு நாயன் மார்களும் அங்கே எழுந்தருளியிருக்கிறார்கள் என்று சொல்லியதுண்டு. மூல விக்கிரகங்கள், உற்சவ

மூர்த்திகள், வாகன விசேஷங்கள் எல்லாம் இருக்கும் என்று அப்போதெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தேன். சுவாமிக்கே உற்சவமூர்த்தி இல்லை. வாகனங்கள் இல்லை. நாயனாருக்கு எங்கே இருக்கப் போகின்றன?

கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனார் செங்கோலோச்சிய இடம் ஆயிற்றே! அவருக்காவது சிறப்புச் செய்யக்கூடாதா? அவரும் சுந்தரரும் எந்த நிலையில் எழுந்தருளியிருக்கிறார்களோ என்ற எண்ணந்தான் இப்போது உண்டாயிற்று. எப்படியெல்லாம் இருப்பார்களோ என்ற அதிசய உணர்ச்சி இல்லை.

உள்ளே புகுந்தோம். "மற்றச் சந்நிதிகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; முதலில் சுந்தரர் சந்நிதிக்கும் சேரமான் பெருமாள் நாயனார் சந்நிதிக்கும் போகலாம்" என்றேன்.

"இரண்டு பேரும் ஒரே இடத்தில்தான் இருக்கிறார்கள்" என்றார்கள்.

"அப்படியா? தோழர்களாகிய அவ்விருவரையும் பிரிக்காமல் ஒன்றாகச் சேர்த்து வைத்திருப்பது நல்லதுதான்" என்று சொல்லிக்கொண்டே அந்தச் சந்நிதியை அடைந்தேன்.

தமிழ் மறந்த மலைநாட்டில் தம்மை இன்னாரென்றே உணராதமக்களிடையே திருவஞ்சைக்களக் கோயில் உட்பிராகாரத்தில் தென் மேற்கு மூலையில் புவிமன்னராகிய சேரமான் பெருமாள் நாயனாரும் கவிமன்னராகிய சுந்தரரும் காட்சியளித்தனர். உற்சவ மூர்த்திகளையே அஷ்டபந்தனம் சாத்திப் பிரதிஷ்டை

செய்திருக்கிறார்கள். திருமுடியணிந்த கோலத்தில் சேர அரசரும், கொண்டையணிந்த கோலத்தில் சுந்தரரும் அருகருகே கிழக்குப் பார்த்து நிற்கின்றனர். ஒன்றரை அடி உயரமுள்ளவிக்கிரகங்கள். ஆடிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் இங்கே அபிஷேகம் முதலியன நடைபெறுமாம். அந்த நாளே சுந்தரர் திருக்கயிலைக்கு எழுந்தருளிய நாள். தமிழ் நாட்டிலிருந்து சில அன்பர்கள் வந்து அன்று குருபூசையை நடத்தி வருகிறார்கள். பெரியபுராணம் முழுவதற்கும் உரை எழுதிய பெரியார் சிவக்கவிமணி திரு சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்களே தமிழ்நாட்டு மக்களுக்கு இத்தலத்தை நன்றாக அறிமுகப்படுத்தித் தரிசித்து வழிபடும்படி செய்தார்கள் என்று கேள்வியுற்றேன்.

திருவாரூரில் சுந்தரமூர்த்திக்குத் தனிக் கோயில் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அங்கே சேரமான் பெருமாளுக்கும் விக்கிரகமும் வழிபாடும் உண்டு. இங்கே அவர் பிறந்த இடத்தில் அவரை அடையாளம் தெரிந்து கொள்வதற்கே ஆள் குறைவு. காரணம் என்ன? பக்தி குறைவா? இல்லை, இல்லை. நம்மைக் காட்டிலும் பக்தியிலும் நம்பிக்கையிலும் அங்குள்ளவர்கள் சிறந்தவர்களென்றே சொல்ல வேண்டும். ஆனாலும் நாயன்மார்களைப் பற்றியும் தேவாரம் முதலிய திருமுறைகளைப் பற்றியும் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அங்கே தமிழ் நிலவாததுதான் எல்லாவற்றுக்கும் மூலகாரணம்.

சிறிது நேரம் அந்தச் சந்நிதியிலே நின்று வழிபட்டேன். உள் பிராகாரத்தில் தென்மேற்கில் பள்ளியறை இருக்கிறது. வட கீழ்ப்புறத்தில் நடராஜர்

சந்நிதி இருக்கிறது. நடராஜர் தெற்கு நோக்கியே இருக்கிறார். அழகிய மூர்த்தி. அதன் பீடத்தில், "திருவஞ்சிக்குளம் சபாபதி" என்று தமிழில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. "இந்த மூர்த்தி சேரமான் பெருமாள் பூசை செய்த மூர்த்தி" என்று சொன்னார்கள். அவர் வழிபட்ட மூர்த்தியாக இருக்கலாம். இந்த நடனப் பிரான் கட்டுசடையை உடையவர். விரித்த செஞ்சடையாட நடமாடும் கோலம் ஒரு வகை. கட்டிய செஞ்சடையுடன் கூத்தாடுவது ஒரு விதம். பின்னு செஞ்சடைப் பெருமானைத் தரிசித்துக் கொண்டேன்.

சில இடங்களில் சுவர்களில் அழகிய ஓவியங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ருத்திர தாண்டவத்தை விளக்கும் ஓவியம் ஒன்றைப் படம் எடுத்தோம். வேறு ஒரு பழைய ஓவியத்தை எடுக்க முடியவில்லை. திருக்கோயில்களில் பழங்காலத்தில் ஓவியங்களை எழுதுவது வழக்கம் என்பது இலக்கியங்களாலும், இப்போது சிதைந்து காணப்படும் ஓவியங்களாலும் புலனாகின்றது. திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன் கோயிலில் பல ஓவியங்களைத் தீட்டியிருந்த மண்டபம் ஒன்று பழங்காலத்தில் இருந்தது. எழுதெழிலம்பலம், எழுத்து நிலை மண்டபம் என்று அந்த மண்டபத்தை வழங்கினர். சங்க காலத்து நூலாகிய பரிபாடலில் இச்செய்தி வருகிறது. காஞ்சிபுரம் கைலாசநாதர் ஆலயத்தில் பழைய சித்திரங்களின் சிதைவை இன்றும் காணலாம்.

படத்தில் எடுக்க முடியாத பழைய ஓவியத்தில் இருந்த வண்ணங்கள் இன்னும் பொலிவுடன்

விளங்குவதைக் கண்டேன். அந்த ஓவியம் எழுதிச் சில நூறு ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும்.

திருவஞ்சைக்களத்தப்பனுடைய சந்நிதி உட்பிராகாரத்தின் நடுவில் துண்டாகத் தனியே இருக்கிறது. அதன்மேல் வியானம் மரத்தால் அமைந்தது; தேரைப் போல இருக்கிறது. அதில் பலஉருவங்களைச் செதுக்கியிருக்கிறார்கள். செப்புத் தகட்டால் வேய்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மூலையிலும் நாகத்தின் உருவம் இருக்கிறது. பெரும்பாலும் மலைநாட்டுக் கோயில்களில் நாகம் இருப்பதைக் காணலாம். விமானத்திலும் கீழே சுவரிலும் மரத்தில் பல பல வேலைப்பாடுகளையுடைய தூண்கள் இருக்கின்றன. சந்நிதியில் இரண்டு துவாரபாலகர்கள் நிற்கிறார்கள். கிழக்கு நோக்கி அஞ்சைக்களத்தப்பர் எழுந்தருளியிருக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்றவர் அவர். இப்பூவுலகத்தில் திருவவதாரம் செய்த சுந்தரர் உலகினின்று விடைபெற்றபொழுது கடைசியில் தரிசித்த மூர்த்தி அவர். சேரமான் பெருமாள் நாயனாருடைய பேரன்புக்கு உரிய பெருமான்; அவருடைய அன்பு மேன்மேலும் வளர்வதற்குக் காரணமான பிரான்.

கேரள ராஜ்யத்துக் கோயில்களில் ஒரு முக்கியமான வேறுபாடு, சிவபெருமான் மாத்திரம் கோயில் கொண்டிருப்பது. தமிழ்நாட்டில் எந்தத் தலத்திலும் சுவாமி சந்நிதியும் அம்பிகை சந்நிதியும் இருக்கும். "ஸ்ரீமீனாட்சி சமேத சுந்தரேசுவர சுவாமி" என்று இருவர் திருநாமங்களையும் இணைத்துச் சொல்வது வழக்கம். ஆனால் கேரள ராஜ்யத்தில் உள்ள கோயில்களில் அம்பிகை பெரும்பாலும் இருப்பதில்லை. தனியே

பகவதி கோயில்கள் இருக்கின்றன. சிவாலயங்களில் அம்பிகை சந்நிதி இல்லை.

"வீட்டுக்கு உடையவள் இல்லாத வீட்டில் யார் யார் எப்படி எப்படி இருக்கவேண்டுமோ அந்த முறை சரியாக இராது" என்று உலகியலில் சொல்வார்கள். இங்கே சண்டிகேசுவரரை நந்திகேசுவரர் என்கிறார்கள்; கிழக்கே பார்த்த சிவலிங்கத்தைத் தட்சிணாமூர்த்தி என்கிறார்கள். அஞ்சைக்களத்தப்பனுக்கு மட்டும் தனிப்பெயர் ஒன்று இருக்க வேண்டாமோ? அப்பன் என்ற பொதுவான பெயரைத் தான் கேட்கிறோம். எல்லாம் அம்பிகை இல்லாததனால் வந்த தடுமாற்றமோ!

அது கிடக்கட்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதலில் ஒரு திமணம் நடக்க ஏற்பாடாயிற்று. அதைத் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தன் வந்து தடுத்தான். ஒரு மணத்தைத் தடுத்ததற்காக இறைவன் இரண்டு கல்யாணம் பண்ணி வைத்தான், திருவாரூரில் பரவை நாச்சியாரையும், திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரையும் சுந்தரர் மணக்கத் துணை நின்றான். சுந்தரர் சங்கிலி நாச்சியாரோடு இணங்கி வாழ்ந்து இன்புற்றார். வசந்த விழாவின் போது அவர் தொண்டை நாட்டை விட்டு மீட்டும் திருவாரூருக்கு வந்தார். அங்கிருந்து மலைநாட்டுக்கு வந்தார். திருவஞ்சைக்களத்துக்கு வந்து இறைவனைத் தரிசித்தார். அப்போது அவருக்கு மனை வாழ்க்கையில் வெறுப்பு வந்தது.

**"வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்**
**விளங்குங்குழைக் காதுடை வேதியனே!**

என்று பாடினார்.

இங்கே வந்து அவருக்கு மனைவாழ்க்கை வெறுப்பதற்குக் காரணம் என்ன? இந்த ஊர்ப் பதிகத்தில் ஒரு பாட்டில்,

> ''கூடும் மலைமங்கை ஒருத்தியுடன்
> சடைமேற்கங்கை யாளைச் சூடிற்றென்னே ?''

என்று கேட்கிறார். இறைவன் இரு மங்கையருடன் இருப்பவன். சுந்தரரும் இரு மங்கையரை மணந்தவர். ஆனால் திருவஞ்சைக்களத்தில் இறைவன் எப்படி இருக்கிறான்? ஒரு மங்கையும் இல்லாமல் தனியே இருக்கிறான்; அவனுக்கு மனைவாழ்க்கை வெறுத்து விட்டதுதான் இதற்குக் காரணமோ ?

சுந்தரர், அம்பிகையை விட்டுத் தனியே வாழும் அஞ்சையப்பரைக் கண்டு தாமும் மனை வாழ்க்கையை வெறுக்கும் எண்ணம் கொண்டு,

> ''வெறுத்தேன்மனை வாழ்க்கையை
> விட்டொழிந்தேன்''

என்று பாடினாரோ ?

என் சிந்தனை இப்படிச் சென்றது. இதை ஏதோ பெரிய ஆராய்ச்சி என்று யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். அம்மையும் அப்பனுமாக எழுந்தருளியிருக்கும் சிவாலயங்களையே தமிழ்நாட்டில் தரிசித்துப் பழக்கமான எனக்கு அம்மையில்லா அப்பனைத் திருவஞ்சைக்களத்தப்பன் எழுந்தருளியிருப்பதைக் கண்டபோது இப்படியெல்லாம் தோன்றியது.

எங்களுடன் வந்து உதவி செய்த புராண சாஸ்திரி ஸ்ரீராகவையரை வணங்கினேன். ''மறு


படியும் ஆடி மாசம் வாருங்கள்'' என்றார். ஆடிச் சோதியில் சுந்தரர் திருநாள் அல்லவா ?

''நெடுந்தூரம் நிலத்திலும் கழியிலும் வந்து திருவஞ்சைக்களத்தைக் கண்டு கொண்டோம். அம்மை இல்லா அப்பனைக் கண்டோம். சரித்திரமும் தோத்திரமும் காவியமும் எழில் செய்யும் ஒரு புனிதத் திருப்பதியைத் தரிசித்தோம்'' என்ற திருப்தியோடு நண்பர்களுடன் திருவஞ்சைக்களத்தினின்றும் புறப்பட்டேன்.


# திருவாதவூர்

கதிரவன் தன் வெய்ய சுடர்களை வீசிக் கொண்டிருந்தான். படை பதைக்கும் வெயில். இந்த வெயிலில் மதுரையிலிருந்து காரில்புறப்பட்டேன். திருவாதவூருக்குச் சென்று தரிசனம் செய்யத்தான். கிட்டத்தட்டப் பதினாறு மைல் தூரம் நம்முடைய வாழ்க்கையைப் போல மேடும் பள்ளமும் குண்டும் குழியும் புழுதியும் கரம்பும் நிறைந்த பாதையில் கார் வந்துகொண்டிருந்தது. மிகவும்புழுக்கமாக இருந்தது. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. "திருவாதவூருக்குப் போகும்போதே இவ்வளவு உருக்கமாக இருக்கிறதே! அங்கே போய்விட்டால் எப்படியோ!'' என்று உடன் வந்த நண்பர்களிடம் கூறினேன்.


எப்படியோ திருவாதவூர் வந்து சேர்ந்தோம். வானத்துப் பாஸ்கரன் சுட்டுக் கொண்டிருந்தாலும், அவ்வூரில் மற்றொரு பாஸ்கரனார் எங்களைக் குளிர்ச்சியுடன் வரவேற்றார். சிவதர்ம பாஸ்கரர் என்ற பட்டம் பெற்ற ஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் திருவாதவூர் உற்சவத்தில் காப்புக்கட்டிக் கொண்டிருந்தார். எனக்குத் திருவாதவூர்ப் பெருமை முழுவதையும் காட்டிவிடுவதாகவும் காப்புக்கட்டிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த வெயிலில் என்னுடன் பல இடங்களுக்கு அலைந்துவந்து, "இது இன்ன தீர்த்தம், இது இன்ன இடம்" என்று சொல்லியதோடு நில்லாமல் வாய்க்கும் வயிற்றுக்கும் இனிய விருந்தையளித்து



மேல் : திருவஞ்சைக்களம் - சேரமானும் சுந்தரரும் பக்கம் 217
கீழ் : சேரமான் பறம்பு பக்கம் 206



ருவாதவூர் - ஆலயக்
கோபுரம் →
பக்கம் 225





திருவாதவூர் - மாணிக்கவாசகர்
← (பழைய உருவம்) பக்கம் 23

அனுப்புவாரா? மதுரைக் கோயில் ஸ்தானிகரும் பட்டருமாகிய ஸ்ரீசுந்தரேச பட்டரவர்களை ஸ்ரீமீனாட்சி தரிசனம் செய்து கொண்டவர்கள் அறிவார்கள்.

"திருவாதவூருக்கு வந்து விட்டேன். இனிமேல் இங்கே உள்ள சிறப்புகளையெல்லாம் காட்ட வேண்டியது உங்கள் கடமை" என்று பாரத்தை அவரிடம் ஒப்பித்து விட்டேன். என் அருகில் தம்முடைய கருவிகளுடன் போட்டோக் கலைஞர் ஸ்ரீராமகிருஷ்ணை அடிக்கடி வானத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

"என்ன, ஆகாசத்தைப் பார்க்கிறீர்கள்? அந்தப் பாஸ்கரன் சுட்டெரிக்கிறானே என்றா?" என்று கேட்டேன்.

"மேகம் இருக்கிறதா என்று பார்த்தேன்" என்றார் "ஏன், மழை வந்து விடுமோ என்ற பயமா?" என்று கேட்டேன்.

"இல்லை இல்லை; 'க்ளௌட் எஃபெக்ட்' (Cloud effect) வேண்டுமல்லவா?"

"முதலில் எங்கே போகலாம்? கோயிலுக்குள் போகலாமா?" என்று பட்டரவர்களைக் கேட்டேன்.

"வாருங்கள், முதலில் அந்த விஷ்ணு தீர்த்தத்தைப் பார்த்துவிட்டு வந்து விடலாம்."

கோயிலுக்கு எதிரே நின்றுகொண்டு பேசுகிறோம் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். கோபுர வாசலுக்கு அருகில் ஒரு கொட்டகையில் உற்சவ மூர்த்தி எழுந்தருளியிருந்தார். அவரை முதலில் சேவித்துக் கொண்டோம்.

விஷ்ணு தீர்த்தம் என்பது ஓர் ஏரி; பாண்டி நாட்டு மொழியில் கம்வாய் என்று சொல்லவேண்டும்,

அதற்குத்தான் கேசவதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் என்று பெயர் சொல்கிறார்கள்.

"மாணிக்கவாசகர் கோயில் தனியே இருக்கிற தாமே; அங்கேயும் போகவேண்டும்" என்றேன்.

'அவசரப்படாதீர்கள். எல்லாம் ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்" என்றார் பட்டர். விஷ்ணு தீர்த்தக் கரை வழியே சென்றேன். நீருக்குள் ஓரிடத்தில் இரண்டு கற்கம்பங்களின்மேல் ஒரு பெரிய கல் விட்டமும் அதன்மேல் ஒரு பிம்பமும் இருப்பதைக் கண்டேன். முகம் மாத்திரம் முனிவர் முகம், உடம்பு விலங்கின் உடம்பு. அது புருஷாமிருகத்தின் உருவம். பாரதத்தில் ஒரு புருஷாமிருகம் வருகிறது. தர்மபுத்திரர் ராஜசூய யாகம் செய்வதற்கு முன் யாக பூமியைத் தெரிந்தெடுத்தார். அதைத் தூய்மைப்படுத்த எண்ணித் தம் இளவலாகிய பீமனை அழைத்துப் புருஷாமிருகத்தை வருவிக்கச் சொன்னார். அப்படியே பீமனுடைய விருப்பத்தின்படி அது வேள்வி நிலத்துக்கு வந்து அதைத் தூயதாக்கியது. புருஷாமிருகம் சிவபக்தி நிரம்பியது. புருஷாமிருக தீபம் என்பது சிவாலயங்களில் உள்ள தீபங்களில் ஒன்று.

கல்விட்டத்தின்மேல் இருந்த புருஷாமிருகத்தைக் கண்டேன். அது அந்தத் தீர்த்தத்துக்குக் காவலாக நிற்கிறது. அதன் கீழுள்ள கற்கம்பங்கள் தண்ணீரின் மட்டத்தைக் காட்டும் வகையில் இருக்கின்றன. அப்போது பலரைக் கேட்டும், பின்பு வடமொழி வாதவூர் மாகாத்மியத்தின் மொழிபெயர்ப்பைப் படித்தும் அந்தப் புருஷாமிருகத்தைப் பற்றிய செய்திகளை நான் தெரிந்து கொண்டேன்.

இந்தத் தீர்த்தம் உண்டான கதை விரிவாகப் புராணத்தில் இருக்கிறது. வேதத்தை இழந்த திருமால் இந்தத் தலத்தில் இருந்த வேதநாயகனைச் சுற்றி நீருருவமாக நின்று வழிபட்டாராம். அதனால் இதற்கு விஷ்ணு தீர்த்தம் என்று பெயர் வந்ததாம். பின்பே கோயில் முதலியவை ஏற்பட்டனவாம்.

தர்மபுத்திரர் யாகம் செய்தபோது யாக பூமியைத் தூய்மைப்படுத்திய அந்தப் புருஷாமிருகமே கண்ண பிரானுடைய விருப்பத்தின்படி இங்கே வந்து இந்தத் தீர்த்தத்தைத் தூய்மைப்படுத்தியதாம். இது புராண வரலாறு. இங்கே திருக்கோயிலில் கோபுர வாசல் நிலையிலும் வடப் பக்கத்து உச்சியில் புருஷா மிருகத்தின் உருவம் இருக்கிறது.

"இப்போது இதற்குப் பூசை நடப்பதுண்டா?" என்று கேட்டேன்.

மழை இல்லாமல் இருந்தால் நூறு தேங்காயை யும் வேறு பொருள்களையும் கருக்கி இந்தச் சிலையின் மேல் பூசி விடுவார்களாம். இரண்டு மூன்று நாட் களில் மழை பெய்துவிடுமாம். இப்போதும் இந்த வழக்கம் இருக்கிறதாம். வானம் கறுத்து மழை பெய் வதற்கு இத்த வடிவம் கறுக்கும்படி செய்கிறார்கள்.

இந்த ஊரில் உள்ள தீர்த்தம் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவமாக இருக்கிறது. ஏரி, குளம், நடை வாவி, கிணறு என்ற நான்கு வகை நீர்நிலைகளும் நான்கு தீர்த்தங்களாக இருக்கின்றன. ஏரிதான் விஷ்ணு தீர்த்தம். கோயிலுக்கு எதிரே ஒரு குளம் இருக்கிறது. அதை அக்கினி தீர்த்தம் என்கிறார்கள். வெளிப் பிராகாரத்தில் நுழைந்தவுடன் தென் பக்கத்

தில் ஒரு நடைவ்ாவி இருக்கிறது; அதற்குப் பொற்ருமரை என்று பெயர். வைரவ தீர்த்தம் என்று புராணம் அதற்குப் பெயர் வைத்திருக்கிறது. உள் பிராகாரத்தில் தென் பக்கத்தில் ஒரு கிணறு உண்டு. அது கபில தீர்த்தம்.

கோயில் கிழக்கே நோக்கியது. கோபுரம் முன்னே இருக்கிறது. இரண்டு பிராகாரங்கள். வெளிப் பிராகாரத்தில் தென் பக்கத்தில் இந்தத் தலத்தின் விருட்சமாகிய மகிழ மரம் இருக்கிறது. அதற்கு அருகில்தான் முன்னே சொன்ன பொற்ருமரைத் தீர்த்தம் இருக்கிறது. வலப்பக்கத்தில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்று இடிந்து கிடக்கிறது. "இங்கே தான் முதலில் நடராஜர் எழுந்தருளியிருந்தார். மாணிக்கவாசகரே இம் மண்டபத்தைக் கட்டினராம். அவருக்கு நடராஜப் பெருமான் தம் பாதச் சிலம்பின் ஒலியைக் கேட்கும்படி திருவருள் செய்தாராம். 'வாத வூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' என்று திருவாசகத்தில் மணி வாசகப் பெருமான் அதைப்பற்றிப் பாடியிருக்கிருர்..." விஷயம் தெரிந்த ஓர் இளைஞர் ஒவ்வொன்ருகச் செய்தியைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

நம்பி திருவிளையாடல் என்ற பழைய திருவிளையாடற் புராணத்தில் இரண்டு இடங்களில் இந்தச் சிலம்பொலி வருகிறது.

> **சோதிசேர் வகுள நீழற்**
> **சிலம்பொலி துளங்கக் காட்டும்**
> **வேதநா யகனுர் வாழும்**
> **வியன்றிரு வாதவூ ரால்**

என்பது ஓரிடம். வகுளம் என்றது மகிழ மரத்தை வேதநாயகன் என்பது இவ்வூர் இறைவன் திருநாமம். திருமறை நாதர் என்றும் சொல்வதுண்டு. அம்பிகையின் திருநாமம் ஆரணவல்லி.

ஆதர வடியார் முற்றும்
அடிபணிந் தேத்தப் போந்து
வாதையம் புரத்து நண்ணி
மணிச்சிலம் போசை காட்டத்
தீதற ஆண்ட எந்தை
திருச்சிலம் போசை என்றே
ஏதமா முனிவர் தேறி
இசைபடத் துதிக்க லுற்றார்

என்ற பாட்டிலும் இந்தச் சிலம்பொலி வருகிறது. மாணிக்கவாசகர் நடராஜப் பெருமானுடைய சிலம்பொலியைக் கேட்டதாகச் சொல்லும் அந்த மண்டபம் இப்போது இடிந்து கிடக்கிறது. அதன் சிற்ப அமைப்பும், கொடுங்கைகளும் அழகாக இருக்கின்றன.

மாணிக்கவாசகர் இந்த ஊரில் பிறந்தார். அவருக்கு வாதவூரர் என்ற திருநாமத்தையே தாய் தந்தையர் வைத்தார்கள். இங்கே எழுந்தருளிய இறைவன் பெயரே அது. வாதபுரேசர் என்றும் வழங்கும். வாயு பூசித்த இடமாதலால் இதற்கு வாதபுரம், வாதவூர், சமீரபுரம் என்ற பெயர்கள் வந்தனவாம். இறைவனை இங்கே வழிபட்டமையால் வாயுதேவன் ஆஞ்சநேயனாகிய குமாரனைப் பெற்றானாம்.

உட்பிராகாரத்துக்குள் நுழைந்தேன். மதுரையில் இருப்பதுபோல இங்கே இறைவன் திருக்கோயி

லுக்குத் தெற்கே அம்பிகையின் கோயில் இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் சிவபிரானுக்கு இடப் பக்கத்தே அம்மை எழுந்தருளியிருப்பது வழக்கம். ஸ்ரீ மீனுட்சியம்மை வலப் பக்கத்தே கோயில் கொண் டெழுந்தருளியிருக்கிருள். திருவாதவூரிலும் வேத நாயகருக்கு வலப்பக்கத்தில் ஆரணவல்லி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிருள். "இப்படி உள்ள தலங்களில் சக்திக்கு முதன்மை இருக்கும்" என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

வேதநாயகன் திருக்கோயிலில் தென் கிழக்கு மூலையில் உள்ள கிணற்றைக் கபில தீர்த்தம் என்று சொல்கிருர்கள். சகரர்களைத் தம் விழியால் எரித்த கபிலமுனிவர் இங்கே வந்து பூசித்து இந்தத் தீர்த்தத்தை அமைத்ததாகப் புராணம் சொல்கிறது.

கபில தீர்த்தம் என்ற பெயரைக் கேட்டவுடன் என் நினைவு சங்க காலத்தில் வாழ்ந்த பெரும் புலவ ராகிய கபிலரிடம் சென்றது. அதற்குக் காரணம் உண்டு.

திருவாதவூர் மாணிக்கவாசகருடைய திரு அவ தாரத்தலம் என்ற பெருமையை உடையதோடு, அவர் தோன்றுவதற்கு முன்பிருந்தே இதற்கு மற்ருெரு சிறப்பும் இருந்து வருகிறது. இப்போது கிடைக்கும் கடைச் சங்க நூற்பாடல்களில் மற்ற எல்லாப் புலவர் களையும்விட மிகுதியான பாடல்களைப் பாடியவரும், பாரியின் உயிர் நண்பராக வாழ்ந்தவரும், குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவரும், மற்றப் புலவர்கள் மிக மதித்துப் பாராட்டும் நன்மதிப்பைப் பெற்றவரு மாகிய கபிலர் என்னும் பெரும் புலவர் தோன்றிய ஊர் இது என்று தெரியவருகிறது.

அப்பெருமான் பிறந்து பேசத் தெரிந்தவுடனே கவிபாடும் ஆற்றல்உடையவராக இருந்தாராம். தமிழ் நாவலர் சரிதை என்ற நூல் அவர் பச்சிளமையிலே பாடிய பாட்டு ஒன்றைக் காட்டுகிறது. இருப்பைப் பூவைப் பற்றிய பாட்டு அது. இருப்பைப் பூ வாடாமல் இருந்தால் பிடியின் வாயில் வெறும் முளையாக உள்ள கொம்பைப் போல இருக்குமாம். வாடிவிட்டால் உலர்ந்த இருமீனைப் போல ஆகிவிடுமாம்.

**நெட்டிலை இருப்பை வட்ட வான்பூ**
**வாடா தாயின்,**
**பீடுடைப் பிடியின் கோடுஏய்க் கும்மே;**
**வாடினோ**
**பைந்தலைப் பரதர் மனைதொறும் உணங்கும்**
**செந்தலை இறவின் சீர்ஏய்க் கும்மே.**

[நெடிய இலையையுடைய இருப்பை மரத்தின் வட்டமாகிய வெள்ளைப் பூவானது வாடாமல் இருந்தால் பெருமையுடைய பெண் யானையின் கொம்பை ஒக்கும்; வாடிவிட்டாலோ பசிய தலையையுடைய வலையர்களுடைய வீடுதோறும் உலரும் செம்மையான தலையையுடைய இருமீனின் இயல்பை ஒக்கும்.]

கவிகள் உவமையில் தம்முடைய சாமர்த்தியத்தையெல்லாம் காட்டுவார்கள். சங்க காலத்துப் புலவர்களோ இயற்கைப் பொருள்களின் இயல்பை நன்கு அறிந்து பாடுவார்கள். அவர்களுடைய உவமையிலும் அந்த இயற்கையைக் கண்டு மகிழலாம். கபிலர் இருப்பைப் பூவையும் பிடியின் கொம்பையும் இருமீனையும் கூர்ந்து கண்டிருக்கிறார் அவற்றைப் பாட்டில் அமைத்துக் காட்டுகிறார்.

மிக்க இளமையிலேயே இந்தப் பாடலைப் பாடிய தைக் கண்டு வியந்த தமிழுலகம், "கபிலர் பிறந்த வுடனே பாட்டுப் பாடிவிட்டார்!" என்று பாராட்டி யது. கருவிலே கவித் திருவையுடைய அந்தக் கபிலர் இந்தத் திருவாதவூரிலே பிறந்தவர் என்று பழைய திருவிளையாடற் புராணம் சொல்கிறது.

> நீதிமா மதூக நீழல்
> நெட்டிலை இருப்பை என்றோர்
> காதல்கூர் பனுவல் பாடும்
> கபிலனார் பிறந்த மூதூர்
> ......................................
> வேதநா யகனார் வாழும்
> வியன்திரு வாத வூரால்.

[மதூகம்-இருப்பை. பனுவல்-பாடல்.]

கபிலனார் பிறந்த பழைய ஊர் என்று பாட்டுச் சொல்கிறது. நெடுங்காலமாகவே மக்கள் வாழும் ஊர் என்பது மாத்திரம் அல்ல; நெடுங்காலமாகவே, பாட்டுப் பிறக்கும் வாயுடைய பெருமக்கள் பிறந்த ஊராகவும் இருந்து வருகிறது இது.

"பழைய கபிலரை எல்லோரும் மறந்து விட்டார்களே! அவர் பெயரை நினைவூட்ட ஏதாவது செய்ய வேண்டாமா?" என்று யாரேனும் நினைத்திருக்கலாம். அந்தக் காலத்தில் வாசகசாலையோ, சங்கமோ, மண்டபமோ கட்டும் நாகரிகம் அவருக்குத் தெரிந் திருக்காது. "இறைவன் கோயிலுக்கு எல்லோரும் தினமும் வந்து வழிபடுகிறார்கள். இங்கே கபிலர் நினைவையூட்டும் எதையாவது அமைக்கலாம்" என்று தோன்றி இந்தக் கிணற்றை வெட்டச் செய்

தனர்போலும்! புராணம் கபிலமாமுனிவரை இந்த ஊருக்கு அழைத்து வந்து இந்தத் தீர்த்தத்தை உண்டாக்கச் சொன்னதற்கு, தீர்த்தம் சிறந்ததென்று யாவரும் நம்பவேண்டும் என்னும் கருத்தே காரணம் போலும்! எப்படியோ, திருவாதவூரில் கபிலர் பிறந்ததற்கு இந்தக் கபில தீர்த்தத்தையே ஞாபகச் சின்னமாக வைத்துக் கொண்டால் யாருக்கும் ஒரு பைசாச் செலவில்லை அல்லவா ?

வேதநாயகரை, வாதபுரீசரை, பவனபுரப் பரமனைத் தரிசித்துக் கொண்டேன். கோயிலுக்குள் மணிவாசகப் பெருமானுடைய உற்சவமூர்த்திகள் இரண்டு உள்ளன. ஒரு திருமேனி பழையது; மற்றொன்று புதியது. பழைய மாணிக்கவாசகர் முழங்காலுக்குமேல் கட்டிய தற்றுடையும் குழைந்த உருவமும் கொண்டு நிற்கிறார். புதியவர் கோவணம் பூண்டு நிமிர்ந்து நிற்கிறார். இருவர் கரத்திலும் திருவாசகச் சுவடி ஒளிர்கிறது. இந்த இரண்டு திருவுருவங்களையும் தரிசித்துக் கொண்டபோது எனக்குத் திருவதிகையில் கண்ட அப்பர் வடிவங்கள் நினைவுக்கு வந்தன. அங்கும் பழைய அப்பர் முழங்காலுக்கு மேல் ஆடையணிந்த கோலத்தில் காட்சி தருகிறார். புதிய அப்பர் கோவணமணிந்த கோலத்தில் இருக்கிறார். எதற்காக இப்படிப் புதிய உருவத்தை வடிக்கிறவர்கள் அவர்களுடைய ஆடையைக் குறுக்க வேண்டும்? துறவைப் புறத்தே நன்றாகக் காட்ட வேண்டும் என்ற எண்ணமாக இருக்குமோ? பழைய மணிவாசகர் அன்பே உருவாக நிற்கிறார் என்று எனக்குத் தோன்றியது. பழமையை விரும்பும் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லி விடாதீர்கள். நீங்களே திருவதிகைக்கும்

திருவாதவூருக்கும் போய் அங்குள்ள பழைய விக்கிர கங்களையும் புதிய விக்கிரகங்களையும் பார்த்துவிட்டுப் பின்பு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

மாணிக்கவாசகப் பெருமான் குதிரை வாங்கி வருவதாகப் பாண்டியனிடம் சொல்லித் திருப்பெருந் துறைக்குச் சென்று திருப்பணி செய்தார். அதனை யறிந்து பாண்டியன் அவரை வருவித்து ஒறுத்தான். சுந்தரேசக் கடவுள் நரிகளைப் பரிகளாக்கிக் கொணர்ந்து கொடுத்தார். மீண்டும் பரிகள் நரிகளா யின. அது கண்டு பாண்டியன் மீண்டும் மாணிக்க வாசகரைத் தண்டித்தான். அவருடைய பெரு மையைக் காட்டுவதற்காக இறைவன் வையையில் வெள்ளம் வரச்செய்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம் பால் அடிபட்டான். வந்தி தந்த பிட்டை உண்ட இந்த விளையாடல் மதுரையில் பெரிய விழாவாக நடைபெறுகிறது. ஒவ்வோராண்டும் ஆவணி மாதத் தில் மூல நட்சத்திரத்தன்று இது நிகழும். அந்த விழாவுக்குத் திருவாதவூரிலிருந்து மணிவாசகப் பெரு மான் எழுந்தருளுவார். நான்கு நாட்கள் அங்கே தங்கியிருப்பார்.

மார்கழி மாதம் முதல் பத்து நாள் திருவாதவூரில் திருவெம்பாவை உற்சவம் நடைபெறுகிறது. ஒவ் வொரு நாளும் மணிவாசகப் பெருமான் எழுந்தருளு வார்.

சுவாமி கோயில் உட்பிராகாரத்தின் நிருதி மூலை யில் (தென்மேற்கு) மணிவாசகர் சந்நிதி இருக்கிறது. வெளிப் பிராகாரத்தில் தென் பக்கம் ஆரணவல்லியம் பிகையின் கோயில் தனியே இருக்கிறது. வேதநாயகி என்றும் அப் பெருமாட்டியின் திருநாமம் வழங்கும்.

இறைவனைத் தரிசித்துக்கொண்டு ஆரண வல்லியைத் தரிசிக்க எண்ணி இறைவன் கோயிலில் தென்புறமுள்ள வாயில் வழியே வந்தேன். அந்த வாயிலுக்கு மேலே தாழ்வாரப்பத்தி அழகிய சிற்பங் களுடன் திகழ்ந்ததை அண்ணாந்து பார்த்தேன். கலைத்திறம் மலிந்த கம்பமும் நுட்பத் தொழிலின் விளைவாகிய கொடுங்கைகளும் காட்சியளித்தன. அந்தக் கொடுங்கைகளில் சில சிதைந்திருந்தன. "நூற்றுக்கால் மண்டபத்தைத்தான் செப்பஞ் செய்ய வில்லை. இந்தக் கொடுங்கைகளையாவது செப்பஞ் செய்யக்கூடாதா?' என்று கேட்டேன்.

"பதின்மூன்று முழ நீளம் வரையில் கொடுங்கை கள் இருக்கின்றன. சில சிற்பிகளை அழைத்துவந்து காட்டினார்கள். நம்மால் இந்தச் சிதைவைத் திருத்தி வேறு கொடுங்கை செய்து பூட்ட முடியாது என்று சொல்லி விட்டார்கள்" என்று ஒரு முதியவர் சொன் னார். அது உண்மையோ, பொய்யோ தெரியாது. சிதைப்பது எளிது, பொருத்துவது மிக மிக அரிது என்ற உண்மையை நினைத்துக் கொண்டேன்.

இறைவன் வேதமே நான் என்ற ஒலியைத் திரு மாலுக்கு உணர்த்தினமையால் வேதநாயகன் என்ற திருநாமத்தை உடையவனானன் என்று புராணம் சொல்கிறது. வேத ஒலி எப்போதும் கேட்டுக் கொண் டிருந்த இடம் இது என்பதையே அவ்வாறு புராணக் காரர் சொல்கிறாரோ ?

"மாணிக்கவாசகர் பிறந்த வீடோ, அந்த வீடு இருந்த இடமோ இப்போது இருக்கிறதா?" என்று பட்டரவர்களைக் கேட்டேன். "மாணிக்கவாசகர்

கோயில் என்று தனியே ஒரு கோயில் உண்டு. அந்த இடத்தில்தான் மாணிக்கவாசகர் பிறந்த வீடு இருந்ததாம்."

"அதற்கு என்ன ஆதாரம் ?"

"பல காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதுதான் ஆதாரம்."

கோயிலிலிருந்து தெற்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில் மாணிக்கவாசகர் கோயில் இருக்கிறது. சாலையின் கீழ்ப்பக்கம் கிழக்கு நோக்கிய சந்நிதியையுடையதாகச் சிறிய மதிலும் சிறிய விமானமும் உடையதாக அது காட்சி அளிக்கிறது. அந்த இடம் முன்பு வெறும் வெளியாகத்தான் இருந்ததாம். மாணிக்கவாசகர் வீடு இருந்த இடம் என்று கர்ண பரம்பரையாகச் சொல்லிவந்தார்களாம். ஊரில் உள்ளவர்கள் பொருள் திரட்டி அவ்விடத்தில் கோயிலைக் கட்டினார்கள். 1934-ஆம் ஆண்டு இக்கோயில் நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கர்ப்பக்கிருகத்தில் மாணிக்கவாசகர் திருவுருவம் இருக்கிறது. வெளியில் விநாயகரும் சுப்பிரமணியரும் இருக்கிறார்கள். சில காலம் ஆதிசைவர் பூஜை நடந்துவந்தது. இப்போது வைதிக பூஜை நடந்துவருகிறது.

மாணிக்க வாசகர் ஆமாத்தியப் பிராமண குலத்தில் உதித்தவர். பரம்பரை பரம்பரையாக அமைச்சராக இருந்துவரும் குடும்பம் அது அவருடைய முன்னோர்கள் மானமங்கலம் என்ற ஊரிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்று தெரிய வருகிறது.

> மன்னும்இந் நகரி தன்னில்
> மானமங் கலத்தா ராகும்

தொன்னெறி முனிவ ராம்ஆ
மாத்தியர் தொழுகு லத்து
நன்னெறி விடையிற் போந்தோர்
நன்கணத் தலைவர் நாமம்
இன்னெறி வாத வூரர்
என்னவந் துதயம் செய்தார்

என்று பழைய திருவிளையாடல் கூறுகிறது. சிவ கணத்தில் ஒருவரே மாணிக்க வாசகராக அவதாரம் செய்தார் என்பது அந்நூலாசிரியர் தெரிவிக்கும் செய்தி. அவர் நந்தியெம்பெருமானின் திருவவதாரம் என்றும் சொல்வதுண்டு. வடமொழியில் உள்ள மணிவாக்ய சரிதம் என்ற நூல் அவ்வாறு சொல்கிறதாம்.

மணிவாசகப் பெருமான் அவதாரம் செய்த ஊர் சிறந்த ஊர். தீர்த்தச் சிறப்புள்ள ஊர். அவர் யாருடைய அவதாரம்? இந்தக் கேள்விக்கு விடை காணவேண்டுமானுல் ஒரு பெரிய வாதம் எழும். மாணிக்கவாசகர் மூவருக்கு முற்பட்டவரா, பிற்பட்டவரா?—இது அதைவிடப் பெரிய வாதம். ஆனுல் இதுதான் அவர் பிறந்த இடம் என்பதில் எந்த வாதமும் இல்லை. அந்த வாதமில்லா ஊர் வாதவூர் மட்டுமன்று; வேதவூர்கூட!

# மதுரை ஒவியங்கள்

## 1

மதுரை மாநகரம் என்ற பெயர் என்றும் பெருமைக்கு உரிய பெயர்; அன்றும் சரி, இன்றும் சரி, அது மாநகரந்தான். தமிழர் சரித்திரத்தைக் காண வேண்டுமானல் மதுரையின் சரித்திரத்தைப் படித்தாலே போதும். தமிழர் வளர்த்த கலைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானல் மதுரையிலே தெரிந்து கொள்ளலாம். தமிழ்நாட்டின் பக்தி ஓங்கி வளர்ந்து நிற்கும் வரலாற்றுக்கு மதுரை ஒரு தனித் தம்பம் போன்ற அடையாளம். தமிழ்மொழி வளரும் தாயகம் மதுரை. மணிவாசகர் வளர்ந்து மதி மந்திரியாக வாழ்ந்து இறைவன் திருவருளை வெளிப்படுத்தியது மதுரை. சரித்திர வரலாற்றில் பல இடங்களில் தன் பெயரைத் தோற்றிக்கொண்டு விளங்குவது மதுரை. தமிழ் இலக்கியத்தில் ஒளி விளக்காகச் சுடர்வது மதுரை. "உலகத்தை ஒரு தராசிலிட்டு மதுரையை மற்ருெரு தராசில் இட்டால் மதுரைதான் கனம் மிகுதியாகக் காட்டும்" என்று சங்கப் பரிபாடலில் ஒரு பாடல் உண்டு.

தமிழர் நாகரிக மேம்பாடு விளைந்த நிலம் மதுரை; பக்திப் பயிர் விளைந்த ஊர் மதுரை; இலக்கிய வளம் விளைந்த நகர் மதுரை. தமிழையே மதுரைக்குரிய தமிழ் என்று பழம்புலவர் பாடுகிருர்; "தண்டாரான் கூடல் தமிழ்" என்பது அவர் கூற்று.

மதுரைக்குப் புதிதாகப் பெருமை வரவேண்டும் என்பது இல்லை. அதன் பெருமையைப் புதிதாக நூலெழுதிப் பரப்ப வேண்டுமென்ற அவசியமும் இல்லை. அப்படி அதன் பெயர் காவியத்திலும் ஓவியத்திலும் பல காலமாக இடங்கொண்டு நிமிர்ந்து நிற்கிறது.

மாணிக்கவாசகர் பல ஆண்டுகள் வாழ்ந்த நகரம் ஆதலால் இப்போது அதைப்பற்றிச் சொல்லும் சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அவர் திருவவதாரம் செய்த திருவாதவூரைத் தரிசனம் செய்துகொண்டு சூட்டோடு சூடாக மதுரைக்கு முதல் முறையாக வந்து திருக் கோயிலைத் தரிசிப்பதாக எண்ண வேண்டாம். எத்தனையோ முறை மதுரை மீனாட்சி யம்மையையும் சொக்கநாதனையும் வழி பட்டிருக் கிறேன். ஆனல் இப்போது மாணிக்கவாசகரை முன்னிட்டுக்கொண்டு மதுரைக் கோயிலை அணுகினேன். பாண்டியன் அரண்மனை இருந்த இடம் இன்னதென்று இப்போது தெரிந்துகொள்ள இயலாது. அரசனது அரண்மனைக்கே அடையாளம் இல்லையென்றால் அமைச்சராகிய வாதவூரர் வாழ்ந்த இடம் எங்கே தெரியப்போகிறது ?

பழங்கால மன்னர்கள் தாம் வாழப் பெரிய பெரிய அரண்மனைகளைக் கட்டிக்கொள்ளவில்லை. சிவ பிரானாகிய அரனுக்கு மனை கட்டினார்கள். தாம் வாழ ஏதோ ஒரு வகையில் மாளிகை கட்டிக்கொண்டிருக் கலாம். "இடம்பட வீடு இடேல்" என்பது ஔவைப் பாட்டியின் ஆணை. இறைவன் திருக்கோயிலுக்கு மேற்பட்ட வகையில் மாடமோ மாளிகையோ கட்டுவது பழங்கால வழக்கம் அன்று. ஆகையால் சிறி

தாகக் கட்டிய அரண்மனையை இப்போது காண முடிவதில்லை; பெரிதாகக்கட்டிய அரனது மனையைக் காண்கிறோம். அரண்மனையும் பெரிதாக உறுதியாக இருந்தால் ஆலயங்களைப்போலவே அவைகளும் இன்று நின்று விளங்க வேண்டுமல்லவா?

பாண்டியன் அரண்மனையும் மணிவாசகர் மாளிகையும் இல்லாவிட்டாலும் அவர்கள் எக்காலத்தும் உள்ளத்தில் நினைந்து வாழ்ந்த சொக்கநாயகன் திருக்கோயில் இன்றும் மதுரையில் வழிபடும் பேராலயமாக விளங்கி வருகிறது. "ஒரு காலத்தில் இங்கே ஆயிரக்கணக்கான மக்கள் வழி பட்டார்கள்" என்று கதை பேச இடமாகவும் பழஞ் சின்னக் காட்சிப் பொருளாகவும் இராமல் இன்றும் மக்கள் உள்ளம் தூய்மை பெறவும் அன்புடையோர் இன்ப அநுபவம் பெறவும் ஏற்ற இடமாக அக்கோயில் திலவுகிறது.

"இந்தக் கோயிலில் எங்கெங்கே மாணிக்க வாசகரைக் காணலாம்?" என்ற கேள்வியோடு கோயிலின் பிராகாரங்களை வலம் வந்தேன்.

## 2

திருவாதவூரர் இளமையில் பேரறிவுடையவராக விளங்கியதைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அப்பெருமானை வருவித்துத் தனக்கு முதலமைச்ச ராக வைத்துக் கொண்டான். அரசியல் நூலும் மனநூலும் நன்கு தெரிந்தவராதலால் திருவாதவூரர் மிகச்சிறப்பாகத் தம் கடமையை ஆற்றிவந்தார். பாண்டிய நாட்டிலும் பிற நாட்டிலும் உள்ளவர்கள் பாண்டிய மன்னனிடம் அன்பு பூண்டு பாராட்டும்

வகையில் செயல்களைப் புரிந்தார். வேற்றுத் தீவுகளி லுள்ள மன்னரும் வந்து பாண்டியனுடன் நட்புப் பூண்டு இன்புற்றனர்.

அமைச்சுத் தொழிலில் பேராற்றல் உடையவராக இருந்தாலும் அவர் உள்ளத்தில் ஞான வேட்கை தீவிரமாக உண்டாயிற்று. சிவஞானம் பெற்று இறைவனருளுக்குப் பாத்திரராக வேண்டும் என்ற ஆவல் தலைதூக்கி நின்றது. குருவின் திருவருள் இல்லாமல் இத்தகைய பேறு கிடைப்பதரிது என்று உணர்ந்து, "நம்மை ஆண்டு அருள் செய்யும் குருநாதன் எங்கே கிடைப்பான்!" என்று அலமந்து ஏங்கியிருந்தார். யாரேனும் பெரியவர்கள் வந்தால் அவர்களை அடைந்து வழிபட்டுத் தமக்குத் தோன்றிய ஐயங்களை அவர்கள்பாற் கேட்டுத் தெரிந்துகொள்ள முயல்வார். பலரிடம் இப்படிக் கேட்டுக் கேட்டுப் பழகியும் அவர் உள்ளம் அமைதி பெறவில்லை. அவர் உள்ளத்தில் தோன்றிய ஞான வேட்கை முறுகி வந்தாலும், புறத்தே அமைச்சருக் குரிய கடமைகளைச் செவ்வையாகவே ஆற்றி வந்தார்.

**கள்ளக் காதல னிடத்தன்பு**
**கலந்துவைத் தொழுகும்**
**உள்ளக் காரிகை மடந்தைபோல்**
**உம்பரைக் காப்பான்**
**பள்ளக் காரிஉண் டவனிடத்**
**துள்ளன்பு பதிந்து**
**கொள்ளக் காவல னிடைப்புறத்**
**தொழிலுமுட் கொண்டார்***

*காரிகை மடந்தை - அழகையுடைய பெண். உம்பரைக் காப்பான் - தேவர்களைக் காக்கும்பொருட்டு. பள்ளக்காரி - கடலில் எழுந்த நஞ்சை. உண்டவன் - சிவபெருமான்.

என்று அந்த நிலையைத் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் கூறுகிறார்.

இப்படி இருக்கையில் ஒருநாள் பாண்டிய அரசனது குதிரைப் படைக்குத் தலைவன் மன்னனிடம் வந்து, "அரசே, நம்முடைய குதிரைப் படை வரவரக் குறைந்து விட்டது" என்றான். "ஏன்?" என்று காரணம் கேட்டான் பாண்டியன். "குதிரைகள் வாங்கிப் பல காலமாகி விட்டமையால் பல குதிரைகள் இறந்துபோயின. எஞ்சியிருப்பவற்றில் கிழட்டுக் குதிரைகள் பல; நோயுற்றவை பல. அவற்றால் ஒரு பயனும் இல்லை" என்றான். புதிய குதிரைகளை வாங்கிக் குதிரைப் படையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் பாண்டியனுக்கு உண்டாயிற்று.

அவன் திருவாதவூரரைப் பார்த்து, "நமக்கு வேண்டிய குதிரைகளை ஆராய்ந்து வாங்கும் திறமை உமக்குத்தான் உண்டு. நீர் கடல் துறைக்குச் சென்று மேற்கு நாட்டிலிருந்து வந்து இறங்கும் குதிரைகளில் நல்லனவற்றைத் தேர்ந்து வாங்கி வாரும். உமக்கு வேண்டிய பொருளை நம் கருவூலத்திலிருந்து எடுத்துச் செல்லும்" என்றான். திருவாதவூரர் அவ்வாறே பண்டாரத்தினின்று பல பெட்டிகளில் நிதியை எடுத்து வைத்து ஆட்களைக் கொண்டு தூக்கி வரச் செய்தார்.

தாம் பயணப்படுவதற்கு முன் சொக்கேசன் ஆலயம் சென்று அம்மையையும் அப்பனையும் தொழுது வணங்கினார். இறைவன் சந்நிதியில் தொழுதபோது அவருக்கு ஒரு நினைவு தோன்றிற்று. 'இப்பொழுது பாண்டிய மன்னனுக்கு மற்ற மன்னர்

யாவரும் நட்புடையவர்கள். ஆகையால் எந்தக் காரணத்தைக் கொண்டும் போர் நிகழ வாய்ப்பில்லை. அப்படி இருக்க வீணே படையைப் பெருக்கிக் கொள்வதனால் என்ன பயன்? அதற்காக இந்தப் பொருளைச் செலவிடுவதைவிட இறைவன் பொருட்டும் அவன் அடியார்பொருட்டும் செலவிட்டால் உலகில் ஆன்ம நேய ஒருமைப்பாடும் அமைதியும் உண்டாகுமே! படையைக் கூட்டினால் போரிடக் கூட்டுகிறான் என்ற எண்ணமே பிற மன்னர் உள்ளத்தில் உண்டாகும். அதனால் அவர் அமைதி இழப்பர். தாம் போரில் முந்திக்கொள்ள எண்ணி அவரும் படையைப் பெருக்க முற்படுவர். இனிமேல் போர் வந்தால் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று செய்யும் இந்தச் செயலே போருணர்ச்சியைத் தூண்டி விடுவதாக அமைந்துவிடுமே! இவ்வாறன்றிச் சிவ புண்ணியச் செயல்களில் பொருளைச் செலவிட்டால் அன்பர்கள் பெருகுவார்கள். பகையும் வெறுப்பும் நீங்கும். அவையே போருக்கு முளைகளாதலால் அவை நீங்கினால் போர் நிகழவே இடமிராது' என்று அவருடைய சாந்த மயமான உள்ளம் எண்ணியது. அவர் இவ்வெண்ணத்தில் ஊன்றி நிற்கும்போது அர்ச்சகர் அவர் கையில் திருநீறளித்தார். 'இறைவனே நம்முடைய கருத்துக்கு இசைவு காட்டுகிறான்; இதுவே அதற்கு அறிகுறி' என்று அமைச்சர்பிரான் உறுதி பூண்டார். புளகம் போர்ப்பக் கண்ணீர் வார அந்தத் திருநீற்றை அணிந்து கொண்டார். இறைவனிடம் விடைபெற்றுப் பொருட்சுமையோடு மதுரையை விட்டுப் புறப்பட்டார்.

அப்போது இறைவன் திருவாதவூரரை ஆட் கொள்ளும் பொருட்டுக் குருநாதனுக வேடம் பூண்டு கணத் தலைவர் மாணுக்கராக உடன் வரத் திருப் பெருந்துறைக்கு வந்து ஆலயத்திலுள்ள குருந்த மரத் தடியில் எழுந்தருளி யிருந்தான். திருவாதவூரரும் முன்னை நல்வினையின் ஆற்றலால் அவ்வூருக்குப் போய்ச் சேர்ந்தார். அவ்வூரை அணுகியது முதலே அவருக்குத் தம்மையும் அறியாமல் ஒருவித இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. மனம் உருகியது. "என்னை ஆண்டருளும் குருநாதன் இங்கேதான் இருக்க வேண்டும்" என்ற உள்ளுணர்வு தோன்றியது. ஆல யத்துக்குச் சென்றார். தீர்த்தத்தில் நீராடி இறைவ னைத் தொழுது வலமாக வந்தார். அங்கே குருந்த மரத்தடியில் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த இறைவனைக் கண்டார்.

இறைவனைச் சூழ நின்ற அன்பர்கள் ஞானம் நிறைந்தவர்களாக விளங்கினார்கள். விரதம் இருந்து பக்குவம் மீதூர்ந்தமையால் விரதங்களை விட்டவர் பலர். ஆனந்தக் கூத்து ஆடுகிறவர் பலர். பாடுபவர் பலர். உலகம் நகைக்கும்படியாகப் பித் தரைப்போல இருப்பவர் பலர். அழுது கொண்டிருப் பவர் பலர். சிரித்து நிற்பவர் பலர். தம் அகக் கண் ணால் இறைவன் திருவுருவத்தைத் தரிசித்துப் புறக் கண்ணாலும் உலகம் எங்கும் அவனையே கண்டு, பிற வற்றைக் காணாத குருடராக நிற்போர் பலர்.

ஒழித்த நோன்பினர், ஆடலர்,
பாடலர், உலகம்
பழித்த செய்கையர், அழுகையர்,
நகையினர், பாசம்

கழித்த கண்ணினால் அரன் உருக்
கண்டுகொண் டுலகில்
விழித்த கண்குரு டாத்திரி
வீரரும் பலரால்.

இத்தகைய தொண்டர் குழாத்திடையே எழுந்தருளியிருந்த ஞானதேசிகனைக் கண்டார் திருவாதவூரர். கண்டவுடனே விரைந்து சென்று அவன் காலில் விழுந்து எழுந்து கைதலைமேல் ஏறக் கண்ணீர் வாரத் துதித்தார், குருமூர்த்தியாக வந்த சிவபெருமான் அவரைக் குளிர்ந்தபார்வையால் நோக்கிக் கையினால் தலை தீண்டியருளி நல்லுபதேசம் புரிந்தான். ரசவாதம் செய்த தாமிரம் பொன்னானாற்போலப் புதிய இன்ப அநுபவத்தைப் பெற்ற திருவாதவூரர் அவ்வநுபவக் கடலில் ஆழ்ந்தார். பின்பு அமுதமுண்டார் ஏப்பம் விடுவதுபோல அவருடைய திருவாக்கிலிருந்து அற்புதமான பாடல்கள்எழுந்தன. இறைவன் திருவருளால் மாணிக்கம் போன்ற சொற்கள் அமைந்த கவிகள் புறப்பட்டன. அப்போது அவரையாண்ட ஞான தேசிகன் மாணிக்கவாசகர் என்ற நாமத்தை அப்பெருமானுக்குச் சூட்டினான். இறைவன் அருளாலே தம்முடைய கரணங்களெல்லாம் அவனுக்கே அர்ப்பணமானதையும், தம் வாக்கு மணி வாக்கு ஆனதையும் மாணிக்க வாசகர் திருவாசகத்தில் ஓரிடத்தில் சொல்கிறார்.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார

வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே நின்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

மாணிக்க வாசகரை இன்னும் சில காலம் உலக வாழ்வில் வைத்து அவரால் உலகம் பெரு நன்மையை அடையும்படி செய்ய வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம். ஆதலால் அவரை ஆண்டுகொண்ட ஞானதேசிகன், "இங்கே நீ செய்ய வேண்டிய கடமைகள் சில உண்டு. இங்கே அதுவரையில் இருப்பாயாக!" என்று சொல்லித் தன்னுடன் வந்தவர்களோடும் மறைந்தருளினான். கனவு கண்டவன் விழித்துக் கண்டனவெலாம் பொய்யாகப் போனதறிந்து வாடுவதைப்போல மணிவாசகர் வேதனைக்குள்ளானார். "இறைவன் தனித்து வாழும்படி என்னை இங்கே இருத்திப் போய்விட்டானே!" என்று வருந்தினார்.

"நாய்க்குச் சேணம் போட்டதுபோல எனக்குத் திருவுருவத்தைக் காட்டி ஆட்கொண்டு இப்போது மறைந்தருளினாயே! உன்னுடைய அடியாருடன் கூட்டாமல் என்னைத் தனியே விட்டுச் சென்றது நீதியா? வினைக்குக் கொள்கலனும் இந்த உடலை நெருப்பிலிடாமல் இருக்கிறேனே! மலையிலேறி உருண்டு மாய்க்காமலும் கத்தியால் வெட்டி அழிக்காமலும் இன்னும் வாழ்கின்றேனே! நின் உடைமை இந்த உடம்பு. இதைச் சிதைப்பதற்கு எனக்கு ஏது அதிகாரம்? நின்னைப் பிரிந்து வாழமாட்டேன். நீ என்னை ஆண்டு கொண்ட அருமையை அறியாத இந்தப் பேதையிடம்

என்ன குறையைக் கண்டு அகன்ருய் அப்பனே! பிருதிவி முதலிய தத்துவங்களைத் துழாவித் தடுமாறி மனம் புண்ணுகி யான் இன்னுன் என்று அறியாமல் திரிந்த என்னை, அருட் கண்ணுல் நோக்கி மலம் கரையச் செய்து யான் இன்னுன் என்பதை உணர்த்தி என்னையே எனக்குத் தந்த பெருமானே! நீ எங்கே போனுய்?'' என்று புலம்பினுர்,

மண்ணுதி ஆருறும்
    மனக்து ழாவித் தடுமாறிப்
புண்ணுகி எனைக்காணு
    துழல்கின் றேனைப் போதஅருட்
கண்ணுல் அவைமுழுதும்
    கரைய நோக்கி யான்யான்என்
றெண்ணு எனைத்தந்தாய்!
    எங்குற் ருயோ எந்தாயே!

இப்படிப் புலம்பியபடியே கோபுர வாசலுக்கு வந்தவர், மதுரையிலிருந்து தம்முடன் வந்தவர்கள் அங்கே நிற்பதைக் கண்டு, "ஆடி மாதம் கழிந்த பிறகு ஆவணியில் குதிரைகள் வரும் என்று பாண்டிய மன்னனிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று சொல்லி அனுப்பினுர். அவர்கள் அப்படியே மதுரைக்குப் போய்ச் சொல்லப் பாண்டியன் ஆவணி மாதம் குதிரை வரும் என்ற எண்ணத்தோடு இருந்தான்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தங்கித் தாம் கொண்டு வந்த பொருளையெல்லாம் சிவ புண்ணியச் செயல்களில் செலவிடத் தொடங்கினுர். ஆலயத் திருப்பணி செய்வித்தார். பூசை முதலிய வற்றுக்குச் செலவிட்டார். அடியவர்களுக்கு விருந் தளித்தார்.

ஆடி மாதம் முடிந்து ஆவணி மாதம் வந்தது. குதிரை வராதது கண்ட பாண்டியன் திருவாதவூரருக்கு ஓலை போக்கினான். அது கண்ட அவர் திருப்பெருந்துறை நாயகனை அணுகி, "இனி என் செய்வேன்!" என்று இரங்கித் துதித்தார். அப்போது அசரீரியாக இறைவன் பணித்தபடி, "விரைவில் குதிரைகள் வந்து சேரும்" என்று ஓர் ஓலை எழுதிப் பாண்டியனுக்கு அனுப்பினார். அன்று இரவில் இறைவன் மாணிக்கவாசகர் கனவில் தோன்றி, "நாம் குதிரைகளுடன் வருகிறோம். நீ முன்னால் மதுரை செல்வாயாக" என்று பணித்தான். அவ்வாறே திருவாதவூரடிகள் காலையில் எழுந்து இறைவனை வணங்கி விடைபெற்று மதுரைக்குச் சென்றார், சென்று பாண்டியனைக் கண்டார். பாண்டியன் அவரை வரவேற்று, "எவ்வளவு பொன் கொண்டு போனீர்? எவ்வளவு செலவு செய்தீர்? எவ்வளவு குதிரைகள் வாங்கினீர்?" என்று கேட்டான். "நான் கொண்டு சென்ற பொன்னுக்குக் கணக்கே இல்லை. அப்படியே வரப்போகும் குதிரைகளுக்கும் கணக்கே இராது. இதோ அவை வரப்போகின்றன. நீயே கண்டு பெருமையடையலாம்" என்றார் மாணிக்கவாசகர்.

பின்பு அவர் சொக்கநாதன் திருக்கோயில் சென்று வழிபட்டு வீடு சென்று இறைவன் திருவருளால் எல்லாம் நன்கு நடைபெறும் என்ற நம்பிக்கையோடிருந்தார்.

அன்று குதிரை வரவில்லை. அடுத்த நாள் பாண்டியன் கேட்டபோது, "இன்னும் மூன்று நாட்களில் வந்துவிடும்" என்றார். குதிரைகள் வந்தால்

கட்டுவதற்கும் தண்ணீர் காட்டுவதற்கும் ஏற்ற அமைப்புகளைச் செய்யும்படி மன்னனிடம் சொன்னார். அவ்வாறே அவன் செய்தான். மூன்று நாட்கள் ஆயின. குதிரைகள் வரவில்லை.

பாண்டியன் பொறுமையை இழந்தான். "இவர் நம்மை ஏமாற்றுகிறார், இவரைத் தக்கபடி தண்டித்து, எடுத்துப் போன நிதியை மீட்டுத் தரும்படி செய்யுங்கள்" என்று தண்டம் செய்வாரை அனுப்பினான். அவர்கள் மாணிக்கவாசகரை அணுகி, "பொன்னுக்கு வழி சொல்லும்" என்று சொல்லி அவர் முதுகில் கல்லேற்றி வைத்தார்கள். கையிலும் காலிலும் கிட்டி கட்டினார்கள். அப்போதெல்லாம் அந்த மெய்ஞ்ஞானி இறைவனையே எண்ணியிருந்தார். பின்பு இரவு வரவே அவரைக் காவலாளர் சிறையில் அடைத்துவிட்டுச் சென்றார்கள். இரவெல்லாம் அங்கே கிடந்த அவர் விடிந்தவுடன் திருக்கோயிலில் பூசை நடக்கும் ஒலியைக் கேட்டார். உடனே இறைவனை நோக்கிப் புலம்பினார். "யமன் செய்யும் கொடுமையிலும் மிக்க கொடுமையினால் நான் வருந்துவதைக் காணவில்லையோ! என் முறையீட்டைக் கேட்கவில்லையோ! நீ எங்கும் செவியுடையவனாயிற்றே!" என்று நைந்தார்.

பொங்கும் சினமடங்கல்
    போன்றுருத்து வெங்கூற்றம்
அங்குப் புரியா
    அருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும்
    வந்தஞ்சல் என்கிலையால்;
எங்கும் செவியுடையாய்!
    கேளாயோ, என்னுரையே ?

குழந்தையின் அழுகையொலியைக் கேட்ட தாய் இறங்கி ஓடிவருவதுபோலத் தன்னுடைய அன்பராகிய மணிவாசகர் புலம்புதலை யறிந்த பெருமான் குதிரைகளைக் கொண்டுவர எண்ணினன். தன் கணங்களைக் குதிரை வீரர்களாக்கிக் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கினன். அந்தப் படைக்குத் தலைவனாக நின்று, வேதமாகிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வரலானன்.

குதிரைப்படை வருவதை அறிந்த சிலர் அச் செய்தியை மாணிக்கவாசகரிடம் தெரிவிக்க, அவர் உடனே மன்னனை யணுகி அதைச் சொன்னர். மன்னன் மன மகிழ்ந்து குதிரை வரவை எதிர்நோக்கியிருந்தான். சோதனை செய்வதில் வல்லவனாகிய இறைவன் மறுபடியும் தன் மாயையால் சிறிது தாமதம் செய்தான். மறுபடியும் மன்னனுக்கு ஐயம் எழுந்தது. மீண்டும் மணிவாசகர் தண்டனைக்குள்ளானர். இறைவனை நோக்கிப் புலம்பினர். அப்போது உண்மையாகவேகுதிரைகள் மதுரைமாநகரில் புகுந்துவிட்டன. அதனை அறிந்த மன்னன் மாணிக்கவாசகரை விடுவிக்கச் செய்தான்.

குதிரைகள் பாண்டியன்முன் வந்து நின்றன. கணக்கில் அடங்காத குதிரைகளைக் கண்டு அவன் பிரமித்துப் போனன். குதிரைப்படைக்குத் தலைவனாக எழுந்தருளிய இறைவன் எவ்வாறு வந்தான் என்பதைப் பரஞ்சோதி முனிவர் அழகாகச் சொல்கிருர். எல்லா அண்டங்களுக்கும் ஆதாரமாக நின்று தாங்குகிறவன் இறைவன். அவனை வேதமென்னும் பரி தாங்கி நின்றது. ஒரு காலத்தும் அசைவில்லாத தாமரை போன்ற திருவடி அசையக் குதிரையின்மேல்

ஏறினன். பாசத்தை நீக்கும் திருக்கரத்தால் குதிரைப் பாசமாகிய கடிவாளத்தைப் பற்றி யிருந்தான். இந்தக் கோலத்தில் அரசன்முன் வந்து, "மன்ன, எங்கள் குதிரையேற்றத்தைச் சிறிதளவு காண்பாயாக!" என்று கூறினன்.

அண்டமெல்லாம் ஆதார மாகத் தாங்கும்
ஆனந்தத் தனிச்சோதி அண்டம் தாங்கும்
சண்டமறைப் பரிதனக்கா தார மாகித்
தரிக்கஒரு காலத்தும் அசைவி லாத
புண்டரிகத் தாள்அசையப் பாசம் நீக்கும்
புனைகரத்தால் பரிபூண்ட பாசம் பற்றிக்
கொண்டரசன் எதிர்போந்து மன்ன எங்கள்
குதிரையேற் றம்சி றிது காண்டி என்றார்.

இவ்வாறு சொல்லிக் குதிரையைப் பல கதியில் விட்டுக் காட்டினன். பிறகு குதிரைகளின் இலக்கணங்களையும் வகைகளையும் எடுத்து விரிவாகச் சொன்னன். எல்லாவற்றையும் கேட்ட மன்னன் அளவில்லாத பேரின்பத்தில் மூழ்கினன்.

எல்லாம் கூறி முடித்தபிறகு குதிரை வீரனக வந்த இறைவன்,

ஈறில்புக ழாய்பொருந ரிப்பரியைப்
பூசனம்செய் திறைஞ்சிப் பாசம், மாறுவரால்

என்று கூறினனும். 'முடிவில்லாத புகழை யுடையவனே, வீரர்கள் இந்தக் குதிரைகளைப் பூசை செய்து வணங்கிக் கயிறு மாறுவார்கள்' என்று பொருள்படப் பேசினன். ஆனல் அந்தப் பேச்சில் இரண்டு பொருள் உண்டாகும்படி பரஞ்சோதி முனிவர் அமைத்திருக்கிருர். "பொருநரிப்பரியைப் பூசனம்

செய்து' என்பதை. 'பொருநர் இப்பரியைப் பூசனம் செய்து' என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். 'பொரு நரிப்பரியைப் பூசனம்செய்து' என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். 'எதிர்த்து மோதும் நரி களாகிய குதிரைகளைப் பூசை செய்து' என்று உண்மையைச் சொல்லும் வகையிலும் இத்தொடர் அமைந்திருக்கிறது.

பாண்டியன் அவ்வாறே பூசை செய்து வழிபட, குதிரைப்படைத் தலைவன் சொக்கநாதர் ஆலயத்தை நோக்கிக் கைகுவித்து, வாழ்த்துக் கூறிக் கயிறு மாறிக் குதிரைகளைப் பாண்டியனுக்கு அளித்தான். தான் ஏறி வந்த வேதக் குதிரை ஒன்று தவிர மற்ற எல்லாக் குதிரைகளையும் இவ்வாறு வழங்கப் பாண்டியன் பெற்றுக் கொண்டான்.

பின்பு பாண்டியன் குதிரைத் தலைவனுக்கும் பிறருக்கும் ஆடை நல்க அவற்றை வாங்கி யாவரும் அணிந்து கொண்டனர். பழைய திருவிளையாடலில் இவ் விடத்தில் ஒரு சுவையான செய்தி வருகிறது.

குதிரைப்பாகனாக வந்த இறைவனிடம் பாண்டியன் அழகிய துகில் ஒன்றைப் பரிசாக அளித்தான். இறைவன் அதைக் குதிரையின்மேல் இருந்தவாறே தன் சவுக்கால் வாங்கித் தன் திருமுடிமேல் அணிந்து கொண்டான். பாண்டியன், 'நாம் கொடுத்ததை மரியாதையின்றிச் சவுக்கினால் வாங்கினானே!' என்று கண் சிவந்தபோது, ''இது குதிரைக்காரர்களுக்கு வழக்கம்'' என்று சொல்ல, அரசன் அறிந்து அமைதி பெற்றானாம்.

குதிரைகளைப் பெற்ற அரசன் மாணிக்க வாசகரைப் போற்றிப் பாராட்டி வழிபட்டான். ஆனால்—?

## 3

மதுரைக் கோயிலில் மாணிக்கவாசகப் பெருமானுடைய வரலாற்றோடு தொடர்புடைய சித்திரங்களும் சிற்பங்களும் எங்கேனும் இருக்கின்றனவா என்று தேடினேன். சொக்கநாதர் கோயிலைச் சுற்றி அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் சுதைச்சிற்பமாக அமைத்திருக்கிறார்கள். விஜயநகர அரசர்கள் காலத்துக்கு முன்பே அமைந்தவை அவை என்று சொல்கிறார்கள். அந்தச் சுதைச் சிற்பங்கள் சற்றே சிதைவாக இருப்பினும் மிகவும் கவனமாகக் கோயிலதிகாரிகள் பாதுகாத்து வருகிறார்கள்.* வண்ணமும் திண்ணமும் உடைய அந்தச் சிற்பங்களில் மாணிக்க வாசகரைக் கண்டேன். குதிரைச் சேவகர் குதிரைகளின் இலக்கணங்களை மன்னனுக்கு எடுத்தியம்பும் கோலத்தைக் கண்டேன்.

அடுத்த பிராகாரத்தில் துவஜஸ்தம்பத்துக் கருகில் உள்ள தூண்களில் கல்லிலே செதுக்கிய அழகுச் சிற்பங்கள் பல உண்டு. அவற்றிலும் மணிவாசகர் கதைப் பகுதிகளைக் கண்டேன். இறைவன் கயிறு மாறிப் பாண்டியனிடம் குதிரைகளை ஒப்பிக்கும் காட்சியை ஒரு சிற்பம் புலப்படுகிறது.

பொற்றாமரைக் குளத்தைச் சுற்றியுள்ள தாழ்வாரப் பத்தியில் வண்ண ஓவியங்கள் பல சுவரில்

* இப்போது இவற்றைச் செப்பஞ் செய்து அமைத்திருக்கிறார்கள்.

உள்ளன. பழங்காலத்தில் திருக்கோயில்களில் எழுத்து நிலை மண்டபம் என்றும் எழுதெழிலம்பலம் என்றும் பெயர் பெற்ற சித்திரசாலைகள் இருந்தன வாம். பொற்றாமரைக்குளத்தைச் சுற்றியுள்ள சுவரில் இருந்த ஓவியங்கள் அந்தச் செய்தியை நினைப் பூட்டின.

அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் சித் திரத்தில் அங்கே அமைத்திருக்கிறார்கள். மூன்று சுவர்களில் இவற்றைக் காணலாம். இவற்றைத் தீட்டிய காலம் 1894-ஆம் ஆண்டு (ஜயவூ கார்த்திகைமீ") என்று அந்த ஓவியங்களின் தொடக் கத்தில் குறித்திருக்கிறார்கள். அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் எழுதியவை அவை. ஆனால் அதற்கு முன்பும் அவ்விடத்தில் ஓவியங்கள் இருந் தன. சுவரில் ஓரிடத்தில் இப்போதுள்ள ஓவியம் சிதைந்து பொக்கையாக இருக்கிறது. அந்த இடத் தல் இந்த ஓவியப் படலத்துக்கும் கீழே உள்ள ஓவியத்தின் பகுதி தெரிகிறது. அதனால் சுவர் முழுவதுமே பழைய காலத்தில் ஓவியம் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

மாணிக்கவாசகர் அமைச்சர் கோலத்தோடு பெருந்துறை சென்று ஞானதேசிகனை வழிபடும் கோலத்தை இந்தச் சுவரோவியத்தில் கண்டு இன் புற்றேன். குதிரை ராவுத்தனாக வந்த இறைவன் கோலத்தைத் தரிசித்தேன்.

ஒவ்வொரு சித்திரமாக ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால் நாள் போவது தெரியாது; மாதம் போவ தும் தெரியாது.

# மண் சுமந்த மதுரை

1

மதுரை மாநகரம் முழுவதும் இதுவே பேச்சு; பாண்டிய மன்னன் எத்தனை செலவு செய்தாலும் கிடைக்காத குதிரைகள் அவனுக்குக் கிடைத்திருக்கின்றன என்று யாவரும் வியந்தார்கள். பாண்டி நாட்டையே விலையாகக் கொடுத்தாலும் அத்தகைய குதிரைகள் கிடைக்குமா? என்ன அழகான குதிரைகள்! கம்பீரமான குதிரைகள்!

இறைவன் தம்மைக் கைவிடாமல் காப்பாற்றினான் என்று மாணிக்கவாசகர் அவனை நினைந்து உருகினார். 'நாம் கொண்டுபோன பொருள் முழுவதையும் அன்பர்களும் தானும் ஏற்றுக்கொண்டு, நம்மையும் ஆட்கொண்டு துன்பத்தைத் தீர்த்தான். மிகவும் சிறந்த குதிரைகளைக் கொணர்ந்து வழங்கி அரசனுக்கும் மகிழ்ச்சி பெருகும்படி செய்தான். இனி நமக்கு யாதொரு கவலையும் இல்லை. அவனுடைய திருவருளால் இன்ப அநுபவம் பெறுவதற்கு ஏற்றபடி தவம் செய்யும் நிலையை நமக்கு இனி அருள வேண்டும்' என்று எண்ணி இன்புற்றார்.


பாண்டிய மன்னனும் மதுரைமா நகரத்தாரும் மந்திரியினுடைய முயற்சியால் அழகான குதிரைகள் வந்தன என அவரைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள், அன்று பகலில் இவ்வாறு எங்கும் மகிழ்ச்சி ஆரவாரமே நிறைந்திருந்தது.

பகல் போய் இரவு வந்தது. நட்சத்திரங்களாகிய எழுத்துக்களைப் பொறித்த வானமாகிய ஏட்டை இருளென்னும் மையைத் தடவி நிலாவென்னும் வெள்ளைத் துணியால் துடைப்பதற்குக் கடல்மீதே எழுந்தான் சந்திரன்.

சேய தாரகை வருணமாத்
  தீட்டிய வானம்
ஆய ஏட்டினை இருளெனும்
  அஞ்சனம் தடவித்
தூய வாள்நிலா என்னும்வெண்
  தூசினல் துடைப்பான்
பாய வேலையில் முளைத்தனன்
  பனிமதிக் கடவுள்.


[சேய-தூரத்தில் உள்ள. தாரகை-நட்சத்திரம். வருணம்-எழுத்து. அஞ்சனம்-மை. வாள்-ஒளி. தூசு-துணி. பாய வேலையில்-பரந்த கடலில்.]

பாண்டியனுடைய குதிரைப் பந்தியில் கட்டப்பெற்றிருந்த நரிக் குதிரைகள் யாவும் மீண்டும் நரிகளாகி விட்டன. இரவிலே மயங்கிப் பகலிலே தெளிவு பெறுவது உலகியல். இறைவன் அருட்செயல் நேர்மாருக விளைகிறது. பகலிலே உருமாறிய நரிகள் இரவிலே சுய உருவங்களை எடுத்தன. அவை தமக்குள்ளே பேசிக் கொண்டனவாம். "நாம் நம்முடைய சொந்த இடத்தில் எவ்வளவு சுகமாக வாழ்ந்துகொண் டிருந்தோம்! சுடுகாட்டில் சங்கும் பறையும் ஒலிப்பது எவ்வளவு இனிமையாக இருக்கும்! பெண்கள் அழுகுரலிசையைக் கேட்காத காதும் ஒரு காதா? இங்கே அந்தச் சங்கீதங்களே இல்லை. மகா




மதுரைக கோபுரம
பக்கம் 239


மதுரையில் உள்ள
மாணிக்கவாசகர் உற்சவர்
பக்கம் 254



மதுரை - மண் சுமக்கும்
இறைவன்
பக்கம் 27ப



மதுரை—கற்சிற்பம் :
கயிறு மாறுதல்
பக்கம் 252



மட்டமான குதிரைகளாகி மனிதர்களைச் சுமந்து கயிற்றாலும் சங்கிலியாலும் கட்டுண்டு சுதந்தரத்தை இழந்து விட்டோம். மனிதன் அடிக்கும் சவுக்கடியும் வாங்கினோம். பகலிலே பட்ட பாடு இனி ஏழேழு பிறவிக்கும் வேண்டாம், இதுவரைக்கும் இந்தத் துன்பத்தை அநுபவித்ததே இல்லையே! நம் மேலே கயிற்றினால் உண்டான வடுவும் சவுக்கால் அடித்த தழும்பும் பிறர் பரிகாசம் பண்ணும்படி இருக்கின்றன. போதும் இந்த வாழ்வு. இந்த இடத்தை விட்டு, விடிவதற்கு முன்னே போவதுதான் நல்லது'' என்று பேசிக் கொண்டன.

''சாப்பிடுவதற்கு ஏதாவது நல்ல பொருள் இருக்கிறதா? நண்டு இல்லை; நத்தை இல்லை; ஊன் இல்லை; ஒன்றும் இல்லை ; கடலையாம், கொள்ளாம், பயிறாம் ! இவற்றைக் கொண்டுவந்து வைக்கிறார்கள்; சீ! இவற்றை யார் தின்பார்கள் ?'' என்று சில நரிகள் பேசின.

உடனே நரிகள் எல்லாம் தம் கட்டை அவிழ்த்துக் கொண்டு புறப்பட்டன, போகும்போது சும்மா போகக் கூடாதா ? ''நரி வலம் போனால் நல்லதா, இடம் போனால் நல்லதா?'' என்று கேட்டவனுக்கு, ''மேலே விழுந்து கடிக்காமல் போனால் நல்லது'' என்று சொன்னவன் பேச்சு, அநுபவத்திலே பிறந்தது அல்லவா ? இந்த நரிகள் போகும் போக்கில் அங்கே இருந்த உண்மையான குதிரைகளைக் கடித்து ரத்தத்தைக் குடித்துச் சென்றன. விடுதலை பெற்ற மகிழ்ச்சி தாங்காமல் ஊளையிட்டுக்கொண்டு ஓடின. கணக்கில்லாத நரிகளாதலின் ஊர் முழுவதும் ஊளையிட்டுக் கொண்டே ஓடும்போது மக்கள் விழித்துக் கொண்

டனர். எங்கும் ஒரே நரிக் கூட்டம். ஒரே ஊளையின் ஒலி.மங்கல கீதமும் வாத்திய நாதமும் நிறைந்து விளங்கும் மதுரையில் நரியின் ஊளையே எங்கும் கேட்டது.

கரியின் ஓசையும் பல்இய ஓசையும் கடுந்தேர்ப்
பரியின் ஓசையும் இன்றமிழ் ஓசையும் பாணர்
வரியின் ஓசையும் நிரம்பிய மணிநகர் எங்கும்
நரியின் ஓசையாய்க் கிடந்தது விழித்தது நகரம்.

[கரி-யானை. பல் இயம்-பல வாத்தியங்கள். வரி-பாட்டு மணி - அழகு.]

நரிகள் குதிரைகளைக் கடித்துக் குதறிய தோடன்றி எதிர்ப்பட்ட பேர்களையும் கடித்து ஓடின. அவற்றைக் கண்டு மக்கள் ஓடினர்; ஒதுங்கினர்; ஒளிந்துகொண்டனர். இரவெல்லாம் இப்படி ஊர் அல்லோலகல்லோலப் பட்டது.

மறுநாள் விடிந்தவுடன் குதிரைப் பந்தியில் இருந்தவர்கள் அரசனிடம் சென்று, இரவு புதிய குதிரைகள் யாவும் நரிகளாக மாறிப் பழைய குதிரை களைக் கடித்து விட்டுச் சென்ற செய்தியை எடுத் துரைத்தார்கள். பாண்டியனுக்குக் கடுஞ்சினம் உண்டாகிவிட்டது. "வாதவூரனாகிய கள்வன் ஏதோ மாயஞ்செய்து நரிகளையெல்லாம் குதிரையாக்கிக் கொண்டுவரச் செய்திருக்கிறான். இவ்வாறு செய் தவனை என்னதான் செய்யக்கூடாது?" என்று கண்ணில் கனல் பிறக்கப் பேசினான்.

அப்போது இரவில் நடந்தது ஒன்றும் அறியாத வராய் மாணிக்கவாசகர் அரசவை நோக்கி வந்தார். அவரைக் கண்டவுடன் பாண்டியன் கடுகடுப்போடு,

"ஏராளமான பணத்தைக் கொண்டுபோய் நல்ல குதிரைகளாக வாங்கி அழகாகக் கொண்டு வந்தீரே! உம்மைப்போல அரச காரியத்தைச் செவ்வையாக நிறைவேற்றும் மந்திரி யார் உலகத்தில் இருக்கப் போகிருர்கள்!" என்று ஏளனமாகக் கேட்டான்.

"குதிரைகளுக்குக் குற்றம் ஏதேனும் உண்டோ?" என்று கேட்டார் மணிவாசகர்.

"குற்றம் ஏது? பாதி ராத்திரியில் எல்லாம் நரியாகி அருகில் இருந்த குதிரைகளைக் கடித்துக் குதறியதோடு எதிர் வந்தவர்களையும் கடித்து ஊர் கலங்கும்படி செய்து விட்டுக் காட்டுக்கு ஓடிப் போயின. உம்முடைய குதிரைகளின் அழகு தெரிந்ததா?" என்று கூறிப்பிறகு, "இவரை அழைத்துப்போய்த் தண்டித்து இங்கிருந்து கொண்டு போன பொருள் முழுவதையும் வாங்குங்கள்" என்று ஏவலாளருக்குக் கட்டளையிட்டான் பாண்டியன். அவர்கள் அப்படியே மணிவாசகப் பெருமானை அழைத்துச் சென்று வெயிலில் நிறுத்திக் கையிலும் நெற்றியிலும் கல்லை ஏற்றித் தண்டித்தார்கள்.

மணிவாசகர் இறைவனது மாயத் திருவிளையாடலை எண்ணி மனம் வாடினுர். தண்டனை தாங்காமல் இறைவனை நோக்கிக் கதறத் தொடங்கினுர்.

நாதவோ! நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ! பாதகனும் என்னைப் பணிகொண்ட
வேதவோ! வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ! போத நெறிகடந்த பூரணவோ!

(திருவிளையாடற்புராணம்)

## 2

இவ்வாறு தன் அன்பர் கதறவே அவருடைய பெருமையை உலகந்துக்கு வெளிப்படுத்த வேண்டு மென்று இறைவன் கருதினுன். வையையாற்றில் திடீரென்று என்றும் இல்லாதபடி வெள்ளம் பெருகும்படி செய்தான். இயற்கையாக உள்ள கரையை உடைத்துக்கொண்டு வெள்ளம் எங்கும் பரவத் தொடங்கியது. கடை வீதியிலும் மன்றங்களிலும் யானை கட்டிய இடங்களிலும் வெள்ளம் பாய்ந்தது.

நகர் முழுவதும் உள்ளவர்கள் என்ன செய்வதென்று அறியாமல் அல்லோலகல்லோலமாகித் தடுமாற, அதனை உணர்ந்த அரசன் தன் அமைச்சரை அழைத்து "வெள்ளத்தைத் தடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்" என்று சொல்ல, அவர்கள் அவ்வாறே செய்யப் புறப்பட்டார்கள்.

ஊரில் உள்ளவர்களில் ஒவ்வொருவரும் இன்ன இன்ன இடத்தில் கரையை உயர்த்த வேண்டுமென்று அளந்து வரையறை செய்தார்கள். பறையறைந்து கூலியாட்களை வருவித்து, அவரவர்களிடம் ஒப்பித்தார்கள். அங்கங்கே அரசாங்க ஊழியர்களைக் கொண்டு, நடக்கும் வேலையை மேற்பார்வையிடச் செய்தார்கள். ஊருக்கே வந்த அபாயமாதலால் எல்லோரும் வேகமாக வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தப் பாடுபட்டார்கள்.

அந்த ஊரில் பல ஆண்டுகள் மூத்துப் பழுத்த கிழவி ஒருத்தி இருந்தாள். அவளைச் செம்மனச் செல்வி என்றும், வந்தியென்றும் அழைப்பார்கள். அவள் தினந்தோறும் பிட்டுச் சுட்டு விற்பவள்.

ஒவ்வொருநாளும் முதலில் சொக்கநாயகனை நினைந்து நிவேதனம் செய்த பிறகே வியாபாரம் செய்யத் தொடங்குவாள்.

இந்த வந்திக்கும் அரசாங்கத்தார் எல்லை கோலிக் கொடுத்துக் கரைபோடும்படி சொன்னார்கள். அவளுடைய பங்கை அடைப்பதற்குக் கூலியாள் யாரும் கிடைக்கவில்லை. அதனால் மிக வருந்திய கிழவி, "நான் என்ன செய்வேன்!" என்று வாடிச் சொக்கநாதனை நினைந்து பிரார்த்தித்தாள். "சுவாமி, பிட்டு விற்று ஜீவனம் செய்யும் இந்த ஏழையேன் உன் அருளால் சிறிதும் துன்பம் இல்லாமல் சூரியன் எங்கே உதித்தால் என்ன என்று சுகமாக வாழ்ந்தேன். இப்போது மன்னவன் இட்ட கட்டளையினால் எனக்கு ஒரு தொல்லை வந்திருக்கிறதே! எனக்குச் சுற்றமோ, குழந்தையோ, துணையோ, யாரும் இல்லை. இந்த அகதிக்கு இந்தத் துன்பம் வருவது நியாயமா அப்பனே? என் பங்கு அடைபடாமல் இருந்தால் காவலாளர் வந்து சீற்றங்கொண்டு கண்டிப்பார்களே! வேலை செய்பவன் ஒருவனையும் காணவில்லையே!" என்று கண்ணீர் வாரக் கதறினாள்.

அப்போது இறைவன் அன்புடைய வந்திக்குத் துணை செய்யும் பொருட்டுக் கூலியாளாய்ப் புறப்பட்டான். இடையிலே அழுக்கேறிய பழைய துணி ஒன்றை உடுத்து, தலையின்மேல் அன்பர் சாத்தும் இண்டை மாலையைப் போன்ற சும்மாட்டை வைத்து, அதன்மேல் ஒரு கூடையைக் கவிழ்த்து, திருத் தோளின்மேல் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

இந்தக் கோலத்தோடு, "கூலியாளோ, கூலி யாள்!" என்று கூவிக்கொண்டே வந்தி இருக்கும் தெருவின் வழியே வந்தான் இறைவன். அவன் கூவியதைக் கேட்டவுடன் மகிழ்ச்சி மிகப் பெற்ற வந்தி அவனை அழைத்து, "அப்பா, என் பங்கை நீ அடைத்துத் தருவாயா?" என்று கேட்டாள்.

அவன், "அடைக்கிறேன்; நீ என்ன கூலி தரு வாய்?" என்று கேட்டான்.

"பிட்டுத் தருகிறேன்" என்று கிழவி சொன்னாள். அதற்கு ஒப்புக்கொண்ட இறைவனாகிய கூலியாள், "இப்போது எனக்கு மிக்க பசியாகவும் களைப்பாகவும் இருக்கிறது. முதலில் எனக்கு உதிர்ந்திருக்கும் பிட்டைக் கொடுப்பாயானால் அதைத் தின்று இளைப் பாறிவிட்டு உன் கரையை அடைத்துத் தருகிறேன்" என்றான்.

கிழவி பிட்டின்மேல் மூடியிருந்த துணியை நீக்கி, உதிர்ந்த பிட்டை அள்ளி எடுத்து அவன் கையில் அளித்து, "இதைச் சாப்பிடு அப்பா!" என்று கொடுக்க, இறைவன் தன் வேட்டியை விரித்து வாங்கி அமுது செய்யலானான். அதை உண்ணும் போதே, "ஆ! ஆ! இது எவ்வளவு சுவையாக இருக் கிறது! குழந்தைக்குத் தாய்ப்பால் எவ்வளவு இனிமை யாக இருக்குமோ, அப்படியல்லவா இருக்கிறது? இது மதுரைச் சொக்கநாதனுக்கே அர்ப்பணம்" என்று சொல்லிச் சொல்லித் தலையசைத்துக் கொண்டு சுவைத்தான்.

"எனக்கு அம்மாவும் இல்லை; அப்பாவும் இல்லை. தனி ஆசாமி நான். கூலி வேலை செய்யலாம் என்று

வந்த எனக்குத் தாயாக நின்று என் களைப்பைப் போக்கினுயே! இதோ நான் மகிழ்ச்சியுடன் வேலை செய்யப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

தந்தையொடு தாய்இன்றித்
 தனிக்கூலி யாளாக
வந்தஎனக்கு ஒருதாயாய்
 அருள்சுரந்து மாருத
இந்தஇளைப் பொழித்தனையே!
 இனிவேலைத் தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பெறவேலை
 செய்வேன்என் றிசைத்தெழுந்தார்.

ஆளாக வந்த ஆண்டவன், வேலை செய்யும் இடத்துக்குப் போய், "நான் வந்தியின் ஆள்'' என்று சொல்லிப் பதிவு பண்ணிக்கொண்டு கரையடைக்கும் வேலையைச் செய்யத் தலைப்பட்டான். ஆனல் ஒழுங்காக வேலை செய்யாமல், மண்ணை வெட்டித் தலைமேல் வைப்பான்; "அடடா! பாரமாக இருக்கிறதே!'' என்று கீழே கொட்டுவான். பிறகு கொஞ்சம் குறைவாக எடுத்துக்கொண்டு போவான். சும்மாடு விழும்படி தட்டுவான். கூடையை இறக்கி வைத்துவிட்டு மறுபடியும் சும்மாட்டைக் கட்டுவான். மீண்டும் மண்ணைச் சுமந்து கொண்டுபோய்க் கரையில் கொட்டுவான். இப்படி ஓரிரண்டு முறை சுமந்து இளைத்துப்போய் அருகில் உள்ள மரத்தடிக்குச் சென்று கூடையையே தலையணையாக வைத்துக் கொண்டு படுத்துத் துயில்வான். சிறிது நேரம் துயின்று மீண்டும் கண் விழித்தெழுந்து ஆடுவான்;

பாடுவான்; கை கொட்டிச் சிரிப்பான்; அங்கே வேலை செய்பவர்கள் தம் வேலையைச் செய்யாதபடி வேடிக்கை காட்டுவான்; குதிப்பான்; ஓடுவான்.

மிகவும் வேலை செய்து இளைத்தவனைப்போல உடம்பில் வேர்வை ஒழுக இரைக்க இரைக்க மூச்சு விட்டுக் கொண்டு, பசியுடையவனைப்போல மறு படியும் வந்தியினிடம் வந்தான். வந்து, "தாயே, கரை அடைபட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் கொஞ்சந்தான் எஞ்சியிருக்கிறது. எனக்கு அதற்குள் மிகவும் பசியாக இருக்கிறது. பிட்டுத் தா, சீக்கிரம்" என்றான்.

அவள் அப்போதுதான் எடுத்த ஈட்டிலிருந்து சுடச்சுடப் பிட்டைத் தந்தாள். அதை அப்படியே சுடச்சுட வாயிற் போட்டுக்கொண்டு, இரண்டு கடை வாயிலும் ஒதுக்கிச் சூடாற்றி மெல்ல மெல்ல உண்டு மறுபடியும் வேலை செய்யப் போனான்.

போய் வாயை மென்று கொண்டே இருப்பான்; மிகவும் பலமுடையவனைப்போல மண்ணை வெட்டு வான். எடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேறு டங்கில் கொட்டுவான். உடைப்பு அடைபடுவதைக் கண்டு தன்தோளைக் கொட்டுவான். பக்கத்தில் நின்ற வர்களைத் தழுவுவான்.

மண்ணைக் கூடையில் எடுத்து இடறி விழுவான். ஆற்றிலே தடுக்கி விழுவான். மறுபடியும் நீந்திக் கரைக்கு வந்து கூடையை அடித்தடித்து ஈரத்தைப் போக்குவான். அப்படி அடிப்பதனால் அதில் உள்ள

கட்டு அவிழ்ந்து போகும். அதைக் கட்டுவான். மறுபடியும் மண்ணை வெட்டுவான். மண்ணைச் சுமந்து செல்வதும், கூடையை உடைப்பில் தவறிப் போடுவதும், எடுப்பவனைப்போலத் தண்ணீரில் வீழ்வதும், ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு மிதப்பதும், கரையிலேற முயல்வதும், சுழியில் அகப்படுவதுமாக இப்படிப் பல விளையாடல்களைச் செய்து கொண்டிருந்தான்.

அப்போது அரசனுடைய ஏவலாளர்கள் வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா என்று பார்ப்பதற்காகப் பிரம்பும் கையுமாக வந்தார்கள். அங்கங்கே வரையறுத்தபடி பங்குகளெல்லாம் அடைந்து வருவதைக் கண்டு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். அப்படி வரும்போது வந்தியின் பங்குக்கு வந்து பார்க்கையில் அது அடைபடாமல் இருப்பதைக் கண்டு சினங்கொண்டார்கள். ''இதை அடைக்கும் ஆள்காரன் யார்?'' என்று கேட்டு அறிந்துகொண்டார்கள். மன்மதனைப் போல நின்ற இறைவனைக் கண்டு, "ஏண்டா, மற்றப் பங்குகளையெல்லாம் அவர்கள் அடைத்துவிட்டார்கள். நீ ஏன் இன்னும் இதை அடைக்காமல் இருக்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த வேலையாள் ஒன்றும் விடை சொல்லவில்லை.

ஏவலாளர்கள் அவனைப் பார்த்து அவன் மேனி வண்ணத்தில் மயங்கி அவனைப் பிரம்பால் அடிக்கக் கூசினார்கள். ''இவன் யார்? பித்தனோ? ஏமாற்றும் எத்தனோ? இந்திர சாலங் காட்டும் சித்தனோ? தேவலோகத்திலிருந்து வந்தவனோ? நன்றாக வாழ்ந்து கெட்ட குடும்பத்திலே பிறந்தவனோ? இவன்

உடம்பைப் பார்த்தால் கூலி வேலை செய்தே அறி யாதவன் என்றல்லவா தோன்றுகிறது? கூலியையும் வாங்கிக்கொண்டு வந்தியின் ஆள் என்று பதிவும் செய்து கொண்டிருக்கிறான். இதை நாம் அரசனி டம் போய்ச் சொல்வோம்'' என்று எண்ணி அவர் கள் போய்விட்டார்கள். அரசன்முன் சென்று "மன்னர் பெருமானே, ஊரில் யாவரும் தம் பங்கை அடைத்துவிட்டார்கள். அந்தப் பிட்டு வாணிச்சி பங்கு மாத்திரம் அடைபடவில்லை. அவளுக்கு ஒரு கூலியாள் வந்திருக்கிறான். ஆளைப் பார்த்தால் மன்மதன் மாதிரி இருக்கிறான். அரசர் குடியிற் பிறந்த செல்லப்பிள்ளைபோல விளையாடுகிறானேயன்றி வேலை ஒன்றும் செய்யவில்லை. அவன் அழகைப் பார்த்த போது அடிக்க மனம் வரவில்லை. இங்கே வந்து சொன்னோம்'' என்றார்கள்.

"இது என்ன வியப்பாக இருக்கிறது! நான் போய்ப் பார்க்கிறேன்'' என்று பாண்டியன் அமைச்சர் களோடு புறப்பட்டு வையைக் கரையை அடைந் தான். அங்கங்கே கரை அடைபட்டிருப்பதைக் கண்டு சென்றவன் வந்தியின் பங்கை அணுகிக் கரை அடைபடாமல், வெள்ளம் ஓடுவதைக் கண்டு "இந்தப் பங்கின் ஆள் எங்கே?'' என்று கேட் டான். அருகில் இருந்த இறைவன் கையைப் பிடித்திழுத்து வந்து, "இவன்தான் வந்தியின் ஆள்'' என்று சிலர் காட்டினர்.

அவனைக் கண்டவுடன் பாண்டியன் சினம் மூண்டு தன் கையில் இருந்த பொற்பிரம்பினால் அண்ட மும் அளவில்லாத உயிர்களும் தன் திருமேனியாகக்

கொண்டவன் முதுகில் அடித்தான். அந்தக் கணத்தில் மண்ணை உடைப்பிலே கொட்டிக் கூடையையும் போட்டுவிட்டு இறைவன் மறைந்தான்.

பாண்டியன் அடித்த அடி பாண்டியனது முதுகிலே பட்டது; அவன் மனைவிமார் உடம்பிலே பட்டது ; அமைச்சர் மேனியிலும் அரசிளங்குமரர் மேலும் வீரர்கள் மேலும் பட்டது. யானையின் மேலும் குதிரையின் மேலும் பட்டது. சூரிய சந்திரர்களுக்கும் மற்றக் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஐம்பூதங்களுக்கும் அடி விழுந்தது. வேதமும் ஆறு சமயக் கடவுளரும் தேவரும் முனிவரும் மதுரை நாயகன்மேல்பட்ட அடியைப் பெற்றனர். சராசரங்கள் எல்லாவற்றின் மேலும் பட்டது அந்த அடி. கருவில் இருந்த குழந்தை மேற்பட்டது ; உயிர் இல்லாத ஓவியத்தின் மேலும் பட்டது.

ஒரு கூடை மண் கொட்டியதும் உடைப்பு அடைந்துவிட, ஆள் மறைந்ததை உணர்ந்த ஏவலாளர் வந்தியிடம் போனார்கள். அப்போது வந்தி, "நம்முடைய ஆள் என்ன செய்தானோ?" என்று மதுரை நாயகனை நோக்கி இரங்கி நின்றாள். அந்தச் சமயத்தில் சிவ கணங்கள் விமானத்தோடு வந்து அவளை அழைத்துச் சென்றனர்,

எல்லோரும், "அடி என்மேல் பட்டது, என்மேல் பட்டது" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு நின்றார்கள். அப்போது அசரீரியாக இறைவன் யாவரும் கேட்கும்படியாகக் கூறலானான்: "பாண்டிய மன்னனே, உன்னுடைய செல்வம் அறநெறியில் ஈட்டியதாதலின் புனிதமானது. அதனால்

நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் அதை வாதவூரன் உதவினான். அதனை அறியாமல் நீ அவனை வருத்தினாய். நரிகளையெல்லாம் குதிரையாக்கி நாமே கொண்டு வந்து வழங்கினோம். அவை இரவில் நரியாகிச் சென்றன. அதனால் நீ மறுபடியும் அவனைத் தண்டித்தாய். அதைப் பொறுமல் வையையில் வெள்ளம் வரச் செய்தோம். வந்திக்கு ஆளாய் வந்து பிரம்படி பட்டு ஒரு கூடை மண் போட்டுக் கரையை உயர்த்தி மறைந்தோம், இவ்வளவும் செய்தது வாதவூரன் பொருட்டாக. அந்த வித்தகன் தன்மையைச் சிறிதும் நீ அறியவில்லை எம்மிடத்தில் அன்புடைய அவன் உனக்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் தேடித் தந்த உத்தமன். அகப்பற்றும் புறப்பற்றும் நீத்தவன். அவனை அவன் விருப்பம் போல விட்டுவிட்டு நீ நீதிமுறை வழுவாமல் செங்கோலோச்சி இன்புற்று வாழ்வாயாக'' என்று ஒலி பிறந்தது.

அதனை இரு செவியும் ஆரக் கேட்ட பாண்டிய மன்னன் அச்சமும் உவகையும் கொண்டான்; அதிசய வெள்ளத்தில் ஆழ்ந்தான். "அந்த அன்பர் எங்கே இருக்கிறார்?'' என்று தேடி ஓடினான். அவர் மதுரைத் திருக்கோயிலில் இருக்கக் கண்டு அவரை அணுகிக் காலில் வீழ்ந்து இறைஞ்சினான்.

"பெருமானே, அறியாமையினால் நான் பல கொடுமை புரிந்தேன். என் தவப்பேருக நீங்கள் எனக்குக் கிடைத்திருக்கிறீர்கள். நான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளி முன்போல ஆட்சி செய்தருள வேண்டும்'' என்று வேண்டினான்.

மாணிக்கவாசகர் புன்னகை பூத்தார். "நல்ல குலத்தில் பிறந்தீர். உம்மைச் சார்ந்தமையால் எனக்கு உலகியலும் வேத நீதியும் தெரிந்தன. சிவ பக்தி உண்டாயிற்று. இறைவன் திருவருள் கிடைத்தது. எம்பெருமான் தில்லைக்கு வரும்படி பணித்திருக்கிறான். அதற்கு நீரும் இணங்கி விடை தரவேண்டும்" என்று சொல்லப் பாண்டியன், அவரை வணங்கிப் பிரிய மாட்டாத உள்ளத்தோடு விடை கொடுத்தான்.

## 3

மதுரையில் உள்ள வீதிகளும் இறைவன் விழாக்களை நினைப்பூட்டும். ஆடி வீதி என்பது ஒன்று; அது ஆடித்திருவிழாவை நினைப்பூட்டுகிறது. ஆவணி மூலவீதி என்பது ஒன்று; அது ஆவணி மூலத்தில் நடைபெறும் பிட்டுத் திருவிழாவை நினைப்புறுத்து கிறது. வந்தி கைப்பிட்டுண்டு பாண்டியனால் அடி பட்ட இறைவனுடைய திருவிளையாடல் நினைந்து நினைந்து உருகும் தன்மை வாய்ந்தது. பாண்டியன், திருவாலவாய்ச் சொக்கனிடம் சென்று துதித்ததாகப் பரஞ்சோதி முனிவர் பாடிய பாட்டில் இந்த உருக்கத் தைக் காணலாம்.

அடையாளம் படஒருவன்
    அடித்தகொடுஞ் சிலைத்தழும்பும்
தொடையாக ஒருதொண்டன்
    தொடுத்தெறிந்த கல்லும்போல்
கடையானேன் வெகுண்டடித்த
    கைப்பிரம்பும் உலகமெல்லாம்
உடையானே பொறுத்தநீ
    உன்அருமைத் திருமேனி!

மதுரைத் திருக்கோயில் சுவரில் உள்ள கதைச் சிற்பங்களில் வந்தியின் வளைந்த திருமேனியைக் கண்டாலே பக்தி உண்டாகும். இறைவன் கூலியாளாக வருவதும், வேலை செய்யாமல் படுத்துக் கிடப்பதும் அழகாக அமைந்திருக்கின்றன. பரி நரியாகிப் பழைய குதிரைகளைக் கடிப்பதையும் சிற்பத்தில் பார்த்தேன். பொற்றாமரைக் குளத்தைச் சுற்றி உள்ள சுவர்களில் அமைந்த ஓவியங்களிலும் இந்தக் காட்சிகளை யெல்லாம் கண்டேன்.

முன் மண்டபத்தில் துவஜஸ்தம்பத்தைச் சுற்றியுள்ள தூண்களிலும் வேறு தூண்களிலும் சில உருவங்களைக் கண்டேன். இறைவன் கூலியாளாகக் கூடையில் மண் சுமந்து நிற்கும் கோலத்தில் ஓர் உருவம் இருக்கிறது. இறைவனுக்குஅருகில் பாண்டிய மன்னன் நிற்கிறான். 'இறைவன் கூலியாளாய் வந்தாலும் அவன்தான் பெரியவன்; மன்னன் அவனை அண்ணாந்து பார்க்கவேண்டும்; பாராளும் மன்னவனானாலும் இறைவன்முன் சிறியவனே' என்ற கருத்தை அந்தச் சிற்பம் புலப்படுத்துகிறது.

இப்படி மணிவாசகர் வரலாற்றோடு சம்பந்தமுள்ள சிற்பங்களைப் பார்த்து வருகையில் ஒரு புதுவிதமான சிற்பத்தைக் கண்டேன். முகம் யானை முகம்; உடம்பு புலி; பெண் உருவம். வியாக்கிர சக்தி விநாயகர் என்று சொன்னார்கள். விநாயகருடைய கோலங்களில் இதுவும் ஒன்று. இதற்குத் தியான சுலோகமோ, வழிபாட்டு முறையோ, உருவ வருணனையோ எந்த ஆகமத்தில் இருக்கிறதோ யார்

அறிவார்கள்? நம்முடைய சமயநூல்களும் உபாசனை வகைகளும் எல்லையில்லாத கடலைப்போல அல்லவோ பரந்து கிடக்கின்றன?

ஆவணி மூலத்தன்று பிட்டுத் திருவிழா மதுரையில் சிறப்பாக நடைபெறுகிறது. இறைவன் வையைக் கரைக்கு எழுந்தருளுவான். அங்கே பிட்டுத் திருமண்டபம் என்று ஓரிடமே இருக்கிறது.

மாணிக்கவாசகரோடு தொடர்புடைய பிட்டுத் திருவிழா இறைவன் கருணையையும் அன்பின் உயர்வையும் காட்டுகின்றது. இறைவன் தொழிலாளியாக வந்து திருவிளையாடல் புரிந்து தொழிலின் பெருமையை நிலை நிறுத்தினான். இது இந்தக் காலத்துக்கும் பொருத்தமான கதை அல்லவா?

# திருப்பெருந்துறை

திருவாசகத்தைப் படிப்பவர்களுக்குத் தொட்ட இடமெல்லாம் திருப்பெருந்துறை வருவது தெரிந்திருக்கும். திருவாதவூரரை மாணிக்கவாசகர் ஆக்கியது அந்தத் தலம்,

இன்பம் பெருக்கி
    இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச்
    சோதியான்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான்
    என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

திருப்பெருந்துறை எங்கே இருக்கிறது? ஈரோட்டுக்கு அருகில் பெருந்துறை என்ற ஊர் இருக்கிறது. அது திருப்பெருந்துறை அன்று. திருப்பெருந்துறை என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு போனால் அந்தத் தலம் இருக்கும் இடம் தெரியாது. ஆவுடையார் கோயில் என்றால்தான் இந்தக் காலத்தில் எல்லோருக்கும் தெரியும். கோயில் கணக்கில் ஆளுடையார் கோயில் என்று பதிவாகிறது. திருவாசகத்திலோ திருப்பெருந்துறை, சிவபுரம் என்று பெயர் பெற்றிருக்கிறது. தேவாரம், புராணம் ஆகியவற்றைப் புரட்டிப் பார்த்தால், "இதுதான் ஆதிகைலாசம்; இதுவே குருந்தவனம், சதுர்வேத

புரம், ஞானபுரம், தேசுவனம், யோகபீடபுரம்...'' என்று வரிசையாக அவை அடுக்குகின்றன. இவ்வளவு இருந்தாலும் ஆவுடையார் கோயில் என்ருல் எளிதில் யாவரும் தெரிந்து கொள்வார்கள்.

ஆவுடையார் கோயிலாகிய திருப்பெருந்துறை எங்கோ ஒரு மூலையில் இருக்கிறது. அறந்தாங்கி ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி ஒன்பது மைல் பஸ்ஸில் போகவேண்டும், பழைய நூல்களின்படி அது பாண்டி நாட்டில் உள்ள தலம். இன்றைப் பிரிவின்படி சோழ நாடாகிய தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது.

ஒரு முறை இரவில் முன்பு ஆவுடையார் கோயில் சென்று தரிசனம் செய்திருக்கிறேன். அது போதுமா? நின்று நிதானமாகத் தரிசித்துக்கொண்டு அங்குள்ள மூர்த்திகளையும் சிற்பங்களையும் பார்த்துப் படம் எடுத்துக் கொண்டு வரவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. மாணிக்கவாசகருடைய வரலாற்றைப் பின்பற்றிச் செய்யும் யாத்திரை அல்லவா இது ?

ஆவுடையார் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. சைவத்தையும் தமிழையும் பிற கலைகளையும் வளர்த்துப் புகழ் பெற்றது திருவாவடுதுறை யாதீனம். ஒரு விதத்தில் தமிழ் உலகமே அந்த ஆதீனத்துக்குக் கடமைப் பட்டிருக்கிறது என்று சொல்லிவிடலாம். எப்படி என்ரு கேட்கிறீர்கள் ?

இன்று தமிழ் இலக்கியம் பழஞ் செல்வத்தால் பெருமை பெற்றிருக்கிறது. சங்க கால இலக்கியங்களின் ஆராய்ச்சியால் பழந்தமிழர் வரலாறும், அவர்

களின் உயர் பண்பும் தெரிய வருகின்றன. கண்டறியாதனவெல்லாம் கண்டு வியப்படைகின்றோம். அந்தச் சங்கநூற் கருவூலத்தைச் சில காலம் தமிழ் நாடு மறந்திருந்தது. அவை இருக்குமிடம் தெரியாமல் காண்பாரின்றி மறைந்திருந்தன. அவற்றை மீண்டும் கண்டெடுத்துத் துப்புத் துலக்கி வெளியிட்ட பெரியவரை இன்று தமிழகம் கொண்டாடிப் போற்றுகிறது. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுடைய பேருழைப்பினாலும் ஆராய்ச்சித் திறத்தாலும் இன்று தமிழ்த்தாய் புதைந்திருந்த அணிகளையெல்லாம் அணிந்து களிநடம் புரிந்து விளங்குகிறாள். அந்தப் பெரும் பேராசிரியரைத் தமிழ்த் தொட்டிலில் வளர்த்துத் தமிழ்ப்பால் புகட்டிய திருக்கோயில் திருவாவடுதுறை யாதீனம். ஐயரவர்கள் பல நூல்களில் அந்த ஆதீனத்தைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய குருவாகிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை யாதீனத்தில் வித்துவானாக விளங்கியவர்கள். நன்னூலின் உரை, சிவஞானபோத பாஷ்யம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களை இயற்றிய சிவஞான முனிவரும், விநாயக புராணம் முதலியவற்றை இயற்றிய கச்சியப்ப முனிவரும் அவ்வாதீனத்தைச் சார்ந்தவர்களே. தமிழ் வரலாற்றில் திருவாவடுதுறை யாதீனத்துக்கு ஒரு சிறந்த இடம் உண்டு.

அத்தகைய ஆதீனத்தைச் சார்ந்த திருக்கோயில் ஆவுடையார் கோயில். அக்கோயிலுக்குச் சென்று தரிசிக்கவும் படம் எடுக்கவும் அன்பர்களுக்கு அதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமென்று எண்ணிய

போது ஆதீனத் தலைவர்களுடைய ஆசிபெற்றுச் செல்லவேண்டுமென்ற நினைவும் உடன் எழுந்தது. இப்போது ஆதீனத் தலைவர்களாக எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரியார வர்கள் நல்ல காரியங்களுக்குத் துணை நிற்பவர்கள் ; தமிழினிடம் பேரன்பு பூண்டவர்கள் ; தமிழ்ப் புலவர் களைப் பல வகையில் ஆதரவளித்துப் பாது காப்பவர்கள்.

அவர்களைத் தரிசித்துக் கொண்டு ஆவுடையார் கோயிலைச் சார்ந்த அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் வாங்கிச் செல்லலாம் என்பது என் நினைவு. போட்டோக் கலைஞர் ராமகிருஷ்ணனையும் உட னழைத்துக்கொண்டு திருவாவடுதுறை சென்றேன். ஆதீனத் தலைவரவர்களைத் தரிசித்துஎன் விருப்பத் தைத் தெரிவித்துக்கொண்டேன். கடிதம் கேட்டா லும், யாரையேனும் தக்க மனிதரை உடன் அனுப்பக் கூடும் என்று என் மனசுக்குள் ஒரு நினைவு இருந்தது.

அங்கே நிகழ்ந்ததைச் சொல்வதற்கு முன் ஒரு கதையைச் சொல்ல வேண்டும். ஔவையார் தம் மிடம் வளர்ந்து வந்த இரண்டு பெண்களுக்குப் பால் கொடுக்க ஓர் ஆடு வேண்டுமென்று சேரனைக் கேட் டார். அவர் கேட்டது ஆடு ; சேரனோ ஆடு கொடுத்ததோடு ஒரு பொன் ஆட்டையும் வழங்கி னான். ஔவையார் அவனுடைய வள்ளன்மையை உணர்ந்து, ''சேரா, உன்னுடு பொன்னுடு !'' என்று வாழ்த்தினாராம். அதற்கு, "உன் நாடு பொன் நாடு" என்ற பொருளும் அமைந்திருக்கிறது. அதோடு ஒரு பாடலும் பாடினார்

**சிரப்பால் மணிமவுலிச்**
**சேரமான் தன்னைச்**
**சுரப்பாடு யான்கேட்கப்**
**பொன்ஆடொன் று ஈந்தான் ;**
**இரப்பவர் என்பெறினும்**
**கொள்வர் ; கொடுப்பவர்**
**தாம்அறிவர் தம்கொடையின் சீர்.**

இதுதான் எனக்குத் திருவாவடுதுறையில் நினைவுக்கு வந்தது. இதைப் பல அன்பர்களிடம் சொல்லி என் வியப்பை வெளிப்படுத்தினேன்.

என்ன நடந்ததென்று இன்னும் சொல்லவில்லையே ! "போய்ச் சாப்பிட்டு வாருங்கள்!" என்று தலைவரவர்கள் அன்புடன் சொன்னார்கள். உணவு உட்கொண்டு வந்தவுடன், "நாமே ஆவுடையார் கோயிலுக்கு வருவதாக இருக்கிறோம்" என்றார்கள். அதைக் கேட்டவுடன் நான் வியப்பில் மூழ்கினேன், "ஒவ்வொரு குருவாரமும் ஆவுடையார் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்து வருவது வழக்கம். இந்த வாரம் போகவில்லை. இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது" என்று அவர்கள் சொன்னபோது அவர்கள் பெருந்தன்மையே எனக்குப் புலனாயிற்று. அன்று சனிக்கிழமை. வியாழக்கிழமையன்று போகாவிட்டால் வெள்ளிக்கிழமை போவார்களென்றும் இல்லையானால் திங்கட்கிழமை போவார்களென்றும் பிறகு தெரிந்து கொண்டேன். அன்று அவர்கள் புறப்பட்டது, சேரன் காட்டிய வண்மையோடு சேர்ப்பதற்குரியது என்பதை நான் தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

திருவாவடுதுறையிலிருந்து ஆவுடையார் கோயில் 130 மைல் தூரத்தில் இருக்கிறது. நான் என் போக்கில் போயிருந்தால் மறுநாள் ஞாயிற்றுக் கிழமைதான் அங்கே போயிருக்க முடியும். ஆதீனத் தலைவர்கள் உடன் இரண்டு ஓதுவார்களையும் அழைத்துக்கொண்டு பெரிய காரில் புறப்பட்டார்கள்.

திருப்பெருந்துறை யாத்திரை இவ்வளவு சிறப் பாக நிறைவேறுமென்று நான் எண்ணவே இல்லை. திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டு எழுபத்தைந்து மைலில் அக்கினியாற்றங் கரையில் உள்ள எடுத் தணி வயல் என்ற இடத்தில் சிறிது தங்கினோம். ஆதீனத்துக் கிராமம் அது. அங்கே காடும் வயலும் கலந்திருந்தன. இப்போது காடு திருத்தி நாடாக்கித் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளையும் வீடு களையும் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். முதல் காரியமாக ஸ்ரீ பஞ்சாட்சர விநாயகர் என்ற மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து ஒரு கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கோயிலைத் தரிசித்துக் கொண்டேன். "விநாயகப் பெருமானே, திருப்பெருந் துறையில் நான் நினைத்த காரியம் செவ்வையாக நிறைவேற வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டேன்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஆவுடையார் கோயிலை அடைந்தோம். அப்போது மாலை ஏழு மணி. திருக்கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்டோம். ஆலய நிர்வாகிகளிடம், எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படி மகாசந்நிதானம் அவர்கள் உத்தரவிட்டு விட்டுத் திருவாவடு துறையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்களுடைய பேரன்பை நினைத்துக் கொண்டே இருந்த என்னைச் சுற்றி ஆலயத்தைச் சார்ந்தவர்கள் சூழ்ந்துகொண்டார்கள். ஆசார உபசாரம் செய்து விருந்து அளித்தார்கள். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரையும் அவரை ஆட்கொண்ட பெருமானையும் தரிசிக்க வந்ததற்குக் கைமேல் பலன் கிடைத்தது.

"நாளைக்கு உங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று அன்பர் ராமகிருஷ்ணனிடம் சொன்னேன்.

"இப்போதே நிறைய இருக்கிறது. இவர்கள் அளிக்கும் விருந்தை உண்ணுவதே பெரிய வேலையாக இருக்கும்போல் இருக்கிறதே!" என்று பிரமித்துப் போனார் அவர்.

2

ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பெருந்துறையில் கதிரவன் உதயமானான். எங்கும் உதயமானான். ஆனால் அன்று அங்கே தன் கதிர்களை நன்றாகப் பரப்பிக்கொண்டு உதயமானான். திடீர் திடீரென்று மேக மூட்டமும், மழையும் உண்டாகும் இந்தப் பக்கத்தில் படம் எடுக்கிறவர்களுக்குச் சூரியன் நன்றாக ஒளிவிடாமல் போனால் என்ன செய்வது என்ற பயம் இருக்குமல்லவா? அந்த அச்சத்துக்கே இடமின்றி அன்று கதிரவன் கருணை செய்தான். நாங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கினோம்.

திருப்பெருந்துறைப் புராணத்தை டாக்டர் ஐயரவர்கள் அச்சிட்டிருக்கிறார்கள். அதன் முகவுரை

யில் இந்தத் தலத்தைப்பற்றிய வரலாறுகளை விரிவாக எழுதியிருக்கிறார்கள். அந்தப் புராணம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது. அதனை அப்புலவர் பெருமான் திருப்பெருந்துறையில் சில காலம் தங்கிப் பாடி அரங்கேற்றினார். அப்போது ஐயரவர்களும் உடன் இருந்தார்கள். புராணம் அரங்கேற்றும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவர்கள், பிள்ளையவர்கள் சரித்திரத்திலும், 'என் சரித்திர' த்திலும் அழகாக எழுதியிருக்கிறார்கள். ஐயரவர்களிடம் நேரில் நான் கேட்டறிந்தனவும் பல உண்டு. ஆகையால், திருப்பெருந்துறையைப் பற்றிய செய்திகள் பலவற்றை உணர்ந்திருக்கிறேன், ஆனாலும் அவை 'தொட்டுக் காட்டாத வித்தை!' நேரே இது இன்னது என்று தெரிந்து கொள்வதுபோல் ஆகுமா? அப்படித் தெரிந்துகொள்ள எங்களுக்கு ஓர் அருமையான வழிகாட்டி கிடைத்தார். திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் அம்பிகையையும் பூசித்து வழிபடும் உரிமைபெற்றவர் அவர்; ஸ்ரீ ஆத்மநாத நம்பியார் என்னும் திருநாமமுடையவர். "அந்த நம்பியார் எல்லாம் தெரிந்தவர். அவரை நம்பி யார் என்ன கேட்டாலும் சொல்வார்" என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள். அவருடைய உதவி எங்களுக்குக் கிடைத்தது. கண்ணாலே கண்டும், காதாலே கேட்டும் அறிந்துகொண்ட செய்திகள் பல. படித்து அறிந்தவையோ பின்னும் பல. எல்லாவற்றையும் சொல்லவேண்டுமானால்—அடே அப்பா! நானூறு பக்கம் எழுதலாம். அவ்வளவு விரிவாகச் சொல்லுவேனென்று பயப்படாதீர்கள். கொஞ்சம் என்னுடன் கற்பனை ரதத்தில் ஏறித் திருப்பெருந்

துறைக்கு வாருங்கள், நம்பியார் நேரே செய்த காரியத்தை நான் எழுத்தின் வாயிலாகச் செய்து பார்க்கிறேன்.

3

முதல் முதலில் மற்றக் கோயில்களுக்கும் இந்தக் கோயிலுக்கும் உள்ள பெரிய வேறுபாடு ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கோயிலில் சுவாமியே இல்லை ! அதாவது சுவாமிக்கு உருவமே இல்லை. கடவுளுக்கு உருவம், அருவுருவம், அருவம் என்ற மூன்று நிலைகள் உண்டு. நடராஜர், சந்திர சேகரர், இடபாரூடர் என்ற கோலங்களெல்லாம் உருவத் திருமேனிகள். சிவலிங்கம் அருவுருவம்; கை கால் முதலிய அங்கங்கள் இல்லாமையால் உருவ முடையது என்று சொல்ல இயலாது ; கண்ணால் பார்க்க முடிவதால் அருவம் என்றும் சொல்லக் கூடாது ; ஆதலால் அதை அருவுருவம் என்று சொல்வது வழக்கம். அருவம் என்பது சூன்யம். சிதம்பரத்தில் உருவமாகிய நடராஜ மூர்த்தியும் அருவமாகிய இரகசியமும் அருவுருவமாகிய மூலட்டானேசுவரரும் விளங்குவதைக் காணலாம். ஆவுடையார் கோயிலில் கருப்பக் கிருகத்தில் லிங்கம் இல்லை. இங்குள்ள சுவாமி ஆத்மநாதர். அவர் அருவமாக, உருவமற்றவராக விளங்குகிறார். அவ்விடத்தில் வெறும் பீடம் மாத்திரம் இருக்கிறது. அதற்கே அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மேலே குவளை சாத்தி அலங்காரம் செய்கிறார்கள். சிவலிங்கத்தின் கீழே பீடமாக இருக்கும் பகுதிக்கு ஆவுடையார் என்று பெயர். இங்கே

லிங்கம் இன்றி ஆவுடையார் மாத்திரம் இருப்பதால் இதை ஆவுடையார் கோயில் என்று வழங்குவதாக ஒரு காரணம் சொல்லுவதுண்டு.

திருக்கோயிலுக்கு முன்பு ஒரு பெரிய தீர்த்தம் இருக்கிறது. அதை நெல்லியடியென்று மக்கள் வழங்குகின்றனர். முன்பு இதைச் சுற்றி நெல்லி மரங்கள் அடர்ந்திருக்க வேண்டும். இப்போதும் சில மரங்கள் இருக்கின்றன. ஒரு வருஷத்துக்கு முன் அடித்த புயலால் இந்தப் பக்கங்களில் சேதம் ஏற்பட்டதை யாவரும் அறிவார்கள். அப்போது வீடுகளும் மரங்களும் பயிர்களும் அழிந்தன. ஊரே வெள்ளக்காடாகி விட்டது. அந்த வெள்ளத்தில் ஊர் மக்கள் யாவரும் ஆத்மநாத சுவாமி திருக்கோயிலையே புகலிடமாகக் கொண்டார்கள். பிறவிக் கடலினின்றும் பிழைத்து ஏறக் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள் முந்தையோர். அது புயலால் உண்டான வெள்ளத்தினின்றுங்கூட மக்களைக் காப்பாற்றியது.

புயல் நெல்லியடிக் குளத்தையும் பதம் பார்த்திருக்கிறது. அதன் வடக்கரையிலுள்ள கற்களெல்லாம் சிதைந்து சாய்ந்துவிட்டன. நெல்லியடியைத் தேவ தீர்த்தம் என்று பெயரிட்டுப் போற்றுகிறது புராணம்.

திருக்கோயில் தெற்குப் பார்த்தது. இங்கே சிவபெருமான் குருமூர்த்தமாக எழுந்தருளி யிருக்கிறான். மாணிக்கவாசகருக்குக் குருவாக உபதேசம் செய்தவனும் அவனே. குருமூர்த்தி தென்முகம் நோக்கி இருத்தல் ஒரு மரபு. தட்சிணாமூர்த்தி தெற்கு நோக்கிய பெருமான் அல்லவா? ஆகவே இந்தக்

கோயில் தெற்கு முகமான சந்நிதியை உடையதாக விளங்குகிறது.

தேவதீர்த்தத்தில் நீராடிவிட்டு உடனே கரைக்கு வந்தால், கிழக்கு நோக்கி வல்லப கணபதி எழுந்தருளியிருக்கிறதைப் பார்க்கலாம். ஐந்து கரத்தன் என்று கணபதியைச் சொல்வார்கள். வல்லபையோடு எழுந்தருளியிருக்கும்போது அவருக்கு மகிழ்ச்சி அதிகம் அல்லவா? தனியாக இருக்கும் போது அஞ்சு கரத்தால் அருளை வழங்கும் விநாயகர் இப்போது இரட்டிப்புப்பங்கு அருளைத் தரப் பத்துக் கைகளுடன் வீற்றிருக்கிறார்.

இனிமேல் நாம் கோயிலுக்குள் போகலாமா? இந்தக் கோயிலில் மிகவும் அற்புதமான சிற்பங்கள் இருக்கின்றன. அழகான மண்டபங்கள் இருக்கின்றன. மண்டபங்களின் கூரையை அசப்பிலே பார்த்தால் மரவேலையைப் போலத் தோன்றும். கல்லில் செதுக்கிய சிற்பம் அது. பழைய காலத்தில் சிற்பிகளிடத்தில் ஒரு வழக்கம் உண்டாம். யாராவது கோயில் கட்டச் சொல்லி ஒப்பந்தம் செய்து கொண்டால், "எப்படி வேண்டுமானாலும் கட்டித்தருவோம்; எந்தவிதமான சிற்பங்களை அமைக்கச் சொன்னாலும் அமைத்துத் தருவோம்; ஆனால்—" என்று சில விலக்குகளைச் சொல்வார்களாம். "தாரமங்கலம் தூண், திருவலஞ்சுழிப் பலகணி, ஆவுடையார் கோயில் கொடுங்கை ஆகியவற்றைத்தவிர மற்ற எந்த மாதிரி வேலைப்பாடு வேண்டுமானாலும் செய்து தருகிறோம்" என்று எழுதுவார்களாம். "அப்படி எழுதிய நிபந்தனை எங்கேயாவது இருக்கிறதா?" என்று கேட்

காதீர்கள். இங்குள்ள சிற்ப வேலைப்பாடு அருமை யானது என்பதை இந்தச் செய்தி புலப்படுத்துகிறது என்பதற்காகச் சொன்னேன்.

ஆதலின் நாம், இப்போது சுவாமி இல்லாத சூனியத்தைப் பார்க்கப் போகிறோம் என்று எண்ணி விடாதீர்கள். எத்தனை மாசமானாலும் சலிப்பின்றிக் கண்டு கண்டு களிக்கும் சிற்ப மாளிகைக்குள்ளே போகப் போகிறோம். மனத்தை உருக்கும் திருவாசகத்தைப் பாடிய பெருமான் அருள் பெற்ற இடத்துக்குள்ளே அடி வைக்கப் போகிறோம். கல்லும் கரையும்படியாக உருகி இறைவன் அருளுக்காக ஏங்கி நின்று இறைவன் திருவருள் இன்பத்தை நுகர்ந்த மாணிக்கவாசகரைத் தரிசிக்கப் போகிறோம் அவருக்காகக் குதிரைச் சேவகராக எழுந் தருளிய பெருமானை வழிபடப் போகிறோம். அருவ மாக எழுந்தருளி யிருக்கும் ஆத்மநாதரும் சிவலோக நாயகியும் பூசிக்கப்பெறும் பீடங்களைத் தரிசனம் செய்யப்போகிறோம்.

## 4

இதோ பார்த்தீர்களா? நாம் இன்னும் கோயிலுக் குள் நுழையக்கூட இல்லை. பிற்காலத்தில் அன்பர்கள் கோயிலுக்கு வெளியே போட்ட கொட்டகையில் நிற் கிறோம். நம் முன்னே தோன்றுகிற மண்டபத்துக்குப் பெரிய மண்டபம் என்று பெயராம். மக்கள் இதை ஆயிரக்கால் மண்டபம் என்று சொல்கிறார்கள். முன்னாலே உள்ள தூண்கள் எத்தனை என்று தெரி கின்றனவா? சரியாக ஏழு தூண்கள். மேற்குப் பக்கம் நாலு தூண்கள்; கிழக்கே மூன்று. ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு மூர்த்தியைத் தரிசிக்கிறோம்.

இதோ முதல் தூணில் உக்கிர நரசிம்மர் எழுந் தருளியிருக்கிறார். இரணியனுடைய குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டிருக்கிறார். சிற்பி எவ்வளவு அழகாக வடித்திருக்கிறான்! இரணியன் குடலை நரசிம்மர் பறித்து மாலையாக்கினார். அந்தக் குடலின் ஒரு பகுதியை நம்மவர்கள் பிறித்துக் கொண்டார்கள்! அதோ மேல் பக்கம் குடலின் ஒரு பகுதி உடைந்திருக் கிறது தெரிகிறதல்லவா? பிரகலாதன் கீழே ஒதுங்கிய படி நிற்கிறான்.

இதற்கு அடுத்தபடி உள்ள இரண்டு தூண்களை யும் ஒன்றாகப் பார்க்க வேண்டும். இரண்டாவது தூணில் காளிதேவியைப் பார்க்கிறோம். மூன்றாவது தூணில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி நிற்கிறார். இறைவனுடன் வாதாடித் தோற்ற நிலையில் காளி காட்சியளிக்கிறாள். வாடிய முகமும், ஒன்றும் பயனில்லையென்று கையைச் சேர்த்துமறித்த பாவமும் எவ்வளவு நுட்பமாக அமைந்திருக்கின்றன! கடை வாயில் இரண்டு பற்கள் இல்லாமல் இருந்தால் காளி யென்றே சொல்லத் தோன்றாது.

காளிக்கு ஒரு கும்பிடு போடுங்கள். அவளை நாணச் செய்த பெருமானைக் காணுங்கள். கம்பீரமாக வானை முட்டத் தூக்கிய திருத்தாளுடன் நிற்கிறார். அவர் அடிக் கீழ் எலும்பு தோன்ற நிற்கும் உருவம் ஒன்று இருக்கிறது. காரைக்காலம்மையாரைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்களே. "அறவா நீ ஆடும் போது நின் அடிக்கீழ் இருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்ட பெருமாட்டியாரைச் சிற்பி மறக்காமல் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறான். நான்காவது தூணில் பிட்சாடனர் இருக்கிறார்.

அப்புறம் மண்டபத்துக்குள் நுழையும் வாசல்; அதற்கு மறுபுறம் கிழக்கே உள்ள மூன்று தூண்களை யும் தரிசிக்க வேண்டாமா? இதோ இந்த வரிசையில் ஐந்தாவது தூணில் முருகன் எழுந்தருளியிருக்கிறான்; கோதண்டபாணியாக இருக்கிறான். தன் கையில் வில்லை ஏந்திக்கொண்டு ஒரு காலை மயிலின்மேல் தூக்கி வைத்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். என்ன அழகு! தனுர்த்தர சுப்பிரமணியர் என்று வழங்கும் இந்தக் கோலம் சில இடங்களில்தான் இருக்கின்றது. முருகன் கோதண்டமேந்தும் அவசரமும் உண்டு. திருமுருகாற்றுப்படையில்,

> வானோர் வணங்குவில் தானைத் தலைவ!

என்று நக்கீரர் முருகனைப் போற்றுகிறார். அருணகிரி நாதர்,

> சூலம்வாள் தண்டுசெஞ் சேவல் கோதண்டமும்
> சூடுதோளும் தடந் திருமார்பும்

உடைய முருகனை வாழ்த்துகிறார். வேறு ஓர் இடத்தில்,

> பணிக்க லாபமும் வேலோடு சேவலும்
> வடிக்கொள் சூலமும் வாள்வீசு நீள்சிலை
> படைத்த வாகையும்

உடைய திருக்கோலத்தை நினைக்கிறார். நீள் சிலை என்று கோதண்டத்தைச் சொல்கிறார்.

வள்ளியெம் பெருமாட்டியை மணந்துகொள்ள வேண்டுமென்று, நாரத முனிவர் கூறிய அடையாளத்தை வைத்துக்கொண்டு, வேட உருவத்தில் முருகன் செல்கிறான். அப்போது அவன் வில்லைப் பிடித்துக்கொண்டு சென்றானாம்.

வேடுவர் புனத்தில்உரு மாறிமுனி சொற்படி
வியாகுல மனத்தினெடு போம்விற் காரனும்

என்று திருவகுப்பில் அவர் பாடுகிறார்.

அந்தப் புகழை ஏற்றுக்கொண்ட வில் முருகனை, கோதண்டபாணியாம் குமரனைத் தரிசித்துக் கொள்ளுங்கள். அதோ அடுத்தபடி இடபாரூடர் நிற்கிறார். கீழே அம்பலவாணர் என்று கல்லிலே பெயர் பொறித்திருக்கிறது. இடப வாகனத்துக்கு அருகில் நிற்கும் இந்தக் கோலமுள்ள மூர்த்தியை ரிஷபாரூடர் என்பது மரபு. அடுத்தபடி பார்க்கிற மூர்த்தி, ஒருவரில் இருவராம் பெருமான்; சங்கர நாராயணர். வலப் பக்கத்தில் சிவக் கோலம்; இடப் பக்கத்தில் மால்கோலம். இடக்கையில் உள்ள சங்கும், அந்தப் பகுதியில் உடுத்த பீதாம்பரமும் அது திருமாலின் பாகம் என்று புலப்படுத்துகின்றன. இவர்களைச் சிற்பக் கலை வல்லவர்கள் தனியே அமைக்க வில்லை. அருகில் தொண்டர்களையும் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். படத்தில் எல்லோரையும் காண இயலாது தான். ஆயினும் கண்ட அளவில் எத்தனை அழகாகவும் வியப்பூட்டுவனவாகவும் காட்சியளிக்கின்றன அந்தத் திருவுருவங்கள்!

# பெருந்துறைக் காட்சிகள்


ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகருக் குத்தான் எல்லாச் சிறப்பும். அங்கே ஆத்மநாத சுவாமி என்பது சிவபெருமான் திருநாமம். சிவயோக நாயகி என்பது அம்பிகையின் திருநாமம். அம்மை, அப்பன் இரண்டு பேரையும் வெறும் பீடத்தில் ஆவாகனம் பண்ணிப் பூஜை செய்து வருகிருர்கள்.

இங்கே அம்பிகை யோகபீடத்தில் அரூபியாகத் தவம் செய்துகொண்டு விளங்குகிருள். அந்தத் தவத் துக்குக் காவலாக வீரபத்திரக் கடவுள் எழுந்தருளி யிருக்கிருர். அவரைப் பின்னலே பார்க்கப் போகி ருேம். ஆனல் கோயில் வாசலில் தூண்களில் உள்ள மூர்த்திகளைத் தரிசித்துக் கொண்டபிறகு உள்ளே நுழைந்தால் இருமருங்கும் சுவாமி சந்நிதியை நோக்கி இரண்டு வேறு வீரபத்திரர் திருவுருவங்களைக் காண லாம். ஒரு பக்கத்தில் தக்கனைக் குத்துகிறவர் மாதிரி யும் மற்ருெரு புறத்தில் தக்கன் தலையை அறுக்கிறவர் மாதிரியும் வீரபத்திரர் கோலங் கொண்டிருக்கிருர். இரண்டு திருவுருவங்களிலும் வீரமும் கோபமும் நன்ருக வெளிப்படுகின்றன. பிரம்மாண்டமான உருவங்கள். இந்த மூர்த்திகளுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு மெல்ல நகர்ந்தோமானல் மாணிக்க வாசகருடைய ஆலயத்தின் சந்நிதியில் நிற்போம். அங்கே உள்ள மண்டபத்தைத்தான் பெரிய மண்ட பம் என்று சொல்லுவார்கள். ஒரு தூணில் ரகுநாத பூபால மண்டபம் என்ற பெயர் வரையப்பட்டிருக்


கிறது. பல அடியார்களின் திருவுருவங்களும் மன்னர் களின் சிலைகளும் தூண்களில் உள்ளன. ஒவ்வொன் றுக்கும் கீழே பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. யார் இந்தத் திருக்கோயிலுக்குள்ளே சென்றாலும் மாணிக்க வாசகர் சந்நிதி வழியாகத்தான் செல்ல வேண்டும்.

இனி மாணிக்கவாசகரிடம் விடை பெற்றுக் கொண்டு முதற் பிராகாரமான வெளிப் பிராகாரத்துக் குள் நுழைந்து பார்க்கலாம். அங்கே கிழக்கு நோக்கித் தென்மேற்கு மூலையில் வெயிலுவந்த விநாயகர் வீற்றிருக்கிறார். திருக்கோயில் இல்லாமல் எப்பொழுதும் வெயில் தம்மேல்பட எழுந்தருளியிருப் பதால் அவரை வெயிலுவந்த விநாயகர் என்று சொல் கிறார்கள்.

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளைய வர்கள் பட்டீசுவரம் என்ற இடத்தில் தங்கியிருந்தார். மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் அவரிடம் மாணாக் கராக இருந்த காலம் அது. அக்காலத்தில் ஆவுடை யார்கோயில் தேவஸ்தானத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் பிரதிநிதியாக இருந்து நிர்வகித்துவந்த ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் என்பவருக்கு, அத்தல சம்பந்தமாக ஒரு புதிய புராணம் வேண்டும் என்ற ஆசை எழுந்தது. பழைய புராணங்கள் இருந்தாலும் நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம் என்பவற்றோடு புதியதாக ஒன்று வேண்டும் என்பது அவர் கருத்து. நினைத்தால் காவேரி வெள்ளம் போல் புராணங்களைப் பாட வல்லமையை உடைய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை யாதீன வித்துவானாக இருக்கும்போது அவருடைய விருப்பம்



திருப்பெருந்துறை -
குதிரைச் சுவாமி
பக்கம் 293



திருப்பெருந்துறைச் சிற்பம்
வில்லேந்திய வேலவன்
பக்கம் 285

நிறைவேறத் தடை என்ன? பட்டீசுவரத்தில் இருந்த பிள்ளையவர்களுக்கு, தம்பிரான் தம்முடைய கருத்தைச் சொல்லி அனுப்பினுர். 'திருப்பெருந்துறைக்கே வந்து சிலகாலம் தங்கி, புராணத்தை இயற்றி அரங்கேற்றி விட்டுச் செல்லலாம்' என்று தெரிவித்திருந்தார். நாத்தினவுடைய நாவலராகிய பிள்ளையவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டவுடன் புதிய ஊக்கம் கொண்டார். திருப்பெருந்துறையில் வெயிலுவந்த பிள்ளையார் எழுந்தருளியிருக்கிருர் என்பதும் பிற தலச் செய்திகளும் அப்புலவர் பெருமானுக்கு நன்ருகத் தெரியும். அவர் அங்கே சென்று பல காலம் தரிசித்தவர். இப்போது புராணம் பாட வேண்டும் என்ற நினைப்பு உண்டானவுடன் அவர் மனோரதம் அவரைத் திருப்பெருந்துறைக்கே கொண்டு போய் விட்டது. வெயிலுவந்த விநாயகருக்கு முன்னுல் நின்றுகொண்டு வழிபட்டார். உடனே, இனி மலரப் போகின்ற புராணத்தில், விநாயகர் வணக்கத்தில் ஓரடி எழுந்தது. வெயிலுவந்த விநாயகரின் திருநாமத்தில் வெயில் இருக்கிறது. அதனோடு கவினுர் நிலவைப் பிணைத்தார்.

> நிலவுவந்த முடியினெடு வெயிலுவந்த
> மழகளிற்றை நினைந்து வாழ்வாம்

என்ற அடி உதயமாயிற்று.

இந்த வரலாற்றை ஐயரவர்கள் எழுதியிருக்கிருர்கள். வெயிலுவந்த விநாயகர் திருமுன் நிற்கும் பொழுது இந்த நினைவு எனக்கு வந்தது.

வெளிப் பிராகாரத்தின் மேற்புறத்தில் அக்கினி தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. அதனை அடுத்து, பிராகாரத்துக்கு மேலே விதானம் அமைந்த தியாகராஜ மண்டபம் என்னும் இடம் இருக்கிறது. திருவிழாவில் இரண்டாம் திருநாளின் காலை முதல், நாலாம் திருநாள் வரை மாணிக்கவாசகர் இங்கே எழுந்தருளுவது வழக்கமாம்.

மணிவாசகப் பெருமானுக்காக இறைவன் நரியைப் பரியாக்கினார்; தாமே குதிரை ராவுத்தராக எழுந்தருளினார். இந்தத் திருக்கோயிலில் குதிரை வீரர்களுக்குச் சிறப்பு அதிகம். ஏழு குதிரை வீரர்களை இங்கே பார்க்கலாம். பெரிய மண்டபத்தில் நாலு பேரும் இப்போது நாம் பார்க்கும் தியாகராஜ மண்டபத்தில் இருவரும் இருக்கிறார்கள். மற்றொரு மூர்த்தியை அடுத்த பிராகாரத்தில் உள்ள பஞ்சாட்சர மண்டபத்தில் பார்க்கப் போகிறோம். குதிரையின்மீது எழுந்தருளிய அந்தப் பெருமானைக் குதிரைச் சுவாமி என்றும் அந்த மண்டபத்தைக் குதிரைச்சுவாமி மண்டபம் என்றும் சொல்கிறார்கள்.

தியாகராஜ மண்டபத்தில் மனத்தை உருக்கும் காட்சி ஒன்று உண்டு. ஒரு தூணில் மாணிக்கவாசகருடைய இரண்டு வகைத் திருக்கோலங்களைக் காணலாம். மந்திரித் திருக்கோலத்தில் அமைந்த திருவுருவம் சற்று மறைவாக இருக்கிறது. இரண்டு தூண்களின் இடுக்கு வழியாகப் பார்க்க வேண்டும். பதவியை மறந்து, செருக்கை ஒழித்து, எம்பெருமானுடைய திருவருளுக்காக ஏங்கி நின்று புலம்பிய

மாணிக்கவாசகரையே விளக்கமாகக் காண முடிகிறது. தலையில் முடியும் காதில் குண்டலங்களும் திருமார்பில் ஆரமும் தோள், கை முதலிய இடங்களில் அழகிய அணிகலன்களும் கொண்டு பெரிய அரசரைப்போலத் திருவாதவூரர் ஒரு பக்கம் காட்சி அளிக்கிறார். அந்தக் கோலத்தை நீத்து, உருத்திராட்ச மாலை அணிந்த மொட்டைத் தலையும் எளிய திருக்கோலமும் பெற்றுக் கையைக் குவித்தபடியே மாணிக்கவாசகர் தூணின் மற்றொரு பக்கத்தில் நிற்கிறார். மந்திரிக் கோலம் பெரிய திருஉருவம். ஞானத் திருக்கோலம் சிறியது. மந்திரிக்கு முடி முதலியன இருப்பதில்லை; ஆயினும் சிற்பி மாணிக்கவாசகர் செய்த தியாகத்தை நன்கு நினைப்பூட்டுவதற்கு முடி முதலியவற்றை அமைத்துக்காட்டியிருக்கிறான். மிடுக்குடன் நிற்கும் அந்தத் திருக்கோலத்தைக் கண்டு, அவ்வளவு பெரிய பதவியைப் பொய்யென நீத்துவிட்டு வந்தார் மணிவாசகர் என்பதை நினைக்கும் போது மனம் உருகுகிறது. அந்த உருக்கத்தை மிகுதிப்படுத்த, துறந்த திருக்கோலத்தையும் அருகிலே வைத்துக் காட்டியிருக்கிறான் சிற்பி. உருவத்தால் சிறியவராகத் தோற்றினாலும் ஞானப்பிரானாகிய மணிவாசகருக்கு உள்ள பெருமை வேறு எந்த மன்னருக்குத்தான் வரும்? சிவபெருமானே இந்தத் திருக்கோயிலில் தன்னையும் அம்பிகையையும் மறைத்துக் கொண்டு தன்னுடைய சீர் பாடிய ஞானச் செல்வராகிய மாணிக்கவாசகருக்கு நித்திய நைமித்திக பூசைகளும் பிற சிறப்புக்களும் நிகழும்படி செய்திருக்கிறான்.

மண்டபத்துக்கு மேலே உள்ள கொடுங்கைகளை மரத்தினால் அமைத்திருந்தால்கூட இவ்வளவு அழகாகவும் உறுதியாகவும் அமைவது சந்தேகம். அவற்றைப் பார்க்கும் போதுதான், செய்வதற்கு அரியவற்றுள் இந்த ஊர்க் கொடுங்கைகளையும் ஒன்றாக வைத்துச் சிற்பிகள் சொல்வது எவ்வளவு நியாயம் என்பது புலப்படும்.

இந்தப் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் தல விருட்சமாகிய குருந்த மரம் நிற்கிறது. மாணிக்க வாசகரை ஆட்கொள்ள வந்த எம்பெருமான் குருந்த மரத்தின் அடியில் எழுந்தருளியிருந்தான் என்றும், அப்பெருமானைக் கண்ட மணிவாசகர் அங்கே சென்று பணிந்து உபதேசம் பெற்றார் என்றும் வரலாறு கூறுகிறது. மாணிக்கவாசகரே திருவாசகத்தில்,

நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

என்று இச்செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

திருப்பெருந்துறைத் திருக்கோயிலில் ஆறு சபைகள் உண்டு. கனக சபை, நடன சபை, தேவ சபை, சத் சபை, சித் சபை, ஆனந்த சபை என்ற பெயருடையவை அவை. ஆலய வரலாறு முதலியவற்றை விளக்கிய ஸ்ரீ ஆத்மநாத நம்பியார் பெருமிதத்தோடு ஒரு செய்தியைச் சொன்னார், "சிதம்பரத்தில்கூட, பஞ்ச சபைகளே உண்டு. ஆனால் இங்கே ஆறு சபைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சபையிலும் ஒரு

விசேஷம் உண்டு. ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு மண்டபம் உண்டு" என்றார். அவரவர்களுக்கு அவரவர் ஊர் பெரியதுதானே ?

இரண்டாவது பிராகாரத்திலிருந்து குதிரைச் சுவாமி மண்டபத்துக்குள் புகுந்தேன், அதற்குப் பஞ் சாட்சர மண்டபம் என்று பெயர். ஆறு சபைக்குள் ஒன்றாகிய கனகசபையும் அதுதான். இந்த மண்டபத் தில் ஒரு தூணில் தெற்குப் பார்த்த நிலையில் குதிரைச் சுவாமி, குதிரையின் மேல் வீற்றிருக்கிறார். குதிரைக் காரருக்கு உரிய உடையும் அணியும் விளங்க, நாலுகால் பாய்ச்சலில் செல்லும் குதிரையின்மேல் அவர் எழுந்தருளியிருக்கிறார். இந்தச் சுவாமிக்கு மாத்திரம் சைவர்கள் பூஜை செய்கிறார்கள்.

குதிரைகளுக்குப் பெயர் போனது அராபியா தேசம். அங்கிருந்துதான் சிறந்த குதிரைகள் பழங் காலத்தில் வந்து கொண்டிருந்தன. அராபியாவில் வாழ்கிறவர்கள் முஸ்லிம்கள். குதிரைகளை ஓட்டி வந்தவர்களும் முஸ்லிம்களே. யானையை ஓட்டு பவனுக்கு மாவுத்தன் என்றும் குதிரையை ஓட்டுபவ னுக்கு ராவுத்தன் என்றும் பெயர் வழங்குவார்கள். 'குதிரைக்கு மேற்கே பயணம், ராவுத்தனுக்குக் கிழக்கே பயணம்' என்ற பழமொழியையும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே ! முதல் முதலில் முஸ்லிம் களைக் குதிரை வீரர்களாகக் கண்டனர் தமிழர். அவர்களை ராவுத்தர் என்று அழைத்தார்கள், பிற் காலத்தில் எல்லா முஸ்லிம்களும் தமிழ் நாட்டாருக்கு ராவுத்தர்களாகி விட்டார்கள். ராவுத்தர் என்பார் தென்னாட்டில் வாழும் முஸ்லிம்களில் ஒருபிரிவினரே.

ஆனாலும் இது மற்றவர்களுக்குத் தெரியாது. அருண கிரிநாதப் பெருமானும் மயில் வாகனத்தைக் குதிரை யைப் போல வேகமாக ஓட்டுவதால் முருகனை ராவுத்தன் என்று பாடுகிறார்.

படிக்குந் திருப்புகழ் போற்றுவன்
கூற்றுவன் பாசத்தினல்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென்
பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூரன்
நடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே.

ஆவுடையார் கோயிலில் உள்ள குதிரைச் சுவாமி மண்டபத்தைக் குதிரை ராவுத்தர் மண்டபம் என்றும் வழங்குவதுண்டாம். இங்கே ஒரு ராவுத்தச் சுவாமி இருக்கிறார் அல்லவா? இந்தக் கோயிலில் ராவுத்தச் சுவாமிக்கு அருகில்வந்து இன்றும் முஸ்லிம் கள் தொழுகிறார்கள். இதற்குமேல் அவர்கள் கோயி லுக்குள் போவதில்லை. நான் போயிருந்த போது தினந்தோறும் தொழுகை நடத்தும் முஸ்லிம் ஒரு வரைக் கண்டேன்.

குதிரைச் சுவாமி மண்டபத்தின் மேல் பாவு கல்லில் பல கதைச் சிற்பங்கள் இருக்கின்றன. சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் சொல்லப்படும் ஆறு அத்துவாக்களையும் மற்றவற்றையும் அவற்றுக்குரிய எழுத்துக்களோடு காட்டும் சிற்பங்கள் பாவுகல்லில் அமைந்திருக்கின்றன. பாவுகல்லை அடுத்த சுவர்ப்

பகுதியில் தூண்களுக்கு மேலே பல பாடல்கள் கல்லெழுத்தாக இருக்கின்றன; அவற்றிலிருந்து, இந்தப் பாவு கல் எல்லாம் போட்ட காலம் சாலிவாகன சகம் 1504-ஆம் வருஷம் (கி. பி. 1581) என்று தெரிகிறது.

திதிக்கும் சகாத்தமிங் கொன்றரை
    ஆயிரம் செல்லுறுநான்கு
உதிக்கும் பிலவத்தில் பங்குனி
    மாதத்தில் ஒன்பதிற்குப்
பதிக்கும் கனக சபைமண்ட
    பந்தனிற் பாக்கலெலாம்
மதிக்கும் படிமுகித் தானெங்கள்
    மாணிக்க வாசகனே.

இது ஒரு பாட்டு. இந்தப் பாட்டைக் கண்டால் மாணிக்கவாசகரே இந்த மண்டபத்தைக் கட்டினார் என்று சொல்லத் தோன்றும். பதினாறுவது நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இருந்திருக்க நியாயம் இல்லை. ஆனால் பாட்டில் வருகிற பெயர் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரைத்தான் குறிக்கிறது. அப்படியானால் காலத்துக்கும் பெயருக்கும் முரண்பாடு அல்லவா? இந்தச் சிக்கலை மற்றப் பாடல்கள் தீர்க்கின்றன.

அந்தப் பாடல்களில்,

பாக்கலெல்லாம்
    வேடிக்கை யாகச்செய்
தானெங்கள் கோபுர வேலவனே

என்றும்,

பலஞ்சேரும் நாளில் கனக
சபைதனில் பாக்கலெலாம்
நலஞ்சேர வேமுகித் தானெங்கள்
ஆளுடை நாயகனே

என்றும்,

கண்காண வேமுகித் தாள்யோக
நாயகக் காரிகையே

என்றும் முடிகின்றன.

இந்த நாட்டில் இறைவனுடைய திருவருள் ஒன்றையே பெற வேண்டுமென்று கருதி மன்னரும் செல்வரும் பெரிய ஆலயங்களை எடுத்தும் மண்டபங்களை நிறுவியும் வழிபட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திருப்பணிகளைத் தாங்கள் செய்ததாக விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. ஒரு ரூபாய்க்குத் தாம்பாளம் வாங்கி இரண்டு ருபாய் கொடுத்துத் தம்முடைய பட்டங்களையும் பெயர்களையும் பொறிக்கச் செய்யும் இந்த விளம்பரயுகத்தில் தம் பெயரை வெளிப்படுத்தாமல் மோனத்தொண்டு செய்த அந்தப் பெரியார்களின் பெருமை பன்மடங்கு உயர்ந்து நிற்கிறது.

இந்தக் கனக சபை மண்டபத்தில் பாவு கல்லைப் பரப்பின புண்ணியவான் யாரோ, நாம் அறியோம். ஆனால் எல்லாம் இறைவன் திருவருளால் நிறைவேறுகின்றன என்ற நம்பிக்கையும், நாம் செய்தோம் என்ற எண்ணத்தை அறவே மறந்த அடக்கமும் கொண்ட அவர்கள், “இந்த மண்டபத்தை விநாயகன் கட்டி முடித்தான்; வேலவன் கட்டி முடித்தான்; மாணிக்க

வாசகன் கட்டி முடித்தான்'' என்று எழுதச் சொன்ஞர்கள். பாவுகல்லேப் பாடல்கள், பாக்கல் என்று கூறுகின்றன. தம்முடைய செருக்கை அடியோடு பலியிட்ட அந்தப் பெருமக்களின் அடக்கத்தைக் காட்டுகின்ற பா எழுதிய கல்லாகவும் இவை *நிற்*கின்றன.

## சிற்பக் கருவூலம்

தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவர் என்பது யாவருக்கும் தெரிந்த செய்தி. அந்த மூவாயிரம் பேரில் நடராசப் பெருமானும் ஒருவன். இது சிதம் பரத்தில் உள்ள முறை. இதுபோலவே திருப்பெருந் துறையிலும் ஒரு முறை உண்டு. அங்கே மூவாயிரம் பேர்; இங்கே முந்நூறு பேர். அங்கே எப்படி இறை வனும் மூவாயிரம் பேரில் ஒருவனோ அவ்வாறே இங் கும் ஆத்மநாதர் முந்நூற்றுவரில் ஒருவர்.

ஒரு காலத்தில் பாண்டிய மன்னன் ஒருவன் ஆத்ம நாதருடைய பூசை இனிது நடைபெற வேண்டுமென்ற கருத்தோடே காசியிலிருந்து முந் நூறு மறையவர்களை வரச் செய்து, அவர்களை இந்தத் தலத்தில் நிறுவ எண்ணினான். மறையவர்கள் வந்த போது அவர்களுக்கு முந்நூறு வீடுகளைக் கட்டுவித் துக் குடியேற்ற ஏற்பாடு செய்தான். அவர்களுக் கெல்லாம் பொன்னுடை வழங்க எண்ணி முந்நூறு ஆடைகளை எண்ணி வைத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்து வந்தான். கடைசியில் ஓராடை எஞ்சியது. மறையவர்களை எண்ணிப் பார்த்தபோது முந்நூறு பேர்களில் ஒருவர் குறைந்தார். அவர்கள் ஒன்றும் தெரியாமல் திகைத்தபோது ஆத்ம நாதரே ஒரு முதிய மறையவராகி எழுந்தருளி வந்து, பாண்டியனிடம் பொன்னுடையைப் பெற்று, அவனுக்

குத் திருநீறு அளித்துவிட்டு மறைந்தார். அது முதல் ஆத்மநாதருக்கு முந்நூற்றொருவர் என்ற திருநாமம் வழங்கி வருகிறது.

முந்நூற்றுவர் என்று வழங்கும் மறையவர்கள் இறைவனுக்குப் பூசை செய்து வாழ்ந்து வந்தார்கள். பாண்டிய மன்னன் அவர்களுக்கு வீடும் நிலமும் வழங்கினான். அவர்கள் மனைவி மக்களுடன் இனி தாக வாழும்போது அவர்களுக்கு ஒரு குறை உண்டா யிற்று. அவர்களுடைய பிள்ளைகளுக்கு மறை பயிற் றும் ஆசாரியர் யாரும் கிடைக்கவில்லை. அவர்கள் யாவரும் ஆத்மநாதருடைய ஆராதனையில் ஈடுபட்ட வர்களாதலின் அவர்களுக்கு ஓய்வு இல்லை.

அப்போது ஆத்மநாதரே முதிய வேதியராக உருவெடுத்து வந்தார். சிவ சின்னங்களுடன் வாய் எப்போதும், 'சிவசிவ' என்று சொல்லிக்கொண்டே இருக்கக் கையில் ஒரு கோலை ஊன்றிக்கொண்டு வந்த அவரை, முந்நூற்றுவர் கண்டார்கள். அவரை வரவேற்று உபசரித்தார்கள். பின்பு, "தாங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"எனக்கு என்று தனியாகச் சொல்ல ஊர் ஏதும் இல்லை. நான் எங்கும் இருப்பேன். அநாதராக இருப்பவர்களுக்கு ஊர் ஏது?" என்றார் முதியவர்.

"நீர் என்ன தொழில் செய்ய வல்லீர்?"

"நான் வேதியச் சிறுவர்களுக்கு மறை பயிற்று வேன்" என்றார் அவர்.

"எங்கே ஓர் ரிக்குச் சொல்லுங்கள், பார்ப்போம்" என்று மறையவர்கள் கேட்டார்கள். அவர் கணீர் என்று மழை பொழிவதுபோலப் பொழிந்தார்.

அது கேட்டு யாவரும் மகிழ்ந்து, "சுவாமி, எங்கள் குழந்தைகள் அத்தியயனம் செய்ய வேண்டும். அதற்குத் தக்க ஆசிரியர் கிடைக்கவில்லையே என்று நாங்கள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம். ஆத்மநாதரே உங்களை இங்கே அனுப்பியிருக்கிறார். நீங்கள் இந்த ஊரிலேயே தங்கி, இந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர் ஒப்புக்கொள்ளவே, "நாங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று மறையவர்கள் கேட்டார்கள்.

"எனக்கு அன்பு ஒன்றுதான் வேண்டும். பசித்த போது அன்னமிட்டால் போதும்."

இது கேட்டு வியந்த முந்நூற்றுவரும் அவரை வணங்கி, ஒவ்வொரு நாள் ஒவ்வொருத்தர் வீட்டில் உணவளிப்பதாகத் திட்டம் செய்தார்கள். முதிய மறையவராகிய ஆத்மநாதர் அது முதல் பிராமணக் குழந்தைகளுக்கு முறையாக வேதம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினர். வேத பாடசாலையில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு, மறையவர் சிறுவர்களுக்கு வேத பாடசாலை நடத்தி வந்தார், மறைப்பொருளாயுள்ள பெருமான்.

அப்போது திருப்பெருந்துறைக்கு அருகில் உள்ள ஓரூரில் குறும்பர்களின் தலைவனாக ஒருவன்

இருந்தான். அவனைக் குறும்ப வேளான் என்றும் லுண்டாட்சன் என்றும் சொல்வார்கள். லுண்டாட்சன் என்பதற்குச் சுழல் கண்ணன் என்று பொருள். அவன் பல குறும்பர்களுக்குத் தலைவனாக இருந்தமையால் போர் வந்தால் தன் இனத்தோடு சென்று, பாண்டியனுக்கு உதவி செய்வான். இதனால் பாண்டியனுடைய அன்பு அவனுக்குக் கிடைத்தது.

அரசனுடைய நட்பும் அரசியல் செல்வாக்கும் கிடைத்துவிட்டால் மனிதன் மாறுவதற்குக் கேட்க வேண்டுமா ? தான் ஒரு சிற்றரசனைப் போல வாழ வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உதித்தது. பாண்டியனுடைய நட்பு இருக்கிறதென்ற துணிவினால் மெல்ல மெல்லத் தன் ஊரிலுள்ள நிலங்களையும் அருகிலுள்ள ஊர் நிலங்களையும் தன்னுடையன ஆக்கிக் கொண்டான். திருப்பெருந்துறையில் உள்ள முந்நூற்றுவராகிய மறையவர்களுக்குப் பாண்டியன் வழங்கியிருந்த இறையிலி நிலங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கவர்ந்து கொண்டான். அதோடு மன்னன் அவர்களுக்குத் தந்திருந்த ஆவண ஓலையையும் எப்படியோ ஏமாற்றி வாங்கிக் கொண்டான்.

நிலம் முழுவதும் அக்கொடியோனிடம் செல்லவே திருப்பெருந்துறை மறையவர்கள் மிகவும் வருந்தினார்கள். வறுமை அவர்களைப் பற்றிக் கொண்டது. ஆயினும் ஆத்மநாதருடைய வழிபாட்டை முட்டின்றிச் செய்து வந்தார்கள்.

அவர்களுக்கு நிலம் வழங்கின பாண்டியன் அப்போது இல்லை. அப்போது ஆட்சி செலுத்தியவன் இளம் பருவம் உள்ளவன். 'அரசனே இளையவனாக இருக்கிறான். நம்முடைய நிலங்களைக் கவர்ந்தவன் அவனுக்கு வேண்டியவன். நிலங்கள் நமக்கு உரியன என்பதைக் காட்ட நம்மிடம் ஆவண ஓலை இல்லை. அவற்றையும் அவன் கைப்பற்றிக் கொண்டான். இப்போது நிலங்களை அவனே ஆண்டு வருகிறான். அவை நம்மைச் சேர்ந்தன என்று நாமே சொல்வதையன்றி நமக்காக வேறு யார் சாட்சி சொல்வார்கள்? அந்தக் குறும்ப வேளானுக்கு அஞ்சி யாரும் வரமாட்டார்களே. ஆட்சி, ஆவணம், சாட்சி என்ற மூன்றும் இல்லாமல் நிலம் நம்முடையது என்று எப்படி உரிமை கொண்டாடுகிறது?' என்று எண்ணி எண்ணி ஏங்கினார்கள். 'எப்படியாவது மதுரை சென்று பாண்டியனிடம் முறையிட்டுக் கொள்வோம்' என்று தீர்மானித்தார்கள். அதை உணர்ந்த மறையாசிரியராக இருந்த ஆத்மநாதர், "நானும் உங்களுடன் வருகிறேன்" என்றார். "அப்படியானால் எங்கள் காரியம் சித்தியாகும்" என்று மறையவர்கள் மகிழ்ச்சிகொண்டு அவரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

யாவரும் மதுரை வந்து சேர்ந்து, அரண்மனை சென்று, தம்முடைய வரவை அரசனுக்குச் சொல்லியனுப்பினார்கள். அவன் வரும்படி ஏவ, யாவரும் பாண்டியன் அவையிற் புக்கு அவன் இருக்கை நல்க அமர்ந்து, தம் வழக்கை உரைத்தார்கள்.

"அந்த நிலங்கள் உங்களுடையன என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?" என்று கேட்டான் அரசன்.

மறையவர்கள் தங்களுக்கு மறை தெரியுமென்றும் வியாகரணம் வருமென்றும் வெவ்வேறு கலைகள் வருமென்றும் சொல்லத் தொடங்கினார்கள்.

"உங்களுடைய வித்தைக்கும் இதற்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை. இந்த நிலங்கள் இப்போது யார் வசம் இருக்கின்றன?" என்று கேட்டான் அரசன்.

"குறும்ப வேளானிடம் இருக்கின்றன."

"அவற்றை உங்களுக்கு யார் வழங்கினார்கள்?"

"உன்னுடைய முன்னோர்கள் வழங்கினார்கள்."

"அதற்கு ஆவண ஓலை இருக்கிறதா?"

"அதையும் அவன் கவர்ந்துகொண்டான்".

"ஆட்சி, ஆவணம் இரண்டும் இல்லை என்றால் யாரேனும் தக்கவர் சாட்சி சொல்ல முடியுமா?"

"நாங்கள் சொல்லுகிறோமே!"

"வழக்குரைப்பவர்கள் சாட்சியாக முடியுமா? வேறு யாரேனும் சாட்சி கூறுவார்களா?"

"குறும்ப வேளானால் தங்களுக்கு ஏதேனும் தீங்கு உண்டாகும் என்ற அச்சத்தால், சாட்சி சொல்ல ஒருவரும் வரமாட்டேன் என்கிறார்கள்."

"இது என்ன வியப்பான வழக்காக இருக்கிறது! ஆதாரம் ஒன்றும் இல்லாமல் நிலங்கள் உங்களுடை

யவை என்று சொல்கிறீர்களே! இது வெல்லும் வழக்காகுமா?'' என்று கேட்டான் பாண்டியன்.

''உண்மை ஒன்றே எங்கள் பங்கில் இருக்கிறது. நாங்கள் வழிபட்டு வரும் ஆத்மநாதர் அறிய இந்த நிலங்கள் எங்களுடையவையே'' என்று மறையவர் வற்புறுத்திச் சொன்னார்கள்.

பாண்டியன் ஒன்றும் தெரியாமல் சற்றே கலங்கினான். பின்பு குறும்ப வேளானை அழைத்துவரச் செய்து, மறையவர் வழக்கை எடுத்துரைத்து, ''நீ நிலங்களைக் கவர்ந்ததுண்டோ?'' என்று கேட்டான்.

''இவர்கள் சொல்லும் வழக்கு உண்மையானால் முயலுக்குக் கொம்பு இரண்டு என்று சொல்லுவதும் உண்மையாக வேண்டும்'' என்று குறும்ப வேளான் விடையிறுத்தான்.

பாண்டியன் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு, ''நிலங்கள் உன்னுடையவை என்பதற்கு ஆதாரம் என்ன?'' என்று வினவினான்.

''தொன்றுதொட்டு நானே ஆண்டு வருகிறேன். இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?''

''அப்படியானால் அந்த நிலத்திற்கு ஏதேனும் அடையாளம் உண்டா?''

''அந்த நிலமெல்லாம் மேட்டு நிலம். இரண்டு பனை ஆழம் வெட்டினாலும் தண்ணீர் ஊறாது'' என்றான் குறும்ப வேளான்.

அப்போது பாண்டியன் மறையவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏதேனும் அடையாளம் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். அவர்கள் ஒன்றும் சொல்ல இயலாமல் கலங்கினார்கள். அப்போது வேத ஆசிரியராக இருந்த கிழவர் முன்னே வந்து, "எங்கள் நிலத்தில் மண்வெட்டியால் வெட்டினால் அந்த வெட்டு வாயில் நீர்க்குமிழி தோன்றும்" என்று தைரியமாகச் சொன்னார்.

அதைக் கேட்ட குறும்ப வேளான் உள்ளத்துள்ளே உவகை பூத்தான். 'இந்தப் பைத்தியம் ஏதோ உளறுகிறது. பாதாளம் போனாலும் தண்ணீர் காணாத நிலத்தில் வெட்டுவாயில் நீர் காண்பதாவது! நம் கட்சி வெல்வதற்கு இந்தக் கிழவர் பேச்சே போதும்' என்று மகிழ்ந்தான். மறையவர்களோ, "ஐயையோ, இந்தக் கிழட்டு மனிதர் திடீரென்று இப்படிச் சொல்கிறாரே! இவர் சொல்வது நடக்கிற காரியமா? இவரை ஏன் அழைத்து வந்தோம்!" என்று அங்கலாய்த்தார்கள்.

அரசனுக்கும் சிறிது ஐயம் உண்டாயிற்று.

"நீர் சொல்வது உண்மைதானா?" என்று அவன் கேட்க அவர், "உண்மை, உண்மை; முக்காலும் உண்மை" என்றார்.

"நீ என்ன அப்பா சொல்கிறாய்?" என்று குறும்ப வேளானை அரசன் கேட்க, "அப்படி இருந்ததானால் நிலம் அவர்களுடையதே; அதைச் சோதித்துப் பார்க்கலாம்" என்றான்.

அரசன் உடனே மறையவர்களையும் லுண்டாட்சனையும் முன்னாலே போகச் சொல்லிவிட்டுப் பின்னால் குதிரைமீதேறிப் புறப்பட்டான். யாவரும் திருப்பெருந்துறையை அடைந்தார்கள். வழக்குக்குரிய நிலப்பரப்புக்குச் சென்ற பாண்டியன் மண்வெட்டிகளை வருவித்து, "வெட்டிப் பாருங்கள்" என்றான். அப்போது கிழவேதியர், "லுண்டாட்சனே வெட்டட்டும்" என்று கூறினார்.

குறும்ப வேளான் மேடாகப் பார்த்து அங்கே வெட்டினான். அங்கே பளீரென்று ஊற்று எழுந்து, அவன் முகத்தில் அடித்தது. பின்னும் ஓரிடத்தில் வெட்டினான். அங்கும் அப்படியே நீர் தோன்றியது. இப்படிப் பல இடங்களில் வெட்ட வெட்ட நீர் வேகமாகத் தோன்றியது. பல இடங்களில் நீர் தோன்றியமையின் எங்கும் நீர்த் துறையாயிற்று; அதனால் திருப்பெருந்துறை என்ற பெயர் இத்தலத்துக்கு அமைந்தது.

குறும்ப வேளான் செய்த தவறு, இப்போது வெளிப்பட்டு விட்டது. பாண்டியன் உண்மையை உணர்ந்தான். அதுகாறும் அங்கு நின்றிருந்த முதிய வேதியர் மறைந்தருளினார். அப்போது யாவரும் ஆத்மநாதரே தமக்குத் துணையாக வந்து அருள் செய்தார் என்று உணர்ந்து, அப்பெருமானை எண்ணித் துதித்து உருகினார்கள். பாண்டியன் லுண்டாட்சனுக்குச் சிறைத் தண்டனை விதித்தான்.

மேலே கண்ட வரலாறு புராணத்தில் உள்ளது. இன்று ஆலயத்தில் பூசை செய்பவர்கள் அந்த

முந்நூற்றுவர் பரம்பரையைச் சேர்ந்தவர்களே. முந்நூறு குடும்பங்கள் இப்போது இல்லை. முப்பது குடும்பங்களே இருக்கின்றன. அந்த மறையவர்கள் ஆக்னிவேச்ய சூத்திரம் என்ற சூத்திரத்தை உடையவர்கள். அது மிகவும் அரிய சூத்திரம்.

ஆவுடையார் கோயிலைச் சார்ந்து, வடக்கூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கேதான் முந்நூற்றுவர் வீடுகளும் ஆதியில் இருந்தனவாம். இப்போதும் சிலர் அங்கே இருக்கிறார்கள். அங்கே நாராயண தீர்த்தம் என்ற குளமும் அதன் கரையில் பள்ளிக்கூடப் பிள்ளையார் கோயிலும் இருக்கின்றன.

முந்நூற்றுவருக்குள்ளே மேலே சொன்ன வரலாறு சிறிது மாறுபாட்டுடன் வழங்குகிறது. அதை ஸ்ரீ ஆத்மநாத நம்பியார் சொன்னார்.

"உன் நிலத்துக்கு அடையாளம் என்ன?" என்று பாண்டியன் குறும்ப வேளானைக் கேட்டபோது, "என் பூமி வெள்ளாற்றுக்கும் பல துளியாற்றுக்கும் நடுவில் உள்ளது ; எங்கே வெட்டினாலும் அறுபது முழத்துக்குக் கீழே நீர் இருக்கும்" என்றான். கிழவேதியர், "எங்கள் பூமியில் ஆறு முழத்துக்குக் கீழ் நீர் காணும்" என்றார். குறும்ப வேளான் ஒரு மேட்டில் வெட்டியபோது ஆறு முழத்திலேயே நீர் ஊற்று வந்து விட்டது. அரசன் உண்மை தெரிந்து, நிலங்களை மறையவர்களுக்கு வாங்கி அளித்தான். குறும்ப வேளான் வெட்டி, ஊற்று வந்த இடம் இன்றும் கீழ்நீர்க்காட்டி என்று வழங்குகிறதாம்.

முதிய மறையவர் மற்றவர்களிடம் முன்பே ஒரு நிபந்தனை பேசிக்கொண்டாராம். "உங்கள் வழக்கை

நான் பாண்டியனிடம் சொல்லி வெற்றி பெற்றால் என்னை உங்களுள் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டு எனக்கும் ஒரு பங்கு கொடுக்க வேண்டும்'' என்று சொன்னாராம். முந்நூற்றுவர் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டனர்.

தங்கள் வழக்கு வென்றவுடன் முதியவருக்குரிய பங்கை வழங்க எண்ணியபோது, ''எனக்கு நிலம் எதற்கு ? நீங்கள் வைத்துக் கொண்டு நாளுக்கு ஒரு வீடாகச் சாப்பாடு போட்டு வாருங்கள்'' என்றார். அப்படியே அவர்கள் செய்தார்கள். அவர்கள் வீட்டில் புழுங்கலரிசி வடித்துக் கீரையைச் சுண்டிப் பாகற்காய் உப்புச்சாறு வைத்து அவருக்கு உண வளித்தார்கள். ''நான் உங்கள் குழந்தைகளுக்கு வேத பாடம் சொல்லித் தருகிறேன்'' என்று சொல்லி மறை பயிற்றுவித்தார்.

குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுவது அவருக்கு வழக்கம். ஒருநாள் கண்ணாமூச்சி விளை யாட்டு ஆடினார்கள். கிழவர் கண்ணைத் துணியால் கட்டி, சுற்றிலும் பையன்கள் ஓடினார்கள். கிழவர் எல்லாரையும் தொட்டுவிட்டார். பிறகு குழந்தைகள் அத்தனை பேர் கண்ணையும் கட்டி விட்டுத் தம்மைத் தேடச் சொன்னார். அவர்கள் கண்களைக் கட்டிக் கொண்டவுடன் அவர் மறைந்தார்.

கண்ணைக் கட்டிக் கொண்டவர்கள் தேட முடியாமல் கட்டை அவிழ்த்துப் பார்த்தார்கள். அவரைக் காணவில்லை. அதைத் தம்முடைய தந்தையாரிடம் வந்து சொன்னார்கள் பிள்ளைகள். உண்ணும் நேரமாகிவிட்டது. சிலர் உண்டுவிட்டு

அவரைத் தேடப் புறப்பட்டார்கள்; சிலர் உண்ணு மலே தேடினுர்கள். கடைசியில் ஒரு சோதியுரு வத்தை ஆத்மநாதர் காட்டி மறைந்தார்.

அப்போது அவரை உண்ணுமல் தேடினவர்கள் நம்பியார் என்ற பட்டத்தோடு பூசகர்கள் ஆனுர்கள்; அவர் பரம்பரையினரும் அந்த உரிமையைப் பெற்றுர் கள். உண்டு தேடினவர்கள் பரிசாரகர்கள் ஆனுர் கள். மறைக் கிழவராக வந்தபோது அக்காலத்தில் ஆத்மநாதருக்கு அளித்த உணவாகிய புழுங்கலரிசி அன்னமும் கீரைச் சுண்டலும் பாகற்காய் உப்புச் சாறும் இன்னும் ஆலயத்தில் நிவேதனம் செய்யப் பெறுகின்றன.

இந்த வரலாற்றை ஸ்ரீ ஆத்மநாத நம்பியார் சொல்லிக் கொண்டு வரும்போது இடையிலே ஓரிடத் தில் நான் குறுக்குக் கேள்வி போட்டேன். குறும்ப வேளான் நிலத்துக்கு எல்லை கூறியபோது, "வெள் ளாற்றுக்கும் பல துளியாற்றுக்கும் நடுவில்" என்று சொன்னதாக அவர் சொன்னுர். வெள்ளாறு ஆவுடையார் கோயிலுக்கு அருகே ஓடுகிறது. நான் அதை அத்தலத்துக்கு வரும் போது கண்டேன். பல துளியாறு என்ற பெயரை நம்பியார் சொன்ன போது, "என்ன, என்ன?" என்று ஆவலோடு கேட் டேன். "பலதுளியாறு" என்று அவர் மீட்டும் சொன் ஞர். "அந்த ஆறு எங்கே இருக்கிறது?" என்று கேட்டேன். "இங்கே தெற்கே கம்வாய் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து வரும் மறுகால் எல்லாம் சேர்ந்து ஓடுகின்றன; அதுவே பல துளியாறு" என்ருர்.

பலதுளியாறு என்ற பெயர் எனக்குப்பழைய நூல் களில் வரும் பஃறுளியாற்றை நினைப்பூட்டியது. பல் துளியாறு என்பதே பஃறுளியாறு என்று சந்தியில் மாறும். கன்யாகுமரிக்கும் தெற்கே குமரியாறு, குமரி மலை, பஃறுளியாறு என்றவை இருந்தன என்று சங்க நூல்களால் தெரிய வருகின்றது. பஃறுளியாறு என்ற பெயர் பழையதாகத் தோன்றுகிறது. பல துளியாறு என்பது புதியதாகத் தோன்றுகிறது. ஆனல் இரண்டு பேர்களும் ஒன்றே, இந்தப் பேருள்ள பழைய ஆறு போனலும் அந்தப் பேரோடு வேறு ஓர் ஆறு இங்கே இருக்கிறது என்று எண்ணி இன் புற்றேன்.

முந்நூற்றுவரே ஆத்மநாதருக்கும், சிவயோக நாயகிக்கும், குருந்த மூலத்துக்கும் பூசை செய்கிருர் கள். மாணிக்கவாசகருக்கு ஆதி சைவர்கள் பூசை செய்கிருர்கள்.

குதிரைச் சுவாமி மண்டபத்தில் உள்ள சிற்பங் களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். குதிரைச் சுவாமிக்கு நேரே உள்ள தூணில் மணிவாசகர் மந்திரிக் கோலத்தில் நிற்கிருர். போகும் வழிக்கு மேற்கே குதிரைச் சுவாமி இருக்கிருர். அந்தத் தூணுக்குக் கிழக்கே வழியின் வலப் பக்கத்தே மாணிக்கவாசகர் காலத்தில் இருந்த பாண்டியன், அமர்ந்த கோலத்தில் இருப்பதாக உள்ள உருவம் இருக்கிறது. அரிமர்த்தன பாண்டியன் என்பது அவன் பெயர் என்று திருவிளையாடற் புராணம் தெரி விக்கிறது.

அவனுக்கு எதிரே உள்ள தூணில் குறும்ப வேளானுடைய உருவம் நிற்கிறது. அவன் இறை

வனுடைய அடியார்களுக்கு இடைஞ்சல் பண்ணி ஞலும் ஆத்மநாதரையே சாட்சி சொல்ல வைத்தான் அல்லவா? அதஞல் அவன் புராணத்திலுள்ள சொல்லிலும் ஆலயத்திலுள்ள கல்லிலும் இடம் பெற்றுவிட்டான். நல்லவர்களை எதிர்த்தாலும் நல்ல பயன் உண்டு என்று சொல்வார்கள். அது அவன் திறத்தில் பலித்துவிட்டது.

இந்த மண்டபத்துக்குப் பஞ்சாட்சர மண்டபம் என்றும் பேர் உண்டு என்று முன்பே சொன்னேன். இந்த மண்டபத்தை ஒட்டிக் கிழக்கே மற்ருெரு மாணிக்க வாசகர் கோயில் இருக்கிறது. அதைத் திருவாவடுதுறையாதீனத்தின் பிரதிநிதியாக ஆவுடையார் கோயில் கட்டளையில் இருந்த சுப்பிர மணியத் தம்பிரான் என்பவர் கட்டுவித்தார். மகா வித்துவான் மீஞட்சிசுந்தரம் பிள்ளையைக் கொண்டு திருப்பெருந்துறைப் புராணத்தைப் பாடச் செய்த வரும் அவரே.

பஞ்சாட்சர மண்டபமாகிய கனகசபையைத் தாண்டி உள்ளே சென்ருல் நடன மண்டபம் அல்லது தில்லை மண்டபத்துக்கு வருவோம். அதுதான் நடன சபை. இந்த மண்டபத்துக்கும் முன் பார்த்த பஞ்சாட்சர மண்டபத்துக்கும் இடையே முன்பு இடைவெளி இருந்ததாம். பின்பு சேதுபதி மன்னரும் புதுக்கோட்டை அரசரும் சேர்ந்து அந்த இடை வெளியின்மேல் இணைத்துக் கட்டிடம் கட்டிஞர் களாம். அவர்களுடைய உருவச் சிலைகள் இங்கே இருக்கின்றன.

நடன சபைக்குள் புகுவதற்கு முன்ஞல் இதோ தூண்களில் உள்ள அற்புதமான சிற்பங்களைப்

பார்க்க வேண்டாமா? இந்தக் கோயிலை ஒரு சிற்பக் கருவூலம் என்றே சொல்லலாம். எங்கே பார்த்தாலும் சிற்ப உருவங்கள். இதோ ஒரு வேடனுடைய உருவத்தைப் பாருங்கள். உறுக்கிய மீசையும் முறுக்கிய உடம்புமாக நிற்கிருன். அவன் தன் கேசத்தைப் பின்னிக் கொண்டிருக்கிருன். சீனுக்காரன் என்று நினைத்து விடாதீர்கள். இது அந்தச் சாதியின் பழைய வழக்கம்போல இருக்கிறது. மற்ருெரு தூணில் குறத்தி நிற்கிருள். ஆ! என்ன வடிவம்! அவள் கையில் வைத்திருக்கும் கூடையைக் கல் என்று யாராவது சொல்ல முடியுமா? கூடை முறம் கட்டும் குறத்தியும் அந்தக் குறவனும் இங்கே எங்கே வந்தார்கள்? "சோமாசிமாற நாயனுர் யாகத்துக்கு வந்த வேடம் இது" என்று சொன்னுர்கள். அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க வந்த வேடன் என்றுதான் சொல்லுங்களேன். எப்படியோ, இறைவன் வேட வேடமும் கொள்ளும் கருணையுடையவன் என்று தெரிந்துகொண்டால் போதும். இன்றைக்கெல்லாம் இந்த அற்புத வடிவங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

மண்டபத்தினுள்ளே ஒரு தூணில் வடக்குப் பார்த்துக் கை குவித்த கோலத்தோடு மணிவாசகர் நிற்கிருர். இரண்டு பக்கத்திலுள்ள தூண்களிலும் பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் காட்சி தருகிருர்கள். அவர்கள் இங்கே வந்து தவம் செய்ய, தில்லையில் நடனக் காட்சி தருவதாக இறைவன் அருளினுனும் அதனுல் இதற்கு நடன மண்டபம் என்ற பெயர் வந்ததாம்.

கல்லாலே ஆன விளக்குக் கம்பங்கள் இரண்டு இருபுறமும் இருக்கின்றன. இவற்றை நாட்டுக் கல் விளக்கு என்று சொல்கிறார்கள்.

இனி அடுத்த மண்டபத்துக்குப் போகலாம். இதுவரையில் இரண்டு பிராகாரங்களைத் தாண்டி வந்தோம். இனிமேல் மூன்றும் பிராகாரத்திலுள்ள தேவ சபையைப் பார்க்கலாம். இதைச் சுந்தர பாண்டியன் மண்டபம் என்றும் சொல்வார்கள். இந்தப் பிராகாரம் மிகவும் முக்கியமானது. பல சந்நிதிகளை உடையது. வலம் வந்து கொண்டே ஒவ்வொரு சந்நிதியாகப் பார்ப்போம்.

முதலில் வடக்கே பார்த்திருக்கும் மாணிக்க வாசகர் சந்நிதிக்கு வருகிறோம். இங்கே எழுந்தருளியிருப்பவர் உற்சவமூர்த்தி. இத்தலத்தில் எல்லா விழாக்களும் மாணிக்கவாசகருக்கே என்று முன்பே சொல்லியிருக்கிறேன். நந்திகேசுவரர், சண்டிகேசுவரர் இங்கே இல்லை. மற்ற ஆலயங்களில் புறத்திலும் அகத்திலும் நந்தியைக் காணலாம். நந்திதேவரே மாணிக்கவாசகராக அவதாரம் செய்தார் என்பது ஒரு கொள்கை.

"குடமுழா நந்தீசனை வாசகனுக் கொண்டார்" என்று அப்பர் சுவாமிகள் இதையே குறிப்பதாகச் சொல்வதுண்டு. நந்தியே மாணிக்கவாசகராக எழுந்தருளியிருப்பதனால் நந்திக்கு வேறு உருவம் அவசியம் இல்லையாயிற்று. அப்படியே இங்கே மாணிக்க வாசகரே இறைவன் நிர்மாலியங்களை ஏற்கும் உரிமை பெற்றமையால் சண்டேசர் சந்நிதியும் இல்லை.

மாணிக்கவாசகருக்கு ஆண்டில் இருமுறை திரு விழா நடைபெறும். அவருடைய திருவவதார விழா மார்கழியில் நடைபெறுகிறது. அவர் முக்தி பெற்றது ஆனிமகம். ஆனி உத்தரத்தில் உபதேசக் காட்சி நடக்கும். மார்கழி ரோகிணியிலும் ஆனி மகத்திலும் தேர் விழா நிகழும். பத்து நாள்உற்சவம்; பதினோராம் நாள் உபதேசம். பத்து நாட்களும் இரவில் மாணிக்க வாசகரைத் தேவ சபையில் சுவாமிக்கு முன் எழுந் தருளச் செய்வது வழக்கம்.

மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தி மிகவும் அழ கான உருவம். அவரைத் தரிசித்துக் கொண்டு நடந்தால் கிழக்குப் பிராகாரத்தில் வீரபத்திரரைத் தரிசனம் செய்து கொள்ளலாம். அம்மை யோகம் செய்யும்போது காவல் புரிந்து நிற்பவர் அவர். இந்தப் பிராகாரத்தின் ஓரத்தில் அதாவது வட மேற்கு மூலையில் சிவயோக நாயகி சந்நிதி இருக்கிறது. வீர பத்திரர் சந்நிதிக்கும் அம்பிகை சந்நிதிக்கும் இடையே ஓர் ஊஞ்சல் இருக்கிறது. அதில் மெத்தையிட்டு வைத்துப் பூசிக்கிறார்கள். கீழே உள்ள மெத்தை இராமநாதபுரம் அரசர்கள் வழங்கியது. அதற்குமேல் மற்றொரு மெத்தை இருக்கிறது. ஓர் அன்பருடைய கனவில், “கிழவருக்கு உடம்பு வலிக்கிறது; மெத்தை வேண்டும்” என்று அம்பிகை தோன்றிச் சொல்ல, அப்படியே தைத்துப் போட்டாராம். ஆத்மநாத ரைக் கிழவர் என்று சொல்வது வழக்கம். சிவயோக நாயகியின் சந்நிதி தெற்குப் பார்த்தது. ஆனால் வாயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. அன்பர்கள் தெற்குப் பார்த்துள்ள சாளரத்தின் வழியே தரிசனம் செய்துகொள்ள வேண்டும். இங்கே அம்பிகை

அருவமாக யோக பீடத்தில் எழுந்தருளியிருக்கிருள். சந்நிதியில் மேலே வளைகளைக் கட்டியிருக்கிருர்கள். குழந்தை வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டவர்கள் செலுத்திய பிரார்த்தனை அவை.

சிவயோக நாயகி சந்நிதியை அடுத்து ஆத்மநாதர் கர்ப்பக்கிருகத்துக்கு நேர் பின்னுலே ஒரு மண்டபமும் அதில் குருந்த மரத்தின் உருவச் சிலையும் உள்ளன. அதைக் குருந்தமூல சுவாமி என்று சொல்கிருர்கள். வெளிப்பிராகாரத்திலே தலவிருட்சமாகிய குருந்த மரமே இருக்கிறது. பழங்காலத்தில் மாணிக்கவாசகருக்கு அருள் செய்ய ஆத்மநாதர் எழுந்தருளிய குருந்த மரம் இந்த இடத்தில் இருந்ததாம்.

இந்தப் பிராகாரத்தின் வழியே சென்ருல் புடைப்புச் சிலை வடிவில் இருக்கும் நடராஜருடைய சந்நிதியை அடைவோம். வட கிழக்கு மூலையில் அந்தச் சந்நிதி. நடராஜாவையும் வீரபத்திரரையும் தவிர வேறு பரிவார மூல மூர்த்திகள் இங்கே இல்லை. கோபுரத்தில் ஓரிடத்தில் முருகன் உருவம் இருக்கிறது. அவரைப் பெருந்துறைக் குமாரர் என்று புராணம் சொல்லுகிறது.

தேவசபைக்கு அடுத்தது சத் சபை. அதை அமுது மண்டபம் என்று சொல்வார்கள். அமுது படைக்கும் இடம் இது. இந்த மண்டபத்தில் ஒரு பெரிய படைகல் இருக்கிறது; அட்சயசிலை என்று சொல்வார்கள். ஆத்மநாதருக்குச் செய்யும் நைவேத்திய அன்னத்தை இதில் அப்படியே கொட்டி விடுகிருர்கள். ஆவியோடு அன்னம் நிவேதிக்கப் பெறுகிறது.

இதற்கு அடுத்தது அர்த்த மண்டபம்; அதற்குச் சித்சபை என்று பெயர். அடுத்தது ஆத்மநாதர் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக் கிருகம். அதை ஆனந்த சபை என்றும் ஆத்மநாத மண்டபம் என்றும் சொல்கிறார்கள்.

ஆத்மநாதர் பீடத்தில் அருவமாக எழுந்தருளியிருக்கிறார். மேலே குவளை சாத்தி அலங்காரம் செய்கிறார்கள்.

இந்த ஆலயத்திலுள்ள மண்டபங்களும் சபைகளும் சிற்பங்களும் தீபங்களும் மிக விரிவானவை. சைவ சித்தாந்த சாஸ்திரத்தில் சொல்லப்பெறும் ஆறு அத்துவாக்களும் ஆறு தீபங்களாக இங்கே இருக்கின்றன. ஒவ்வொன்றையும் கவனித்தால் அத்துவாக்களுக்கும் தீபத்துக்கும் உள்ள பொருத்தம் நன்றாக விளங்கும்.

சிற்ப உருவங்களில் எதை உயர்வென்று சொல்வது? தூணுக்குத் தூண் உயிர்ச் சிற்பங்கள் நிற்கின்றன. நுட்பமான வேலைப்பாடுகளும் பல கருத்துக்களை உள்ளுறையாகக் கொண்ட திறமும் கூர்ந்து ஆராய ஆராய வியப்பை ஊட்டும்.

அன்புருவாக உள்ள மாணிக்கவாசகர் இங்கே நாம் வழிபடும்படி பல உருவங்களில் நிற்கிறார். பல நிலையில் அவரைப் பார்க்கிறோம். தத்துவங்களைச் சிற்பி வடித்திருக்கிறான். புராண வரலாற்றைக் கல்லிலே ஓவிய மாக்கியிருக்கிறான். சரித்திர புருஷர்களை அங்கங்கே சிலையுருவிலே காட்டியிருக்கிறான். எங்கே பார்த்தாலும் சிற்பக் கலைத்திறம் களிநடம் இடுகின்றது.

இந்த ஆலயத்துக்கு வந்தால் மாணிக்கவாசகரை வழிபட்டு அன்பிலே கரைந்து உருகலாம். அருவ நிலையிலுள்ள ஆத்மநாதரையும் சிவயோக நாயகியையும் தரிசித்துத் தியானத்திலே மூழ்கலாம். வீரபத்திரரை வணங்கி வேண்டிக் கொள்ளலாம். சாஸ்திரத்தை நினைப்பூட்டும் உருவங்களைக் கண்டு ஞான நூலாராய்ச்சியிலே புகலாம். சிற்பச் செல்வங்களைக் கண்ணுரக் கண்டு நாள் கணக்காகப் பொழுது போக்கி இன்புறலாம். அந்த இன்பத்தைச் சாதி சமய வேறுபாடு இல்லாமல் யாவருமே பெறலாம். ஆம்; இக்கோயில் ஒரு பெரிய சிற்பக் கருவூலம்.

# திருவாசகத்தின் பொருள்

தமிழ் நாட்டில் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் கோயில்கள் உண்டு. "ஊரான் ஓர் தேவகுலம்" என்று உரையாசிரியர்கள் ஒரு பழைய தொடரை உதாரணமாகக் காட்டுவார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று பழைய மொழி ஒன்றும் வழங்குகிறது. ஊருக்கு ஒரு கோயில் என்று பெருமைப்படும் வழக்கம் தமிழரிடம் இருந்தது. சிவன் கோயில், பெருமாள் கோயில் என்று இரண்டு கோயில் களும் இருக்கின்றன.

ஊருக்கு ஒரு கோயில் இருப்பது போலவே தமிழ் நாட்டுக்கு ஒரு கோயில் இருக்கிறது, சிவன் கோயில், பெருமாள் கோயில் என்ற இரண்டும் உள்ளன. வைத்தீசுவரன் கோயில் என்ருல் அது புள்ளிருக்கு வேளூரில் உள்ள கோயில். மாயூரநாத சுவாமி கோயில் என்ருல் அது மாயூரத்தில் உள்ள கோயில். அந்த அந்த ஊர்க்காரர்களுக்கு அது அது கோயில். ஆனுல் தமிழ் நாட்டுக்காரர்களுக்கே பொது வான கோயில் ஒன்று இருக்கிறது. எந்த அடையை யும் சொல்லாமல் கோயில் என்ருல் போதும். அதைப் பக்தர்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

சைவர்களுக்குக் கோயில் என்றவுடன் நடராஜா ஆனந்தக் கூத்தாடும் சிதம்பரம் நினைவுக்கு வரும். அதற்குக் கோயில் என்பதே ஒரு பெயர். அப்படியே

வைணவர்களுக்கு ரங்கராஜா அறிதுயில் கொள்ளும் ஸ்ரீரங்கம் கோயில். அம்பலத்தில் ஆனந்த நடனம் செய்யும் கூத்தப்பிரான் எல்லாருக்கும் பொதுவான கடவுள். சிதம்பரத்தில் நடனமாடும் அப்பெருமானை எல்லாச் சிவாலயங்களிலும் வைத்து வழிபடுகிறார்கள். அதனால் நடராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சிற்றம்பலத்துக்குப் பொது என்று ஒரு பெயர் உண்டு.

இங்கே எனக்கு ஒரு பழைய வரலாறு நினைவுக்கு வருகிறது. காஞ்சீபுரத்துக்குச் சிவஞான முனிவர் ஒரு புராணம் பாடினார். அதில் முதலில் சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு ஒரு வணக்கம் சொல்லியிருக்கிறார். புராணம் பாடி முடிந்தவுடன் அதை அரங்கேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். வெளியூரிலிருந்து அரங்கேற்றத்தைப் பார்ப்பதற்காகப் பல அன்பர்கள் வந்திருந்தார்கள். சிவஞான முனிவருடைய மாணாக்கராகிய கச்சியப்ப முனிவரும் வந்தார்.

அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று காஞ்சிபுரத்தில் சிவஞான முனிவரிடம் பொறாமை கொண்ட பேர்வழிகள் சிலர் இருந்தார்கள். அரங்கேற்றத்தின்போது கேள்விகளைக் கேட்டுச் சிவஞான முனிவரைத் திக்கு முக்காடச் செய்ய வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களுக்குத் தலைவர் ஓர் ஓதுவார்; சிவாலயத்தில் தேவாரம் ஓதுகிறவர்.

அரங்கேற்றத்தில் சிவஞான முனிவர் நடராஜப் பெருமான் துதியைப் படித்தார். அப்போது அந்த ஓதுவார் எழுந்தார். "ஒரு சந்தேகம்" என்றார். "என்ன?" என்று கேட்டபோது; "காஞ்சீபுரத்துக்குப்

புராணம் பாட வந்த நீங்கள் முதலில் சிதம்பரம் நடராஜரைத் துதிப்பது எதற்கு?'' என்று அவர் வினவினார். சிவஞான முனிவர் சிதம்பரத்தின் சிறப்பையும், நடராஜப் பெருமான் பெருமையையும் எடுத்துரைத்துச் சமாதானம் சொன்னார். ஓதுவார் அவர் சொன்ன சமாதானங்களை ஏற்றுக் கொள்ள வில்லை. "சிதம்பரம் சிறந்த தலமாக இருக்கலாம். நட ராஜாவும் சிறந்த மூர்த்தியாகலாம். ஆனால் காஞ்சீ புரத்தின் பெருமையை விரிவாகச் சொல்ல வந்த இடத்தில் அவரை முதலில் வைத்துப் பாட நியாயம் இல்லை'' என்று மீட்டும் தம் தடையை வற்புறுத்திச் சொன்னார். சிவஞான முனிவர் அவரை எப்படி மடக்குவது என்று சற்றே தடுமாறியபோது அவ ருடைய மாணாக்கராகிய கச்சியப்ப முனிவர் தம் ஆசிரியரிடம் ஏதோ சொல்லிவிட்டு அந்த ஓது வாரைப் பார்த்துப் பேசலானார். "நீர் யார்? என்ன படித்திருக்கிறீர்? இந்தத் தடைகளைச் சொல்வதற்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று கேட்டார்.

"நான் இவ்வூரில் உள்ள ஓதுவார்களில் ஒருவன். தேவாரம் தெரிந்தவன். சைவ சம்பிரதாயம் தெரிந்தவன்.''

"அப்படியா? அப்படியானால் எங்கே, இந்தத் தலத்துத் தேவாரம் ஒன்றைச் சொல்லும் பார்ப் போம்.''

ஓதுவார் தம்முடைய திறமையைக் காட்ட நல்ல வாய்ப்பு வந்திருக்கிறதென்ற களிப்பினால் கனைத்துக் கொண்டு தேவாரம் சொல்லத் தொடங் கினார். தேவாரம் எப்போது யார் சொன்னாலும்




திருப்பெருந்துறை -
வேடன் சிற்பம்
பக்கம் 312



திருப்பெருந்துறை -
குறத்தி சிற்பம்
பக்கம் 312

திருப்பெருந்துறை-
குருந்த மூலம் →
பக்கம் 315





திருப்பெருந்துறை-
மாணிக்கவாசகர் (உற்சவ
பக்கம் 314

முதலில் திருச்சிற்றம்பலம் என்று சொல்லித் தொடங்கு வதும், பாடி முடிந்தவுடன் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி முடிப்பதும் வழக்கம். அப்படியே அந்த ஓதுவாகும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லித் தேவாரம் பாடத் தொடங்கினர்.

அதற்குள் கச்சியப்ப முனிவர் அவரை இடை மறித்தார். "நான் காஞ்சீபுரம் தேவாரத்தைப் பாடச் சொன்னேன். எடுத்தவுடன் திருச்சிற்றம்பலம் என்று சொல்கிறீரே. திருவேகம்பம் என்று சொன்னால் முறை யாக இருக்கும். அப்படிச் செய்யாமல் திருச்சிற்றம் பலம் என்று ஏன் சொன்னீர்?'' என்று கேட்டார்.

ஓதுவார் சற்று நிதானித்தார். "அது சம்பிரதா யம். திருச்சிற்றம்பலம் எல்லாவற்றுக்கும் பொது'' என் ருர்.

உடனே கச்சியப்ப முனிவர், "திருச்சிற்றம்பலம் பொதுவானல் அதன் துதியும் பொதுவானதுதானே? காஞ்சீபுரத் தேவாரத்தைச் சொல்வதற்கு முன் திருச் சிற்றம்பலம் என்று சொல்வது முறையென்று தெரிந்த உமக்குக் காஞ்சீபுரப் புராணத்தில் முதலில் அந்தத் திருச்சிற்றம்பலத்தில் நடமிடும் பெருமானைத் துதிப்ப தும் முறைதான் என்று விளங்கவில்லையோ?'' என்ருர்.

சபையில் ஒரே ஆரவாரம். தடை எழுப்பின ஓதுவார் முகம் வாடினர். பின்பு அவர் அங்கே உட் கார்ந்திருப்பாரா?

சிதம்பரம் எல்லாத் தலங்களுக்கும் பொது என் பதற்கு இந்த வரலாறு ஒரு சான்ருக இருக்கிறது அல்லவா? அதனல்தான் மற்றக் கோயில்களை இன்ன ஊர்க் கோயில் என்று சிறப்பித்துச் சொல்லும் அன்பர்

கள், அடையேயின்றி பொதுவாகக் கோயில் என்றால், அது சிதம்பரத்தையே சுட்டுகிறது.

சைவ சமய ஆசாரியர்கள் நான்கு பேரும் திருத் தில்லைக்கு வந்து ஆனந்தக் கூத்தரைத் தரிசித்து இன்புற்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வோர் அநுபவத்தைப் பெற்றார்கள். மாணிக்கவாசகர் பெற்றது பெரும் பேறு. அவர் இறைவனோடு கலந்த இடமே சிதம்பரந்தான்.

சிதம்பரம் திருக்கோயிலில் நான்கு பெரிய திரு வாயில்கள் இருக்கின்றன. நாலு திசையிலிருந்தும் அன்பர்கள் வருவார்கள் என்று நான்கு வாயில்களை அமைத்திருக்கிறார்கள். அந்த நாலு வாயில்களின் வழியே நால்வராகிய சமயாசாரியார்கள் வந்தனர் என்று ஒரு செய்தி இங்கே வழங்குகிறது.

நடராஜப் பெருமான் தெற்கு நோக்கித் தாண்டவமாடுகிறார். மணிவாசகர் அவருக்கு இடப் பக்கமாகிய கிழக்குக் கோபுர வாயில் வழியே புகுந்தார். மாணிக்க வாசகர் இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொண்டு வழிபடும் சன்மார்க்க நெறியில் நின்றவர். அதனால் இடப் பக்கமாகிய கீழ்த் திசை வழியே வந்தாராம். குழந்தையாகிய சம்பந்தர் நேர்முகமாகத் தெற்கு வாயில் வழியே வந்தார். தாசமார்க்கத்தில் நின்ற அப்பர் ஊழியரைப்போலப் பணிவுடன் வலப் புறமாகிய மேற்கு வாயில் வழியே வந்தார். நண்பராகிய சுந்தரர் பின்புறமாகிய வடக்கு வாயில் வழியே வந்தார். இந்த நான்கு திருவாயில் களிலும் அவரவர்களுக்குத் தனியே கோயில் இருந்த தாகத் தெரிகிறது.

## 2

பாண்டிய மன்னனிடம், "இனி எம்பெருமான் பணித்தபடியே நான் தில்லை செல்ல வேண்டும்" என்று கூறி விடைபெற்ற திருவாதவூரர் உலகப் பற்றை முற்றும் ஒழித்துத் தவக்கோலத்தை மேற் கொண்டார். தம்மை ஆட்கொண்ட நாயகராகிய ஆத்மநாதர் எழுந்தருளியிருக்கும் திருப்பெருந்துறை சென்றார். குருநாதரைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வம் மீதூர்ந்து நின்றது. மனத்தைப் போல விரைந்து சென்றார். காற்றைப் போலச் சென்றார். கன்றை நாடும் கபிலையைப் போலவும், மடை திறந்த வெள்ளம் போலவும் சென்றார்.

மிடைகெட வைத்த பாத
    வித்தகர் ஊரை நோக்கி
நடையிடும் எல்லை தன்னில்
    நன்மன விரைவும் காற்றும்
தடைபடு கன்றை நாடும்
    கபிலையும் ததும்பி நின்று
மடையினை உடைக்கும் நீரும்
    ஆயினர் வாத வூரர்.

(திருவாதவூரர் புராணம்)

திருப்பெருந்துறையை அடைந்தபோது அங்கே தம்மை ஆட்கொண்ட பெருமான் தம்முடைய மாணாக்கர் கூட்டத்தோடு எழுந்தருளியிருப்பதைக் கண்டார். அங்கே சென்று ஞானாசிரியரைப் போற்றிப் பணிந்து வழிபட்டுத் தொண்டர் இனத் தோடு இருக்கும்போது, ஆசிரியராக வந்த பெருமான் "நாம் இனிக் கைலைக்கு எழுந்தருள வேண்டும்"

என்று கூறினர். அது கேட்ட அடியார்களெல்லாம், "நாங்கள் எவ்வாறு எம்பெருமான் பிரிவைத் தரித்து வாழ்வோம்!" என்று புலம்பினர். குருநாதர், "சில காலம் இங்கிருந்து இந்த ஆலயத் திருப்பணி செய்து கொண்டு வாழுங்கள். அப்பால் இந்தப் பொய் கையில் கனற்பிழம்பு ஒருநாள் தோன்றும். அப்போது அதில் நீங்கள் கலந்து நம்பால் எய்தலாம்" என்று அருளிச் செய்து புறப்பட்டார். அவரை அன்பர்கள் தொடர்ந்து சென்றனர்கள். "நீங்கள் நில்லுங்கள்" என்று அவர் கட்டளையிடவே நின்றனர்கள். ஆயினும் திருவாதவூரர் மாத்திரம் அவரை விடாமல் பின் சென்றார். அவர் வருவதைக் கண்ட பெருமான் ஒரு கொன்றை மரத்தின் நிழலில் தங்கினர். மணிவாசகர் அவர் காலில் வீழ்ந்து எழுந்து கண்ணீர் தாரை தாரையாகப் பொழிய நின்றார். குருநாதர் அவரைப் பார்த்து, "பொய்கையில் தோன்றும் சோதிப் பிழம் பில் மற்றவர்கள் புகும்போது நீ புகவேண்டாம். உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பின்பு திருத்தில் லைக்குப் போய் அங்கே பௌத்தரை வாதில் வென்று பிறகு நம்மிடம் வந்து சேரலாம்" என்று அருள் செய்து மறைந்தார்.

குருநாதரைப் பிரிந்த துயரம் பொறுமல் அழுது புலம்பினர் மாணிக்கவாசகர். திருப்பெருந்துறையில் சில காலம் தங்கியிருந்து பல பாடல்களைப் பாடினர். பிறகு உத்தரகோசமங்கைக்கும் வேறு தலங்களுக்கும் சென்று வணங்கினர். பின்பு சோழ நாட்டில் உள்ள திருவிடைமருதூர், திருவாரூர், சீகாழி ஆகிய தலங் களைத் தரிசித்துக் கொண்டு நடுநாட்டுக்கு வந்து பல

இடங்களைத் தரிசித்துத் திருவண்ணுமலைக்குச் சென்று திருவெம்பாவை, திருவம்மானை இரண்டும் பாடினுர்.

அங்கிருந்து தொண்டை நாடு சென்று திருக் கழுக்குன்றத்தில் தம் குருநாதர் கோலம் காட்டத் தரிசித்து இன்புற்ருர். பிறகு தம் குருநாதர் பணித்த படியே தில்லைத் தலத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சிதம்பரத்திற்குப் போகும் வழியிலே அவர் போனுர் என்பதைத் திருவாதவூரர் புராணக்காரர் அழகாகச் சொல்கிருர்.

பெரும்பற்றப் புலியூர் என்பது சிதம்பரத்துக்கு ஒரு பேர். புலியூர் என்று சுருக்கமாகச் சொல்வதும் உண்டு. மாணிக்கவாசகர் இறைவனை நாடிச் செல் கிருர். அவர் போன வழி புலியூர் வழி. பலருக்கு அந்த வழி தெரியாமல் ஏதேதோ வழியில் போய்த் தடுமாறுகிருர்கள். மங்கையர் மயலிலே பட்டுத் தம் வாழ்க்கைப் பயணத்தை ஒரு வழியிலே நடத்துவார் பலர். பொருளை ஈட்டித் தம் நலம் ஒன்றே கருதிப் பிறருக்கு இட்டு உண்டு வாழாமல் வாழ்க்கையை நடத்துகிறவர்கள் போகிற வழி வேறு. இறைவனிடம் பக்தி பூணுமல் அவனை மறந்து உலகியலிலே சிக்கிப் போவார் ஒரு வழியில் செல்கிருர்கள். இந்த வழிகள் யாவும் இறைவனுடைய அருளைச் சாறும் நெறி அல்ல; புலியூர் வழி அல்ல. அவை போகும் ஊர் வேறு. மாணிக்கவாசகர் இத்தகைய புன்னெறிகளில் சாரா மல் புலியூர் வழியே போனுராம்.

தூமுரல் மடப்பாவையர்
தோள் ஆசையில் ஆளாம்
மாமுகரும் இட்டுண்டுயிர்
வாழாதவர் தாமும்
தீமுள்கர அரன்மேல் அளி
செய்யாதவர் பலரும்
போம்ஊர்வழி போகாதவர்
புலியூர் வழிபோனார்.

[முரல்-சிரிப்பு. மூகர்-ஊமைகள். தீ மூள் கர அரன்-தீ மூள்கின்ற கரத்தையுடைய சிவபெருமான். அளி-அன்பு.]

சிதம்பரத்தை அடைந்த மாணிக்கவாசகர் கோபுர வாயிலின் வழியே ஆலயத்துள் புகுந்து சிற்றம்பலநாதர் திருமுன் சென்றார். எம்பெருமானைத் தரிசித்தார். தம் திருமுடிமேல் அடி வைத்து ஆட் கொண்ட குருவுருவமாகவே கண்டு களி கூர்ந்தார். "என் உயிரனைய அப்பா! உன் திருவருளின்படியே இங்கே வந்தடைந்தேன்" என்று தொழுதார்; அழுதார்.

பொன்னார்பொது நின்றாடிய
புனிதன்றனை முடிமேல்
அந்நாள்அடி வைக்கும்பரன்
ஆகும்படி கண்டார்
மன்னா, உயிர் அன்னாய், மணி
மன்றா சரண்என்று
சொன்னார்பல கால் அன்பொடு
தொழுதார்மிக அழுதார்.

(திருவாதவூரர் புராணம்

[பொது-அம்பலம். பரன்-குருநாதன். மன்று-மன்றில் ஆடுபவனே.]

ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்தும் மிதந்தும் தம்மை மறந்து நின்ற மணிவாசகர் பிறகு பல திருப் பாடல்களைப் பாடினார். அத்தலத்தில் ஒரு பூம்பொழி லினூடே தவச் சாலை அமைத்துக்கொண்டு அங்கே தங்கிச் சிவயோகம் புரிந்து வந்தார். குறியும் குணமும் இல்லாத கூத்தனது பஞ்சாட்சரமாகிய வாளால் கருவி கரணங்களாகிய காட்டை வெட்டி மனமாகிய நிலத்தை உழுது திருத்திச் சுத்தம் செய்து, சிவமென்னும் விதையை விதைத்துப் பசுபோதம் என்னும் களையைக் களைந்து, அருளாகிய நீரைப் பாய்ச்சி, ஞான உருவாய் விளைந்த பரமானந்த போக மாகிய விளைவைப் பெற்று நுகர்ந்தார்.

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு
எழுத்தைந்தின் கொடுவாள் ஓச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப்
புலந்திருத்திப் புனிதம் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதம்
களைந்தருள்நன் னீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
அமுதருந்தா தருந்தி நின்றார்.

(திருவிளையாடற்புராணம்)

[குறி - அடையாளம். ஓச்சி - வீசி. எறிந்து-வெட்டி. புலம் - நிலம். கால் பாய - அடியிலே பாய.]

இப்படி இருக்கையில் இலங்கையிலிருந்து சில பௌத்தர்கள் தில்லைக்கு வந்து தங்கள் சமயமே

சிறந்த சமயம் என்று முழங்கினார்கள். "சைவ சமயம் தக்க சமயம் என்றால் எங்களுடன் வாதிட்டு அதை நிலை நிறுத்துகள்'' என்று அறைகூவினார்கள். அவர் களோடு வாதிட அஞ்சிய தில்லை மூவாயிரவர் அம் பலவாணரிடம் சென்று முறையிட்டார்கள். அப் பெருமான் ஒவ்வொரு தீட்சிதருடைய கனவிலும் தோன்றி, "இங்கே திருவாதவூரன் வந்து சிவயோகத் தில் இருக்கிறான். அவனை அழைத்து வந்து வாது கூறச் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார் அப் படியே அவர்கள் தவச் சாலைக்குப் போய் வாத வூரரை அழைக்க, அவர் வர மறுத்தார். அதனால் கவலைக்குள்ளான தில்லைவாழ் அந்தணர் மீட்டும் அம்பலவாணரிடம் சென்று வணங்கித் துதித்தனர்.

நடராஜப் பெருமான் அவர்கள் கனவில் மீட்டும் தோன்றி, "மாணிக்கவாசகன் என்று அழைத்தால் வருவான்'' என்று அருளினார். அப்படியே அந்தணர் சென்று அழைத்தபோது, "இந்தப் பெயர் நமக்கும் நம்மை ஆட்கொண்ட இறைவனுக்குமே தெரியும். அதனை இவர்கள் எம்பிரான் மூலமே அறிந்திருக்க வேண்டும்'' என்று எண்ணி, இறைவன் திரு வருளாணை அது என்று நம்பினார். பிறகு பௌத்தர் களோடு வாதம் செய்ய ஒப்புக்கொண்டார்.

பௌத்தர்களோடு இலங்கை மன்னனும் அவனு டைய ஊமைப் பெண்ணும் வந்திருந்தார்கள். வாதம் செய்யும் பொருட்டுப் பெரிய சபை கூடியது. சோழ மன்னனும் வந்து சபையில் இருந்தான். பௌத்தர் கள் தம் சமயமே உயர்ந்ததென்றும் புத்தனே சிறந்த ஆசாரியனென்றும் வாதித்தனர். மாணிக்கவாசகர்

சைவ சமயத்தின் பெருமையைச் சொன்னபோது அவர்கள் இழித்துக் கூறினர். உடனே மணிவாசகர் இலங்கை மன்னனுடைய பெண்ணைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டார். "சிவபெருமானிடத்தில் உள்ள அடையாளங்களின் உண்மை என்ன?" என்ற முறையில் கேள்விகள் இருந்தன. ஊமையாக இருந்த அப்பெண் வாய் திறந்து அவற்றின் கருத்தை உரைத்தாள். அதைக் கண்ட இலங்கை மன்னன் வியந்து மாணிக்கவாசகரைச் சரண் அடைந்தான். பௌத்தர்கள் தோற்றுப் போயினர். இலங்கை மன்னன் சைவனுனன்.

மீட்டும் தம்முடைய தவச்சாலையில் புகுந்து இறைவன் திருவருள் நினைவில் ஒன்றிச் சிவயோக பரராக இருக்கலானுர் மாணிக்கவாசகர். ஒருநாள் சிவபெருமான் ஓர் அந்தண வேடங்கொண்டு கையில் சுவடியும் எழுத்தாணியும் ஏந்தி மாணிக்கவாசகரை அணுகினர். அவ்வேதியரைக் கண்ட மணிவாசகர், "தாங்கள் யார்? எங்கே வந்தீர்கள்?" என்று கேட்க அவர், "நான் பாண்டி நாட்டில் இருப்பவன். திருப்பெருந்துறை நம் ஊர்" என்ருர். திருப்பெருந்துறை என்றதைக் கேட்டவுடன் மணிவாசகருக்கு உள்ளத்தில் ஒரு குதூகலம் உண்டாயிற்று. மிக்க பணிவோடு, "என்னுல் ஆகும் காரியம் யாது?" என்று கேட்டார். "நீர் அவ்வப்போது பாடியருளிய திருவாசகப் பனுவலை எழுதிக்கொண்டு போக வந்தேன் அவற்றைச் சொல்ல வேண்டும்" என்ருர் வந்த அந்தணர். இதுவும் திருவருளே என்று எண்ணிய வாதவூரர் அவர் விருப்பப்படியே தாம் பாடியவற்றைச் சொல்லத் தொடங்கினர்.

திருவாசகம் முழுவதையும் அவர் கூற ஏடு பிடித்து வந்த பெருமான் எழுதி முடித்தார். அப்பால், "உங்கள் திருவாக்காலே இந்தச் சிற்றம்பலத்தைப் பற்றி ஒரு கோவை பாடித் தரவேண்டும்" என்று வேண்டினர். மாணிக்கவாசகர் அப்படியே அகத் துறையில் நானூறு பாடல்கள் அமைந்த திருகோவை யார் என்ற நூலை அருளினூர். அதனையும் ஏட்டில் எழுதிய பெருமான் கடைசியில், "மாணிக்கவாசகர் மொழிந்தவாறே எழுதினேன். அழகிய திருச்சிற்றம் பல வாணனேன் கையெழுத்து" என்று கைச்சாத்து இட்டு, ஏட்டை நன்ருகக் கட்டிக் கையில் கொண்டு மறைந்து போனூர். வந்தவர் தம்மையாட் கொண்ட பெருமானே என்று உணர்ந்த மாணிக்கவாசகர் ஆடிப் பாடி அழுது தொழுது ஆனந்தம் அடைந் தார்.

மறுநாள் காலையில் நடராஜப் பெருமானைப் பூஜை செய்யும் பொருட்டுத் தில்லைவாழ் அந்தணரில் ஒருவர் சிற்றம்பலம் சென்ருர். அங்கே பஞ்சாட் சரப் படியில் ஓர் ஏட்டுச் சுவடி இருப்பதைக் கண் டார். "இது என்ன அதிசயம்!" என்று வியந்து அதை எடுத்துச் சென்று மற்றவர்களிடம் காட்ட, யாவரும் அதைப் பிரித்துப் பார்த்தார்கள். மாணிக்க வாசகர் பாடிய திருவாசகம் என்று உணர்ந்ததன்றி, அப்பாடல்கள் மனமுருக்கும் வகையில் இருப்பதைக் கண்டு இன்புற்ருர்கள் உடனே அதை எடுத்துக் கொண்டு மாணிக்கவாசகரிடம் போய் அதைக் காட்டி, "இப்புத்தகம் எப்படி வந்தது என்று தெரிய வில்லை" என்ருர்கள். அவர் முதல் நாள் நிகழ்ந்த வற்றை எல்லாம் எடுத்துச் சொல்லி, "எல்லாம்

என்னையாளுடைய எம்பெருமான் திருவருளே'' என்று சொல்லி உருகினார்.

அப்போது தில்லை வாழந்தணர்கள் மாணிக்க வாசகரைப் பார்த்து, "இந்தப் பாடல்களுக்குப் பொருள் தெரிவிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவர், "கனகசபைக்கு முன் வந்து சொல்கிறேன்'' என்று யாவரையும் அழைத்துக் கொண்டு பொன் மன்றத்துக்கு வந்தார். சிவஞான முதிர்ச்சியும், உள்ளுணர்வும் தலைப்பட்டமையினால், இறைவன் திருவருட் குறிப்பை உணர்ந்த அவர் அம்பலவாணர் திருமுன் நின்றார். மறையவர்களும் பிறரும் திருவாசகத்திற்குப் பொருள் சொல்லப் போகிறார் அவர் என்று எதிர்நோக்கி ஆவலுடன் நின்றார்கள்.

"இவரே திருவாசகத்தின் பொருள்'' என்று நடராஜப் பெருமானைச் சுட்டிக் காட்டி அப்படியே மறைந்தருளினார் மாணிக்கவாசகர். இறைவன் திருவடியில் இணைந்த பரமானந்த முத்தியைப் பெற்றார். அன்று ஆனி மாதம் மக நட்சத்திரம். அம்பலத்தே யாடும் சிவபிரான் அவரைப் பாலோடு கலந்த நீராகத் தம்மோடு ஐக்கியப் படுத்திக் கொண்டார்.

செய்காட்டும் கழுகடவித்
    தில்லையுளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்உருவம்
    காட்டாமல் மறைந்தவரைப்
பைகாட்டும் பேரரவப்
    பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே
    மேவியநீர் ஆக்கினார்.

[செய் - வயல். கமுகடவி - கமுகஞ்சோலை. பை-படம், பணி - ஆபரணம். அன்பு மெய்காட்டி - அன்பின் மெய்த்தன்மையை உலகினருக்குப் புலப் படுத்தி.]

## 3

மாணிக்கவாசகர் ஆனி மகத்தில் சிற்றம்பலத்தில் நின்றபடியே மறைந்து இறைவனோடு ஒன்றிய செய்தியை நினைந்து சிதம்பரம் சென்றேன். வெவ்வேறு சமயங்களில் சென்றது உண்டு; ஆனாலும் இந்த முறை மாணிக்கவாசகரோடு சம்பந்தம் உள்ள இடங்களைக் கண்டு செய்திகளைச் சேகரித்து வர வேண்டும் என்ற ஆசையோடு போனேன். சிதம்பரத்தை எத்தனை தடவை தரிசித்தால் என்ன? தெவிட்டுமா? "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று, அம்பலவாணரைத் தரிசிப்பதாக இருந்தால் இந்தப் பிறவியும் வேண்டிப் பெறத்தக்கதென்று அப்பர் சொல்கிறார். அவர் எம்பெருமான் திருமுன் நின்றபோது என்ன என்ன அநுபவத்தைப் பெற்றாரோ? சுந்தரர் "மாறிலா மகிழ்ச்சி"யில் மலர்ந்ததாகச் சேக்கிழார் பாடுகிறார். சம்பந்தரும் இங்கே வந்து இன்புற்றார். மாணிக்கவாசகர் ஆனந்தக்கடலில் துளைந்தார். இந்த நினைவுகளோடு சந்நிதியில் நின்றால் நாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம் என்பதை மறந்துவிடலாம். சிவகங்கைத் தீர்த்தமும், சிற்சபையும், கோயிலும் சிதம்பரத்தில் இன்றும் மக்களின் பக்தியை வளர்த்துக் கொண்டு விளங்குகின்றன.

மாணிக்கவாசகருடைய வரலாற்ருேடு தொடர்புடைய சிற்பங்கள் ஏவையேனும் இருக்கின்றனவா என்று ஆராய்ந்தேன். கனகசபைக் கீழ்ப்புறத்தில் முருகன் சந்நிதிக்குக் கீழே இரண்டு சிற்பங்கள் இருக்கின்றன. குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் குருநாதர் மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்யும் கோலமும் தீட்சை செய்யும் கோலமும் அமைந்த சிற்பங்களைக் கண்டேன். அவற்றையன்றி வடபுறம் பரி நரியாக்கியது முதலிய திருவிளையாடல் சிற்பங்களையும் கண்டேன். திருக்கோயிலில் நால்வர் திருவுருவங்களும் பூசிக்கப் பெறுகின்றன. மேற்குப் பிராகாரத்தில் அந்த நால்வருடைய பிம்பங்களும் இருக்கின்றன. உற்சவ காலங்களில் உலா வரும் உற்சவ மூர்த்தியாகிய மாணிக்கவாசகர் மிகமிக அழகிய வடிவத்தோடு விளங்குகிருர். இடக்கையில் புத்தகமும், வலக்கையில் அபயமும் உடையவராக அவர் நிற்கிருர்.

திருவாதிரை முடியப் பத்து நாளும் ஆலயத்தில் தேவார திருவாசகங்களை ஓதாமல் திருவெம்பாவையை மாத்திரம் ஓதுகிருர்கள். அப்போது இங்கே உற்சவம் நடைபெறுகிறது. உற்சவ நாள் முழுவதும் சுவாமி எழுந்தருளும்போது மாணிக்கவாசகர் எம்பெருமானை நோக்கியபடியே எழுந்தருளுவார். ஆனி மகத்தில் மாணிக்கவாசகர் உற்சவம் நடைபெறுகிறது. மாணிக்கவாசகரை எழுந்தருளப் பண்ணி ஊர்வலம் வந்த பிறகு சந்நிதிக்கு முன் கொணர்ந்து ஐக்கியமாவதாகப் பாவித்துத் தீபாராதனை செய்கிருர்கள்.

திருவாசகத்தின் பொருளாகிய கூத்தப்பிரானை யும் ஆலயத்திலுள்ள மூர்த்திகளையும் தரிசித்துக் கொண்டு ஊருக்குள் மாணிக்கவாசகர் வரலாற்ருேடு தொடர்புடைய இடங்கள் எவை என்று விசாரிக்கத் தொடங்கினேன்.

## ஏட்டில் ஏறிய வாசகம்

"மாணிக்கவாசக சுவாமிகள், சில காலம் இங்கே தங்கியிருந்ததாகத் தெரிகிறது. அவர் அவ்வாறு தங்கிய இடம் என்று சொல்ல ஏதேனும் இருக்கிறதா?'' என்று அன்பர்களைக் கேட்டேன். மாணிக்கவாசகர் ஒரு தவச் சாலையை அமைத்துக்கொண்டு தங்கியிருந்த செய்தியையும், அப்போது இறைவன் எழுந்தருளி வந்து திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதி இறுதியில் தன் கையெழுத்தையும் இட்டான் என்ற செய்தியையும் புராணங்கள் சொல்கின்றன அல்லவா? அவர் தங்கியிருந்த இடத்தை இப்போது பாதுகாத்து வருகிறார்களா என்பதை அறியும் ஆவலுடன் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

''ஆம் இருக்கிறது. இந்த ஊரில் திருப்பாற்கடல் என்ற தீர்த்தம் இருக்கிறது. அதனைச் சார்ந்த ஓரிடத்தில் மாணிக்கவாசகர் தங்கியிருந்ததாகச் சொல்கிறார்கள்'' என்று அன்பர்கள் சொன்னார்கள்.

"அப்படியானால் அந்த இடத்தைப் போய்ப் பார்ப்போம்'' என்று சொல்லவே, யாவரும் திருப்பாற்கடல் தீர்த்தம் உள்ள இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். வடக்குத் திருவாசலில் இருந்து தில்லைக் காளியம்மன் கோயிலுக்குப் போகிற வழியில் அந்த இடம் இருக்கிறது. பரந்த வெளியும் அதற்கு அருகில் குளமும் கோயில்களும் இருக்கின்றன. உபமன்யு முனிவர் குழந்தையாக இருந்த போது அழுதாராம். அவருக்

குப் பாற்கடலையே வருவித்து அளித்தான் சிவபெருமான் என்பது ஓர் ஐதிஹ்யம். அந்தப் பாற்கடலே திருப்பாற்கடல் தீர்த்தம் என்ற சிறு குளமாக இருக்கிறது.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்


என்று திருப்பல்லாண்டில் இக் கதை வருகிறது.

சிறிய ஊர்களில் உள்ள குளங்களே பாதுகாப்பார் இல்லாமல் சிதைந்து கிடக்கும்போது சிதம்பரத்திலுள்ள திருப்பாற்கடல் தீர்த்தம் எப்படி இருக்கும்? அதன் கரையை ஒழுங்குபடுத்திக் கரையிலுள்ள மதில் சுவர்களில் எங்கெங்கோ இருந்த சிற்பத் திருவுருவங்களை எல்லாம் கொண்டு வந்து பதித்திருக்கிறார்கள். தீர்த்தம் பார்க்கலாமேயொழிய நீராடும் நிலையில் இல்லை.

''பச்சைத் தண்ணீர் வேண்டுமா, வெந்நீர் வேண்டுமா?'' என்று கேட்கிறார்கள் அல்லவா? குளிர்ந்த தண்ணீரைப் பச்சைத் தண்ணீர் என்று சொல்கிறோமே; உண்மையில் பச்சைத் தண்ணீர் இதோ இருக்கிறது'' என்று நான் அந்தக் குளத்தைச் சுட்டிக் காட்டினேன். பாசி படர்ந்து ஒரே பசுமையாகக் காட்சி அளித்தது குளம். அநேகமாகத் தலங்களில் உள்ள குளங்களில் பல இதுபோலவே, பச்சைத் தண்ணீரை உடையன என்பதை அறியாதவர்கள் யார்?


திருப்பாற்கடல் மடத்து எல்லைக்குள் நுழையும்போது வலப்பக்கத்தில் இந்தக் குளத்தைக் கண்டேன். இடப்பக்கத்திலே ஒரு சிறு கோயில் இருக்

சிதம்பரம் – வடக்குக் கோபுரம், சிவகங்கை தீர்த்தம் பக்கம் 332



மாணிக்கவாசகர் தீட்சை பெறுதல் (சிதம்பரம் சிற்பம்)





சிதம்பரம் ஆத்மநாதர்
கோயில் முன்புறத்தில்
உள்ள மணிவாசகர்
பக்கம் 333



சிதம்பரம் ஆலயத்தில் உள்ள
மணிவாசகர்
பக்கம் 338

கிறது. அது குரு நமசிவாயர் என்பவருடைய சமாதி என்று சொன்னார்கள். இந்த இரண்டையும் தாண்டி முன்னே சென்றால் இலவ மரங்களின் நிழலிலே ஒரு சிறிய ஆலயம் இருப்பதைக் காணலாம்.

"இங்கேதான் மாணிக்கவாசகர் தங்கியிருந்தார்" என்று சொன்னார்கள். "இந்தக் கோயிலுக்கு என்ன பெயர்?" என்று கேட்டேன். "ஆவுடையார் கோயில் என்றும் ஆத்மநாதர் கோயில் என்றும் வழங்கும்" என்று அன்பர்கள் சொன்னார்கள். இந்தக் கோயிலுக்குள் திருப்பெருந்துறையைப் போலவே, உள்ளே சிவலிங்கம் இல்லை. வெறும் பலி பீடத்தையே வைத்துப் பூசிக்கிறார்கள். வீர சைவர்கள் இந்தக் கோயிலைப் பூசித்துப் பாதுகாத்து வருகிறார்கள். இதனை அடுத்துச் சிறு கோயிலில் சிவ யோக நாயகி சந்நிதி இருக்கிறது. ஆவுடையார் கோயிலில் உள்ளது போலவே அங்கும் பீடம் மாத்திரம் இருக்கிறது. மாணிக்கவாசகர் திருவருள் பெற்ற திருப்பெருந்துறையை நினைந்து இங்கும் ஒரு சிறிய திருப்பெருந்துறை அல்லது ஆவுடையார் கோயிலை யாரோ பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள். மணிவாசகர் இருந்த இந்த இடத்தில் தனியே அவருக்குக் கோயில் இருந்திருக்க வேண்டும். இப்போது காணக் கிடைக்கவில்லை. ஆனால் இந்தக் கோயிலுக்கு வெளியிலும் உள்ளும் மணிவாசகருடைய திருவுருவத்தைக் கண்டேன்.

கோயில் வாயிலில் மணிவாசகர் அமர்ந்த திருக் கோலத்தில் வீற்றிருக்கிறார். வலக்கையில் ருத்தி ராட்ச மாலையைத் தரித்திருக்கிறார். இடக் கரத்தை மடிமீது கிடத்தியிருக்கிறார். பெரும்பாலும் மாணிக்க வாசகர் இடக் கரத்தில் சுவடியை வைத்திருக்கும் கோலத்தில் இருப்பதே வழக்கம். இங்கேயுள்ள தோற்றம் புதியதாக இருக்கிறது. சில சைன விக்கிர கங்கள் மடியின்மீது திருக்கரத்தைக் கிடத்தி வைத் திருக்கும் கோலத்தில் இருக்கின்றன. இந்த உருவத் திலோ வலக் கையில் ஜபமாலை இருக்கிறது.

'எந்தச் சமயத்தில், இவ்வாறு மாணிக்கவாசகர் இருந்திருப்பார்?' என்று யோசித்தேன்.

திருவாசகத்தைச் சுவடியில் எழுதிய பிறகு மணி வாசகர் அதனைத் தம் கையில் வைத்திருக்க வேண்டும். அழகிய திருச்சிற்றம்பலமுடையானைக் கண்ட பிறகே திருவாசகம் ஏட்டுச் சுவடியில் புகுந்து வடிவம் கொண்டது. மாணிக்கவாசகர் தவத்தில் அமர்ந்திருந்த இடம் இது. இங்கேதான் சிவ பெருமான் வந்து திருவாசகத்தையும், திருக்கோவை யாரையும் எழுதிக்கொண்டான்.

இந்த நினைவு வந்தபோது அந்தக் காட்சியை உள்ளத்தே உருவாக்கிப் பார்த்தேன். மாணிக்க வாசகர் திருவாசகப் பாடல்களை ஒவ்வொன்றாக நினைவுக்குக் கொண்டு வருகிறார். அமர்ந்தபடியே

வலக் கையில் ஜபமாலை இருக்க இடக் கையை மடி மேல் வைத்துக் கொண்டு யோசிக்கிறார்; சொல்கிறார். எதிரே ஏடும் எழுத்தாணியுமாக இறைவன் இருந்து எழுதுகிறான். மாணிக்கவாசகர் திருவாசகத்தை இறைவனுக்குச் சொல்லும் கோலமாக இந்த உருவத்தைக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றியது. அந்த உருவத்தை உற்று நோக்கினேன். கண்ணிலும் கருத்திலும் படம் பிடித்துக் கொண்டேன். அன்பர் ராமகிருஷ்ணு காமிராவிலும் பிடித்துக் கொண்டார்.

மாணிக்கவாசகர் இருந்து சொல்லச் சிவபெருமான் அவர் சொன்னவற்றை ஏட்டில் எழுதினான். என்ன அழகான வரலாறு! இத்தகைய எழுத்து வேலையை விநாயகர் செய்ததாக நாம் கேட்டிருக்கிறோம். வியாசர் மகாபாரதத்தைச் சொல்ல, விநாயகர் தம் கொம்பையே எழுத்தாணியாகவும் மகா மேருவையே ஏடாகவும் கொண்டு எழுதினாராம். அது மிகப் பழைய கதை. சிவபெருமானும் ஏட்டில் எழுதும் வேலையை மேற்கொண்டு திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதினான் என்பதைப் புலவர்கள் பலவகையில் வருணித்துப் பாடியிருக்கிறார்கள். ஒன்று இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. மகாவித்துவான் திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டு அது.

பெரிய மனிதர்கள் எதையும் தாம் எழுத மாட்டார்கள். அதற்கென்று குமாஸ்தாக்களை வைத்

திருப்பார்கள். சிவபெருமானைவிடப் பெரிய செல்வன் யார்? அப்பெருமான் எழுத்து வேலையை, "நீ செய்" என்று ஒருவனிடம் ஒப்பித்துவிட்டான். தாமரைப் பூவில் வாழும் நான்முகன் ஓயாமல் ஒழியாமல் தலைகளின்மேல் எழுதிக் கொண்டே இருக்கிறான். சிவபெருமான் ஒரு நூல் இயற்றினான். அது எழுதப் படாமலே இருப்பதனால் அதற்கு எழுதாக் கிளவி என்றே பெயர் உண்டாகி விட்டது. வேதத்தைச் சுருதி என்றும், கேள்வி என்றும், எழுதாக் கிளவி என்றும் சொல்வதை நாம் அறிவோம். இவ்வாறு செய்துவிட்டு எழுத்து வேலையே இல்லாமல் இனிதாக அமர்ந்திருக்கிறான் மகாதேவன். இத்தகைய பெருமானை எழுதும்படி செய்துவிட்டார், மாணிக்கவாசகர். ஒன்றா, இரண்டா? பலபல பாடல்களைச் சொல்லி எழுதச் செய்தார். "எழுதியாயிற்றா? இதையும் எழுதுங்கள்" என்று நூற்றுக் கணக்கான பாடல்களைச் சொல்லி எழுதும்படி செய்து வேலை வாங்கின பெரியவர் அவர். அதோடு இன்னார் எழுதினார் என்பது தெரியக் கடைசியில் கையெழுத்தும் இடும்படிச் செய்தாராம். அவருடைய பாதங்களைத் தலையாலே வணங்குவோம்.

இவ்வாறு மாணிக்கவாசகர் துதியை நாகப்பட்டின புராணத்தில் பிள்ளையவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

எழுதிடும் வேலே பூமேல்
இருப்பவன் இயற்றப் போக்கி
எழுதுதல் இல்லா நூல்சொற்று
இனிதமர் தருமா தேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற்று
இயைதரப் பெயரும் ஈற்றில்
எழுதிடச் செய்த கோமான்
இணையடி முடிமேல் வைப்பாம்.

[பூமேல் இருப்பவன்-பிரமதேவன். எழுதிடும் வேலே என்றது ஜீவர்களின் தலையில் நான்முகன் எழுதுவதை. போக்கி - திட்டம் செய்து. எழுதுதல் இல்லா நூல் - வேதம். மாதேவை - மகாதேவனை. பல் பாச் சொற்று - பல பாடல்களைச் சொல்லி. இணை அடி - இரண்டு திருவடிகளை.]

திருவாசகத்தைச் சொல்லும் கோலத்தில் மாணிக்கவாசகரை உருவாக்கிய சிற்பி, எழுதும் கோலத்தில் அழகிய திருச்சிற்றம்பலவாணனையும் உருவமைத்திருக்கலாம். ஆனால் அப்படி அமைந்த திருவுருவம் ஒன்றும் இங்கே காணவில்லை.

கோயிலுக்கு உள்ளே பீடமே பூஜைக்குரியதாக விளங்குகிறது. அதற்குப் பின்னால் சுவரையொட்டி இரண்டு மூலையில் இரண்டு திருவுருவங்கள் நின்ற கோலத்தில் இருக்கின்றன, இடப் பக்கத்திலுள்ளது மாணிக்கவாசகர் உருவம். வலப் பக்கத்தே (தரிசிப்பவர்களுக்கு) உள்ளது அந்தணனாக வந்த அழகிய

சிற்றம்பலவன் உருவம் என்கிறுர்கள். இவை இரண்டும் தனிக் கோயில்களில் முன்பு இருந்திருக்க வேண்டும். கோயிலே யாரோ சிதைத்துவிட்டமையினுல் உருவங்களைப் பிற்காலத்தில் இங்கே கொண்டு வந்து வைத்தார்கள் போலும்!

மாணிக்கவாசகர் இடக்கையில் சுவடியை வைத்துக் கொண்டிருக்கிறுர். வலக்கையை உயரே தூக்கிக் காட்டுகிறுர். திருவாசகத்தின் பொருள் யாது என்று கேட்டவர்களுக்கு இவரே என்று நடராஜப் பெருமானைக் காட்டும் கோலத்தை நினைந்து சிற்பி வடித்த திருவுருவம் போலும்! கையில் சுவடி இருப்பதால் நிச்சயமாக இம்மூர்த்தி மாணிக்கவாசகர் என்பதில் ஐயம் இல்லை.

மூர்த்திகளை எல்லாம் வணங்கிவிட்டுப் புறப்பட்டேன்.

திருவாசகத்தின் மூல ஏடு ஏதோ ஒரு மடாதிபதியிடம் இருப்பதாகவும், அந்த மடத்திற்கு அம்பலத்தாடிகள் மடம் என்று பெயர் என்றும் சிலர் சொல்லி முன்பே கேட்டிருந்தேன். ஆதலால் அந்த மடத்தைப் பற்றி விசாரித்தேன். முதல் முதலில் அம்பலத்தாடி மடத்திற்குச் சென்று பிறகே திருப்பாற்கடல் மடத்திற்குப் போனேன். ஆனுலும் அங்கே கண்டவற்றை முன்னுலே சொன்னுல்தான் வரலாறு

அடைவாக விளங்கும். ஆகையால் அதை முன்பு சொன்னேன்.

அம்பலத்தாடி மடமும் வடக்குச் சந்நிதியி லிருந்து தில்லையம்மன் கோயிலுக்குப் போகுமிடத்தில் தான் இருக்கிறது. அதை, "பாத பூஜை ஸ்ரீலஸ்ரீ அம்பலத்தாடும் சுவாமிகள் மடாலயம்'' என்று சொல் கிறார்கள். அது வீர சைவ மடம். இப்பொழுது மடாதிபதி புதுச்சேரியில் இருக்கிறார். அந்த மடத் தின் மூல ஆசாரியருடைய திருநாமம் அம்பலத்தாடு வார் என்பது. அவருடைய வரலாறு ஒன்றை அச்சிட் டிருக்கிறார்கள். கர்ண பரம்பரையாக மடத்தைச் சார்ந்தவர்களுக்குள்ளே வழங்குவதாகச் சொல்கிறார் கள். இப்போதுள்ள மடாதிபதிகள் எத்தனையாவது பட்டம் என்று தெரியவில்லை. ஹைதர் காலத்தில் இங்கே வந்த படை வீரர்கள் இந்த இடத்தில் குதிரைப் பந்தி அமைக்க வேண்டுமென்று சொன்னார் களாம். மடாதிபதி அதற்கு இணங்கவில்லை. ஆதலால் மடத்தையே இடித்து விட்டார்களாம். அப்போது மடாதிபதியும் அடியார்களும் பூஜை முதலியவற் றுடன் புதுச்சேரிக்குப் போய்விட்டார்களாம். அது முதல் பரம்பரையாக அங்கே இருந்து வருகிறார்கள்.

சகாப்தம் ஆயிரத்து அறுநூற்று முப்பத்தேழாம் ஆண்டு (கி. பி. 1714) இங்கே சில திருப்பணிகள் நடந்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்று இருக்

கிறது. அப்போது மடாதிபதியாக இருந்தவர் ஒன்ப தாம் பட்டத்தில் தலைவராக இருந்தார். ஆகவே அவருக்கு முன் எட்டுப் பேர் மடாதிபதி களாக இருந்திருக்க வேண்டும். மடத்தைச் சார்ந்த வர்கள் இந்த மடத்தின் முதல் ஞானசிரியர் மாணிக்கவாசகர் காலத்திலேயே இருந்தவர் என்று சொல்கிறார்கள்.

மேலே சொன்ன கல்வெட்டைக் கொண்டு பார்த்தால் முதல் மடாதிபதி அவ்வளவு பழங்காலத் தில் இருந்தார் என்று சொல்ல இயலாது. அவர்கள் சொல்லும் வரலாற்றையும் கொஞ்சம் தெரிந்து கொள் ளலாம்.

மாணிக்கவாசகர் மறைந்த நாளுக்குப் பின் நாளில் பஞ்சாட்சரப்படியில் இருந்த திருவாச கத்தைத் தில்லைவாழ் அந்தணர்கள் எடுத்து வைத் திருந்தார்கள். அதனைத் தங்களுக்குத் தரவேண்டு மென்று அங்கே குழுமியிருந்த மடாதிபதிகளும், சிவ னடியார்களும், மற்றும் பல அன்பர்களும் கேட்டார் கள். அவர்கள் மறுத்தார்கள். அப்போது அசரீரியாக ஒரு குரல் கேட்டது. "இந்தச் சுவடியைச் சிவ கங்கையில் கொண்டுபோய் விடுங்கள். அது யாரு டைய கரத்தில் சேர்கிறதோ அவரே அதற்கு உரிய வராவார்" என்றது அக்குரல்.

அப்படியே அந்தணர்கள் அச்சுவடியைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துச் சிவகங்கையில் விட்டார்கள். அப்போது அது கரையில் நின்றிருந்த

வீர சைவர் ஒருவரிடம் வந்து சேர்ந்தது. அவரே அம்பலத்தாடுவார். அவர் சுவடியைத் தம் பூஜையில் வைத்துப் போற்றிப் பூசித்து வந்தார். அவருடைய பெருமையை உணர்ந்து யாவரும் பாராட்டினர். அம்பலத்தாடுவார் ஒன்பது கட்டுகள் கொண்ட மடம் அமைத்துப் பலருக்கு ஞான உபதேசம் செய்துகொண்டு வாழ்ந்தார். அவர் பரிபூரணம் அடைந்த பிறகு வழிவழியே துறவிகள் அந்த மடத்துக்குத் தலைவர்களாக இருந்து திருவாசகம் உள்ள பெட்டகத்தைப் பூசித்து வருகிறார்கள்.

இதுதான் அந்த வரலாறு.

சிதம்பரத்தில் இப்போது அம்பலத்தாடுவார் மடம் வெறும் கீற்றுக் கொட்டகையாக இருக்கிறது. அம்பலத்தாடுவார் சுவாமிகளின் சமாதியில் ஒரு சிவலிங்கப் பெருமானையும், நடராஜ மூர்த்தியையும் வைத்துப் பூசித்து வருகிறார்கள். வேறு ஓரிடத்தில் அம்பலத்தாடுவார் பூசித்த மூர்த்திகள் சிலவற்றை வைத்து வழிபடுகிறார்கள். எல்லாப் பூஜையும் வீர சைவர்கள் நடத்தி வருகிறார்கள்.

புதுச்சேரியில் இருக்கும் இந்த மடத்தின் தலைவர்கள் பூசித்து வரும் திருவாசகப் பெட்டகத்தை யாரும் திறந்து பார்த்தால் தீங்குவரும் என்று சொல்கிறார்கள்.

திருவாசகத்திற்கே அமைந்த சிறப்புக்களுள் ஒன்று அதனை எழுதிய ஏடு பூஜைக்கு உரியதாக

இருப்பது. இன்னும் பல சிவனடியார்கள் திருவாசக ஏட்டைப் பூசித்து வருகிருர்கள். செட்டிநாட்டில் உள்ள ஓர் அன்பர் சமீபத்தில் திருவாசகத்தை வெள்ளி ஏடுகளில் எழுதி வைத்துப் பூசித்து வருகிருர். இத்தகைய பெருமை மற்ற நூல்களுக்கு இல்லை.

இதற்குக் காரணம் சிவபெருமானே திருவாசகத்தை ஏட்டில் எழுதினுன் என்ற எண்ணமாக இருக்கலாம். அந்த நினைவினுல் திருவாசக ஏட்டைப் பூஜையில் வைத்து வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றி அதை முதலில் செய்து வழிகாட்டிய பெரியார் ஸ்ரீ அம்பலத்தாடுவாராக இருக்கலாம். அவர் தோற்றுவித்த இந்த வழிபாட்டை மிக முக்கியமான கடமையாக அவர் வழி வந்த மடாதிபதிகள் மேற்கொண்டிருக்கிருர்கள். அதனைக் கண்டு மற்ற அடியார்களும் திருவாசக ஏட்டுப் பூஜையை மேற்கொண்டிருக்கலாம்.

இது ஊகமேயொழிய இப்படித்தான் நடந்தது என்று உறுதியாகச் சொல்ல இயலாது.

தமிழ் நாட்டில் திருவாசகம் எழுதிய ஏட்டுக்கு எத்தனை பெருமை கொடுத்திருக்கிருர்கள்! திருவாசகம் தமிழர் உள்ளத்தில் மிகமிக ஆழமாகப் பதிந்த நூல் என்பதையே இந்த வரலாறுகள் எல்லாம் காட்டுகின்றன.

மாணிக்கவாசகர் தில்லையில் ஒளியூடே கலந்தார். அவருடைய அருளமுத வாக்காகிய திருவாசகம் இறைவன் எழுதிய நூலாக, பூசிக்கும் ஏடாக மக்கள்

உள்ளத்திலே இடம் கொண்டிருக்கிறது. மாணிக்க வாசகர் ஒளியில் கலந்து மறைந்த இடமும், மணிவாக்காகிய திருவாசகம் ஏடாக உருப்பெற்று வெளியிட்ட இடமும் தில்லையாகிய கோயிலே.

'சைவ சமய ஆசாரியர்களாகிய நால்வர் பாடிய தலங்கள் எவ்வாறு இருக்கின்றன? அங்கே என்ன என்ன சிற்பங்கள் உள்ளன? சரித்திரத்திற்குரிய செய்திகள் யாவை? இலக்கியத் தொடர்பு உண்டா?' என்று ஆராயவேண்டும் என்பது என் ஆசை. நால்வரும் போய்ப் பாடிய தலங்களுக்கு எல்லாம் சென்று அங்குள்ள செய்திகளையும் காட்சிகளையும் தொகுத்து வெளியிடுவதென்பது ஒரு தனி மனிதனால் செய்து நிறைவேற்றக்கூடியது அல்லவே. ஆதலால் ஏதேனும் ஒரு வரையறை செய்து கொண்டு ஓரளவுக்கு இந்த நோக்கத்தைச் செயலாற்றலாம் என்று எண்ணினேன். நால்வரும் திருவவதாரம் செய்த தலங்கள், அருள் பெற்ற இடங்கள், முத்தி பெற்ற திருப்பதிகள் ஆகியவற்றைப்பற்றி மாத்திரம் எழுதலாம் என்று தோன்றியது. அப்படியே சீகாழியில் தொடங்கின இந்த யாத்திரை சிதம்பரத்தில் வந்து நிறைவேறியது. போன இடங்களில் அன்பர்கள் வரவேற்று உபசரித்ததைச் சொல்வதா? அங்கங்கே வழங்கும் வரலாறுகளை ஆர்வத்துடன் தெரிவித்ததைச் சொல்வதா? தலங்களின் சம்பந்தமான நூல்களை உதவிய உபகாரத்தைச் சொல்வதா? அத்தகைய ஆதரவு இல்லாவிட்டால் இவ்வளவு செய்திகளைத் தொகுத்திருக்க முடியாது.

பயணக் கட்டுரையாக அநுபவங்களைத் தொகுத்து எழுதிவிடலாம். கர்ண பரம்பரைச் செய்திகளையும் ஒழுங்குபண்ணிச் சொல்லலாம். படித்த இலக்கியங்களிலே காணும் வரலாறுகளையும் எழுதலாம். ஆனால் அங்கங்கே உள்ள சிற்பங்களையும், மூர்த்திகளையும், கோயிலையும், குளத்தையும் நிழற்படமாக எடுக்க வேண்டுமே. அதற்கு ஒரு சஞ்சீவி எனக்குக் கிடைத்தார். மாயூரம் போட்டோக் கலைஞர் ஸ்ரீ என். ராமகிருஷ்ணனைக் தான் சொல்கிறேன். ரெயிலிலும், காரிலும் என்னுடன் வந்தார். கழியிலும், கானலிலும் வந்தார். எதை எடுக்கச் சொன்னாலும் எடுத்தார். அவருக்கு என் நன்றியைத் தெரிவிப்பது என் கடமை.

சீகாழி முதல் பதின்மூன்று தலங்களுக்கு நால்வரின் நினைவு என்னை அழைத்துச் சென்றது. சென்று தரிசித்த நாட்கள் சிலவேயானாலும் அந்தப் பயணங்களையும் அப்போது கண்ட காட்சிகளையும் நினைந்து இன்புறும் நாட்கள்......? ஆம். என் வாழ்நாள் முழுவதுமே அந்த இன்ப நினைவு இருக்கும்.



# கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அலங்காரம் | கி. வா. ஜ. | 3 | 50 |
| 2. | குறிஞ்சிக் கிழவன் | ,, | 3 | 50 |
| 3. | ஆனந்தத் தேன் | ,, | 3 | 50 |
| 4. | வாழ்க்கைக் கூத்து | ,, | 3 | 50 |
| 5. | மரணம் இல்லா வாழ்வு | ,, | 3 | 50 |
| 6. | காலையும் மாலையும் | ,, | 3 | 50 |
| 7. | தண்டைச் சிற்றடி | ,, | 3 | 50 |
| 8. | நீர்க்குமிழி | ,, | 3 | 50 |
| 9. | விழிக்குத் துணை | ,, | 3 | 50 |
| 10. | இரு விலங்கு | ,, | 3 | 50 |
| 11. | தனிவெளி | ,, | 3 | 50 |
| 12. | உள்ளம் குளிர்ந்தது | ,, | 3 | 50 |

*wrapper printed at ELANGOVAN printe*